
காதல்
சதுரங்கம்
என்.சீதாலெட்சுமி

# காதல் சதுரங்கம்

"ஷண்முகக் கடவுள் போற்றி சரவணத் துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
தண்மலர் கடப்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி!"

## 1

அழகன் முருகனை உதடுகள் துதிபாட, கண்கள் வடபழனி முருகன் கோவில் வாசலை நோக்கியிருக்க, கைகள் தன் இரண்டரை வயது மக்கள் நகுலன் மற்றும் பரதன் இருவரையும் பிடித்து வைத்திருக்க, மனதில் தன் கணவன் சுதாகரும் தன் கொழுந்தன் பிரபாகரும் இன்னமும் வராமல் இருப்பதே உறுத்திக் கொண்டிருக்க, கோபத்துடன் நின்றிருக்கும் மாமனார் வெங்கடாசலத்தைப் பார்க்கப் பயந்தவளாய் நின்றிருந்தாள் கௌசல்யா.

மனதிலிருந்த கலக்கம் கைகளைத் தளர்த்திவிட, விட்டால் போதும் என்று சிட்டென பறந்தனர் மைந்தர்கள்.

''கோவில்ல ஓடாதீங்க... எங்கயாவது தொலைஞ்சுடு வீங்கடா...'' என்ற கூவலுடன் கௌசல்யா ஓடுவதற்குள், வெங்கடாசலம் அவர்கள் பின்னே விரைந்திருந்தார்.

ஐந்தே நிமிடத்தில் மகன்களின் மீதிருந்த கோபம், பேரன்களின் குறும்புகளில் கரைந்து போயிருக்க, ஆறு வயது சிறுவனாய் மாறியிருந்தார் அந்த அறுபத்தியாறு வயது முதியவர்.

மகன்களின் மீது வைத்திருக்கும் கரடுமுரடு பாசத்தை மீறி, தன் மீது அவர் வைத்திருக்கும் சுவைமிக்க பாசத்தை நுகர்ந்த மருமகளும் முருகனின் அழகை, அந்த மூவரிட மும் கண்டு மகிழ்ந்திருந்தாள்.

அந்த நேரம், மாயோன் முருகன் தன் தங்கத்தேர் உலா விற்குத் தயாராக, ஆலயம் முழுதும் மணியின் ஓசை ரம்மியமாய் நிரம்பியிருந்தது.

அதில் கௌசல்யாவின் கவனம் கலைய, ''அப்பா, தேர் வெளிய வருது... வாங்க'' என்று மாமனாரை அழைத்தவாறே முருகனிடம் திரும்பினாள், அவள்.

''இன்னும் இந்த தடியன்கள்... ரெண்டு பேரையும் காணோமே? ஆறு மணிக்கு... இங்க இருக்கணும்ன்னு படிச்சுப் படிச்சு சொன்னேன்... ஆனா மணி ஏழாகப் போகுது... இன்னும் காணோம்! இவனுங்கெல்லாம் என்ன வேலை பார்த்து... என்ன கிழிக்கிறானுங்க!'' இதுவரை மௌனமாய் இருந்த வெங்கடாசலத்தின் கோபம் வார்த்தைகளில் வெளிப்பட்டது.

''இப்பதானேப்பா... முதல் சுத்து வரப் போகுது. நமக்கு ஆறாவது ரவுண்டு தான்... அதுக்குள்ளே வந்திடு



வாங்க...'' என்ற கௌசல்யா, இருவரது வருகைக்காகவும் பதைப்புடன் காத்திருக்கத் துவங்கினாள்.

மாமனார் நல்லவர் தான் என்றாலும், கோபம் தலைக் கேறிவிட்டால் அவரது வார்த்தைகள் மிகவும் தடித்துப் போய்விடும்! கோவிலில் வைத்து ஒரு சச்சரவு... அது வும் பிரபாகரிடம் வாக்குவாதம் வைத்துக் கொண்டால்... கோவிலின் ஹாட் டாபிக் இவர்கள்தான்! பிரபாகர் வம் புக்காரன் இல்லை தான்... ஆனால் வாயாடி! பிறக்கும் போதே தமிழ் அகராதியை முழுங்கிவிட்டுப் பிறந்தான் போலும்... வார்த்தைக்குப் பஞ்சமே இருக்காது! ஹ்ம்ம்!

கௌசல்யாவின் பெருமூச்சு மேலும் பெருகுவதற்கு முன், அவள் வயிற்றில் பாலை வார்க்கும் வண்ணம் ''கௌசி'' என்ற அழைப்புடன் வந்து சேர்ந்தான் சுதாகர் - அவளது கணவன்!

''மணி என்ன தெரியுமா? ஏழு! உங்களை எத்தனை மணிக்கு வரச் சொன்னேன்?!'' - மனைவியாய் அவள் எகிற,

''சாரிம்மா! DCP ஒரு ரிப்போர்ட் கேட்டாரு... அதை ரெடி பண்ண கொஞ்சம் லேட் ஆகிடுச்சு... சாரிடா... சாரி!'' - நூறு ''சாரி'' போட்டு, மனைவியிடம் சர ணடைந்து கொண்டிருந்தான் அந்த ACP (Assistant Commissioner of police).

''பிரபா வந்துட்டானா?'' என அவன் கேட்பதற்கும்,

''எங்க... அவனும் உங்களை மாதிரி தானே?'' என கௌசி பதில் சொல்வதற்கும் இடைப்பட்ட நேரத்தில்,

''ஹே கௌ!'' என்ற உற்சாக அழைப்புடன் வந்து சேர்ந்தான் கௌசல்யாவின் கொழுந்தனும், அவளது மூத்த மகனுமாகிய பிரபாகரன்!

''ஹப்பா...'' என்ற அவளது நிம்மதி மூச்சை ''ஹய்யோ!'' என மாற்றும் வண்ணம் அழகிய நீலநிற ஜீன்ஸ் மற்றும் பச்சை வண்ண கோனா - மானா டி-ஷர்ட்டும் போட்டு நின்றிருந்தான் பிரபாகர்.

''என்னடா இது கோலம்!? கோவிலுக்கு வரும்போது மாத்திக்கிட்டு வான்னு வேஷ்டியும் சட்டையும் கொடுத்து விட்டேன் தானே? என்டா இப்படிப் பண்றே? அப்பா பார்த்தா... கத்துவாங்களேடா...''

''ஷ். அப்பா மாதிரியே பேசாதே கௌ! ஜீன்ஸ் போட்டா முருகன் கோச்சுப்பாரா என்ன... என்னை மாதிரி ஒரு நல்லவன் ஷார்ட்ஸ்-ல வந்தா கூட, அவர் தன்னோட ஆசிர்வாதத்தில் பின்னிப் பெடல் எடுத்திடுவார்...'' - டி-ஷர்ட்டில் இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான், பிரபாகர்.

''முருகன் பின்றது இருக்கட்டும்... இதோ அப்பா வந்துட்டார் உன்னைப் பின்னிப் பெடல் எடுக்க!'' என்ற சுதாகர் கமுக்கமாய் சிரிப்பதற்கும், தங்கத்தேர் அருகே நின்றிருந்த வெங்கடாசலம் அவர்களை நோக்கி வருவதற்கும் சரியாக இருந்தது.

கண்களில் கனலுடன் மகன்களை நோக்கி வந்தவர், ஏதோ பேசத் துவங்கும் முன்னர் ''முருகனுக்கு... அரோகரா! கந்தனுக்கு... அரோகரா! பழனி மலை வாசனுக்கு... அரோகரா! தண்டாயுதபாணிக்கு... அரோகரா!'' என்று முருகனைப் பார்த்துப் பாடிக் கொண்டே, அங்கிருந்து வேகமாய் நடந்தான் பிரபாகர்.

முருகனைத் துதி பாடும் மகனை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்க முடியாமல், வெங்கடாசலம் தயங்கி நின்றார்.



பொங்கப் போகும் பாலாய் இருந்த அவரது கோபத்தை, தன் பக்தி எனும் தண்ணீரால் ''புஸ்'' என்று ஆக்கிவிட்டிருந்த பிரபாகரின் குறும்பை எண்ணி, கௌசல்யா மனதிற்குள் சிரித்துக் கொண்டிருக்க, அதை மேலும் கூட்டுவது போல் முருகனின் தேர் அருகே சென்றிருந்த பிரபாகர், லேசாய் திரும்பி, மின்னல் வேகத்தில் கண்ணடித்தான்!

''அப்பா... மட்டும் பார்த்திருக்கணும்! கோவில்ன்னு கூட பார்க்காம... பிரம்பெடுத்து அடிச்சிருப்பாங்க...'' என்று மனைவியின் புறம் லேசாய் சரிந்து ரகசியம் பேசிய சுதாகருக்கும், சிரிப்பு தான்!

''சரி... சரி... போதும் சிரிச்சது. முன்னாடி போகலாம்...'' என்று முணுமுணுத்துவிட்டு, அவர் சின்ன மகனுடன் நின்றிருந்த பேரன்களிடம் நடக்கவும், கௌசல்யாவிற்கு நிம்மதியாய் இருந்தது.

குடும்பத்துடன் முருகக்கடவுள் முன்னே நின்றிருப்பது மனதிற்குள் ஓர் பரவசத்தை உண்டு பண்ண, கண் மூடி நின்றிருந்த கௌசல்யாவின் காதுகளில்,

''கௌ! இன்னும் கொஞ்ச நேரத்தில... ரம்மும், விஸ்கியும் இங்க வருவாங்க... உனக்கு ஓகே தானே?'' என்று முணுமுணுத்தான் பிரபாகர்.

''அவங்க வரதில எனக்கு ஒண்ணும் பிரச்னை இல்லை. ஆனா, இதென்னடா ரம்... பீரு!?! அழகா ரம்யா... விக்னேஷ்ன்னு சொல்ல வேண்டியது தானே?! என்னை வெறுப்பேத்துறதுன்னா உனக்கு அவ்வளவு இஷ்டமா? என்கிட்டே அடி வாங்காம போகப் போறதில்லையா...'' என்று பல்லைக் கடித்தாள், கௌசல்யா.

''கூல் இட்... கௌ! நீ சிரிச்சாப்ல இருந்தா தான்... என்னமோ கோபமா இருக்க மாதிரி இருக்கு! அப்படியே

ஒரு டெர்ரிபிக் லுக் விட்டேன்னு வையேன்... அப்படியே அழகு கொட்டுது போ...'' என்று கூறியவனின் அதரங்கள் அடக்கப்பட்ட சிரிப்பில், நர்த்தனமாடியது.

அவள் அடிக்க கை ஓங்கியதும் ''உன்னை அழகாக்கிப் பார்க்கத் துடிக்கும் உன் மூத்த மகனின் மனதைப் புரிந்து கொள்ள மறுக்கிறாயே, கோசலை தேவி!'' என்றான் அவளிடமிருந்து தப்பியவாறே.

''கோவில்ல வச்சு... இதென்னடா விளையாட்டு? சும்மா இரு பிரபா! போய்... குழந்தைகளோட நில்லு!'' என்று சுதாகர் ஒங்கி ஓர் அதட்டல் போடவும்,

''ஓம் முருகா! ஓம் முருகா!'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டே, அண்ணன் மக்களிடம் விரைந்தான் பிரபாகர்.

''சும்மா... அவனை ஏதாவது சொல்லிட்டே இருக்கணுமா? உங்களுக்கும் சரி... அப்பாவுக்கும் சரி... அவன்னா தொக்கு தான்! நீங்க திட்டறதுக்கு எல்லாம்... பாதி நேரம் பதில் பேசாம போயிடுறான் இல்லை... அதை தழைஞ்சு போறதுன்னு நினைச்சுக்கிறீங்க? அவன் கொடுக்கிற மரியாதையை ரொம்ப மிஸ்யூஸ் பண்றீங்க, அத்தான்!'' - படபடவென பொரிந்து தள்ளிய மனைவியையே சிரிப்புடன் பார்த்திருந்தான் சுதாகர்.

பதில் பேசாத அவன் மௌனத்தைவிட, குறுகுறுவென தன்னையே பார்த்திருந்த அவனது பார்வை ஏதோ செய்ய ''என்ன?'' என்பது போல் லேசாய் புருவம் வளைத்தாள் மனைவி.

''இல்லை... இன்னைக்கு ராத்திரி, பிரபா அவன் பிரண்ட்ஸ் கூட... ஏதோ பார்ட்டிக்குப் போறதா சொன்னான்...''

''என்னது பார்ட்டியா? என்கிட்டே... கேட்கவே இல்லை!?'' - திகைப்புடன் இடைப்புகுந்தாள் கௌசல்யா.



அவள் பேசாதது போல் பாவித்து ''அவன் பார்ட்டிக்குப் போயிட்டு லேட்டா வரும்போது... என்னைக் கூப்பிட்டு கண்டிக்கச் சொல்வே இல்லை... அந்த நேரத்தில, எனக்கு இப்போ நீ பேசின டயலாக் ஞாபகம் வருமோ இல்லையோ... அதான் ஒரு பேப்பர் எடுத்துக் குறிச்சு வைச்சுக்கலாமான்னு பார்க்கிறேன்...'' என்று ராகத்துடன் பேசி முடித்தான், கணவன். கூடவே, இரண்டடி தள்ளி வேறு நின்று கொண்டான்.

''ஹான்...'' என்று ஓர் நிமிடம் வாய் பிளந்து நின்றவள், கணவன் நின்றிருந்த விதத்தைப் பார்த்துவிட்டு, பக்கெனச் சிரித்தாள்.

அவளது கன்னங்களில் அழகாய் விழுந்த குழியை ரசித்தவாறே, சுதாகரும் சிரிப்புடன் அவளிடம் வந்து நின்று கொண்டான்.

சிரித்துவிட்ட போதும், முருகனின் தங்கத் தேர் தனது நான்காவது சுற்றை துவங்கும் வரையிலும், சிறு யோசனையுடன் கூடிய பார்வை ஒன்றை பிரபாகரிடம் செலுத்திக் கொண்டிருந்தாள், கௌசல்யா.

''கௌசி.... பிரபா எந்த பார்ட்டிக்கும் போகலை... டோன்ட் வொர்ரி!'' என்றான் சுதாகர் மெதுவாக.

''ஹோ... பொய் சொன்னீங்களா? உங்க போலீஸ் புத்தி... உங்களை விட்டுப் போகுமா? பாவம் பிள்ளை... ஒரு நிமிஷம், என்னடா என்கிட்டே பெர்மிஷன் வாங்காம... எப்படி பார்ட்டிக்குப் போறதா உங்ககிட்ட சொன்னான்னு அவனைத் தப்பா நினைச்சுட்டேன்...'' என்றபோது கௌசல்யாவின் குரலில் அப்படியொரு பெருமிதம். ஏனென்றால், அவனை வளர்த்தவளே அவ எல்லவா!

அம்மா பிள்ளை... அப்பா பிள்ளை... அண்ணன் பிள்ளை... அக்கா பிள்ளை என்று வளர்வோர் மத்தியில், ''அண்ணி பிள்ளையாக'' வளர்ந்தவன் பிரபாகர், அதுவும் சிறு வயது தொட்டே!

தான் வளர்த்த பிள்ளை, தன்னை உதாசீனப் படுத்தவில்லை என்பது மனதை வருட நின்றிருந்த கௌசல்யாவை, ஹெட் மிஸ் கெட்டப்பில் ஒரு ஸ்ட்ரிக்ட் ஆபீசர் போல் கற்பனை செய்கிறீர்களா? தப்பு... தப்பு... தப்பு.

இதே கௌசல்யா, பிரபா இரண்டு வாரத்துக்கு ஒரு முறை பாட்டிக்கு ஊர் சுற்றச் செல்கிறேன் என்று அவளிடம் வந்து நிற்கவில்லை என்றால், ''என்ன பிரபா இது? வீட்டுக்குள்ளேயே சுத்தி சுத்தி வர? உன் பிரண்ட்ஸ் கூட எங்கேயும் போகலையா? இந்த வயசில தான்டா... நல்லா ஊர் சுத்திப் பார்க்க முடியும். இந்த வாரக் கடைசியில படத்துக்காவது போயிட்டு வாயேன்... ரம்யா... விக்னேஷ்... நரேன்... எல்லாருமா போங்களேன்'' என அவனை அனுப்பி வைக்கும் ரகமே தான்.

இருபத்தியைந்து வயது இளைஞன் என்ற நினைப்பே இல்லாமல், தன் இரண்டரை வயது பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவனை, சில வினாடிகள் பார்த்திருந்துவிட்டு அவள் திரும்பும்போது, வடபழனி ஆண்டவன் தனது தங்க ரதத்தில் கோவிலை நான்கு முறை சுற்றி முடித்திருந்தார்.

புறப்பட்ட இடத்துக்கு அவர் வந்து சேர்ந்ததும், நான்காம் சுற்று ஆட்கள் நகர்ந்து கொள்ள ஐந்தாம் சுற்றுக்குப் பதிவு செய்திருந்த ஆட்கள் வடத்தைப் பிடிப்பதற்கும் இடைப்பட்ட நேரத்தில், ''ஹாய் அண்ணி! நாங்க வந்திட்டோம்!'' என்று கௌசல்யாவின் பின்புறமிருந்து இரு குரல்கள், ஏகத்திற்கு வால்யூமுடன் கேட்டன.



''ஹப்பா! என்ன சத்தம்?! நீங்க வந்தது... எனக்கு மட்டும் தெரிஞ்சா போதும். கோவில்ல இருக்க காக்கா... குருவியெல்லாம் உங்களைத் தேடலை! இப்படிக் கத்தி... அதுங்களை ஏன் விரட்டுறீங்க?'' - ''அன்பான'' வரவேற்பு ஒன்றை முன் வைத்து, பிரபாவுடன் வேலை பார்க்கும் ''ரம்யா'' மற்றும் ''விக்னேஷ் ராம்'' இருவரையும் வரவேற்றாள் கௌசல்யா.

''ரொம்பப் புகழாதீங்க அண்ணி! எனக்கு வெட்க... வெட்கமா வருது!'' என்று நாணிக் கோணிய ரம்யா, சென்னையில் வளைய வரும் ஓர் நவநாகரீக யுவதியின் பிரதிபலிப்பு.

நடை உடைகளில் மட்டுமல்லாது, எண்ணங்களிலும் நாகரீகத்தின் அதிவேகத்தனம் அப்பட்டமாய் நிரம்பியிருக்கும். ஒரே வரியில் சொல்லப் போனால், ''புதுமைகளை நேசிக்கும் ஓர் புதுமைப் பெண்!''

விக்னேஷ் - ரம்யாவிற்கு நேர் எதிரானவன். பெண்கள் லெக்கிங்ஸ் போட்டாலே... முகம் இஷ்டத்துக்கும் அஷ்டக் கோணலாகும் வண்ணம், நாகரீக முன்னேற்றங்களின் மீது ஓர் வெறுப்பு கொண்டவன். பெண்கள் உடை விஷயத்தில் மட்டுமல்ல. எதிலுமே நாகரீகத்தின் பூச்சை சற்றும் விரும்பாத ஓர் ஊர் நாட்டான். ஆம், பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் புதுக்கோட்டையில். இவனைப் பற்றிய ஒரு வரி - ''பழமைகளை நேசிக்கும் மண்ணின் மைந்தன்!''

இந்த இரு துருவத்திற்கும் நண்பனாய் இருக்கும் பிரபாகரின் பாலிசி - ''பழமையோ புதுமையோ... நமக்கு நன்மை தரக்கூடிய விஷயங்கள் எதில் இருந்தாலும், அதைப் பற்றிக் கொள்வதில் எந்தத் தப்புமில்லை!''

இவர்கள் குழுவில் அடுத்தவன் - நரேன். அவனைப் பற்றிய ஒரு வரி - ''கம்ப்யூட்டர் விஞ்ஞானி என்று தன்னைத் தானே சொல்லிக் கொள்ளும் ஐந்தறிவு ஜந்து.''

இந்த நால்வரும் எப்படி நண்பர்களாய் இருக்கிறார்கள் என்று கௌசல்யாவே அடிக்கடி வியக்கும் அளவிற்கு, நால்வருக்குள் அதிகமாய் நடப்பது சண்டை மட்டுமே!

அவளது இந்த எண்ணத்தை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருவது போல், ''நரேன் எங்க?'' என்ற அவளது கேள்விக்கு.

''அந்த லூசு... அவனோட ஆப்பிள் மாக்-ல விண்டோஸ் இன்ஸ்டால் பண்ணிட்டு இருக்கு... அதில ஏதோ டெஸ்ட் பண்ணனுமாம்... வர மாட்டேனுடுச்சு'' - தோளைக் குலுக்கினாள், ரம்யா.

''பெருசா அவனைப் பேச வந்துட்டா... இவ மட்டும் உடனேவா வரேன்னா சொன்னா? இன்னைக்கு... அவ பிரண்ட் கீதா அவளோட செகண்ட் ஹஸ்பண்டையும் டிவோர்ஸ் பண்ணிட்டாளாம்... அதுக்கு அவ கொடுக்கிற ''மூடு விழா'' பார்ட்டிக்குப் போறதா பேயாட்டம் ஆடிட்டு இருந்தது. நான் தான்... வம்படியா இங்க இழுத்திட்டு வந்தேன்...'' இது விக்னேஷ்.

''ஏய்... என் பிரண்ட் பத்திப் பேசாதே...'' பல்லைக் கடித்தாள் ரம்யா.

''அய்யயோ... பல்லைக் கடிக்காதே... ஏதோ ரைஸ் மில் பக்கத்தில் ஓடற மாதிரி... காது பயங்கரமா வலிக்குது...'' - இது நண்பர்களை வரவேற்க வந்த பிரபாகர்.

''முருகா... இந்த ரெண்டு தடியன்கள் வாயையும்... கூடவே காதையும் சேர்த்து புஸ்ஸாக்கிடு!'' - முருகனிடம் வேண்டுதல் வைத்தாள், அவர்களின் ஒரே தோழி!



''எங்களுக்கு வாயும் காதும் அவுட் ஆகுறது இருக்கட்டும் முருகா... முதல்ல, இப்படியொரு வேண்டுதலை வச்ச இவளோட வளர்ச்சியே இல்லாத மூளைக்கு என்ன வேலை சொல்லு... அதனால... அந்த ஸ்பேசை கொஞ்சம் காலி பண்ணிக் கொடுப்பா... எங்க கடையை அங்க போட்டுக்கிறோம்...'' என்று மேலும் பேசிய பிரபாகர்,

''என்னடா விக்கி? வடை கடை போடுவோமா இல்லை பிரியாணி ஸ்டால்... நல்ல சாய்ஸா?'' கண்ணை விரித்து, தீவிரமாய் யோசித்தான்!

''இவளுக்கு... பிரியாணி ஸ்டால் தான்டா சரி...'' என்ற விக்கி, மூக்கை மூடிக் கொண்டு, உதட்டைச் சுளிக்கவும்.

''வேண்டாம்! கோவில்ன்னு கூட பார்க்க மாட்டேன்... அண்ணி அர்ச்சனைக்குன்னு வச்சிருக்க தேங்காயை எடுத்து மண்ட மேலே உடைச்சுடுவேன்!'' என்று விபரீதமாய் பயமுறுத்தினாள் ரம்யா.

வாய் வார்த்தைக்கென்றில்லாமல், சொன்னதை செய்யக் கூடியவள் என்பதால், ''ஓ மை முருகா! எங்களைக் காப்பாத்து!'' என்ற கூவலுடன், இரண்டடி பின்னே சென்று நின்று கொண்டனர் நண்பர்கள் இருவரும்.

சொந்தமாய் ஓர் ''மென்பொருள் ஆய்வு மற்றும் சோதனை மையம்'' அமைக்க வேண்டும் என்ற ஒற்றை லட்சியம் - இந்த சண்டைக்கோழிகளை ஒன்றாய் பிடித்து வைத்திருக்கிறது!

எந்த விஷயத்தில் அடித்துக் கொண்டாலும், தங்களின் கனவு நனவாகும் பேச்சு என்றால், நண்பர்கள் நால்வரும் இரு கரம் கூப்பி, ஒரு மனமாய் ஒன்று கூடி விடுவார்கள்.

ஓர் பன்னாட்டு மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்தபோதும், பெரிய சமுத்திரத்தில் சிறு மீனாய் இருக்க விரும்பாமல், சின்னக் குளம் என்றாலும் தனித்துத்

தெரிய விரும்பிய நால்வரின் எண்ண அலைவரிசைகளும் (தொழில் ரீதியாக) ஒத்துப்போக, தொழில் தொடங்குவதற்கான தக்க நேரத்தையும், தேவையான முதலீட்டையும், தகுந்த இடத்தையும் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர் நால்வரும்.

பெரும் தொழில் ஒன்றை நிர்வகிக்கப் போகும் முதிர்ச்சி சற்றுமில்லாமல், சிறு பிள்ளைகளாய் சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்களின் நடுவே புகுந்து, ''போதும் விளையாட்டு! நம்ம டர்ன் வந்திடுச்சு... வாங்க எல்லாரும்...'' என்று அனைவரையும் கூட்டுச் சேர்த்து, முருகனிடம் அழைத்துச் சென்றாள் கௌசல்யா.

தங்கத்தேர் உலாவிற்குக் கொடுத்திருந்த நபர்களுக்கு, மாலை மரியாதை செய்யவென்று அர்ச்சகர் அவர்களுள் முக்கியஸ்தர் ஒருவரை அழைக்க, பேரன்களுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருந்த வெங்கடாசலத்தை முன்னே கொண்டு வந்து நிறுத்தினாள் கௌசல்யா.

முருகனுக்கு சாற்றிய மாலை ஒன்றை வெங்கடாசலத்தின் கழுத்தில் அணிவித்த அர்ச்சகரிடம், மேலும் இரு மாலைகளைக் கொடுத்து முருகனின் பாதத்தில் வைத்து எடுத்துக் கொடுக்கச் சொல்லிய கௌசல்யா, ஒன்றை தன் கணவன் கழுத்திலும், அடுத்ததை தன் கொழுந்தனின் கழுத்திலும் இடச் சொல்லி வேண்டினாள்.

அர்ச்சகர் இட்ட மாலையை பயபக்தியுடன் வாங்கிக் கொண்ட பிரபா, ''கௌ! எனக்கு ஒரு சின்ன ஃபீலிங்க்ஸ்யா... தேர் சுத்தி வந்து முடிச்சதும், சுதா அவன் கழுத்தில இருக்கிறதை எடுத்து... உன் கழுத்தில் எடுத்துப் போடுவான்... ஆனா எனக்குத்தான் அப்படியொரு கழுத்தே இல்லை...'' என்று ரகசியமாய் வசனம் பேசி, மெல்ல கண் சிமிட்டவும்,



''கழுதை!'' என்று ஒரே வார்த்தையில் வைதுவிட்டு, வேகமாய் வடம் பிடிக்கச் சென்றாள் கௌசல்யா.

''அண்ணி... நீங்க அண்ணனோட போய் நில்லுங்க. உங்க வாலு பசங்களைத் தூக்கிட்டு, முருகனோட சுத்தி வாங்க போதும்... நாங்க தேரை இழுத்திட்டு வரோம்!'' என்ற நண்பர்கள் மூவரும், தேரின் வடத்தை இறுகப் பற்றி நடக்கத் துவங்க,

நகுலை ஏந்திய சுதாகர், பரத்தை ஏந்திய கௌசல்யா, அர்ச்சனைத் தட்டுடன் வெங்கடாசலம் - மூவரும் தேரின் முன்னே இருந்த நுகத்தடியை பிடித்தவாறே நடந்துவர, நண்பர்கள் மூவரும் தேரை வடம் பிடித்து இழுத்து வந்தனர்.

மனம் பக்தியில் நிரம்பியிருக்க, தங்களது குடும்பத்தின் சந்தோசம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்ற வேண்டுதலுடன், அழகன் முருகனின் பாதம் பணிந்தனர் பிரபாகரின் குடும்பத்தினர்.

## 2

தங்கத் தேர் பவனியின் பின்னே, வடபழனி ஆண்டவனாய் கொலு வீற்றிருக்கும் முருகனின் சன்னதிக்குச் சென்று ஆனந்த தரிசனம் பெற்ற பிரபாகரின் குடும்பம், கோவிலை விட்டு வெளியே வரும்போது மணி எட்டரையை நெருங்கியிருந்தது.

''என்ன கௌசி! சாப்பிட வீட்டுக்குப் போய்டலாமா? எல்லோருக்கும் தோசை ஊத்த மாவு வச்சிருக்கியா?'' என்றான் சுதாகர். இவன் ஒரு வீட்டுச் சாப்பாட்டு பைத்தியம்.

இரவு பதினொன்றிற்கு வந்தாலும்... ஏன் அலுவலர்களுடன் ஒன்பது மணிக்கு உண்டு விட்டாலும்...

அவனால் கௌசியின் கையில் வாங்கி உண்ணாமல் இருக்க முடியாது.

''சின்னப் பிள்ளை மாதிரி... தோசைக்குப் பறக்கா தீங்க!'' என்று மனைவி, செல்லமாய் திட்டினாலும் சரி.

''நடுராத்திரில ஏங்க இப்படிப் படுத்துறீங்க? இந்த புளிச்சுப் போன தயிர் சாதத்தை உள்ள அடைக்கலைன்னா... உங்களுக்குத் தூக்கம் வராதா? உங்களுக்குத் தூக்கம் வரதுக்காக, படுத்திருக்க என்னைப் போட்டு... ஏங்க உயிரை வாங்குறீங்க?'' என்று கோபத்தில் கத்தினாலும் சரி, அடுத்த நாளும் தாமதமாய் வந்து, மனைவியிடம் திட்டுப் படவில்லை என்றால் மனதே சரியாகாது சுதாகருக்கு!

என்றும் போல் அன்றும், உணவிற்கு வீட்டிற்குச் சென்று விடலாம் என்று அவன் கூற, கௌசல்யா முறைத்தாள்.

''நீங்களா தான் ஹோட்டலுக்குக் கூட்டிப் போறதில்ல... இப்படி வெளிய வரும்போதாவது கூட்டிப் போகக் கூடாதா? மணி... இப்பவே எட்டரை... இங்க இருந்து ராமாபுரம் போக இன்னும் ஒரு மணி நேரம் கண்டிப்பா ஆகும்... அதுக்கு அப்புறம் போய், எப்போ சமைச்சு... எப்போ சாப்பிடறது? ப்ச்...'' - கௌசல்யாவிற்கு எரிச்சல் வந்ததில் என்ன தப்பிருக்கிறது!?

''சரி... சரி... கோபப்படாதே கௌசிமா! நீ... சட்னி மட்டும் போட்டாப் போதும்... அதுக்குக் கூட, அப்பா தேங்கா துருவித் தருவாங்க... சரியா? பிரபா... அழகா தோசை வார்ப்பானே... அதனால் அவன் தோசை ஊத்தட்டும். என்ன சரியா? உனக்கு வேலை ரொம்பக் கம்மிதான்... என்ன சொல்றே?'' என்று புதிதாய் வழி கண்டு பிடித்த கணவனைத், தன்னால் முடிந்தமட்டும் முறைத்தவள்,



''என்ன சரியா... இல்ல என்ன சரியான்னு கேட்கிறேன்... உங்க ஓராள் சந்தோஷத்துக்கு எங்க எல்லோரையும் படுத்தி எடுப்பீங்களா? எனக்கு... வர ஆத்திரத்துக்கு...'' கௌசியின் பற்கள் ஒரு சீராய் கடிபட்டன.

அவளது ஆத்திரத்துக்குப் பதில் சொல்ல முடியாமல், சுதாகர் மென்று முழுங்கிக் கொண்டிருக்கும் போதே ''கௌ, சரவணபவன்-ல சாப்பிட்டுப் போய்டலாமா? இனிமேல் போய்... எல்லோருக்கும் சமைக்கிறதுன்னா கஷ்டமில்லையா... இதுல இந்த ரெண்டு கொடுக்குங்க (தன் நண்பர்களைச் சொல்கிறான்) வேற சேர்ந்திருக்காங்க... சாப்பிட்டே நம்ம சொத்தை அழிச்சிடுவானுங்க... சோ... ஹோட்டல் போயிட்டு வீட்டுக்குப் போகலாம்'' என்றவாறு அண்ணன் - அண்ணியிடம் வந்து சேர்ந்தான் பிரபாகர்.

''ம்ம். போலாம்'' என்ற கௌசல்யாவின் குரலிலிருந்த தயக்கமும், ஓரக் கண்ணால் தன் கணவனை அவள் பார்த்தக் கெஞ்சுதல் பார்வையும் இரு ஆண் மகன்களின் கண்களிலும் பட்டு மீண்டது.

''பரவாயில்லை கௌசி! ஹோட்டலுக்கே போலாம்!'' என்று சுருக்கமாய் சுதாகரும்,

''என்ன உன் ஆத்துக்காரனுக்கு... ஆத்து சாப்பாடு தான் வேணுமாக்கும்? நாளைக்கு லோகம்மாவுக்குக் கொடுக்கிறதுக்கு எடுத்து வச்சிருக்க பழைய சாதத்தில... தயிரை ஊத்தி... அவனுக்குக் கொடுத்துக்கலாம். சும்மா யோசிக்காம வா!'' என்று நீளமாய் பிரபாகரும் பேசி முடிக்க,

''தினம்... தினம்... எனக்கு பழைய சாதத்தில தான் தயிர் ஊத்தித் தரியா? அதுவும் வேலைக்கார அம்மாவுக்கு எடுத்து வச்சிருக்க சாதத்தில...'' என்று பரிதாபமாய் கேட்டான், அந்தக் கம்பீரக் காவல்காரன்.

''அய்யே! அவன் சொல்றான்னு... நீங்களும் மூஞ்சியை முழ நீளத்துக்குத் தூக்கி வச்சுக்கோங்க... எந்த வேலைக் காரி பழைய சாதம் வாங்கிக்கிறா?'' என்றவள்,

''தினமும், உங்களுக்குன்னு சூடா சாதம் வச்சு, அதில தாங்க தயிர் ஊத்தித் தரேன். நம்புங்க சுதாப்பா!'' என் றாள் சிறு பிள்ளைக்குச் சொல்லும் குரலில்.

மனைவியின் சமாதானத்தில் முகம் தெளிந்தாலும், அரை மனதுடனே (வெளியே சாப்பிடும்படி நேர்ந்து விட்ட சங்கடம் தான்... வேறென்ன!) உணவகத்துக்குச் சென்றான், சுதாகர்.

ஆனால், அவனது முகம் அடுத்து வந்த நிமிடங்களில் பிரகாசித்து மின்னும் அளவிற்கு, உணவகத்தில் பிரபா கரும் அவனது நண்பர்களும் அடித்த கூத்து அமைந்தது.

''இன்னைக்கு என்னோட ட்ரீட்'' என்று பிரபாகர் சொன்ன மாத்திரம் இல்லாமல், மெனு கார்டில் இருந்த அனைத்தையும் ஒரே நேரத்தில் உண்பவர்கள் போல், விக்னேஷும் ரம்யாவும் ஆர்டர் கொடுக்க, சர்வரே மிரண்டு போனான்.

''இன்னும் எத்தனை பேர் வருவாங்க?'' என்று சர்வர் கேட்க, சுதாகருக்கு சிரிப்புப் பீறிட்டது.

தானும் சிரித்தவாறே, ''இனிமேலும் யாராவது வரதா? பாஸ்... என் மாச சம்பளத்தைக் காலி பண்ணிடுவீங்க போலிருக்கே!?'' என்றான் பிரபாகர், முகத்தை அப்பாவி யாய் வைத்துக் கொண்டு.

வயதான அவரும் சிரிப்புடன் நிற்க, ''சும்மா... மெனு கார்டு-ல இருக்க டிஷ் எல்லாம் அவங்களுக்குத் தெரியு தான்னு பார்க்கிறாங்க. கொஞ்சம் மண்டூசா இருக்கிற தால... சத்தம் போட்டுப் படிச்சா தான் மண்டையில



ஏறும் போல...'' என்ற பிரபாகரின் உதடுகளில் அடக்கப் பட்ட சிரிப்பென்றால், அதைக் கேட்டிருந்த கௌசல்யா விற்கு அடக்க முடியாத சிரிப்பு.

அப்போதும் விக்னேஷும், ரம்யாவும் மெனு கார்டி லிருந்து கண்ணை எடுக்காமல், அதிலிருந்த அனைத் தையும் வரிசை மாறாமல் படித்துக் கொண்டிருக்க, ''நான் சொன்ன 'மண்டூஸ்'சை என்ன அழகா நிரூபிக்கிறாங்க!'' என்று மேலும் சிரிப்பூட்டினான், அவன்.

''ஷ் ரம்யா! உங்க ரெண்டு பேரையும் தான் கிண்டல் பண்ணிட்டு இருக்கான்... அது தெரியாம...'' என்று மேலும் சிரித்த கௌசல்யா.

''இவ்வளவையும் சாப்பிட்டா... இன்னும் ரெண்டு நாளுக்கு டாய்லட்-லேயே இருக்க வேண்டியது தான்!'' என்றாள் பயமுறுத்தும் குரலில்.

''அடேங்கப்பா! கொழுந்தனோட பணம் கரையு தேன்னு மனசு படபடன்னு அடிச்சுக்குதாக்கும்!? சும்மா... இல்லாததைப் பொல்லாததைச் சொல்லி... இந்தச் சின்னப் பொண்ணை சாப்பிட விடாம செய்றீங்க! இதெல்லாம் டூ பாட்... டூ டூ பாட்...'' என்று ரம்யா குறைபட, அதற்கு மேல் அவள் கூறிய ''சின்னப் பெண்'' என்ற வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, நண்பர்கள் இருவரும் அவளைத் ''தடி மாட்டிற்கு'' நிகராக ஓட்டி எடுத்து முடித்திருந்த போது, பிரபாவின் ஆர்டரின் பெயரில் அனைவருக்கும் உணவு வந்து சேர்ந்திருந்தது.

அவரவர் பிடித்தம் அறிந்து, அவன் ஆர்டர் செய் திருந்தபடியால், யாராலும் ஒரு குறை கூட கண்டு பிடிக்க முடியவில்லை.

சிரிப்பும் சந்தோஷமும் வளைய வந்த இடத்தை மேலும் அழகாக்குவது போல் சுதாகரின் மைந்தர்கள் தம் மழலையால் அனைவரையும் சந்தோஷித்தனர்.

''பீபா... பதத்துக்கு (பாத்துக்கு) குலாப் ஜாமூன் வேவும்...'' என்று பிரபாகரின் தொடையில் ஒய்யாரமாய் சாய்ந்து கொண்ட பாத் ஆகட்டும்,

''எக்கும்... எக்கும்! குவாப் ஜாமூன்... அப்தம்... அவ்வா (அல்வா)... அப்தம் இனிப்பு கேசதி (கேசரி)'' என்று பட்டியலிட்ட நகுல் ஆகட்டும். இருவருமே தாயிடமோ தந்தையிடமோ எதையும் கேட்கவில்லை. பிரபாகர் தான் அவர்களது ஹீரோவாக இருந்தான்!

''பீபா... பீபா'' என்ற அவர்களது அழைப்பு, பிரபாகரைக் கேலிக்கு உள்ளாக்கினாலும், அதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்படுவதாகவே தெரியவில்லை சுதாகருக்கு!

''குலாப் ஜாமூன் தானே? கண்டிப்பா வாங்கித் தரேன்... ஆனா, தட்டில இருக்க பூரியை ஒழுங்கா சாப்பிடணும் ஒகே?! தட்டில பூரி காலியானதும்... குலாப் ஜாமூன் ஷூக்... பறந்து வரும்'' என்று கைகளால் ஏரோப்பிளேன் ஓட்டி, அவர்களை அழகாய் உண்ண வைத்தான்.

அதே போல், தந்தையிடமும் அவனது கவனம் படிந்து மீண்டதைப் பார்க்க சுதாகருக்கு சுவாரஸ்யமாய் இருந்தது.

''அப்பா... இங்க வெஜிடபிள் பரோட்டா நல்லா இருக்கும், அதை சாப்பிடுங்களேன்... ஏன் வீட்டில சாப்பிடற அதே தோசையைச் சொல்றீங்க?'' என்றும்,

''வெறும் பால் வேண்டாம்பா... மசாலா பால் ட்ரை பண்ணுங்க!'' என்றும் அவரிடமும் கவனத்தை வைத்துக் கொண்டான்.

நண்பர்கள், தந்தை, பிள்ளைகள், கௌசல்யா என்று அனைவரையும் சந்தோஷத்தில் வைத்துக் கொண்ட தம்பியின் பாங்கில் மனம் லயித்தாலும், இத்தனை நாள் இந்த சந்தோஷத்தை அனுபவிக்காது போனோமே என்ற வருத்தம் சுதாகருக்கு வந்தது.



மனைவி சொல்வது போல், தன் சந்தோஷத்தையும்... தன் விருப்பத்தையும் மட்டுமே முன்னிறுத்தி, ஹோட்டலுக்கு அழைத்து வருவதை ஏதோ பாவச் செயல் போல் கருதியது எவ்வளவு பெரிய பிழை என்று மனம் அடித்துக் கொண்டது. அடிக்கடி இல்லா விட்டாலும், மாதம் ஒரு முறையேனும் குடும்பத்துடன் வெளியே வர வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டு, உணவைத் தொடர்ந்தவனுக்கு என்ன தோன்றியதோ, சட்டென மனைவியின் புறம் குனிந்து,

''சாரிடா கௌசி! இனிமேல்... அடிக்கடி ஹோட்டலுக்குக் கூட்டிட்டு வரேன். ஐ ஃபீல் வெரி பாட்!'' என்றான் வருத்தத்துடன்.

''ஹே என்னப்பா இது!? இதுக்குப் போய்...'' என அவள் பேச ஆரம்பிக்கும்போது,

''அண்ணா... இது உங்க ரூம் இல்ல. ஹோட்டல்... ஹோட்டல்... ஹோட்டல்...'' என்று கத்தினாள், ரம்யா.

''எதிர்த்த சீட்-ல இருக்க எனக்கே தெரியாம இருந்த ஒண்ணை... ஊருக்கே தெரியிற மாதிரி ஆக்கிட்டு... கத்துது பாரு! அடிடா அவளை!'' தோழியின் முதுகில் ஓர் அடி வைத்து, அடுத்த ரகளையை ஆரம்பித்து வைத்தான் பிரபாகர். அவனைத் தொடர்ந்து, விக்னேஷ், பரத், நகுல் என்று வரிசையாக ரம்யாவின் முதுகை மத்தளமாக்க, சந்தோசம் தடதடத்தது.

ஒரு வழியாக, உணவை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தபோது மணி பத்தரையைத் தாண்டி இருந்தது. வழியிலேயே உறங்கி விட்ட சிறுவர்கள் இருவரையும், வெங்கடாசலம் தன் அறைக்குள் படுக்க வைத்துக் கொள்ள, கௌசி அடுக்களையின் பக்கம் திரும்பினாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம், குழைய பிசைந்த தயிர் சாதத்தை ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு வந்த மனைவியை அப்படியே கட்டிக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது சுதாகருக்கு! ஆனால், அதைச் செய்ய முடியாமல், அவனது தம்பியப்பன் சட்டமாய் உணவு மேஜையில் அமர்ந்திருந்தானே!?

வெறுமே "தேங்க்ஸ்டா கௌசி!"யுடன் உணவை வாங்கிக் கொண்டவன், உள்ளுக்குள் தம்பியைத் திட்டிக் கொண்டே உண்டதாலோ என்னவோ, உணவு வேகமாய் உள்ளே சென்றுவிட, படுக்கையறைக்குள் மறைந்தான்.

அடுக்களையில் இருந்த சிறு வேலைகளை முடித்துக் கொண்டு, ஒரு கொட்டாவியுடன் கௌசல்யாவும் தன் அறை பக்கம் நகர்ந்தபோது, பரத்தின் விளையாட்டுச் சாமான் ஒன்றை கையில் வைத்துக் கொண்டு அதில் மும் முரமாய் இருந்த பிரபாகர் அவளது கண்களில் பட்டான்.

"என்னடா... இன்னும் தூங்கலை?!" - அவன் அருகே வந்தாள் கௌசல்யா.

"உன்கிட்ட கொஞ்சம் பேசணும்... கௌ!" என்றான் பிரபாகர்.

"என்ன விஷயம்? எதுனாலும்... நாளைக்குப் பேசிக் கலாம், பிரபா! மணி பதினொண்ணு ஆகிடுச்சு..." மீண் டும் ஓர் கொட்டாவி வந்து விழுந்தது.

"ப்ளீஸ் கௌ! உன்கிட்டப் பேசினா தான்... எனக்குத் தூக்கமே வரும்!" என்றவன், அவளது கைகளைப் பிடித்து எதிரே இருந்த நாற்காலியில் அமர வைத்தான்.

"ஷ் படுத்துறடா!" - சலிப்புடன் அமர்ந்தவள், "விஷ யத்தைச் சீக்கிரம் சொல்லு!" என்றாள்.

"ஹும்ம், நாளைக்குக் காலையில... இசைச்சாரல் எஃப்.எம்-ல வாய்ஸ் டெஸ்ட்டுக்குக் கூப்பிட்டு இருக்



காங்க. அதுக்குப் போறதுக்கு உன்கிட்ட பெர்மிஷன் வேணும்" - நேரடியாய் விஷயத்திற்கு வந்து விட்டான், பிரபாகர். எதிலுமே, சுத்தி வளைக்கும் பழக்கமே கிடை யாது. தனக்கு வேண்டியதை, தைரியமாய் கேட்டு வாங்கிக் கொள்ளும் அவனது அப்பழக்கம் இப்போதும் அமலுக்கு வந்தது.

"என்னது வாய்ஸ் டெஸ்ட்-டா? ரேடியோ-வா? என் னடா சொல்ற... எனக்கு ஒண்ணுமே புரியலையே!?" - கௌசல்யா ஏகத்திற்கும் குழம்பிப் போனாள். ஓர் பன்னாட்டு மென்பொருள் நிறுவனத்தில், நல்ல பதவி யில் இருப்பவனுக்கு ரேடியோவில் என்ன வேலை!? என்று மனம் குழம்பியது.

"ஆமா, கௌ! இந்த ரம்யா லூசு தான்... என்னோட குரலை சி.டி.ல பதிவு செஞ்சு, "ரேடியோ ஜாக்கி" வேலைக் காக, இசைச்சாரல் எஃப்.எம். கொடுத்திருந்த விளம்பரத் துக்கு அனுப்பியிருக்கு. அவங்களுக்கு என்னோட குரல்ல என்ன பிடிச்சதோ தெரியல... என்னை வரச் சொல்லியிருக் காங்க. தட்ஸ் ஆல்!" என்றான் பிரபாகர், விடையாக.

"ரேடியோ ஜாக்கியா? அய்ய! அதெல்லாம் வேண்டாம் பிரபா... நம்ம மாதிரி மிடில் கிளாஸ்-க்கு மீடியா துறை சரியா வராது..." என்று கௌசி பேசிக் கொண்டே போக,

"ஹே என்ன கௌ! நான் என்ன... ஹீரோவா நடிக்கப் போறதாவா சொன்னேன்? ஜஸ்ட் ரேடியோ ஜாக்கி தான், கௌ! வாய்ஸ் மட்டும் தான்!"

"ம்ஹூம், நீ பார்த்திட்டு இருக்க வேலையே போதும்டா. அதிலேயே, எழுபதாயிரத்துக்கும் மேலா சம் பளம் வருது... அப்புறம் என்ன?"

"அய்யே! பணத்துக்காகவா போறேன்னு சொல்றேன்... எனக்குமே, ரேடியோ-ல ஒரு நிகழ்ச்சியைத் தொகுத்து

வழக்கனும் போல இருக்கு... கௌ! ஒரு ஹாபி மாதி ரின்னு வச்சுக்கோயேன்... ப்ளீஸ் கௌ!''

''ரேடியோ-ல பேசறது ஒரு ஹாபி-யா? போடா நீயும்... உன் ஹாபியும்! அப்பா கேட்டா, எட்டு நாளுக்குக் கத்துவாங்க!'' என்று தீர்மானமாய் மறுத்தாள் கௌசல்யா.

''என்ன கௌ! நீயே இப்படிச் சொன்னா எப்படி...'' - பிரபாகரின் கெஞ்சலுக்குப் பதிலாய் கௌசல்யாவின் முகம் கொஞ்சம் கூட இளகவில்லை.

''நீ 'ஒகே' சொல்லணும்ங்கிறதுக்காக... முருகனோட தேரை எவ்வளவு கஷ்டப்பட்டு இழுத்தேன் தெரியுமா...''

''அரோகரா எல்லாம் என்ன அழகா போட்டேன்... அது கூட உன் மனசை இளக்கலையா?

''சரி... அதை விடு! உன் வேலையைக் குறைக்கிற துக்காக, ஹோட்டல் கூட்டிப் போனேனே! அதைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு, கௌ!

''ப்ச்... என்ன கௌ இது! அப்புறம்... சரவணபவன்-ல உனக்குப் பிடிச்ச பாஸந்தி வாங்கித் தந்தேனே? அதுக் காகவாவது... ஒகே சொல்லக் கூடாதா?

''சரி... பாஸந்தி வேண்டாம்... அந்த ருமாலி ரொட்டி யும் நவரத்ன குருமாவும் கூடவா நினைவுக்கு வரலை...

''ஒகே... ஒகே... நார்த் இந்தியன் டிஷ்ங்கிறதால மறந் துட்டே போல... ஹான் நம்ம ஊரு மசால் தோசையை நினைச்சுப் பாரேன்...

''சரி... அதெல்லாம் திடமான உணவு... அதை விட் டுடுவோம். கடைசியா குடிச்சியே, மாதுளை ஜூஸ்... அதோட டேஸ்ட்டை அப்படியே ரீவைண்ட் பண்ணி எடுத்திட்டு வாயேன்... உடனே சரி சொல்லிடுவ!'' - அனுமதி கேட்கிறேன் என்ற பெயரில், கௌசல்யா அன்று உண்ட உணவுகளைப் பட்டியலிட்டு, அவளது கடுப்பை ஏகத்திற்கும் ஏற்றிக் கொண்டிருந்தான் பிரபாகர்.



''ஷ். நிறுத்து! என்னமோ... நம்ம பையன் ஆசையா வாங்கித் தரானேன்னு சந்தோஷப்பட்டேன்... இப்பத் தானே தெரியுது. நீ எனக்கு லஞ்சம் கொடுத்திருக் கேன்னு... இந்தத் தப்புக்காகவே உனக்குப் பெர்மிஷன் கிடையாது!'' - அழுத்தம் திருத்தமாய் மொழிந்துவிட்டு, கௌசல்யா எழவும்,

'அய்யயோ! உன் வாய் தான்டா உனக்கு எதிரி!' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு, அண்ணியின் முன்னே ஓடி வந்தான்.

''இது தான் நீ பேசினதிலேயே சத்தியமான வார்த்தை! இந்த வாய் இருக்கே... வாய்... கொஞ்சம் கூட அடங்காம ஆடிட்டே இருக்க வாய்...'' என்று அவன் வாய் மீதே போட் டாள், அவனது அன்னை ஸ்தானத்தில் இருக்கும் அண்ணி.

''நாளைக்கு ஒரு நாள் வேணும்னா நான் பேசவே இல்லை, கௌ! மௌன விரதமா இருக்கேன்... ப்ளீஸ் பெர்மிஷன் தாயேன்!'' என்று அவளது கன்னம் பிடித்துக் கொஞ்சினான், அவளது மூத்த மகன்.

''மௌன விரதமா இருக்கியா? அப்புறம் எப்படிடா... வாய்ஸ் டெஸ்ட்-ல தேறுவே? இதில... பிட் கூட அடிக்க முடியாதே!'' என்ற கௌசல்யா, அவனது காதைப் பிடித்து லேசாய் முறுக்கவும்,

''யாஹூ! தேங்க்ஸ் கௌ!'' - கௌசல்யாவின் வார்த் தைகளில் பொதிந்திருந்த அவளது சம்மதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, ஆனந்தக் கூத்தாடினான் பிரபாகர்.

நடையில் துள்ளலுடன் தன்னறை நோக்கி நடந்தவன், ''அப்பாகிட்டயும், அண்ணாகிட்டயும் சம்மதம் வாங்க வேண்டியது... உன் பொறுப்பு!'' என ஓர் இமாலயப் பொறுப்பை கௌசியின் தலையில் சுமத்திவிட்டு, உள்ளே சென்று விட்டான்.

"அடப்பாவி!" என்று அவனை வைதபோதும், அடுத்த நாள் காலை உணவின்போது பிரபாகரின் ஆசையை சபையில் தெரிவித்தாள், கௌசல்யா.

அவள் எண்ணியது போலவே, "மீடியா துறையா? வேண்டவே வேண்டாம்!" என்று அடித்துப் பேசினார், வெங்கடாசலம்.

பிரபாகரை ஒரு பார்வை பார்த்துக் கொண்டே, "அப்பா, பிரபாவுக்கு இருபத்தைந்து வயசாகிடுச்சு. இந்த வயசில இருக்க மத்த பசங்கெல்லாம்... கல்யாணத்துக்குக் கூட வீட்டில பெர்மிஷன் கேட்கிறதில்லை. ஆனா, இவன்... அவனோட ஒரு சின்ன ஆசையை நிறைவேத்திக்கிறதுக்கு நம்ம எல்லார்கிட்டயும் கெஞ்சிட்டு இருக்கான். நமக்கு மரியாதை கொடுத்து, அவன் நம்மகிட்ட கேட்கும்போது, நாமளும் அவனோட ஆசையை மதிக்கணும் இல்லையா? அவன் என்ன... ஹீரோவா நடிக்கப் போறேன்னா சொல்றான்... இல்லை பார்த்திட்டு இருக்க வேலையை விட்டுட்டு முழு நேரமும் ரேடியோ-ல வேலைக்குச் சேரப் போறேன்னு சொல்றானா. ஜஸ்ட் ஒரு ஹாபி. அவ்வளவு தான்பா! அதுக்கு ஏன் தடை போடணும்?! சந்தோஷமா அனுப்பி வைக்கலாமே?" என்றாள் ஏற்ற இரக்கமில்லாத சீரான குரலில்.

மருமகளின் வாதத்திலிருந்த நியாயமும், மகனின் நன்னடத்தையை அவள் படம் பிடித்துக் காட்டிய விதமும், அவரை சம்மதிக்க வைத்தது.

கூடவே, "ரேடியோ ஜாக்கி வேலைங்கிறது சும்மா ஒரு டைம்பாஸ்க்காக தான்பா போறேன். அதையே முழு நேரத் தொழிலா மாத்திக்கிற எண்ணம்... எனக்குக் கொஞ்சம் கூட இல்லை. சொல்லப் போனா, மனசுக்குப் பிடிக்கலைன்னா அதை விட்டுட்டு வரவும் தயங்க மாட்டேன்பா" என்று பிரபாகரும் உறுதி கொடுத்தான்.



ஆனால், பொழுதுபோக்கு என்று அவன் எண்ணியிருக்கும் இந்த ரேடியோ ஜாக்கி வேலை, அவனது வாழ்வின் பல முக்கியத் திருப்பங்களுக்குக் காரணமாய் இருக்கப் போகிறது என்பதை அவன் அப்போது அறியவில்லை!

## 3

அடுத்த நாள் காலையில், ரேடியோ ஜாக்கி தேர்விற்காக பெரும் உற்சாகத்துடன் வானொலி நிலையம் கிளம்பிய பிரபாகரிடம் "ரொம்பப் பேசி அவங்களைப் பயப்படுத்திடாதே! அதே சமயம், ஓவரா அடக்கி வாசிச்சு... வேலையைக் கோட்டை விட்டுறாதே!" என்ற அறிவுரையுடன் கௌசல்யா வழியனுப்பி வைக்க,

"என்னை என்னதான் பண்ணச் சொல்ற, கௌ!? இப்போ நீ பேசினியே... அதே மாதிரி... ஒண்ணுணுணுமே புரியாத லெவல்லுக்குப் பேசவா?! அப்படிப் பேசினா... கல்லடி இல்ல செருப்படி வாங்கும் அபாயம் தெரியுதேம்மா, தெரியுதே!" என்று பதிலுக்கு ராகம் இழுத்து, அவளது ஆசிர்வாதமாய் ஒரு அடியை முதுகில் வாங்கிக் கொண்டு, நிம்மதியடைந்த மனதுடன், "ரேடியோ ஜாக்கி" தேர்விற்காக வானொலி நிலையத்திற்குப் பறந்தான், அவன்.

மூன்று மணி நேரத்திற்கும் மேலாய் நடந்தேறிய தேடுதல் வேட்டையில், பிரபாகர் உட்பட மூன்று பேர் தேர்வாக, "ஆத்தா... நான் பாஸ் ஆகிட்டேன்!" என்ற கூவலுடன் வீடு வந்து சேர்ந்தான், நம் கதாநாயகன்.

மதியம் இரண்டு மணிக்கெல்லாம் வீட்டினுள் நுழைந்த பிரபாகரின் சத்தம், குழந்தைகளைத் தூங்கப் பண்ணிக்

கொண்டிருந்த கௌசல்யாவை எட்டியதோ இல்லையோ, தூக்கத்தின் வாசற்படிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த மக்கள் இருவரும் 'பீபா' என்று அலறிக் கொண்டே படுக்கையறையை விட்டு வெளியே விரைந்தனர்.

"ஹாய்டா குட்டீஸ்! சித்தப்பாவுக்கு புது வேலை கிடைச்சிடுச்சடா வாலுங்களா... இந்தாங்க ஸ்வீட்... குலாப் ஜாமூன்... குண்டு குண்டு குலாப் ஜாமூன்... உங்களை மாதிரி குண்டு குண்டா..." என்று அவர்களது கன்னத்தை வலிக்காது கிள்ளி, தான் கொண்டு வந்திருந்த குலாப் ஜாமூன் ஒன்றை இருவர் வாயிலும் திணித்தான்.

"கங்கிராட்ஸ்டா, பிரபா!" எனத் தன் வாழ்த்தை முதலில் சொல்லியவள்,

"போதும்டா... நேத்து வேற நிறைய ஸ்வீட் சாப்பிட்டிருக்காங்க. ஸ்வீட் நிறைய சாப்பிட்டா... பரத்துக்குச் சட்டுன்னு சளி பிடிச்சிடுது! வேணாம் போதும் விடு..." என மக்களின் வயிறை, குலாப் ஜாமூனின் தாக்கத்திலிருந்து விடுவிக்க முயன்றாள்.

"அம்மா... போ!" என்று கௌசல்யாவைத் தள்ளி விட்ட பரத், "இன்னு... ஒண்ணு குலாப் ஜாமூன்... பீஸ்" என்று சித்தப்பனிடம் கொஞ்சினான்.

"இப்போ சாப்பிட்டா... ஒண்ணே ஒண்ணு தான். அப்புறம்... சாயங்காலமா... அப்பா வருவாங்களே... அப்போ சாப்பிட்டா... சித்தப்பா டூ குலாப் ஜாமூன் தருவேனே!? ஒன் பெருசா... டூ பெருசா..." என்று ஒரு விரல், இரு விரல் என்று மாற்றி மாற்றிக் காட்டி, பிரபாகர் விரல் வித்தைக் காட்ட, மாலையில் கிடைக்கப் போகும் இரண்டு குலாப் ஜாமூன்களை அசைபோட்டவாறே இரு பொடியன்களும் அடங்கிப் போயினர்.



இருவரது முகமும் சமாதானத்திற்கு வந்துவிட்டதை கவனித்த கௌசல்யா, "தூங்கலாமா?" என்றழைக்க,

"பீபாவோட..." என்ற கோஷத்துடன் அவர்கள் பிரபாகரிடம் ஒண்ட,

"போங்கடா... போங்க இன்னைக்கு... வேணும்னா இந்த பீப்பா தூங்கப் பண்ணுவான்... நாளைக்கு என்கிட்டே தான் வரணும்..." என்று கௌசல்யா கழுத்தை ஒடித்துக் கொண்டே, பிரபாவின் மதிய உணவைக் கவனிக்க உள்ளே நகர,

"வாங்கடா ராஜாஸ்! உங்கம்மாவுக்கு... லாட்ஸ் ஆஃப் பொறாமை! அவளை அப்படியே லூசுல விட்டுட்டு... நாம போய் தூக்கத்தை டைட்டா பிடிச்சுப்போம்" என்று பையன்களை ஓட்டிக் கொண்டு, தன் அறைக்குள் சென்றவன், அடுத்த அரை மணி நேரத்தில், சோம்பல் முறித்தவாறே வெளியே வந்தான்.

சமையலறையை நோக்கி "அம்மா பசிக்குதே... தாயே பசிக்குதே..." என்று தொடங்கி, மேசையில் தாளமிட்டவாறே,

"கொஞ்சம் பழைய சோறிருந்தா போடுங்கம்மா... உங்க புருஷனுக்கு எடுத்து வச்ச மீதி போக, இருக்கிறதை எனக்குக் கொடுங்கம்மா... வயிறார சாப்பிட்டு மனசார வாழ்த்துறேன்..."

"ஒரு சாம்பிள் வாழ்த்து இதோ... மாமியார், நாத்தனார் சண்டை இல்லாமல் குஜாலசாய் இருக்கும் உன் வாழ்வில் ஓரகத்தி சண்டை ஏகபோகமாய் அமைய, என் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று அவன் ராகத்துடன் இழுத்து முடித்தபோது, மேசை மீது சாப்பாடும், தலை மீது ஓர் அழுத்தமான கொட்டும் ஒருங்கே விழுந்தது.

"தா... தா... செம பசி!" என்று வேகமாய் உணவை அள்ளி உண்டவனின் முன்னே அமர்ந்த கௌசல்யாவிடம், தான் தேர்வான முறையை தனக்கே உரிய பாணியில் சிரிப்பும், சந்தோஷமுமாய் சொல்லி முடித்தான்.

முடிவில், "அங்கேயே கேண்டீன் இருந்தது, கௌ! என்னோட வந்தவங்க எல்லோரும்... அங்கேயே சாப்பிடலாம்ன்னு சொன்னாங்க... பட் எனக்கு அங்க சாப்பிட சுத்தமா மூடே இல்ல... அதான் இங்க ஓடி வந்துட்டேன்" என்றான் பிரபாகர், தயிரை சோற்றில் விட்டுப் பிசைந்தவாறே.

கௌசல்யாவின் மனதில் வேறு ஓடியது - தன் கணவன் சுதாகரைப் போல் வெளி இடங்களில் உண்ணுவதை அறவே தவிர்ப்பவன் இல்லை என்றாலும், அவன் கூறிய 'மூடு' பல சமயங்களில் தகிடுதத்தம் ஆடிவிடும்.

எடுத்துக்காட்டாக, கௌசல்யாவும் வெங்கடாசலமும் தங்களது சொந்த ஊரான கும்பகோணத்தில் நடக்கும் விசேஷங்களுக்குச் செல்லும்போது, சுதாகருக்கும் பிரபாகருக்கும் தேவையான உணவு வகைகளைச் செய்து வைத்துவிட்டுச் செல்லும் வழக்கமுடையவள் கௌசல்யா. சுதாகருக்கு, வீட்டு உணவே பிரதானம் என்பதால் அவன் உண்டு விட, பிரபாகர் "எனக்கு வீட்டில சாப்பிட மூடே இல்லை... கௌ! சோ, வெளிய ஃபிரைட் ரைஸ் சாப்பிட்டேன்... நூடுல்ஸ் சாப்பிட்டேன்..." என்று வீட்டிலிருக்கும் உணவை வீணாக்குவான். சரி இவன் தான் வீட்டில் உண்ணவில்லையே என்று அடுத்த முறை, பிரபாகருக்கு செய்து வைக்காமல் போனால், "அதென்ன, உன் புருஷனுக்கு மட்டும் சாப்பாடு செஞ்சு வச்சிட்டுப் போயிருக்கே?! எனக்கு வீட்டுல தோசை சாப்பிடணும்



போலிருக்கு... மாவு வேணும்... எப்படி ஆட்டுறதுன்னு சொல்லு!" என்று அவளைத் தொலைப்பேசியிலேயே தொல்லை செய்து, படுத்தி எடுத்து விடுவான்.

உணவு என்றில்லை... உடை விஷயத்திலும் அப்படித் தான். பெண் பிள்ளைகள் கூட தோற்று விடுவார்கள் என்பதற்கிணங்க, ஒரு சட்டை எடுப்பதற்கு பிரபாகருக்குக் குறைந்தது இரண்டு மணி நேரம் பிடிக்கும். சட்டையை விட்டு விடலாம்... ஒரு ஜீன்ஸ் எடுக்கவே அவனுக்கு ஒரு மணி நேரம் பிடிக்கும். ஒரு முறை, அவனுடன் துணிக்கடைக்குச் சென்ற ரம்யா, வீட்டிற்கு வந்ததும் ஒப்பாரி வைக்காத குறை தான். "அண்ணி... ஜீன்ஸ்-ல என்ன அண்ணி இருக்கு!? ப்ளூ கலர்-லேயே பத்து ஜீன்ஸை எடுத்துப் போட்டு... இதில எது நல்லா இருக்குன்னு கேட்கிறான். என் கண்ணு தான் நொள்ளைக் கண்ணான்னு எனக்கே சந்தேகம்... ஏன்டா இதில எல்லாமே ப்ளூவா தானே இருக்குன்னு சந்தேகமா கேட்டேனா... அய்யோ... ப்ளூ கலர்-ல இருக்க எல்லா ஷேடையும் பத்தி எனக்குப் பாடம் எடுக்காத குறை தான்... ராவிட்டான் அண்ணி! அதுக்கு மேலா... அதில அஞ்சு ஜீன்ஸ் எடுத்து... எல்லாமே ஒரே சைஸ் தான்... அதைப் போட்டுப் பார்த்து... முடிவில ஒண்ணாவது எடுத்திருந்தா பரவாயில்லை... ஒண்ணுமே எடுக்கலை அண்ணி! ஏன்டான்னு கேட்டா... துணி சரியில்லையாம்... ஜீன்ஸ்-ல என்னண்ணி துணி... ஐயோ! இனிமேல், என்ன ஒரு கஷ்டம் வந்தாலும்... இவனோட மட்டும் கடைக்குப் போகவே மாட்டேன்... அப்பா சாமி!" என்று பெரிய கும்பிடு போட்டவள் தான், அதன் பின்னர் பிரபாகர் "ஷாப்பிங்" என்றால் பின்னங்கால் பிடரியில் தெறிக்க ஓடிவிடுவாள்.

உணவு, உடை என்று அடிப்படை விஷயங்களில் மட்டுமல்லாமல், வேலையிலும் அவன் அப்படித்தான். அவனது பிடித்தத்திற்கு ஏற்ப, அவன் வேலை செய்யும் பாங்கு மாறிக் கொண்டே போகும். அவனுக்குப் பிடித்திருந்தால், இருநூறு சதவீத உழைப்பைக் கொடுப்பவன், தனக்குப் பிடிக்காத வேலையென்றால் சத்தமாய் மந்தம் ஆகிவிடுவான். கேட்டால், "எனக்கு மூடே இல்லை..." என்று அலுப்புடன் பதில் வரும்.

அதே பழக்கம், இந்த ரேடியோ ஜாக்கி வேலையிலும் தொடராது என்று என்ன நிச்சயம்!?

அந்த சந்தேகத்தினாலே, "பிரபா... உன்னோட வாய் ஜாலத்துக்கு, இந்த வேலை கிடைச்சது பெரிய விஷயமே இல்லை. ஆனா, எந்த வேலைன்னாலும் முழு மனசோட செய்யணும் பிரபா. மூடு சரியில்லை... எனக்குப் பிடிக்கலைன்னு அதில சின்னதாய் சுணக்கம் காட்டினாலும், பேர் கெட்டிடும்! இது ஐ.டி. வேலை மாதிரி இல்லை... ஒரு ப்ராஜெக்ட் பிடிக்கலைன்னா இன்னொண்ணுக்கு மாத்திக்க... வருஷம் முழுசும் ஒரே மாதிரியான வேலை..." என்றாள் கௌசல்யா எச்சரிப்பது போல்.

"ஒரே மாதிரியான வேலை தான்... ஆனா, தினம் பேசும் மனிதர்கள் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்களே! ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான சிந்தனை... எண்ண ஓட்டம்... கணிப்பு... எல்லாமே மாறுபடும், கௌ! சோ எனக்கு இந்த வேலையில சலிப்புத் தட்ட வாய்ப்பே இல்லை!" என்று பதில் சொன்ன பிரபாகரின் குரலில், உறுதி நிச்சயமிருந்தது.

"அதுவுமில்லாம, இந்த வேலை... முழு நேர வேலை இல்லையே! சாப்ட்வேர் வேலையில இருக்க ஸ்ட்ரெஸ் இங்க குறையும்ங்கிறதால... எனக்கு இந்த வேலை கண்டிப்பா பிடிக்கும்" என்றான் மிகுந்த உறுதியுடன்.



அவனது வாக்கு போல, "டவுசர் கால நினைவுகள்" என்ற ரேடியோ நிகழ்ச்சியை மிகுந்த உற்சாகத்துடனே தொகுத்து வழங்கத் துவங்கினான், பிரபாகர்.

"இவனுக்குன்னு டாபிக் செலக்ட் பண்ணியிருக்காங்க பாரு!" என்று தலையில் அடித்துக் கொண்டாலும், அவனது முதல் நேரலையின் போது, அவனது குடும்பம் மொத்தமும், கூடவே நண்பர்கள் மூவரும் பிரபாகரின் வீட்டில் கூடி, ரேடியோவின் முன்னே ஆர்வத்துடன் அமர்ந்திருந்தனர்.

"உங்கள் காதுகளுக்கு இனிமை சேர்த்துக் கொண்டிருப்பது உங்கள் இசைச்சாரல்!"

"வணக்கம்... வந்தனம்... நான் உங்க புது ஆர்.ஜே... பிரபா!"

"பிரபாவதி... ரத்னப்ரபா... இதோட சுருக்கமில்லை பிரபா! பிரபாகரின் சுருக்கமே பிரபா!"

"போதும்டா உன் சுயப்பிரதாபம்... நிகழ்ச்சிக்கு வான்னு நீங்க சொல்றதுக்கு முன்னாடி... இதோ நானே ஒரு தாவா தாவிட்டேன்... டொட்ட டொயிங்..." என்று வாயால் அவன் மியூசிக் போட்ட வேளையில்.

வீட்டில், "உன் குரங்கு புத்தி... உன்னை விட்டு அவ்வளவு லேசில போய்டுமா!" என்று டைமிங் கமெண்ட் அடித்தான், விக்னேஷ்.

வானொலி நிலையத்திலிருந்து பிரபாகரின் குரல் தொடர்ந்து ஒலித்தது!

"இது உங்களது வசந்த கால நினைவுகளை அசை போடும், அற்புதமான நிகழ்ச்சி!"

''வசந்த காலம் என்றதும்... எல்லாரும் உங்க ஆளோட ஊர் சுத்தின நினைவுகளைக் கொட்டிராதீங்க. என்னால, ரேடியோ ஸ்டேஷன்-ல மிதக்க முடியாது!''

''இது நம்மளோட பள்ளிக்கால நினைவுகளின் அணி வகுப்பு!''

''பள்ளியில... நோ... நோ... இவன் என்னடா நாம பல்லியை அடிச்ச கதையைச் சொல்லச் சொல்றானே என்று நினைக்காதீங்க! தூய தமிழ்-ல சொல்லணும்ன்னா... 'ஸ்கூல்' கால நினைவுகள்!''

வீட்டில், ''ஐயோ! இவன் மொக்கையைத் தாங்க முடியலையே!'' என்று ரம்யா தலையில் அடித்துக் கொள்ள,

''நல்லாத் தானே இருக்கு! நானே... இவன் என்னடா ''பள்ளி... பள்ளி''ன்னு கூவுறானேன்னு பார்த்தேன். நல்லவேளை, ஸ்கூல்-ன்னு தெளிவு படுத்திட்டான்'' என்றான் அவர்கள் குழுவின் ''ஐந்து'' - நரேன்.

''அடடே! உனக்கு 'ஸ்கூல்' கூடப் புரியுமா... நான் பைனரி கோட்-ல சொன்னாத்தான் விளங்குமோன்னு நினைச்சேன்'' என்று ரம்யா, காலை வார, அங்கே ஓர் சண்டை உதயமானது.

அவர்கள் அடித்துக் கொண்டு நாறுவது பிடிக்காதது போல், பிரபாவின் குரல் தொடர்ந்து கேட்டது.

''ஸ்கூல்-ல நாம எல்லாம் என்ன டிரஸ் போட்டிருந்தோம்? டவுசர்... அதான் இந்தப் பேரு!

''நோ... நோ... பொண்ணுங்க அடிக்க வராதீங்க! டவுசருக்குப் பதிலா உங்களுக்கு பாவாடை! உங்கள் பாவாடை கால நினைவுகளை என்னிடம் கொட்டுங்கள்!

''எப்பவும்... எல்லாத்துக்கும் ஒரு தொடக்கம் வேணும் இல்லையா? சோ... இன்னைக்கு நிகழ்ச்சி முழுதும்



என்னோட டவுசர் கால நினைவுகளைப் பகிர்ந்துக்கப் போறேன். நாளையில இருந்து உங்க டர்ன்... ஒகே? இப்போ உங்களுக்காக ஒரு அருமையான பாட்டு வந்துட்டே இருக்கு!'' என்றவனின் குரலின் பின்னே, ஓர் புதிய சினிமா பாட்டு ஒலிக்க ஆரம்பித்தது.

''என்ன சொல்லப் போகிறான்?'' என்ற ஆர்வத்துடன், வீட்டினர் அனைவரும் காத்திருக்க, ஐந்து நிமிடத்தில் பிரபாகர் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

''ஸ்கூல்னாலே... எனக்கு முதல்ல ஞாபகம் வரது எங்க தமிழ் ஐயா தான்! சோ... அவரோட நேர்ந்த ஒரு சுவாரஸ்யமான அனுபவத்திலிருந்து ஆரம்பிப்போம்!

''எங்க தமிழ் ஐயா ரொம்ப அழகா பசங்களுக்குப் புரியிற மாதிரி லோக்க'லா பாடம் நடத்துவார்...

அன்னிக்கு, பாஞ்சாலி சபதம்னு பாடம் நடத்துனார்...

''டேய், திரௌபதிக்கு ஏன் பாஞ்சாலி'னு பேரு வந்துச்சு தெரியுமாடா?''ன்னு கேட்டுட்டு, அவரே அதையும் சொன்னார்.

''திரௌபதியை அர்ஜுனன் 'வில்லு வித்தை' காட்டிக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்.

அப்புறம் திரௌபதியை கூட்டிக்கிட்டு பஞ்ச பாண்டவர்கள் அஞ்சு பேரும் வீட்டுக்கு வந்தாங்க...

அப்ப, பாண்டவரோட அம்மா புறக்கடைல, வடகம் காயப்போட்டுகிட்டு இருந்தாங்க... வாசல்ல இருந்து, அர்ஜுனன் ''அம்மா என்ன கொண்டு வந்து இருக்கேன்'னு பாரு''ன்னு சொல்ல,

அம்மாவோ ''என்ன கொண்டு வந்திருந்தாலும் அஞ்சு பேரும் சரியா பங்கு போட்டுக்கோங்கப்பா''ன்னு பதில் கொடுக்க,

பஞ்ச பாண்டவர்களும், அம்மா பேச்சைத் தட்டாம அஞ்சு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க...'' - அவர் சொல்லிக்கிட்டே போனாரா,

இங்க எங்க பசங்க, ''அய்யய்யோ'' என்று அலற,

''அதுல இருந்து திரௌபதி பேரு பாஞ்சாலின்னு ஆயிடுச்சு...'' என்று முடிச்சார் ஐயா.

அப்ப சில பசங்க குசுகுசுன்னு பேசி சிரிச்சுகிட்டு இருந்தாங்க...

''டேய் அங்க என்னடா சிரிப்பு?'' - ஐயா அதட்டினதுக்கு,

''ஐயா! இவன் சொல்றான் நல்ல வேளை பாண்டவர்கள் அஞ்சு பேரு... நாலு பேரு இருந்தாக்கா... 'நட்டுவாக்காலி' அப்படின்னு பேரு வச்சுருப்பாங்க...''ன்னு சொன்னானுங்க பாருங்க! செம சிரிப்பு!

''சரி... சரி... இப்போ ஒரு பாட்டைக் கேட்டுட்டு வாங்க. இதோட தொடர்ச்சியை அப்புறம் பார்ப்போம்!'' என்று தேய்ந்து மறைந்தது பிரபாகரின் குரல்.

இங்கே வீட்டிலோ, சிரிப்பில் கரைந்திருந்த அனைவரும் ''ஸ்கூல் படிக்கும்போதே, தறுதலையா திரிஞ்சிருக்கானே! என்னண்ணி... அவனை வளர்த்திருக்கீங்க!?'' என்று அனைவரும் கௌசல்யாவைப் பிடி பிடியென்று பிடிக்க ஆரம்பித்தனர்.

''டேய்... சும்மா இருங்கடா! அவன் அஞ்சாவது படிக்கிற வரைக்கும் எங்கம்மா தான்டா அவனை வளர்த்தாங்க! கௌசி... அப்புறம் தான் டேக்ஓவர் பண்ணிக்கிட்டா'' என்று பன்னாட்டு நிறுவனத் தலைவர் போல் சுதாகர், தன் மனைவியை அவர்களிடமிருந்து காக்க,



''ஆஹா! தாயை இப்படி டீல்ல விட்டு... தாரத்தை சப்போர்ட் பண்றீங்களே அண்ணா! உங்கம்மாவோட ஆவி கூட... இதை மன்னிக்காது!'' என்று ரம்யா அவனை வார,

சுதாகரோ சற்றும் சளைக்காமல், ''அடுத்த வேளை சாப்பாடு... கௌசி தானே போடணும், எங்கம்மாவா போடுவாங்க!?'' என்று கண் சிமிட்டிச் சிரித்தான்.

இவர்களது சிரிப்பு தொடர்ந்து கொண்டே இருந்த போது, பாட்டு முடிவடைந்து பிரபாகர் பேசத் துவங்கி இருந்தான்.

''இங்க பசங்களோட அரும்பெரும் கண்டுபிடிப்பை அப்படியே புறம் தள்ளிவிட்டு, ஐயா திரும்பவும் பாடத்துக்கே போய்ட்டாருங்க!''

''இப்போ... கிருஷ்ணர் பாண்டவர்கள் வீட்டுக்கு வந்த கதையைச் சொன்னார்.''

''அவர் சொன்னதை... அப்படியே அவர் வாய்ஸ்-ல சொல்றேன்...''

''ஒரு முறை, கிருஷ்ணர் சாப்பாட்டுக்கு சில முனிவர்களை கூட்டிட்டு பாண்டவர்கள் வீட்டுக்கு வந்தார்...

சொல்லாம கொள்ளாம 'திடீர்'னு கூட்டிட்டு வந்தா எந்த வீட்டுல தான் சோறு இருக்கும்...

பாஞ்சாலி என்ன பண்றதுன்னு தெரியாம கைய பிசைஞ்சுகிட்டு நின்னா...

உடனே, கிருஷ்ணர் 'குளிச்சுட்டு வாங்க'னு முனிவர்களை நைசா அனுப்பி வச்சுட்டு, பாஞ்சாலிகிட்டே, ''எனக்கும் ஒரு கவளம் சோறு கொடு... நான் உன் கவலையை தீர்க்கிறேன்'னாரு.''

பாஞ்சாலியோ... ''அய்யகோ...!!! இப்பதான் பாத்திரம் எல்லாம் விளக்கி, கவிழ்த்து வைத்தேன்... என் செய்வேன்?'' என வருந்த.

கிருஷ்ணர்... ''அட்லீஸ்ட் ஒரு பருக்கைசோறு கொடு'' என்றார்.

பாஞ்சாலி கவிழ்த்து வைத்த பாத்திரத்தை நிமிர்த்தியபோது. அதில் ஒரு சோற்றுப் பருக்கை மிச்சம் இருந்தது.

அதை கிருஷ்ணரிடம் கொடுக்க... கிருஷ்ணர் அதை உண்டு, ''ஆஹா... அற்புதம்!!!'' என்று கூறி, முனிவர்களின் பசியை மறையச் செய்து, பாஞ்சாலிக்கு அருள் புரிந்தார்.

இதுல இருந்து என்ன தெரியுதுன்னு ஐயா நிறுத்த...

ஒருத்தன் ''பாஞ்சாலிக்கு சரியா பாத்திரம் வெளக்க தெரியலன்னு தெரியுது...''ன்னு சொல்ல,

ஐயா செம கடுப்பாகி, ''வாயி மட்டும் இல்லன்னா நாயி கூட உங்கள மதிக்காதுடா...''ன்னு சொன்னார்!!''

''கரெக்ட் தானே!! வாய் மட்டுமில்லைன்னா, நாய் என்ன... இத்துனுக்கூண்டு பல்லி கூட நம்மளை மதிக்காதுங்க!!'' - பிரபாகர் பேசிக் கொண்டிருக்க, இங்க நரேன் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தான்.

''அப்பா, கண்டிப்பா... அந்தக் கடைசி டயலாக் சொன்ன பிரகஸ்பதி நம்ம பிரபாவா தான் இருப்பான்...'' என அவன் சிரிக்க,

''சந்தேகமே இல்லாம அவனே தான்! எத்தனை வாட்டி... இவனால, ஸ்கூல் டீச்சர்ஸ் முன்னாடி அவமானப்பட்டிருப்பேன்'' என்று தன் பழைய நாட்களுக்குச்



சென்ற வெங்கடாசலத்தின் முகத்தில் பிரதானமாய் இருந்தது சிரிப்பு மட்டுமே!

அன்று போல் என்றும் வாழ்க்கை வசந்தத்துடன் ரம்யமாய் செல்ல, பிரபாவின் நிகழ்ச்சியை ரசித்துக் கேட்கும் நேயர்களின் பட்டியல் கூடிக் கொண்டே போனது.

வீட்டில் கௌசல்யாவுடன் மல்லுக்கு நின்று, அலுவலகத்தில் ரம்யா / நரேன் / விக்னேஷ் போன்றவர்களுடன் செக்குத் தள்ளி, மென்பொருள் வேலையில் உண்டாகும் மன அழுத்தத்தில் மூழ்கி விடாமல், பிரபாகரை அவனது வானொலி தொகுப்பாளன் வேலை செவ்வனே காத்தது.

எண்ணையிட்ட சக்கரமாய் சென்று கொண்டிருந்த வாழ்வில் பெரும் தடையாய், சுதாகரின் மாற்றல் உத்தரவு வர, கோயம்புத்தூர் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது சுதாகரின் குடும்பம்.

# 4

ஆனால், இந்த இடம் மாற்றத்தில் சற்றும் இஷ்டமில்லாதவளாய் இருந்தவள், கௌசல்யா.

அதற்கு மூன்று முக்கியக் காரணங்கள்.

1. இரண்டரை வயது மக்களின் படிப்பு - பக்கத்திலிருக்கும் பள்ளியில் சீட் கிடைப்பது உறுதியான நிலையில், அதை மறுத்துவிட்டு, வேறு ஊர் செல்வதா என்ற தயக்கம்!?

2. அடுத்ததாய், பிரபாகரின் வேலை. அவனது சுய தொழிலுக்கான முன்னேற்றங்கள் அதிகப்படியாய் இருக்கும் சென்னையை விட்டுவிட்டு கோயம்புத்தூர் செல்வதா என்ற தயக்கம்!?

3. மேலும், இப்போது கோயம்புத்தாருக்கு மாற்றப்பட்டிருக்கும் சுதாகருக்கு மேலும் பணிமாற்றம் வராது என்று என்ன நிச்சயம் என்ற கேள்வி!

இக்காரணங்களைக் கூறி அவள் மறுக்க, சுதாகரும்... கூடவே பிரபாகரும் சேர்ந்து அவளைக் கரைத்தனர்.

அவளது முதல் தயக்கத்திற்கு, சுதாகரிடம் தீர்க்கமான முடிவிருந்தது. ''போலீஸ் குவாட்டர்ஸ் பக்கத்திலேயே, ஒரு நல்ல ஸ்கூல் இருக்காம். அங்கே, கண்டிப்பா சீட் கிடைக்கும்ன்னு சொல்றாங்க. எல்.கே.ஜி. தானே... நடு-ல போனா தான் சீட் கிடைக்கிறது கஷ்டம்... முதல்ல கிளாஸ்ங்கிறதால கண்டிப்பா கிடைக்கும். அப்படியே இல்லைன்னாலும், அப்பாக்குத் தெரிஞ்ச ஒருத்தருக்கு ஸ்கூல் நிர்வாகத்தில இருக்க முக்கியப் புள்ளியைத் தெரியுமாம்... அவரை வச்சு வாங்கிடலாம்'' என்று அவனது கூற்றை, கௌசல்யா அரை மனதாய் ஒத்துக் கொண்டாள்.

அவளது அடுத்த தயக்கத்தை, பிரபாகர் அழுத்தமாய் துடைத்தான்.

''சொல்லப் போனா... நாங்களே கோயம்புத்தூர் இல்லன்னா மதுரை தான்... தொழில் தொடங்க சரியான இடம்ன்னு நினைச்சோம். ரெண்டு இடமுமே, சாப்ட்வேர்-ல இப்போ வளர்ந்துட்டு வர இடங்கள்... அங்க, நம்மளோட டெஸ்டிங் அகாடமியை ஆரம்பிச்சா, நிறைய ஸ்கோப் இருக்கும். கொஞ்சம், ஃபினான்ஸ் ரெடி பண்ணிட்டு, அந்த இடத்துக்குப் போய்... ஃபீல்ட் ஸ்டடி பண்ணலாம்ன்னு நினைச்சேன். அதை... இப்போ பண்றேன். எனக்கும், சென்னை போர் அடிச்சுப் போச்சு... புது இடமா இருந்தா... ஃப்ரெஷ் ஐடியாஸ் கிடைக்கும்'



என்ற பிரபாகர், தான் பார்த்துக் கொண்டிருந்த மென்பொருள் பொறியாளன் வேலையை மட்டுமல்லாது ரேடியோ ஜாக்கி வேலையையும் சென்னையிலிருந்து கோவைக்கு மாற்றிக் கொள்ளும் வேலைகளில், கவனம் செலுத்தத் துவங்கினான்.

அவன் வேலை செய்த இரு நிறுவனங்களுமே (மென்பொருள் மற்றும் வானொலி நிலையம்), கோவையில் தங்கள் கிளையை வைத்திருந்தது. கூடுதல் உதவியாய் இருக்க, பிரபாகரும் அண்ணன் குடும்பத்துடன் கோயம்புத்தூர் செல்வது உறுதியானது.

கௌசல்யாவின் கடைசி கேள்விக்குப் பதில், சுதாகரிடமிருந்து வந்தது. ''இனிமேல் ட்ரான்ஸ்ஃபர் வர வாய்ப்பில்லை. அப்படியே வந்தாலும், நீங்க எல்லாரும் கோயம்புத்தூர்-லேயே இருங்க. நான் போயிட்டு போயிட்டு வந்துக்குறேன்'' என்றான் அவன். அவனது இந்தப் பதிலில், கௌசல்யாவுக்கு சுத்தமாய் நம்பிக்கையில்லை! கணவனின் வீட்டுச் சுவை கொண்ட நாக்கைப் பற்றி அறிந்தவளாயிற்றே!

வீட்டுச் சாப்பாடு கிடைக்க, என்ன வாய் ஜாலம் வேண்டுமானாலும் செய்யும் வித்தகன், குடும்பத்தை விட்டுப் பிரிந்திருப்பதெல்லாம் சாத்தியமே இல்லாத விஷயம் என்பதை உணர்ந்திருந்ததால், கோவைக்குப் பெட்டியைக் கட்டினாள், மனையாள்.

ஆனால், அவளே அறியாத வண்ணம், கௌசல்யாவிற்கு கோவை மாநகர் மிகவும் பிடித்திருந்தது.

சென்னையைப் போல், அடுக்கு மாடிக் குடியிருப்பாய் இல்லாமல், விஸ்தாரமான வீடு! சுற்றிலும் தோட்டம்! அருகே, ஒரு சின்னப் பிள்ளையார் கோவில்!

ரம்மியமான மாளிகை! அமைதியான சுற்றுப்புறம் என்று அவனை சோலை வசீகரித்திருந்தது.

கூடுதலாக, நகல் - பாஸ் இருவருக்கும் பத்து நிமிடக் கார் பயணத்தில் பள்ளி அமைந்துவிட, சுதாகரும் பிரபாகரும் அதிகப் பரபரப்பில்லாமல் வேலைக்குச் சென்று வர, வாழ்க்கை மீண்டும் சீரான நீரோட்டமாய் நிலைக்கு வந்து சேர்ந்தது.

பிரபாகருக்குமே, சோலை வாசம் புத்துணர்ச்சியைப் பெருக்கியிருந்தது.

புது இடம், புது மனிதர்கள் என்பது மட்டுமில்லாமல், சென்னை வானொலியில் அவன் பார்த்துக் கொண்டிருந்த "பழைய கால நினைவுகள்" என்ற நிகழ்ச்சிக்கு முற்றுப் பெறாக, அதிகாலை ஏழு மணி தொடங்கி ஒன்பது மணி வரையிலான "புத்தம் புது காலை.. பொன்னிற வேளை!" என்ற புதிய நிகழ்ச்சியை அவனது பொறுப்பில் விட்டிருந்தது, வானொலி நிலையம்.

அதிகாலையில், தூங்கி வழிந்து கொண்டிருக்கும் சோலை மாநகரை உற்சாகப்படுத்தும் வேலை என்று வாரத்தில், பல சுவாரசியமான விஷயங்களைத் தேட அலையத் துவங்கினான் அவன்.

தினம் தோறும், ஓர் சாதனையாளரின் வரலாற்றை எடுத்துக் கொண்டு, அவர் வாழ்வில் கடந்து வந்திருக்கக் கூடியவற்றை, ஓர் சாதிக்க விரும்பும் இளைஞனின் கண்ணோட்டத்துடன் எடுத்துக் கூறுவது அவனுக்குள்ளும் ஓர் உத்வேகத்தை விதைத்தது.

சாதனையாளர்களைப் பற்றிப் பேச, பாதிவெண்டிப் படம் பார்க்கும் நிலையைப் போல் ஆகிவிடக் கூடாது என்பதற்காக, அதிலிருந்து சிறு சிறு கேள்விகளைக்



கேட்டு, சரியான பதில் சொல்லும் நேயர்களுக்குப் பரிசு கொடுக்கப்பட்டது.

இந்த அணுகுமுறை, 'பிரபா' என்ற அவனது பெயரை அனைவரும் அறியும்படி செய்தது!!

கூடவந்த பகுதி முதல் விட்டது. தொடர்ந்து அதைத் தக்க வைக்கும் முயற்சியாய் தான் - அடுத்த வாரம் வாசிக்கும் பெண்கள் நினைத்திராத சிறப்பு விருந்தினரை அவன் தேட அலைந்தது.

"கோ, மொன்று நாளா ஒரே மண்டை குடைச்சலா இருக்கு கோ... பெண்கள் நினைத்துக்கு பாரா ஸ்பெஷல் கெஸ்டா கூப்பிடறதுன்னு ஒரு நடிகரையே நா மாட்டிக்கிறது!?" - வீட்டிலும் அவன் புலம்ப,

"என்டா... கோயம்புத்தூர்ல எத்தனை பேர் தொழில் அதிபர்கள் இருக்காங்க, அவங்களில் யாராவது ஒருத்தரைக் கூப்பிடுறது தானே!"

"பொறுமே ஜனகராஜா... சோலைடம் கோ! எல்லாரும் ஒருத்தர்களா... நம்ம அன்றாடம் பார்க்கிறவங்களா இருக்கணும்..."

"இல்லம் அப்போ... ஈழச் சேவை... மாதிரி படா பண்ணலாம்..."

"நோ, நோ! நான் சேவை செய்ற பெண்களைத் தேடலை... சாதிக்கிற பெண்களைத் தேடுறேன்."

"அப்போ... சேவை செய்ற பெண்கள் எல்லாம்... உனக்கு சாதனையாய் ஆகலையா?"

"நோ, நோ! அப்படி சொல்லலை கோ! நான் அன்னை தெரசா மாதிரி பெண்களைத் தேடலை... கல்பனா சாவ்லா மாதிரி... பேபி கிழ்ரி மாதிரி... நல்லதொரு துறைகளாய்ப்

மீறி, வாழ்க்கையில் ஜெயிக்கணும்ங்கிற எண்ணமிருக்கும் பெண்களை... மஹூம் சராசரிப் பெண்களைத் தான் தேடிட்டு இருக்கேன்'' என்றவன்,

''என்னைப் பொறுத்தவரை, ஒரு பெண்ணின் உயர்வு அவளது கருணையில் இல்லை. அவளது தைரியத்தில்... வாழ்வை எதிர்நோக்கும் பக்குவத்தில் தான் இருக்கு!'' என்றான், உறுதியான குரலில்.

அவனது உறுதி ஆட்டம் காணும் வகையில், அவனது எண்ணப்படி ஓர் பெண் கூட அவனது கண்களில் படவில்லை.

நாட்கள் நதியின் ஓட்டத்திற்கு ஈடு கொடுத்து ஓடியதில், பெண்கள் தினத்திற்கு முன் தினம் காலை வரை, அவனது எதிர்பார்ப்பிற்கு ஏற்ற பெண் கிடைக்கவில்லை!

''ரேடியோ நிகழ்ச்சிக்கே இந்தப் பாடா இருக்கே?! உன் கல்யாணத்துக்குப் பெண் பார்க்கிறதா இருந்தா... என்ன பாடு படுத்தப் போறியோ!?'' என்று வெங்கடாசலமே சலித்துக் கொள்ளும் அளவிற்கு, பிரபாகர் புலம்பித் தள்ளினான்.

அதில் கௌசல்யா வேறு, ''கிட்டத்தட்ட ஒரு வருஷம்... பெண்ணைத் தேடுறதிலேயே போய்டும்... கடைசில, உனக்கு ஒரு பெண்ணைப் பிடிக்கிற மாதிரி இருக்கிற நேரத்தில... அந்தப் பொண்ணு... இப்படியொரு வழுவட்டையை என்னால கல்யாணம் செய்துக்க முடியாதுன்னு ஓடிடப் போறா!'' என்று கிண்டல் செய்ய, அவளுக்குத் துணைக்கென்று ரம்யா, அன்று சென்னையிலிருந்து கோவை வருவதாய் இருந்தாள்.

''போச்சு! இந்த கௌ... பண்ற கிண்டல் பத்தாதுன்னு... இந்த ரம்யா கிராக்கு வேற வருதாம்! அடுத்த



ரெண்டு நாளுக்கு... நம்மை ரொட்டித் தட்டாம விட மாட்டாங்களே!'' என்று பிரபாகர் புலம்பியதற்கு மாறாக, ரம்யாவின் கோவை வருகை ஓர் இனிய செய்தியையே கொண்டு வந்து சேர்த்தது.

அதிகாலை ஆறு மணிக்கு வீடு வந்து சேர்ந்திருந்த ரம்யா, தன் வானொலி நேரலையை முடித்துக் கொண்டு ஒன்பதரை மணியளவில் வீடு திரும்பிய பிரபாகரை வாசலிலேயே வழி மறித்து,

''டேய், பிரபா! நீ தேடிட்டு இருக்க பெண்ணை... நான் கண்டு பிடிச்சுட்டேன்!'' என்றாள் குதூகலத்துடன்.

ரம்யாவின் பேச்சில் பிரபாகருக்கு, சற்றும் நம்பிக்கையில்லை! தேவையற்ற கேலிக்கும், சண்டைக்குமே வழி வகுக்கிறாள் என்ற எண்ணத்துடன் அவன் சுவாரஸ்யமின்றி இருக்க,

ரம்யா அதைக் கவனிக்காது பேசிக் கொண்டே சென்றாள். ''இன்னைக்கு... ரயில்வே ஸ்டேஷன் விட்டு வெளியே வந்தேனா...''

''நீ மட்டுமா வந்த... உன்னோட சேர்ந்து நாத்தம் பிடிச்ச சென்னை வாடையும் வந்திடுச்சு...''

''டேய்... வேணாம்! பிறந்ததில இருந்து... சென்னையில உருண்டு புரண்டுட்டு... என்ன பேச்சு...''

''சரி... சரி விடு! அதான் வந்துட்டியே... அப்புறம் என்ன இழுவை...''

''இருடா... விஷயத்துக்கு வரேன்! என்னமோ... வெட்டி முறிக்கிறவன் மாதிரி... நீ தான் என்னை பிக் அப் பண்ண வரலையே!? சோ... ஒரு ஆட்டோவைத் தேடினேனா...''

"இன்னும் நீ விஷயத்துக்கே வரலை. நீ ஆட்டோ தேடினதுக்கும்... என் ப்ரோக்ராம்க்கான ஸ்பெஷல் கெஸ்டடுக்கும் என்ன சம்பந்தம்!? நீ ஏறின ஆட்டோ-ல அவங்களும் ஏறினாங்களா? அவங்களோடவும்... சண்டை போட்டியா... சசு... போ... உன்னோட சண்டை போடற அளவு, சீப் ஆனவங்க எல்லாம் எனக்கு வேண்டாம்..."

"ஹே... நிறுத்து, நிறுத்து! சும்மா பேசிட்டே போறியே! நான் ஏறின ஆட்டோவை ஓட்டினவங்களே... ஒரு பொண்ணு தான்! அவங்களைத்தான் உன்னோட ப்ரோக்ராம்க்கு வரச் சொல்லலாம்ன்னு பார்த்தேன்... நீ என்னடான்னா..." - ரம்யா, கோபத்தில் வார்த்தைகளை வேகமாய் கொட்ட,

பிரபாகர் துள்ளிக் குதித்தான். "வாவ்! பெண் ஆட்டோ டிரைவரா!? சூப்பர்! சூப்பர்! சூப்பர்!" - சந்தோஷத்தில் வார்த்தைகள் வர்ணஜாலம் கொண்டன.

"ஹே, அவங்க நம்பர் வாங்கினியா? எங்க இருக்காங்க? இப்போ... ரயில்வே ஸ்டேஷன் போனா... அவங்களைப் பார்க்க முடியுமா?" - அவன் பரபரக்க,

"உன்னோட ரேடியோ நிகழ்ச்சி பத்தி... லேசா ஹின்ட் கொடுத்தேன். இன்ட்ரெஸ்ட் காட்டின மாதிரி தெரியலைடா..."

"ஹ்ம்ம். பரவாயில்லை. நான் பேசி... சம்மதிக்க வச்சுக்கிறேன். அவங்களோட காண்டாக்ட் டீடைல்ஸ் தா... ரம்யா!"

"அவங்களோட போன் நம்பர் வாங்கினேன்... ஆனா... நீ பேசுறது சரியா வராதுன்னு நினைக்கிறேன். நானோ... அண்ணியோ முதல்ல பேசிப் பார்க்கிறோம்" என்றவள்,



கௌசல்யாவிடம் செல்லத் திரும்ப, பிரபாகர் வழி மறித்தான்.

"அண்ணியை இதில இழுக்க வேண்டாம், ரமி! ஆட்டோ சம்மந்தமா இருந்தாலே... அவ கொஞ்சம் எமோஷனல் ஆகிடுவா. அப்புறம், ஒரு நாள் முழுசும், ரொம்ப இறுக்கமா... உள்ளுக்குள்ளேயே கஷ்டப்பட்டுட்டு இருப்பா! நீயே... அந்தப் பொண்ணு கிட்ட பேசு... ப்ளீஸ் ரமி!" என அவன் கெஞ்சவும் தான், ஆட்டோ மற்றும் ஆட்டோ ஓட்டிகளிடம் கௌசல்யாவிற்கு... ஏன் அந்தக் குடும்பத்துக்கே இருக்கும் வெறுப்பு, ரம்யாவிற்குப் புலப்பட்டது.

உடனடியாக, கௌசல்யா இருந்த பக்கத்துக்கு எதிர் பக்கமாய் நடந்தவள், "உனக்கு ஏதும்... சங்கடமா இல்லையே!" என்று நண்பனிடம் மெதுவாக வினவினாள்.

எந்தவொரு கசப்பான விஷயத்திலும், தமக்கு நன்மை தரக்கூடிய அர்த்தங்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவனது கொள்கை அங்கே அமல் பெறச் செய்து. "சே, சே! ஒரு கத்தி நம்ம கையை வெட்டிடுச்சுங்கிறதுக்காக, நான் காய் வெட்ட கூட கத்தி எடுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறது முட்டாள் தனம்!" என்று அழுத்தமாய் பதில் சொன்னான், பிரபாகர்.

பிரபாகரின் உந்துதலின் பெயரில் கைப்பேசியில் அப்பெண்ணின் எண்ணை அழுத்திவிட்டு, ரம்யா காத்திருக்க, பிரபாகரின் படபடப்பு அவளுள்ளும் பரவியது.

மறுமுனையில் "ஹலோ" என்ற வார்த்தை கேட்க,

"ஹலோ, நான் ரம்யா பேசுறேன். காலையில்... ரயில்வே ஸ்டேஷன்-ல பார்த்தோமே... சௌரிபாளையம்

வரையிலும் ட்ராப் பண்ணீங்களே?'' - ரம்யா பட படக்க,

''ஹான்.. சொல்லுங்க'' என்றது குரல்.

''உங்க பேர்... என்னங்க? புதுசா ஒரு பொண்ணு ஆட்டோ ஓட்டுறீங்கங்கிற பரபரப்பில... அதைக் கேட்க மறந்துட்டேன்'' - ரம்யா அசடு வழிய, பிரபாகர் தலையில் அடித்துக் கொண்டான்.

''என் பெயர் - ஷோபனா!'' என்ற குரல், ''என்ன விஷயம் சொல்லுங்க?'' என்று அவசரப்படுத்தியது.

''சாரி, உங்க வேலை நேரத்தில உங்களைத் தொந்தரவு பண்ணிட்டேன்'' என்று ரம்யா உடனே தழையவும், ''பரவாயில்லை. வீட்டுக்கு சாப்பிட வந்திருக்கேன்'' என்று அந்தப் பெண்ணின் குரல், ''சொல்லுங்க'' என்று மேலும் உந்தியது.

''அதான்... காலையிலேயே சொன்னேனே! பெண்கள் தினத்தை முன்னிட்டு... உங்களை ஒரு பேட்டி எடுக்கணும்...''

''இல்லைங்க. பேட்டி எடுக்கிற அளவுக்கு... நான் எதுவும் பெருசா சாதிக்கலை. அதனால, வேணாம்!''

''கோவையில் முதல் பெண் ஆட்டோ ஓட்டுனர்ங்கிறதே பெரிய சாதனை தானே!? ராக்கெட்-ல பறக்கிறதும்... எவரெஸ்ட் மலையில ஏறுவதும் தான் சாதனைன்னு யாரு சொன்னா?'' - ரம்யாவின் பெண்ணியத்துவம் படிந்த மூளை, பலமாய் வாதாடியது.

''இல்லைங்க. இதுவே சாதனைன்னு முத்திரை குத்திட்டா... என் மனசு இதிலேயே திருப்தி பட்டுடும். மேலும் சாதிக்க மனசில வெறியே வராது!'' - அப்



பெண்ணின் வார்த்தைகளில், ரம்யாவின் மயிர்கற்றைகள் குத்திட்டு நின்றன.

''கண்டிப்பா! உங்களோட... தனித்துவம் இன்னமும் வளரணுமே ஒழிய, அழியக் கூடாது! அதுக்காக, உங்களோட தைரியம்... நிமிர்வு... இதுவரை நீங்க கடந்து வந்த பாதை - எல்லாமே ஒரு சில பெண்களுக்கு வழிகாட்டியாய் இருக்கலாமே!?''

''நான் கடந்து வந்த பாதை... வெறும் முட்களால் ஆனது, ரம்யா! அந்த வேதனை... யாரும் பட வேணடாம்!'' என அப்பெண் கூறியதும், அவள் படிப்பறிவில்லாதவள் அல்ல என்பதை ரம்யாவின் மனம் குறித்துக் கொண்டது.

''கரெக்ட்! நீங்க கடந்து வந்த முட்பாதை... நிறைய பேருக்கு ஓர் வழித்தடமா அமையலாம். கொஞ்சம் யோசிங்க'' என்ற ரம்யா,

''இது... உங்களைப் பத்தின பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டுறதுக்கான பேட்டி இல்லை. உங்களோட தைரியம்... சமூகத்தின் பல அவலங்களில் சிக்கித் தவிக்கும் பெண்களுக்கு, தெம்பூட்டும் மருந்தாய் அமையலாம் இல்லையா!? அதுக்காகத் தான்... உங்ககிட்ட கெஞ்சிட்டு இருக்கேன்!'' என ரம்யா முடித்தபோது, பேச்சு சாமர்த்தியத்தில் பி.ஹெச்.டி. வாங்கியிருப்பாளோ என்ற சந்தேகம் பிரபாகருக்கு வந்தது.

அவளை மேலும் திகைப்பில் ஆழ்த்தும் வண்ணம், ''ம்ம். சரிங்க. ஆனா... என்னால, ஒரு மணி நேரம்தான் ஒதுக்க முடியும். காலையில பத்து மணிக்கு... மருதமலை போறதுக்கு சவாரி புக் பண்ணியிருக்காங்க'' என்று ஒத்துக் கொண்டாள், அந்த ஆட்டோ ஓட்டுனி.

''வாவ்! தேங்க்ஸ் ஷோபனா! ஒரு செகண்ட் லைன்-லேயே இருங்க... நான் பேட்டி நேரம் கேட்டுச் சொல்றேன்'' என்றவள், பிரபாகரிடம் வேகமாய் ஓர் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு,

''ஒரு மணிநேரம்... தாராளமா போதும். காலையில் ஏழரை மணிக்கு ஆரம்பிச்சு, ஒன்பது வரையிலும், உங்களுக்கு ஓகே-வா!?''

''ம்ம். சரி எங்க வரணும்?!''

''ம்ம். ரேடியோ ஸ்டேஷன்-ல இருந்தே வண்டி வந்து உங்களை பிக் பண்ணிக்கும்.''

''இல்லைங்க வேண்டாம். அட்ரஸ் சொல்லுங்க. நான் வந்துடுறேன்'' என்றவள், அதற்கு மேல் அநாவசியமாய் பேசவில்லை.

''வெற்றி, வெற்றி, வெற்றி!'' என்று நண்பர்கள் மூவரும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்த வேளையில், கோவையின் முதல் ஆட்டோ ஓட்டுனர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட ஷோபனா, தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய நினைவுகளை, வருத்தத்துடன் அசைபோடத் துவங்கினாள்.

# 5

''அன்பாலே அழகான வீடாய்'' இருந்த தன் குடும்பத்தின் சந்தோசம், தொலையாது அப்படியே இருப்பது போல், தோன்றியது.

சிறிய வீடே என்றாலும், தந்தை - தனசேகரன், தாயார் - லீலாவதி, தமக்கை - காஞ்சனா, கடைக்குட்டியாய் தான் என்று எவ்வளவு சந்தோஷமாய் இருந்தது?



ஆட்டோ ஓட்டுனரான தந்தையின் எளிமையும்... வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்த அவரது நற்குணமும்... நெஞ்சைப் பிளந்தன!

அவர் ஆட்டோ ஓட்டி சம்பாதிக்கும் பணத்தில்தான், நான்கு பேர் அடங்கிய அந்தக் குடும்பம் ஓடிக் கொண்டிருந்தது!

எளியவர் தான் என்றாலும், தனக்குப் பிறந்த இரு பெண்களையும் சுமையாய் எண்ணாமல், வரமாய் எண்ணி அவர்களது எதிர்காலத்திற்காக ஓயாது உழைக்கும் ஓர் நல்ல தகப்பனார்!

தகப்பனின் சுமையறிந்த பெண்களும், தங்களது தேவைகளைச் சுருக்கிக் கொண்டு, இருப்பதை வைத்து சந்தோஷமாகவே வாழ்ந்து வருகின்றனர்.

பெண்களுள் மூத்தவளான காஞ்சனாவிற்குப் படிப்பு சரியாய் வராததால், பத்தாவதோடு அவளது படிப்பு நின்றுவிட, இளையவளான ஷோபனாவோ படிப்பில் புலியாய் இருந்தாள்.

சிறு வயது தொட்டே, ஷோபனாவிற்குத் தந்தை ஓட்டும் ஆட்டோவின் மீது ஓர் அலாதி பிரியம்! சும்மா இருக்கும் நேரங்களில், அதன் செயல்பாட்டை அறிந்து கொள்வதில் அளவில்லாத ஆர்வம்!

பெண் பிள்ளைகள் ஆட்டோ ஓட்டுவதைப் பற்றி தெரிந்து கொள்வதா என்ற எண்ணமில்லாமல், தனசேகரனும் மகளுக்கு ஆட்டோ ஓட்டக் கற்றுக் கொடுத்தார்.

ஆட்டோ ஓட்டுவது மட்டுமல்லாமல், அதன் பாகங்களின் செயல்பாடு, ஒன்றோடு ஒன்று அவை ஒன்றி செயல்படும் பாங்கு என்று அதன் உடற்சக்கரத்தை உற்சாகத்துடன் அறிந்து கொண்டாள், ஷோபனா!

அவளது ஆவல் அளவு கடந்து போகும் சமயங்களில், "நான் ஆட்டோக்காரி... ஆட்டோக்காரி... நாலும் தெரிஞ்ச ரூட்டுக்காரி"ன்னு பாடிட்டு, எந்தத் தெருவிலயாவது சுத்திட்டு இருக்கப் போறடி!" என்று காஞ்சனா அவளைக் கிண்டல் செய்யும் அளவிற்குப் போய்விடும்.

அதே பயம் தனசேகானுக்கும் இருக்கவே, மகளிடம் மெதுவாகக் கேட்டார்.

"குட்டி! ஆட்டோ ஓட்டறதெல்லாம்... பொம்பளைப் பிள்ளைக்கு ஒத்து வராத விஷயம்டா கண்ணு! ரொம்ப ரிஸ்க்கான தொழிலு..." என அவர் இழுக்க,

"அப்பா! எப்பவுமே, நம்மகிட்ட இருக்கிறதை வச்சு நிம்மதி அடையக் கூடாது... அதை விடப் பெருசா ஏதாவது சாதிக்க நினைக்கணும்ன்னு எங்க டீச்சர் சொல்லியிருக்காங்கப்பா! அதனால, நான் உங்களை மாதிரி ஆட்டோ ஓட்ட மாட்டேன். பெருசா... ஒரு ஆட்டோ மொபைல் ஷாப் வச்சு, வண்டியெல்லாம் புதுசா செஞ்சு தருவேன்" - கண்களில் மின்னலுடன் பதில் சொன்னாள், பெண்ணரசி.

பெண்ணின் லட்சியம் பெருமிதத்தை உண்டு பண்ணினாலும், "பெண்கள் ஆட்டோமொபைல் ஷாப் நடத்த முடியுமா?" என்ற சுணக்கம் அவருக்கு இருக்கவே செய்தது.

அவருக்கிருந்த சின்னச் சின்னத் தயக்கங்களையும் துணி கொண்டு துடைத்தெறிவது போல், கம்ப்யூட்டர் சார்ந்த பொறியியல் துறைகளில் இடம் கிடைத்த போதும், ஆட்டோமொபைல் துறையைத் தேர்ந்தெடுத்தவள், தன்னுடன் பயின்ற மாணவர்களுக்கு இணையாய் வாகனங்களை அலசி ஆராய்வதில் கில்லாடியாய்த் திகழ்ந்தாள்!



சொல்லப் போனால், அவளது அதீத ஆற்றலால், தனசேகரனின் வண்டியில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை வீட்டிலேயே செய்து கொடுத்தாள்!

மகளது ஆர்வத்தைப் புரிந்துகொண்ட தந்தையும், அவளை சோர்வுறச் செய்வது போல் எதையும் பேசினார் இல்லை.

தன் விருப்பப் படிப்பைப் படிக்க வைத்த தந்தையை அதிகமாய் தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக, ஷோபனாவும் தன்னால் முடிந்த வகைகளில் சம்பாதித்துக் கொண்டிருந்தாள்.

அவளது திறமையும் ஆர்வமும் அவளது எதிர் காலத்தை நல்ல முறையில் வடிவமைத்துவிடும் என்ற நம்பிக்கை தனசேகானுக்கு வந்திருந்தது!

ஆனால், பெரியவள்! அவள், மனதார வழிபடும் பிள்ளையாரப்பனைப் போல், அவளுக்கு வீடே உலகம்... தாய் - தந்தையே கடவுள்... தங்கையே உறவு! வெளியுலகம் அறியாதவள்!

கபடறியாத அவளுக்கு நல்லதொரு வாழ்வை அமைத்துக் கொடுக்க வேண்டுமே என்று அந்தத் தந்தையின் உள்ளம் தினந்தோறும் பிரார்த்தித்தது!

அதன் விளைவாக, காஞ்சனா தனது இருபத்தியோராவது பிறந்த நாளைக் கொண்டாடிய மறுநாளே, பெண்ணின் ஜாதகத்தையும் புகைப்படத்தையும் தெரிந்தவரிடம் கொடுத்து வரன் பார்க்கச் சொல்லி விட்டார்.

அங்கே தொடங்கியது அவர்களது வேதனைக் காலம்!

இயற்கையிலேயே, ஷோபனாவை விட அழகில் கூடுதலாய் இருந்த காஞ்சனாவிற்கு வரன் வருவதில் கஷ்டமேதும் இருக்கவில்லை!

வந்து குவிந்த வரன்களில், பெண்ணிற்கு ஏற்ற இட மாய் ஒன்றைத் தேர்வு செய்து, அவர்களைப் பெண் பார்க்க வரச் சொன்னார், தனசேகரன்.

அவர்கள் பெண் பார்க்க வந்த தினம், இன்றும் ஷோபனாவின் மனதில் நிழலாடியது.

"அன்றே, மாப்பிள்ளை வீட்டார் தங்கள் வீட்டிற்கு வரும் முன்னரே, தனது உள்ளுணர்வு தனக்குக் குறிப்புக் காட்டியிருக்கிறது! தான் அதை உணரவில்லை!" என்ற எண்ணம் மனதை வாட்ட,

வீட்டில் உணவை முடித்துக் கொண்டு, ஆட்டோவை சிங்காநல்லூர் பேருந்து நிலையம் நோக்கிச் செலுத்திய வனின் மனம், அந்த நாளின் நிகழ்வுகளை அசைப் போட்டது.

அந்த தடியன்கள் பேச்சே, தன் சோகங்களின் தொடக்கம் என்ற எண்ணம் மனசில் ஆழமாய் பதிந்து போனதாலோ என்னவோ, ஷோபனாவிற்கு அன்றைய நிகழ்வுகள் பசு மரத்தில் பதிக்கப்பட்ட ஆணியாய், நீக்க மற நினைவிருந்தன.

அன்று ஷோபனாவிற்கு கல்லூரியில் வேலையே ஓட வில்லை! நெஞ்சமெல்லாம் ஒரே பரபரப்பு! அக்காவைப் பெண் பார்க்க வருவது என்பது அவளையே பரீட்சைக்கு உள்ளாக்கியிருந்தது போல், மனம் நிலையில்லாமல் அலை பாய்ந்தது.

அவளது முதல் வருடப் படிப்பின், கடைசி ஒரு பாட நாட்கள் என்பதால் ஆசிரியர்களும் வகுப்பெடுப்பதில் ஆர்வம் காட்டாமல், பரீட்சைக்குப் படிக்குமாறு கூறி விட்டு, வெறுமனே வகுப்பில் அமர்ந்திருந்தனர்.



'ஆட்டோமொபைல் இன்ஜினியரிங்' என்ற துறை தங்களுக்கு உகந்ததல்ல என்ற எண்ணத்தில், பல பெண்கள் அதை விரும்புவதில்லை! எலெக்ட்ரானிக், எலக்ட்ரிக்கல், கம்ப்யூட்டர் தான் அவர்களது குறி! ஏன் சிவில், மெக்கானிக் துறைக்குக் கூட சில பெண்கள் செல்வார்களே ஒழிய, ஆட்டோமொபைல் என்பது பல பெண்களுக்குப் பிடிக்காத / ஆகாத துறையாகவே மாறிப் போயிருந்தது. இதன் காரணமாய், அவளது வகுப்பி லிருந்த இருபத்தியொன்பது மாணவர்களுக்கு இணை யாக, ஷோபனா ஒரே பெண்ணாய் வலம் வந்தாள்.

வகுப்பில் ஒரே பெண் என்பதால், சில தொல்லை கள்... பல நன்மைகள்! தங்களது ஒரே தோழி என்பதால், வகுப்பில் பல மாணவர்கள் அவளிடம் சகஜமாக பேசு வார்கள்!

ஆனால், சீனியர்கள்!?

தங்கள் வகுப்பில் யாரும் பெண்கள் இல்லையே என்ற கடுப்போ என்னவோ... முதல் வருட மாணவர் களின் கல்லூரி நேரத்திற்கும், பிற ஆண்டு மாணவர் களின் வகுப்பு நேரத்திற்கும் வித்தியாசம் இருக்கும் என் றாலும், நாளின் ஒரு நிமிடம் கூட அவர்களைப் பாராமல் இருக்க முடியாதே!

அதிலும், அந்த மூன்றாம் வருட மாணவர்கள்! ஹப்பா! இந்தக் கல்லூரியில் ஆட்டோமொபைல் துறையை அறிமுகப்படுத்திய முதல் வருடம் சேர்ந்தவர்கள் என்ப தால், அவர்களுக்கு ஒரு தனி கெத்து! கெத்து... இல்லை... திமிரு! என்னமோ... இவர்கள் தான் இந்தத் துறைக்கு ஹெட்ச்.ஓ.டி. மாதிரி... ஆத்தாடி!

முக்கால்வாசி நேரங்களில், அவர்களைப் பார்க்க வேண்டிய கட்டாயத்தை கல்லூரியே தவிர்த்து

விட்டதால், பெரும் விபரீதங்கள் ஏதும் நடந்து விட வில்லை!

ஆனாலும், லேத் லேப் முடிந்து அவர்கள் வகுப்பிற்குத் திரும்பிச் செல்லும் வழியில் முதல் வருட மாணவர்களின் வகுப்பறை அமைந்திருந்ததற்கு யாரைக் குற்றம் கூற முடியும்?! லேப்பிலிருந்து செல்வதற்கு நேர் பாதையாக ஓர் வழி இருந்தபோதும், வம்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பவர்களுக்கு ஏது தடை?

முதல் வருட வகுப்பறை வழியாகச் சென்றால், கூடுதலாய் ஐந்து நிமிடங்கள் பிடிக்கும் என்றபோதிலும், அவ்வழியாகவே சென்றனர், அந்தப் பிரகஸ்பதிகள்!

அந்த நேரம் பார்த்து, ஏதாவது ஆசிரியர் இருந்து விட்டால் மாணவர்கள் தப்பித்தனர். இல்லையென்றால், வகுப்பறையை விட்டு சற்றே தள்ளி நின்று கொண்டு, ஒவ்வொருவராய் அழைத்து அட்டகாசம் செய்து விடுவார்கள்!

அதிலும், ஷோபனாவை அழைக்காமல் அவர்களது திருவாயால் இருக்க முடியாது!

காஞ்சனாவின் பெண் பார்க்கும் படலம் உண்டு பண்ணியிருந்த பரபரப்பையும் மீறி, அவர்களது லேப் நேரம் நெருங்குவதை எண்ணி, ஷோபனாவுக்கு உதறியது.

'இவனுங்களை விட... நமக்குத்தான் இவனுங்க லேப் ஹவர் அத்துப்படியா ஞாபகமிருக்கு... சனியனுங்க...' என்று மனதிற்குள் சலித்துக் கொண்டவள், உள்ளுக்குள் கடவுளிடம் தீவிரமாய் பிரார்த்திக்க ஆரம்பித்தாள்.



எப்போதுமே, ஷோபனாவிற்கு ஒரு கெட்டப் பழக்கம்! அவளுக்கு ஒரு நல்லது நடக்க வேண்டுமென்றால்... அன்று எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அதை அதனுடன் இணைத்துப் பார்ப்பதுதான் அது! எடுத்துக்காட்டிற்கு... இன்று அவளுக்குப் பரீட்சை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அன்று அவள் வீட்டை விட்டு வெளியே வரும்போது, எதிர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கும் சின்னக் குட்டி... சுருதி, அவளைப் பார்த்துச் சிரித்து, ''டாட்டா ஷோபி அத்தை...'' என்று சொல்ல வேண்டும்... அப்படிச் சொல்லி விட்டால் தான் பரீட்சையை நல்லபடியாக முடித்து விடுவோம் என்ற குருட்டு நம்பிக்கை. ஒரு வேளை, அவள் சொல்லவில்லை என்றாலோ... அல்லது அவள் வெளியே அமர்ந்திருக்கவே இல்லை என்றாலோ, பரீட்சையைப் பற்றிய பயம் ஏகத்திற்கு அதிகரிக்க, ஓர் உதறலுடனே செல்வாள், அவள்!

தப்பென்று தெரிந்தபோதும், ஷோபனாவால் அதிலிருந்து வெளிவர முடியவில்லை. ஒரோர் தடவையும், ''இனிமேல் இப்படி... சின்னச் சின்ன விஷயங்களை எல்லாம் தன் எதிர்பார்ப்போடு இணைக்கக் கூடாது'' என்று வீரதீரமாய் தீர்மானம் எடுப்பாள் தான்! ஆனால், அடுத்த முக்கியமான விஷயம் அவளது வாழ்வில் நுழையும் போது, ஓர் நல்ல சிமிக்கைக்காக மனம் கிடந்து அலைபாயும்.

அந்த குணம் இப்போதும் சம்மன் இல்லாமல் ஆஜராக, இன்று தான் மூன்றாம் வருட மாணவர்களின் கையில் / வாயில் மாட்டவில்லை என்றால், இன்று வரும் பத்மநாபனுடனே தன் அக்காவின் திருமணம் நல்லபடியாக நடந்து விடும் என்று மனம் கணக்கிட்டது.

"அக்காவின் திருமணம் நல்லபடியாக நடக்க வேண்டும். அதனால், தயவு செய்து இந்தத் தடியன்களிடம் என்னை மாட்டி விட்டு விடாதே... கடவுளே! ப்ளீஸ்! உனக்கு காஞ்சியின் வாழ்க்கை... நல்லபடியாக இருக்க வேண்டும் தானே... அப்போ இந்த தடியன்களை இங்க வரவிடாம பண்ணிடு... ப்ளீஸ்... பிள்ளையாரப்பா... உனக்கு அக்கா எத்தனை பூஜை செய்திருப்பா... எத்தனை சுலோகம் சொல்லியிருப்பா... நான் கூட உனக்கு கொழுக்கட்டை எல்லாம் படைச்சேனே... நீ மறக்கலை தானே? என்னை மறந்தாலும் பரவாயில்லை... உன்னோட பக்தை காஞ்சனாவை மறந்துடாதே... ப்ளீஸ்... ப்ளீஸ்..." என்று ஆயிரம் ப்ளீஸ் போட்டு, கட்டி கட்டியாய் ஐஸ் வைத்து, அவள் கெஞ்சிக் கொண்டிருக்க,

"ஏய்... ஷோபனா! இங்க வா!" என்று ஜன்னல் வழியே ஓர் குரல் கேட்டது!

"ஐயோ! அந்த தடி எருமைமாடு... பிரதாப்போட குரலாச்சே! ஐயோ... அவன் பார்வை சரியா இருக்காதே! என்ன.... பிள்ளையாரப்பா இப்படிப் பண்ணிட்டே..." - புலம்பலுடன், அசையாமல் அமர்ந்திருந்தாள் ஷோபனா.

"ஏய்... கூப்பிடறது கேட்கலை... எழுந்துவா..." - மீண்டும் அவன் தான்.

அப்போதும், ஷோபனா பார்வையைத் திருப்பாது அமர்ந்திருக்க, தொடர்ந்து பல குரல்கள் அவளை அழைத்தன.

"இவனுங்க எல்லாம்... இந்த தடி எருமை மாட்டுக்கு பிரண்ட்ஸ்! மூஞ்சியும் ஆளுங்களும்... இழுத்து வைச்சு அடிக்கணும் போலிருக்கு... இருங்கடா இருங்க... பிரின்சிபால் கிட்டப் போட்டுக் கொடுக்கிறேன்..." என்று



கறுவியவாறே, தன் முன்னே இருந்த புத்தகத்தில் கவனம் செலுத்துவது போல் நடித்தாள் அவளும்.

அவளை அழைத்து அழைத்துத் தேய்ந்து போன குரல்கள், "டேய்... கருணாகரா... இங்க வாடா..." என்று, முதல் வருட மாணவர்களில் மிகவும் சாதுவாய் / பயந்தவனாய் இருந்த ஒருத்தனை அழைத்தனர்.

"ஹப்பாடி... நாம தப்பிச்சோம்!" என்று ஷோபனா நிம்மதிப் பெருமூச்சு விட்டது பிடிக்கவில்லை போலும்!

அடுத்த ஐந்தாவது நிமிடம், "ஷோபனா... ப்ளீஸ் பா... ஒரு அஞ்சு நிமிஷம் வந்திட்டுப் போப்பா... வாப்பா..." என்று காலில் விழாத குறையாக, அவளைக் கெஞ்சினான் கருணாகரன்.

அப்போதும் அவள் ஏதும் பேசாமலிருக்க, அவள் பின்னே அமர்ந்திருந்த மணிகண்டன் "போயிட்டு வந்திடு, ஷோபனா! இப்போ நீ போகலைன்னா... அதைப் பெரிய பிரச்னையாக்கிடுவாங்க... உன்னை காலேஜ் குள்ள எங்கேயும் நடக்கவே விட மாட்டாங்க... பேரைச் சொல்லிக் கத்திக்கிட்டே இருப்பாங்க. ராக்கிங் ஸ்குவாட் பயமெல்லாம் இவங்களுக்கு இல்லை... அவங்க இல்லாத நேரமா பார்த்துக் கத்துவானுங்க ஷோபனா. போயிட்டு வந்திடு..." என்றான் மெது குரலில்.

வகுப்பிலிருந்த அத்தனை முகங்களும் அவளைக் கெஞ்சுவது போன்ற பிரம்மை மனதை சூழ்ந்து கொள்ள, ஷோபனா மெல்ல எழுந்து வெளியே சென்றாள்.

"என்ன... திமிரா? கூப்பிட்டா எழுந்து வர முடியாதா?" - குரல்கள் மாறி மாறி அவளைக் குடைந்தன.

எதற்கும் பதில் சொல்லாமல், பேசா மடந்தையாய் நின்றிருந்தாள் ஷோபனா! சேறு என்று தெரிந்த பின்னர்,

வீணே சென்று அதன் மேலே விழுவானேன்... துவ அழுகாசி விட்டதே என்று மனம் பதைப்பானேன்... மௌனமே ஷோபனாவின் மொழியானது.

முதல் இரண்டு நிமிடக் கத்தல்களுக்குப் பின்னர் தாமாகவே அடங்கி, ''ஆமா... இதென்ன டிரஸ்! தொம் மக்கூத்தாடி மாதிரி... காலேஜ் வரும்போது நச்சுன்னு டிரஸ் பண்ணிட்டு வர வேண்டாம்?'' என்றது ஒரு குரல்.

''ஆமா... ஆமா... பார்க்கிற எங்க கண்ணுக்குக் குளிர்ச்சியா இருக்கணும் இல்லையா...'' ஒத்து ஊதிய புண்ணியவான் பிரதாப்பே தான்!

'எருமை மாடு... கண்ணுக்குக் குளிர்ச்சியா வேணுமா? இரு இரு... வேப்பெண்ணெயை எடுத்துக் கண்ணுல கூட்டி விடுறேன்...' - உள்ளேயே புகைந்தாள் ஷோபனா.

''கலரா இது? மாரியம்மன் கோவிலுக்குக் கூழ் ஊத்தப் போற மாதிரி... மஞ்சா கலர்-ல ஒரு சுடிதார்...'' - பிரதாப் சலித்துக் கொள்ள,

''எவனாவது ஓசி-ல கொடுத்திருப்பான்டா...'' - அவளது ஏழ்மையை குத்திக் காட்டினான் ஒரு பணக்கார நாய்.

''இந்த மாதிரி பொறுக்கித் தனம் பண்ண வைக்கிற பணம் எனக்குத் தேவையில்லை...'' - மனதிற்குள் எண்ணியதை வாய் விட்டே சொல்லிவிட்டாள் ஷோபனா.

அவளது தோற்றத்தைப் பற்றிய கேலியிலேயே சிலிர்த்துப் போயிருந்த மேனி, அவளது பொருளாதார நிலைமையைப் பற்றிய பேச்சில் வெகுண்டு விட்டது.



அந்தக் கோபம், எண்ணமாய் இருந்திருக்க வேண்டிய வார்த்தைகளுக்குப், பேச்சு வடிவம் கொடுத்துவிட,

''என்னடி திமிரா?'' என்று கையை முன்னே நீட்டிக் கொண்டு, அந்தப் பணக்கார நாய் முன்னே வர வழி வகுத்து விட்டது.

எப்போதும் அவர்களது கத்தல்களுக்கு அடி பணிந்து போகும் ஷோபனாவிற்கு இன்று கோபமே வந்தது. அதன் மூலதனம் என்னவாய் இருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமா... அவளது தமக்கையின் திருமணம் தான்! இந்த தடியன்களிடம் மாட்டவில்லை என்றால், தமக்கையின் திருமணத்தில் பெரும் பிரச்னைகள் வராது என்று அவளது எண்ணத்திற்கு மாறாக, இவர்களிடம் மாட்டிக் கொண்டது பெரும் எரிச்சலைக் கிளப்பியது.

உள்ளே எரிந்து கொண்டிருந்த மனதில் எண்ணெயை ஊற்றுவது போல், அவர்களின் பேச்சு அமைய, ஷோபனாவும் நிமிர்ந்து நின்றாள்.

''திமிர் தான்! நீங்க படிக்கிற டிபார்ட்மென்ட்-ல இருந்துட்டு... உங்க திமிருக்கு இணையா இருக்கலைன்னா... உங்களுக்குத் தானே அண்ணா கேவலம்...'' என்றவளின் குரல், ஏளனத்தில் தகதிமிதோம் ஆடியது. அவள் சொல்லிய ''அண்ணா''வில் வேறு அநியாயத்திற்கு அழுத்தம்!

''அண்ணாவா? நான் உனக்கு அண்ணனா? நான் என்ன... உங்க அப்பா - அம்மாவுக்குப் பிறந்தவனா?'' - இது பிரதாப்.

''கண்டவங்களுக்கு எல்லாம்... நான் அண்ணனா இருக்கவா, என்னை எங்கப்பா அம்மா பெத்துப் போட்டிருக்காங்க...'' - இது இன்னொரு எருமை.

கழுதை கத்துகிறது என்று ஷோபனா, அலட்சிய மாய் நின்றிருந்தாள். ஆனால், தனது அலட்சியம் வெளியே தெரியாத வண்ணம், தலை கீழ்நோக்கிப் பார்த்திருந்தது.

சில நிமிடங்கள் கத்திவிட்டு, ''இனிமேல்... அண்ணா... கின்னா... பன்னான்னு பினாத்திட்டு இருந்தே, மகளே கொன்னுடுவேன்!'' என்று அவளை மிரட்டிவிட்டு,

''மச்சி... எப்படிடா நம்ம ரைமிங்...'' என்று நண்பர் களிடம் பெருமை பீத்திக் கொண்டது, மனித ரூபத்தி லிருந்த ஒரு ஐந்தறிவு பிராணி.

''சூப்பர் மச்சி! கவிஞன்டா நீ... அந்த ரூபாவுக்கு இந்த மாதிரி ஒரு கவிதை எழுதிக் கொடுத்தேன்னு வையேன்... செருப்புக்குப் பதிலா பாட்டா ஷூ வாங்கி அடிப் பாடா...'' என்று அவனது காலை பலமாய் வாரிவிட்டு, ஷோபனாவின் புறம் திரும்பினர்.

''நாளையிலிருந்து... இந்த மஞ்ச கலர், பஞ்சு மிட்டாய் கலர், மண்ணு கலர், மண்ணாந்தை கலர்... இதில எல் லாம் டிரஸ் போடாம, நல்லா பளிச்சுன்னு வரணும் சரியா?'' என்றான் பிரதாப்.

'ஹோ... உன் மண்டை கலர்-ல டிரஸ் போடக் கூடாதா? சரி... சரி!' என்று உள்ளுக்குள் இளக்காரம் செய்த ஷோபனா, வெளியே வாய் திறக்கவில்லை. ஒரு தடவை திறந்துவிட்டு, அவர்கள் கத்திய காட்டுக் கத் தலைக் கேட்க முடியாமல் திணறியது பத்தாதா?!

ஷோபனாவின் மௌனம் ஆத்திரத்தைக் கிளப்ப, ''ஏய்... என்ன பதில் சொல்ல முடியாதா? சரிங்க சார்ன்னு சொல்லு... சொல்லு...'' என்று படுத்தி விட்டனர் அனை வரும்.



'சார்... மோர்... நாறிப் போன நார்த்தங்கா...' என்று சொல் லத் துடித்த நாவை அடக்கிக் கொண்டு, பேசாதிருந்தாள் ஷோபனா.

இதுவே இரண்டு நிமிடங்களுக்கும் மேலாய் தொடர, முதல் வருட வகுப்பிற்கான ஆசிரியர் தூரத்தில் வருவது தெரிந்தது.

''உனக்கிருக்க திமிருக்கு... எவன்கிட்டவாவது சீரழி யப் போறே!'' என்று கறுவியவாறே, அவர்கள் தான் அந்த இடத்தை விட்டு நகர வேண்டியதாய் அமைந்தது.

அவர்களது பேச்சை சிறிதும் மதிக்காமல் ''ஷ். அப்பா! போய் தொலைஞ்சானுங்க!'' என்று நிம்மதிப் பெருமூச் சுடன், வகுப்பில் வந்து அமர்ந்த ஷோபனாவிற்கு, மனதினுள் உறுத்திக் கொண்டே இருந்தது!

அக்காவின் திருமணத்தை இந்தத் தடியன்களோடு இணைத்தது பிசகோ என்று எப்போதும் போல் தன் விபரீத எண்ண ஓட்டத்தை எண்ணி மனம் அடித்துக் கொண்டது.

இனிமேல், மனதின் எதிர்பார்ப்பை கடவுளிடம் பிரார்த் தனையாய் வைக்க வேண்டுமே ஒழிய, அல்பத்தனமான விஷயங்களுடன் இணைக்கக் கூடாது என்று எப்போதும் போல் உறுதி எடுத்துக் கொண்டாள் ஷோபனா! ஆனால், இந்த உறுதி... எதிர்பார்ப்பைக் கிளறக் கூடிய அடுத்த விஷயம் அவளது வாழ்வில் நுழையும் வரையிலேயே நிலைத்திருக்கும் என்பது அவள் அறியாத விஷயமில் லையே!

அன்று அந்தத் தடியன்கள் தன்னிடம் வம்பு செய் யாமல் இருந்திருந்தால்... வாழ்வின் கோரங்களைத் தவிர்த்திருக்கலாமோ!?

# 6

எத்தனை இழப்புக்கள்!

எத்தனை தியாகங்கள்!

ஆனால், இழப்புகளின் தாக்கம் அதிகப்படியாய் இருக்கும் என்று அவள், அன்று எண்ணினாள் இல்லை.

ஏனென்றால், காஞ்சனாவை பெண் பார்க்க வந்த பத்மநாபனுக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது!

உயர்ந்த படிப்பு, நல்ல வேலை என்றிருந்த அவனுக்கு, பத்தாவது மட்டுமே படித்திருந்த காஞ்சனாவை பிடித்ததே, பெரிய விஷயம் என்பதால், அவர்கள் கேட்ட - ஒரு லட்சம் வரதட்சணை, பதினைந்து பவுன் நகை, வீட்டிற்குத் தேவையான பண்டம் - பாத்திரம் ஆகியவற்றை பைசா குறையாமல் தருவதாய் ஒத்துக் கொண்டார், தனசேகரன்.

தந்தையின் சேமிப்பைப் பற்றி தாயும், தமக்கையும் அறியாத பல விஷயங்கள் ஷோபனா அறிந்ததே!

பெண் என்று காஞ்சனா பிறந்ததிலிருந்து சிறுகச் சிறுக சேர்க்கத் துவங்கியிருந்தபோதும், அவரால் லட்ச லட்சமாய் சேர்த்துவிட முடியவில்லை. நடுவே, வந்த லீலாவதியின் ஒற்றை தலைவலி, ஷோபனாவின் படிப்பிற்கென்று எடுத்த பணம், வாடகை ஆட்டோ ஓட்டுவதால் ஏற்பட்ட சிரமங்களைத் தவிர்க்க சொந்த ஆட்டோ வாங்கிய செலவு என்று கையிருப்பு குறைந்து கொண்டே போனது.

அதன் விளைவாக, அவரிடம் ஒரு லட்சமோ.... ஒன்றரை லட்சமோ தான் பணம் இருக்கும் என்பது



ஷோபனாவின் கணக்கு. ஆனால், மாப்பிள்ளை வீட்டு ஆட்கள் கேட்கும் வரதட்சணையைக் கொடுக்க வேண்டுமென்றால் குறைந்தது மூன்று லட்சங்கள் வேண்டுமே... அதன் பின்னர் கல்யாணச் செலவு வேறு இருக்கிறதே என்று பெரிய மனிதத் தனமாய் கணக்கிட்டது ஷோபனாவின் மனம்.

வீட்டுக் கிளியாய் இருந்த காஞ்சனாவைப் போலல்லாமல் தந்தையுடன் வெளியிடங்களுக்குச் சென்று வந்ததில் ஏற்பட்ட உலக அறிவு வேறு, அதற்கு உரமிட்டது.

பணக் கணக்குப் போட்ட ஷோபனாவின் மனதிற்கு முற்றிலும் மாறாய், மூத்தப் பெண்ணின் திருமணத்தை நல்ல படியாக முடிக்கும் வைராக்கியம், தனசேகரனின் நெஞ்சில் வேரூன்ற, அதற்கான பணத்தைக் கடனை பெறத் தான், அவர் சண்முகம் அண்ணாச்சியை நெருங்கியதே!

அதற்குள், ரயில் நிலையத்திலிருந்து வெள்ளலூர் செல்வதற்கு சவாரி கிடைக்க, ஷோபனா தன் பழைய நினைவுகளிலிருந்து மீண்டு வந்தாள்.

வெள்ளலூரில் இறக்கி விட்ட சவாரிக்குப் பின்னர், யாரும் வராததால், வெள்ளலூர் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு, சவாரி பார்த்தவாறே,

அவரிடம் பணம் வாங்கச் சென்ற தந்தையுடன், தான் உடன் சென்றது நினைவு வந்தது ஷோபனாவிற்கு.

ஓர் பத்திரத்தை நீட்டி, அண்ணாச்சி கையெழுத்து கேட்டபோது, ''அப்பா... ஒரு நிமிஷம். நான் ஒரு தடவை படிச்சுப் பார்க்கிறேன்'' என்றாள் ஷோபனா, நிமிர்வுடன்.

''ஷ். என்ன குட்டி இது!?'' என்று மகளைக் கண்டித்து விட்டு,

''மன்னிச்சுக்கோங்க அண்ணாச்சி. சின்னப் புள்ள.. ஏதோ தெரியாம சொல்லிடுச்சு!'' என்று சண்முகத்திடம் மன்னிப்பு கோரினார், தனசேகரன்.

''இருக்கட்டும் தனசேகரா! பொண்ணு ஒண்ணும் தப்பா சொல்லிடலையே! கை நீட்டிப் பணம் வாங்கும் போது... எல்லாத்திலும் கவனமா இருக்கணும் இல்லையா?! இந்தா கண்ணு... பாரு!'' என்று ஷோபனாவிடம் அவர் பதிரத்தை நீட்ட, நிதானமாய் அதை வாசித்து முடித்தாள் பெண்.

இன்ன தேதியில் இரண்டரை லட்சம் பணம் கொடுப்பதாகவும், அதற்கு நான்கு சதவீத வட்டி என்றும், மாசம் பத்தாம் தேதிக்குள் வட்டிப் பணத்தைக் கட்டி விட வேண்டும் என்றும், அசலைக் கொஞ்சம் கொஞ்சமாய் திருப்பும் வகையிலும், அசலைத் திருப்பாத பட்சத்தில் தனசேகரனின் ஆட்டோவை அவரிடமிருந்து கைப்பற்றி விடுவோம் என்றும், மேலும் கோர்ட் வரை செல்லும் நிலையும் உள்ளது என்பதையும் அந்தப் பத்திரத்தில் விலாவாரியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏனோ, அந்தப் பத்திரத்தைப் படிக்கப் படிக்க, ஷோபனாவின் உடம்பில் ஓர் உதறல் ஓடி மறைந்தது! அதில் குறிப்பிட்டிருக்கும் விபரீத நடவடிக்கைகள் நடந்தேறி விட்டால் என்னவாகும் என்று துடித்த மனதிடம், ''கெட்டதை எண்ணாதே மனமே! நல்லதையே நினை! இந்தப் பணத்தை எப்படியும் திருப்பி விடலாம்'' என்ற மந்திரத்தை உருவேற்றிக் கொண்டே இருந்தாள், அவள்.



அவளது உடலும் மனமும் நடத்திய போராட்டத்தை அறியாமல், ''என்னம்மா படிச்சாச்சா? அப்பா... கையெழுத்துப் போடலாம் தானே!'' என்றார் சண்முகம்.

தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தவள் போல், ''ஹான்'' என்று சுயநினைவு பெற்றவள், ''ம்ம்'' என்றாள் மெல்ல.

''அதில இருக்கிற மாதிரி எதுவுமே நடக்காது. உங்க அப்பாவோட நாணயம் அப்படி நடக்கவிடாது!'' என்று உறுதியாய் கூறிய சண்முகம்,

''கல்யாணமாகிப் போற உன் பொண்ணு நிறைஞ்ச மனசோட நீடுழி வாழணும்'' என்ற வாழ்த்துடன் பணத்தைக் கொடுத்தார்.

கூடவே, ''ரெண்டும் பொண்ணா போச்சே... பின்னாடி காலத்தில யாரு பார்த்துப்பாங்கிற கவலை உனக்குக் கொஞ்சமும் வேண்டாம், தனசேகரா! உன்னோட ரெண்டாவது பொண்ணு... ரெண்டு ஆணுக்கு சமம்! அது கண்ணில... அத்தனை உறுதி. அப்பாவுக்கு ஒரு கெடுதல் நடந்து விடக் கூடாதேன்னு ஒரு பதட்டம்... உன்னையும் உன் பொண்டாட்டியையும் நல்லபடியா பார்த்துக்கும்!'' என்று நல் வார்த்தையாக சொல்லி, அவர்களை வழியனுப்பி வைத்தார்.

''உன் பெண் நீடுழி வாழ வேண்டும்'' என்று வாழ்த்தியதற்குப் பதிலாக, ''நீ நீடுழி வாழவேண்டும்'' என்று வாழ்த்தியிருக்க வேண்டுமோ எனத் தோன்றியது, ஷோபனாவிற்கு!

அடுத்த நாலாவது நாளில் தனசேகரனின் உயிர் உலகை விட்டுப் பிரிந்து போனது.

தூரத்து உறவினர் வீட்டிற்கு, கடன் கேட்கச் சென்றிருந்த தனசேகரன், திரும்பும் வழியில் ஆட்டோவை

நிறுத்திவிட்டு, டீ குடித்துக் கொண்டிருந்த வேளையில், கண் மண் தெரியாமல் வந்த ஓர் லாரிக்காரப்படுபாவி... அவரது உயிரைக் குடித்துவிட்டுச் சென்றான்!

மனித மனம் - தான் மிகுந்த வேதனைக்கு உள்ளான நிகழ்வுகளின் சுவடைத் தன்னையும் அறியாமல் மறந்து விடுமாம்!

அதுபோல், ஷோபனாவிற்கும் தந்தையின் இறுதிச் சடங்கு நடந்த தினத்தின் வேதனை முற்றிலுமாய் நினைவு வரவில்லை. அந்த நாளை நினைத்தாலே, கருணை கொஞ்சும் தந்தையும் முகம், வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த கோரமே நினைவு வந்து, மனதை வாட்டிவிடும் வேதனை மட்டுமே நிலைத்தது!

ஆனால், அவளால் மறக்க முடியாத சில விஷயங்கள் - சொந்தங்களின் குண்டூசி பேச்சுக்களும், சண்முகம் அண்ணாச்சியின் பரிவும் தான்!

சொந்தங்கள் என்று வந்திருந்தவர்கள் அனைவரும், இன்றைய ஈமச் சடங்கை ஏற்று நடத்தினால், பிற்காலத்தில் மூன்று பெண்களின் பொறுப்பையும் ஏற்க வேண்டுமோ என்ற பயத்தில், ஒதுங்கியே நிற்க, சண்முகம் அண்ணாச்சி தான் தன் ஆட்களின் உதவியோடு, தனசேகரனின் இறுதிச் சடங்கை எடுத்து நடத்தினார்.

அதற்கு அவள் நன்றி கூறியபோது, ''அட, என்னம்மா இது!? அநியாயமா ஒருத்தரை சாகக் கொடுத்திட்டு... மூணு பொம்பளைங்களும் தவிச்சிட்டு இருக்கையில, அப்படியே ஒதுங்கிப் போற அளவுக்கு நான் மனசில ஈரமில்லாதவன் இல்லைம்மா'' எனக் கூறியவர், கொஞ்சம் பணத்தை எடுத்து வந்து ''செலவுக்கு'' என்று ஷோபனா கொடுத்தபோது, ஓர் கூரிய பார்வையை



வீசினாரே ஒழிய பணத்தை மறுக்கவில்லை. அதன் பின்னர், காரியங்கள் வேகமாய் நடந்தேறின.

முதல் நாள், தங்களிடம் பேசிக் கொண்டிருந்த தந்தையார், இன்றைய தினம் உயிரோடு இல்லை என்பதை மூவரும் சரிவர ஜீரணிப்பதற்கு முன்பே, வந்திருந்த சொந்தங்கள் யாவரும் கல் விழுந்த காகங்களாய் பறந்தோடி இருந்தனர்.

காகம் என்ற ஐந்தறிவு ஜீவனுக்குக் கூட, கூடுதலாய் அறிவிருக்குமோ என்று ஷோபனா ஏளனமாய் எண்ணும் வண்ணம், ''வீட்டுக்கு அச்சாணியா இருந்தவனே போனதுக்கு அப்புறம்... பொண்ணுக்கு என்ன பெரிய இடம் பார்க்கிறே? சாதாரண இடமா அவளைக் கட்டிக் கொடுக்கிற வழியைப் பாரு!'' என்ற அறிவுரையுடனே, பலரும் நகர்ந்து போயினர்.

சொந்தங்கள் செய்துவிட்டுப் போன காயத்தை, மேலும் பதம் பார்க்கவென, காஞ்சனாவின் புகுந்த வீட்டினர் வந்து சேர்ந்தனர்.

முதலில், துக்கம் விசாரித்தவர்கள், ''தனசேகரனின் மறைவு நிகழ்ந்திருக்கும் இந்த வேளையில் அவர்களால் இந்தத் திருமணத்தை நல்லபடியாக செய்ய முடியுமா'' என்று கேட்டதும்,

அதுவும் ''நல்லபடியாக'' என்ற வார்த்தையில் கூடுதல் அழுத்தம் கொடுத்துக் கேட்டதும் லீலாவதியிடம் ஓர் அதிர்வு ஓடி மறைந்தது.

தந்தை இறந்த துக்கத்தையும் மீறி, காஞ்சனா அழுது கொண்டே பின்புறம் ஓட, லீலாவதி என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்து நின்றார்.

''ரெண்டு நாளில் போன் பண்றோம் யோசிச்சுச் சொல்லுங்க!'' என்று அவர்கள் நகர்ந்த பாணியிலேயே, பேசிய பணமோ நகையோ வரவில்லையெனில் திருமணம் நடக்காது என்ற தோரணை கண்டிப்பாகத் தெரிந்தது.

மலங்க விழித்த குழந்தையாய், லீலாவதி ஷோபனாவின் முகம் பார்க்க, தாயைத் தோளோடு அணைத்துக் கொண்டவள், வார்த்தையின்றி அவரை சமாதானம் செய்ய முயன்றாள்.

அவர் முழுதாய் சமாதானம் அடைவதற்கு முன்னரே, சண்முகம் அண்ணாச்சி வந்து சேர்ந்தார்.

தாயும் மகளும், அவரது உதவிக்கு உரிய நன்றியைச் சொல்லி முடிக்க, அதை நாகரீகம் கருதி மறுத்தவர், சிறு தயக்கத்துடன் பேச்சைத் துவங்கினார்.

''அம்மா... நான் ஒரு வியாபாரி!'' என அவர் துவங்கும் போதே, ஷோபனாவின் மூளையில் எச்சரிக்கை மணி அடிக்கத் துவங்கியது. ஆனால், ஓர் புரியாத பார்வையுடன் அவரையே பார்த்திருந்த லீலாவதியிடம் மேலும் பேசினார், அவர்.

''உங்க புருஷன் பேர்-ல எனக்கிருந்த நம்பிக்கையிலும்... அதைவிடவும் மேலா, அவர் செய்ற தொழில்... சூரிட்டியா இருந்த ஆட்டோ... இதையெல்லாம் மனசில வச்சுத் தான் இரண்டரை லட்ச ரூபாயைத் தூக்கிக் கொடுத்தேன், ஆனா... இப்போ...'' என அவர் வாக்கியத்தை முடிக்காமல்... முடிக்க முடியாமல் இழுக்க,

''ஐயோ என்னண்ணே... இப்படிச் சொல்லிட்டீக! நீங்களும் கையை விரிச்சுட்டா... அவ கல்யாணத்தை எப்படி நடத்துவேன்! அந்த மனுஷனும் இல்லாம...



சொந்த பந்தமும் இல்லாம... ஐயோ!'' என்று கதறிய லீலாவதியின் மனதில் என்ன தோன்றியதோ,

''நீங்க சொல்றதும் நியாயம் தான்... இத்தனை பேரோட சாபத்தையும் சுமந்துக்கிட்டு... எம் பொண்ணுக்கு இந்தக் கல்யாணம் வேணாம். உங்ககிட்ட வாங்கின பணத்தை... இன்னும் ரெண்டு நாளில திருப்பிக் கொடுத்திடுறோம்'' என்றார் ஓர் தீவிரத்துடன்.

''அம்மா... என்னம்மா இது!? காஞ்சி கல்யாணம்...'' என்று ஷோபனா அதிர, அவரது கையைப் பிடித்து அழுத்தியவர்,

''என் புருஷன் மேல வச்ச நம்பிக்கையை என் மேலையும் வச்சு... பயப்படாம போங்கண்ணே!'' என்றார் சண்முகம் அண்ணாச்சியிடம்.

சிறு சங்கடத்துடன் அவர் எழ, ''இந்த நாலு நாளைக்கு வட்டி ஏதாவது...'' என்றார் லீலாவதி. வீட்டுப் பறவை... உலகம் அறியாதவர் என்றெண்ணியிருந்த தாயின் மனதில் இப்படியொரு ரோஷமா என்றிருந்தது, ஷோபனாவிற்கு.

''என்னம்மா இது! நானே, சாவு வீட்டில வந்து என்னோட பணத்தைக் கேட்க வேண்டிய நிலைமையா போச்சேன்னு மனசு சங்கடப்படுறேன். நீ... வட்டி... குட்டின்னு...'' என்ற சண்முகம், கலங்கிய கண்களை மறைத்துக் கொண்டு, மெல்ல வெளியேறினார்.

அவர் போகக் காத்திருந்தவர் போல், லீலாவதி வெடித்து அழுதார்.

''எம் பொண்ணு வாழ்க்கை... இப்படி ஒண்ணுமில்லாம ஆகிப் போச்சே!'' என்றவர், இதுவரை நடந்த பேச்சு

வார்த்தைகளை அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்த காஞ்சனாவை அள்ளி அணைத்துக் கொண்டார்.

''ஆசை காட்டி... மோசம் செய்தா போல, நிச்சயம் பண்ணி... கலயாணம் நடக்காம போச்சே! என்னை மன்னிச்சிடு தாயே!'' என்று அவர் கதறியதற்கெல்லாம் பதிலே சொல்லாமல் இருந்த காஞ்சனா, லீலாவதியின் தூக்க மாத்திரைகளை உண்டு, தன் பதிலை அன்றிரவு அரங்கேற்றியே காட்டினாள்!

ஏற்கனவே ஓர் துக்கம் நடந்த வீட்டில், காஞ்சனாவின் தற்கொலை முயற்சி மிகப் பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது!

படுக்கையில் கிடந்த தமக்கையிடம் ''என்ன காரியம் செய்துட்டே காஞ்சி... நீ இல்லாம நாங்க எப்படி இருப் போம்!?'' என்று ஷோபனா அழுகவும்,

''அவரை மறக்கிற கொடுமையை விட... சாகுறது மேல்!'' என்று விரக்தியாய் பேசினாள், காஞ்சனா.

''அதுக்காக, இந்தக் கல்யாணம் நடந்தே ஆகணும்ன்னு நான் சொல்லலை. நம்ம குடும்பத்தோட நிலைமை... எனக்கு நல்லாப் புரிந்து இருந்தாலும்... என்னால அவ ரில்லாத வாழ்க்கையை என்னால நினைச்சுக்கூடப் பார்க்க முடியலை. அவர்தான் புருஷன்னு... மனசில பதிஞ்சு போச்சு... இனிமே அதை அழிக்கணும்ன்னா செத்துப் போறதுதான் வழின்னு தோணுச்சு!'' என அவள் அழ, அந்த நேரம் பார்த்து அங்கு வந்து சேர்ந்தான் பத்மநாபன்.

அவனது வருகை எதிர்பாராததாய் அமைய, ஓர் நிமிடம் திகைத்த ஷோபனா, மறு நிமிடம் இருவரையும் தனியே விட்டு அறையிலிருந்து வெளியேறினாள்.



அரை மணி நேரம் கழிந்த பின்னர், கண்களில் கண்ணீருடன் வெளியே வந்த பத்மநாபன் நேரே ஷோப னாவிடம் வந்து நின்றான்.

லேசாய் செருமி, அவளது வெறித்தப் பார்வையைத் தன் புறம் திருப்பியவன், சில நிமிடங்கள் மௌனமாய் நின்றான்.

எதுவும் பேசாமல் ஷோபனா அவனையே பார்த்திருக்க, ''எனக்கும் காஞ்சனா மாதிரி தான்...'' என்றான் எடுத்த உடனே.

மனதினுள் எல்லையில்லா நிம்மதி பரவ, அவனை ஆர்வமே வடிவாய் பார்த்திருந்தாள் ஷோபனா.

''காஞ்சனாவை என்னால விட முடியாது... அதுக்காக, எங்க அப்பா - அம்மாவையும் எதிர்க்க முடியாது...'' என அவன் சொல்ல, ஷோபனாவின் முகம் விழுந்தது.

''எங்கிருந்தாலும் வாழ்க!''ன்னு சொல்லிட்டுப் போகப் போகிறான்... அக்கா அழுதே கரையப் போகிறாள்... அழுவதை விடவும் தற்கொலை என்கிற கொலைப் பாத கத்தைத் துணிந்தே செய்யப் போகிறாள்... அப்பாவின் இழப்பைத் தாங்காத அன்னையின் நெஞ்சம், பெண் ணையும் இழந்து தவிக்கப் போகிறது... என்று ஷோபனா வின் மனம் சோர்ந்து போனது.

ஆனால், பத்மநாபன் சொன்னதோ வேறு ''என் கிட்டே கொஞ்சம் பணமிருக்கு... வீடு வாங்குறதுக்காக சேர்த்து வச்ச பணம்... அதை தரேன். எங்க வீட்டில எதிர் பார்க்கிறதை... இந்த பணத்தை வச்சு பூர்த்தி செய்ய முடி யாதுன்னாலும்... ஏதோ, ஒரு சின்ன செலவுக்காகவாவது உதவும். மேல, வரதை எப்படியாவது போட்டு சமாளிச் சுடுங்க. கல்யாணத்துக்கு அப்புறம்... வாங்கின கடனை

அடைக்க நானே உதவி பண்றேன். எனக்கு... காஞ்சனா தற்கொலை முயற்சி வரைக்கும் போனதை நினைச்சா... உடம்பே ஒரு நிமிஷம் ஸ்தம்பிச்சுப் போகுது... இனி ஒரு தரம்... என்னால, அவளை இந்தக் கோலத்தில் பார்க்க முடியாது. ப்ளீஸ்... இதை விட்டா, எனக்கு வேற வழியே தெரியலை'' என்றான் மன்றாடும் குரலில்.

'எங்களாலும்தான் பார்க்க முடியவில்லை!' என்று மனதிற்குள் நினைத்தவளுக்கு, அக்காளின் வருங்காலக் கணவனின் மேல் மதிப்பு கூடியது.

மாமியார் எப்படியிருந்தாலும், கொண்டவன் துணையிருக்கிறதே! அதுவே, அக்காவை சந்தோஷமாய் வைத்துக் கொள்ளும் என்று மனம் நிறைந்த போதும், அவளால் எந்தவொரு முடிவுக்கும் வர முடியவில்லை.

''அம்மாகிட்ட கேட்டுச் சொல்றேன்!'' என்று ஓரடி எடுத்து வைத்தவள்,

''ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்! எங்க நீங்களும்... கல்யாணத்தை நிறுத்தும்படியா சொல்லிடுவீங்களோன்னு பயமா இருந்தது!'' என்றாள் ஷோபனா ஆத்மார்த்தமாக.

''அப்பா - அம்மாவை எதிர்க்கத் திராணியில்லாதவன் தான். ஆனா... மனசாட்சி இல்லாதவன் இல்லை!'' என்றான் அவன், எங்கோ பார்த்துக் கொண்டு.

உணர்ச்சியற்ற பார்வை ஒன்றை அவன் மீது வீசி விட்டு, இடிந்து போய் அமர்ந்திருந்த லீலாவதியிடம் சென்ற ஷோபனா, பத்மநாபன் கூறியதை வார்த்தை மாறாமல் கூற, தாயாரோ ''மாப்பிள்ளைகிட்ட வாங்கி... கல்யாணம் செய்றதா?! வெளிய தெரிஞ்சா... காறித் துப்புவாங்க, ஷோபி!'' என்றார் துணுக்குற்ற பார்வையுடன்.



''காறித் துப்புவாங்களா? எதுக்கு? இல்லை... எதுக்குன்னு கேட்கிறேன்?! எக்கேடோ கெட்டுப் போங்கன்னு... அப்பா இறந்த மறுநாளே நம்மளை விட்டுப் போனவங்க தானே! அவங்க என்ன நம்மளைக் கேட்கிறது!?'' என்று வெகுண்டாள் மகள்.

ஆனால், மகளின் எந்த சமாதானமோ, வருங்கால மருமகனின் உதவியோ அவரை அசைக்கவில்லை. இன்று மாப்பிள்ளை கொடுக்கும் பணத்தை வாங்கிக் கொண்டாலும், அதுவும் கடன் தானே! சண்முகம் அண்ணாச்சியிடம் வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலையில்... இதையும் தான் எப்படி அடைக்க முடியும்!? மேலும், மொத்த திருமண செலவும் மருமகன் கொடுக்கும் பணத்தில் அடங்கிவிடாதே... மேலும் பணம் வேண்டுமே... அதற்கு சண்முகம் அண்ணாச்சியிடம் தானே கடன் வாங்க வேண்டும்... அவர் எந்த நம்பிக்கையில் தங்களுக்கு பணம் கொடுப்பார்?! என்று வெகுவாய் கலங்கி, தீர்க்கமாய் மறுத்தார், லீலாவதி.

அடுத்த ஐந்து நாட்கள் பெரும் பாரத்துடன் கழிய, காஞ்சனாவை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தனர். மூவரும் ஒரே வீட்டில் இருந்த போதும், அவரவர் சிந்தனையில் மூழ்கியிருந்ததால், அங்கே பேச்சு சத்தம் அறவே கேட்கவில்லை.

ஆழ்ந்த நிசப்தத்தில் இருந்த வீட்டில், ஓர் பெரும் பூகம்பத்தை உருவாக்கும் வண்ணம் சண்முகம் அண்ணாச்சி வந்து சேர்ந்தார்.

அவரைப் பார்த்ததும், பீரோவைத் திறந்து பணத்தையும், நகைகளையும் எடுத்து வந்த லீலாவதியின் கைகளிலிருந்து நகையை வாங்கிக் கொண்ட ஷோபனா,

"அண்ணாச்சி! இந்தப் பணத்தை... எங்க அப்பா மேல நம்பிக்கை வச்சுக் கொடுத்ததா சொன்னீங்க இல்லையா?!" என்றாள் அந்தப் பெரிய மனிதரைப் பார்த்து.

எதற்கு கேட்கிறாள் என்று தெரியாமல், அவரும் "ஆம்" என்று தலையாட்ட,

"எங்கப்பா மேல வச்ச நம்பிக்கையில ஒரு சதவீதம் அட்லீஸ்ட் என் மேல வச்சு, இந்தப் பணத்தை எனக்குத் தர முடியுமா?! உங்க பணத்தைக் கண்டிப்பா திருப்பிக் கொடுத்திடுவேன்!" என்றாள், ஷோபனா - அவளது நேரான பார்வையும், உறுதியான குரலும், கேட்டிருந்த அனைவரையும் அதிரச் செய்தது.

"ஷோபி! என்ன செய்ற? உன்னால எப்படி பணத்தைத் திருப்ப முடியும்!? வேண்டாம் ராஜாத்தி... ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டையா, நம்ம தகுதிக்கு ஏத்த இடமா பார்த்து, காஞ்சியைக் கட்டிக் கொடுத்துக்கலாம். அதிகப் பணமும் வேண்டாம்... அதால நாம அழியவும் வேண்டாம்..." என்று மறுத்துப் பேசிய லீலாவதியின் கைகளைப் பிடித்து அழுத்திய ஷோபனா,

"அம்மா, நான் நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். காஞ்சியோட வாழ்க்கைக்கு இந்தப் பணம் ரொம்ப முக்கியம்மா!" என்றாள்.

அவளது வார்த்தை முடியும் முன்னர் "என்னடி பைத்தியக்காரத்தனமா பேசுறே? நீ... ஃபர்ஸ்ட் இயர் தான் படிக்கிற... அப்படி இருக்கும்போது, எப்படி கடனை அடைப்பே?! படிச்சிட்டே வேலைக்குப் போறதெல்லாம் சரியா வராது, ஷோபி! என் வாழ்க்கைக்காக, உன் படிப்பை வீணக்காத!" என்றாள் காஞ்சனா, வேகமாக.



"நான் படிப்பை நிறுத்திட்டு, ஆட்டோ ஓட்டப் போறேன்!" - அவளது அறிவிப்பில், அனைவரும் மீண்டும் ஒருமுறை அதிர்ந்தனர்.

அதன் பின்னர், ஆயிரத்தெட்டு வாக்குவாதங்கள் நடந்து முடிய, முடிவில் ஷோபனா வென்றாள்! ஆம், சண்முகம் அண்ணாச்சி பணம் கொடுக்க ஒத்துக்கொள்ள, அதை அடைக்கும் வழியாக ஆட்டோ ஓட்டுவது என்பது நிச்சயமானது.

ஓர் பெண்ணின் நல்ல வாழ்க்கைக்காக, மற்றொரு பெண்ணின் வாழ்வை வீணாக்கி விட்டோமே என்று லீலாவதி துடித்ததை எல்லாம், ஷோபனா பார்த்தும் பார்க்காதது போலிருந்தாள்.

"எனக்காக... உன்னோட எதிர்காலத்தை சூன்யமாக்கிட்டியே!" என்று காஞ்சனா வருந்தியதற்கு,

"உனக்காக... உனக்காகன்னு ஏன் காஞ்சி நினைக்கிறே! உன் கல்யாணம் இல்லைன்னாலும்... நாம எல்லாரும் மூணு வேளை சாப்பிடணும்... கௌரவமா வாழணும்... இதெல்லாத்துக்கும் பணம் வேண்டாமா... அதுக்கு எங்க போறது சொல்லு?! அம்மாவைக் கேட்டா... வீட்டு வேலைக்குப் போறேன்னு சொல்வாங்க... ஆனா, அம்மாவைக் கஷ்டப்படுத்தி என்னால படிக்க முடியாது, காஞ்சி! படிச்சாதான் சாதிக்க முடியுமா என்ன... எந்தவொரு தொழிலையும் ஆர்வத்தோட செஞ்சா... கண்டிப்பா சாதிக்கலாம், காஞ்சி!" என்று பதில் சொன்ன ஷோபனாவின் குரலில், சாதிக்க வேண்டும் என்ற வெறி கூத்தாடியது.

அந்த நேரத்தில், அக்காவின் உயிரும், அவள் உயிருக்கும் மேலாய் நினைக்கும் அந்தத் திருமணமும்,

அன்னையின் அநாதரவற்ற நிலையும்தான் ஷோபியின் கண்களில் தெரிந்தன.

தன் லட்சியம், தான் ஆசைப்பட்ட படிப்பு - ஆகியவை அனைத்தையும் பின்னே நகரச் செய்வது என்பது பெரும் துன்பமாய் இருந்த போதும், இருட்டி மிரட்டும் வாழ்வை எதிர்கொள்ள வேண்டுமே!?

'ஆட்டோ மொபைல் பொறியாளர்' என்ற பட்டத்தை விட்டுக் கொடுப்பது என்பது உடம்பின் ஒரு பாகத்தை அறுத்தெடுப்பது போல் வலித்தாலும், தனக்கிருக்கும் இரு சொந்தங்களும் உயிரற்று இருப்பதைப் பார்க்க, உயிர் போய் வந்ததால், துணிந்தே அந்த முடிவை எடுத்தாள், ஷோபனா.

ஒரு பெண்ணிற்குப் படிப்பு முக்கியம் என்றாலும், படித்து முடித்ததும் அந்தப் படிப்பு தரப்போகும் சந்தோஷங்களை அனுபவிக்க சொந்தங்கள் வேண்டுமல்லவா?

அவர்களே இல்லாது போகும் ஓர் நிலையில், தனக்கு அந்தப் படிப்பு முக்கியமில்லை என்று தூர எறிந்துவிட்டு, தந்தையின் நினைவாய் நின்ற ஆட்டோவைத் தனதாக்கிக் கொண்டாள்!

தந்தையின் இறுதிவரை, அவருடனிருந்த ஆட்டோவை ஓட்டுவது என்பது அவரே தன்னுடன் இருப்பது போன்ற உணர்வைக் கொடுக்க, ''தன்னால் முடியுமா?'' என்ற கேள்வி சுக்கு நூறாய் உடைய, புதிய தெம்புடன், வீறு நடை போட்ட காலம், இன்று தான் என்பது போல் நெஞ்சில் நிழலாடியது!

ஆனால்... அதன் பின்னர்... எத்தனை ஆயிரம் தடங்கல்கள்!



ஏளனம் கலந்த குத்தல்கள்!

பெண் தானே!? என்ற அலட்சியப் போக்குகள்!

அவற்றையெல்லாம் தாண்டி இன்று... கோவையின் முதல் பெண் ஆட்டோ ஓட்டுனர் என்ற பட்டம்!

## 7

அடுத்த நாள் அதிகாலை நாலரை மணிக்கே, சவாரிக்கென ரயில் நிலையம் கிளம்பிய மகளைப் பார்க்க லீலாவதிக்கு மனம் தாங்கவில்லை!

''குட்டி... இன்னைக்கு ஒரு நாளைக்கு... இன்னும் கொஞ்ச நேரம் தூங்கேன், கண்ணம்மா! தினம்... தினம்... ராத்திரி பதினோரு மணிக்குப் படுத்து, நாலரைக்கு எழுந்தா... உடம்பு கெட்டிடும்மா!'' என்று தடுத்த தாயாரிடம்,

''சனி... ஞாயிறு... ரெண்டு நாளிலதான் ரயில்வே ஸ்டேஷன்-ல அதிக சவாரி பார்க்க முடியும்! அதுவுமில்லாம, அடுத்த வாரம்... காஞ்சிக்கு தாலி கோர்த்து மாத்தணுமே... அதுக்கு, ஆகுற சாப்பாட்டு செலவுக்கு... யார்கிட்டயும் கை நீட்டிட்டு இருக்க முடியாதும்மா'' என்ற ஷோபனா, போட்டிருந்த ஸ்வெட்டரின் மீது காக்கிக் கோட்டை மாட்டிக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேறினாள்.

கல்லூரி இருக்கும் நாட்களிலேயே, ஆறரை மணிக்கு முன்னராக எழுந்து கொள்ளாத ஷோபனாவா இப்போது இப்படி என்றிருந்தது, லீலாவதிக்கு!

மண்டிய கசப்பை மறைத்துக் கொண்டு, வேகமாய் வாசலுக்கு ஓடியவர், பனியில் நனைந்திருந்த

ஆட்டோவின் முன் கண்ணாடியைத் துடைத்துக் கொண் டிருந்த மகளிடம் விரைந்தார்.

''ஷோபிம்மா, இன்னைக்கு... காஞ்சியும், மாப்பிள் ளையும் நம்ம வீட்டுக்கு வராங்க இல்லையா...''

''ஆமா... அதுக்கென்ன? நாலு மணிக்குத் தானே வருவாங்க... நான் அதுக்குள்ளே வந்திருவேன்!''

''அதான்... நீ வரும்போது, கொஞ்சம் மைசூர்பாக் வாங் கிட்டு வரியா? மாப்பிள்ளைக்கு... ரொம்பப் பிடிக்கும்'' என்றார் தாயார், கெஞ்சும் குரலில்.

''ம்ம். சரிம்மா'' என்றதோடு ஆட்டோவைக் கிளப்பிக் கொண்டு போய்விட்ட சின்ன மகளின் உருவம் தன் பார்வை வட்டத்தை விட்டு மறைந்த பின்னரும், லீலா வதி அங்கேயே நின்றிருந்தார்.

இன்று பிறந்த வீடு வருகிறாளே ஒரு மகள்... அவளைப் பெண் பார்க்க வந்த அன்று, தானே வீட்டில் செய்த மைசூர் பாகையும்... அதை விடவும் இனிப்பாய் திகட்டிய சின்ன மகளின் குறும்பும்... கண்ணில் நிழ லாடின.

அன்றைய தினம், கணவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு... கல்லூரிக்குச் செல்ல மாட்டேன் என்று கொஞ்சிய சின்ன மகள்...

''என்னடா குட்டி...'' என்று கொஞ்சிய கணவர்...

''நான் இன்னைக்கு... வீட்டிலேயே இருக்கவா?'' என்று இழுத்த மகளின் விருப்பம் புரிந்து, ''சாயங்காலம் அஞ்சு மணிக்கு அப்புறம் தான், மாப்பிள்ளை வீட்டில் இருந்து வருவாங்க குட்டி! உன் காலேஜ் நாலு மணிக்கே முடிஞ்சிடுமே... அப்புறம் என்ன?'' என்று அவளை அனுப்ப முயன்ற கணவனின் அன்பு வார்த்தைகள்...



''இன்னைக்கு காலேஜ் முடிஞ்சதும்... நேரா வீட்டுக்கு வந்திடு ஷோபி! கம்ப்யூட்டர் கிளாஸ் போக வேண் டாம்...'' - ஷோபியின் விருப்பம் புரிந்து இடைப்புகுந்த பெரிய மகளின் கணிப்பு...

''நீ சொன்னாலும் சொல்லலைன்னாலும் நான் நேரா வீட்டுக்குத்தான் வருவேன்... ஆனா...'' என்ற போதும் தயக்கத்துடனே, தந்தையின் சட்டையைப் பிடித்து இழுத்தவாறே நின்றிருந்த அவரது கடைக்குட்டி...

''வேறென்ன?'' என்று அனைவரும் குழம்பியதற்கு பதிலாய், ''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரதுக்காக... அம்மா இன்னைக்கு மைசூர் பாகு செய்யப் போறாங் களாம்...'' என்று தன் காரணத்தைத் துவங்கிய சின்ன வளை, ''பயப்படாம போயிட்டு வாடி... உனக்கு மைசூர் பாகு மிச்சமிருக்கும்...'' என்று கிண்டல் செய்த பெரி யவள்...

ஷோபனாவின் பயமும் அது தான்! ஆனால், ஒத்துக் கொள்ள மனசில்லையே! அதனால், ''அய்யே! அந்த மைசூர் பாகை... நீயும் உன் ஃப்யூச்சர் ஆத்துக்காரரும் நல்லபடியா பங்கு போட்டு சாப்பிடுங்க!'' என்று தோளை படு ஸ்டைலாக குலுக்கியது...

பின்னர், வாயில் வரை நடந்து சென்று, ''நான் எதுக்கு வீட்டில இருக்கேன்னு சொன்னேனா...'' என்று வார்த் தையை இழுத்தது...

ரோட்டில் ஒரு காலை வைத்துக் கொண்டு, ''அம்மா செய்ற மைசூர் பாகை... உடைக்கிற அளவுக்கு அக்கா வுக்கு சத்தில்லை இல்லையா... அதான், நான் கூட இருந்து... சுத்தியல், வேறகம்பு, கடப்பாரை எல்லாம் வச்சு... அதைத் துண்டு துண்டா உடைச்சுக் கொடுக்

கலாம்னு நினைச்சேன்'' என்ற அவளது தீவிர முக பாவம்...

"அடி கழுத...'' என்று தான் கையை ஓங்கியது...

''அம்மா... அம்மா... நோ டென்ஷன்! உடைக்க முடியலைன்னாலும் பரவாயில்லை... அந்த மாப்பிள்ளை மட்டும் வேண்டாம்ன்னு சொல்லட்டும், கல்லு வேண்டாம்... இந்த மைசூர் பாகையே எடுத்து மண்டையை உடைச்சுடலாம்...'' என்று மேலும் வம்பு பேசிய சின்ன மகளின் குறும்பு...

எல்லாமே இன்று நடந்தது போல், லீலாவதியின் கண் முன்னே அரங்கேறியது.

இந்தக் குறும்பும் சிரிப்பும் எங்கே போயின... தன் கணவன் இறந்த பின்னர், தன் இளைய மகள் வாய் விட்டுச் சிரித்தே பார்த்ததில்லையே!

ஏற்றிருந்த சுமையும்... பாதியில் விடப்பட்ட படிப்பும்... மனிதர்களின் நிஜமுகம் பார்த்ததில் உண்டான பக்குவமும்... அயராத உடல் உழைப்பும்... அவளை வெகுவாக மாற்றி விட்டதை அந்தத் தாய் மனம், உணரவே செய்தது!

பெரியவள் போல் அழகில் ரதியில்லை என்றாலும்... அவளது துள்ளலும் கபடற்ற மனமும் அவளைப் பேரழகியாய் காட்டுமே!? ஆனால்... அந்தத் துள்ளல் துடைத்தெறியப்பட்டு, சிரிப்பும் காணாமல் போய், பெண்ணரசியின் சிங்காரம் குறைந்தது போலிருந்தது அன்னைக்கு!

தூரத்தில் மறையும் ஆட்டோவின் சிறு புள்ளியைப் பார்த்துக் கொண்டே நின்றவர், ஒரு பெருமூச்சுடன் உள்ளே செல்ல, ஷோபனா ரயில் நிலையம் நோக்கிப் பறந்திருந்தாள்.



அங்கே வானொலி நிலையத்தில் காத்திருந்த பிரபாகருக்கு, அந்த ஆட்டோக்காரப் பெண் வந்துவிட வேண்டுமே என்ற பதைப்பே பிரதானமாய் இருக்க,

அவளிடம் கேட்க வேண்டிய கேள்விகள், நிகழ்ச்சியை நடத்த வேண்டிய முறை ஆகியவற்றில் கவனம் பதிய மறுத்தது!

மணி ஏழைத் தொட்டதும் தடதடவென ஓடிய அவனது நெஞ்சத் துடிப்பை நேராக்கும் வண்ணம், ஏழு மணி பதினைந்து நிமிடங்களுக்கு ஷோபனா வந்து சேர்ந்தாள்!

அவளது வருகையிலேயே குறியாக இருந்தவனுக்கு, தன் கண் முன்னே நின்றிருந்தவளின் தோற்றம் பெரும் வியப்பை அளித்தது!

ஓர் முதிர்ந்த கன்னியையோ அல்லது கஷ்டப்படும் இல்லத்தரசியையோ எதிர்பார்த்திருந்தவனுக்கு, ஷோபனா ஓர் இனிய ஆச்சரியமாய் அமைந்தாள்!

நேற்றைய தினம், ரம்யா ஷோபனாவைப் பற்றிச் சொன்னபோது கூட, வானொலி நிகழ்ச்சிக்கு ஓர் சரியான தேர்வு கிடைத்து விட்டது என்ற சந்தோஷத்தில் இருந்தானே ஒழிய, அவரது வயதைப் பற்றியோ... தோற்றத்தைப் பற்றியோ அவன் கவலைப்படவே இல்லை!

அவனது எண்ணம் - ''கோவையின் முதல் ஆட்டோ ஓட்டுனர்'' என்பவர், ஓர் முதிர்ந்த கன்னியாகவோ அல்லது கஷ்டப்படும் இல்லத்தரசியாகவோ இருப்பார் என்பது தான்.

ஆனால், இவளோ... இருபது வயது மதிக்கத் தக்க... ஹ்ம்ம் இருபது கூட இருக்காது போல... பதினொன்பது...

பதினெட்டு வயது தான் இருக்கும்... பதினெட்டுக் குறைந்து இருக்க முடியாது... லைசென்ஸ் தர மாட்டார்களே!

ஒல்லியான தேகம் தான் என்றாலும்... ஜீரோ சைஸ் இல்லை... தேவையற்ற சதை இல்லை... சொல்லப் போனால், தேவையுள்ள சதை கூட கொஞ்சம் குறைச்சல் தான்...

மாநிறத்தவள் தான்... ஆனாலும், முகத்தில் ஓர் அசாத்திய களை...

திருத்தமான முகம்...

ஆழ் கிணறு போன்ற அகன்று இருந்த கண்கள்...

செதுக்கினாற் போல் மூக்கு...

ஆப்பிள் சைஸ் கன்னங்கள் இல்லையென்றாலும்... அழகான செர்ரி பழக் கன்னங்கள்...

மேல் உதட்டின் மேலோ அல்லது கீழ் உதட்டின் கீழோ தான் மச்சமிருந்து அவன் பார்த்திருக்கிறான்... ஆனால் இவளுக்கோ... உதட்டிலேயே மச்சம்! - தன் எண்ணங்கள் போன திசையில், பிரபாகரின் நெஞ்சமே திடுக்கிட்டு நின்றது!

சற்று முன்னர் பார்த்த ஒரு பெண்ணைப் பற்றி... இவ்வளவு வர்ணனையா... சரியில்லையே! என்று மனம் அதட்ட, சட்டென சுதாரித்த பிரபாகர்,

''ஹலோ, நான் பிரபாகர், இந்த வானொலியின் தொகுப்பாளர்!'' என்று அவளிடம் கை நீட்டினான்.

கட்டிப் பெட்டியாய் அவனது கொடுத்த கையை மறுத்துவிட்டு, கை கூப்பாமல், ''ஹலோ, நான் ஷோபனா!'' என்று கை குலுக்கினாள் அவள், சிறு புன்னகையுடன்.



மரியாதை சகிதமாக கொடுக்கப்பட்டக் கையைப் பற்றியபோது, காய்த்துப் போயிருந்த அவளது உள்ளங்கை, பிரபாகருள் என்னமோ செய்தது!

மனதின் எண்ணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, ''முதல்ல, என்னோட கங்கிராட்ஸ்! கோவையின் முதல் பெண் ஆட்டோ ஓட்டுனரைப் பேட்டி எடுப்பதில்... எங்க ரேடியோ ஸ்டேஷன்-க்கு ரொம்ப சந்தோசம்!'' என்றான் அவன் விரிந்த சிரிப்புடன்.

''தேங்க்ஸ்!'' என்று அதையும் சிறு புன்னகையுடன் ஒப்புக் கொண்டவளிடம், அனாவசிய நெளிவுகளோ, தேவையற்ற நாணமோ, கூடுதலான சிரிப்போ சற்றும் இருக்கவில்லை.

நேராய் பார்த்த அப்பாவையின் கண்கள், பிரபாகரின் கண்களைக் கட்டித்தான் போட்டன!

யாரும் அறியாத வண்ணம், தலையைக் குலுக்கிக் கொண்டு, அவளை நேரலை மையத்திற்கு அழைத்துச் சென்றான்.

''தேவராகம் நிகழ்ச்சி... இன்னும் பத்து நிமிஷத்தில் முடிஞ்சிடும். அப்புறம், நாம தொடங்கிடலாம்'' என்றவன்,

''இது லைவ்-வா நடக்கிற ஒரு நிகழ்ச்சி... அதனால, உங்களோட பதில்கள் தயக்கமில்லாம, சட்டு சட்டுன்னு வந்தா நல்லா இருக்கும்'' என்றான்.

வெறுமனே சரி என்று ஒத்துக் கொள்ளாமல், ''நான் தயக்கமில்லாம பதில் சொல்றது... உங்க கேள்வியில தான் இருக்கு. அதனால், உங்களோட கேள்விகள் தெளிவா... அதே சமயம் தர்ம சங்கடம் தராத மாதிரி இருக்கட்டும்!'' என்றாள் ஷோபனா, மிடுக்குடன்.

மெச்சத் தோன்றிய வாயை அடக்கிக் கொண்டு, ''கண்டிப்பா'' என்றான் பிரபாகரும், அதே மிடுக்குடன்.

அதற்குள், தேவராகத்தை முடித்துக் கொண்டு, மற்றொரு ஆர்.ஜே. வெளியே வந்துவிட, இவர்கள் இருவரும் உள்ளே சென்றனர்.

நேரலை மைய டெக்னிஷியன் வந்து, ஷோபனாவிற்கு மைக் செட் செய்துவிட்டுப் போகவும், தேவராகத்தின் கடைசி பாட்டு முடிந்து, விளம்பரங்கள் ஒலிபரப்பவும் சரியாக இருந்தது.

அது நிறைவடைந்ததும்,

''வணக்கம்... வந்தனம்... சுஸ்வாகதம்...

''புத்தம்புது காலையைப் பொன்னிற வேளையாக்கும்... அற்புத நிகழ்ச்சிக்கு உங்களை அழைத்துச் செல்ல உங்கள் பிரபா வந்துவிட்டேன்!

''இது புத்தம்புது காலை மட்டுமில்ல... அர்த்தமிக்க காலை...

''ஏன் தெரியுமா? இன்னைக்கு... பெண்கள் தினம்!

''நம்ம வாழ்க்கையின் ஓர் முக்கிய அங்கமான பெண்களுக்கான தினம்!

''இந்த இனிய நாளுக்கு மேலும் மெருகூட்ட... ஒரு ஸ்பெஷல் கெஸ்ட் வந்திருக்காங்க...

''கோவையின் முதல் ஆட்டோ ஓட்டுனரான, ஷோபனா தான் நம்மளோட ஸ்பெஷல் கெஸ்ட்!

''அவங்களோட வேலையைக் கேட்டதும், உங்களோட புருவங்கள் இரண்டும் ஆச்சரியத்தில் உயருது இல்லையா?! எனக்கும் அப்படித்தான் இருந்தது!



''உங்க ஆச்சரியத்தை சமன்படுத்த... இப்போ ஒரு அருமையான மெலோடி வருது... கேட்டுட்டு வாங்க... தொடர்ந்து ஷோபனாவோட பேசலாம்!'' - ஓர் பாட்டைத் தட்டிவிட்டு, ஷோபனாவிடம் திரும்பினான் பிரபாகர்.

சற்று நேரம், சகஜமாய் பேச எண்ணி, பொதுவான விஷயங்களைக் கையில் எடுத்தான்.

''ஷோபனா, எந்த ஏரியா-ல உங்களோட ஆட்டோ ஸ்டாண்ட் இருக்கு?''

''சௌரிபாளையம்.''

''அடடே! நானும் அந்த ஏரியாதான்.. ஆனா உங்களைப் பார்த்த மாதிரியே இல்லையே!''

''நான்... ஆட்டோ ஸ்டாண்ட்-ல அதிகமா இருக்க மாட்டேன். ஸ்கூல் சவாரிதான் நிறைய.''

''ஹோ... எந்த ஸ்கூல் பசங்களை ட்ராப் பண்றீங்க?''

''அமுதம் மெட்ரிகுலேஷன்!''

''ஆஹா... என்னோட அண்ணா பசங்க ரெண்டு பேரும், அங்க தான் எல்.கே.ஜி. படிக்கிறாங்க!''

இப்போது ஷோபனாவிடம் இருந்து வந்தது வெறும் சிரிப்பு மட்டுமே!

'அழுத்தத்திலும் அழுத்தம்!' என்று எண்ணிய பிரபாகர், வேறு பேச்சைத் துவங்கும் முன்னர், ஒலிபரப்பான பாட்டு முடிந்து விட்டிருந்தது.

''ஷோபனாகிட்ட உங்க சார்பா... சில கேள்விகள்!

''ஷோபனா, ஆட்டோ ஓட்டணும்ங்கிற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?''

''எல்லாருக்கும் வணக்கம்! இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்த 'இசைச்சாரல்' நிலையத்திற்கு என் நன்றிகள்!'' என்று தொடங்கிய ஷோபனா,

''எங்கப்பா ஒரு ஆட்டோ ஓட்டுனர். கிட்டத்தட்ட முப்பது வருஷமா ஆட்டோ ஓட்டிட்டு இருந்தார்.

''எல்லாக் குழந்தைகளுக்குமே அப்பா ஒரு ஹீரோ இல்லையா?! அதுவும், பெண் குழந்தை... கடைக் குட்டி... இந்தத் தகுதிகள் எல்லாம், அப்பாவுக்கும் எனக்கும் ஓர் அழகான பந்தத்தை ஏற்படுத்திச்சு! அதே பந்தம்... அதே நெருக்கம்... அவர் ஓட்டின ஆட்டோ மீதும் தொடருது!'' என்றாள்.

அவளது பதில் முடிந்து விட்டது என்ற நினைப்பில், பிரபாகர் பேசத் துவங்க, அவனைக் கையமர்த்திவிட்டு, மேலும் பேசினாள் அவள்.

''அப்பா இருக்கும் வரை, ஆட்டோ மீது எனக்கிருந்த காதல், அவர் இறந்த பின்னாடி கடமையா மாறிப் போச்சு!'' என்றாள் சுருக்கமாக.

சிறிய வரி தான்... ஆனால் அதில் எத்தனை கடினமான உண்மை... அதனுள் எத்தனை துயரம்... பிரபாகரின் மனம் அவளது துயரத்தை எண்ணி, ஒரு நிமிடம் மயங்கி மீண்டது!

அவளது வேதனையைப் போக்கும் வேகம் தோன்றி விட, ''உங்களுக்கு ஏற்பட்ட இழப்பையும் மீறி, வாழ்க்கையை ஜெயித்துக் காட்டணும்ன்னு நினைச்ச உங்க தைரியத்திற்கு ஒரு சல்யூட் வைக்கிற மாதிரி இப்போ ஒரு பாட்டு கேட்டுட்டு வரலாம்!'' என்றான், கைகளால் சல்யூட் வைத்தவாறே.



# 8

பாடல் ஓடிக் கொண்டிருந்த இடைவெளியில், ''உங்களோட இழப்பின் அளவு எனக்கும் புரியும். நானும் தாயை இழந்து வளர்ந்தவன்தான். ஆனா, என்னோட இழப்பை ஈடுகட்ட, எனக்கு அண்ணி இருந்தாங்க. ஆனா... நீங்க? ரொம்பக் கஷ்டப்பட்டீங்களே!?'' என்றான் வருத்தத்துடன்.

''ஹ்ம்ம். கஷ்டம்ன்னு இல்லை... ஆனா, படிப்பை பாதியிலேயே நிறுத்தினது கொஞ்சம் வருத்தமா இருந்தது. அவ்வளவு தான்!'' என்றாள் அவள். 'வருத்தம்' என்று வாய் சொல்லிய போதும், முகம் உணர்ச்சிகளற்று பாறையாய் இறுகி இருந்தது.

பிரபாகரின் மனம் ஏனோ அநியாயத்திற்கும் வருந்தியது. ''படிச்சிட்டு இருந்தீங்களா?'' என்றபோது, குரலிலிருந்த பச்சாதாபத்தை மறைக்க அவன் பெரும்பாடு பட வேண்டியிருந்தது.

''ஆட்டோமொபைல் எஞ்சினியரிங் ஃபஸ்ட் இயர்!'' என்றவள், அவனது அதிர்ந்த முகத்தை அலட்சியம் செய்து,

''பாட்டு முடியப் போகுது!'' என்றாள், எச்சரிக்கும் குரலில்.

தட்டாமாலை சுற்றிய தலையை நேர் செய்துகொண்டு, ''பெண் இனத்தின் ஓர் உயரிய அடையாளமாய்... இங்கே வீற்றிருக்கும் நம்ம ஷோபனாகிட்ட... அவங்களோட அனுபவங்களைக் கேட்கலாம்...''

''ஹ்ம்ம் சொல்லுங்க, ஷோபனா! ஆட்டோ ஓட்டுறதில... என்னென்ன சந்தோஷங்கள்... என்னென்ன கஷ்டங்கள்...'' என்றான் சகஜமாக.

"த்ரீ வீலர் ஓட்டுற பெண்களுக்கு, டூ வீலர் ஓட்டுற பெண்களை விடவும் தன்னம்பிக்கை ஜாஸ்தியா இருக்கும்ன்னு ஒரு பத்திரிகையில படிச்சிருக்கேன். நிறைய பெண்கள் ஓட்டுற இரு சக்கர வாகனத்திற்கே அப்படின்னா... பெண்கள் அரிதா இருக்கிற இந்தத் தொழில்ல, எப்படி இருக்கும்ன்னு நீங்களே யோசிங்க! ஆட்டோ ஓட்டும் போது, இந்த உலகத்துக்கே ராணி மாதிரி இருக்கும்! எதையும் சாதிக்கலாம்ங்கிற நம்பிக்கை வரும்! அதுவே பெரிய பலமில்லையா!" என்றாள் ஷோபனா. வந்தது தொட்டு, இப்போது தான் ஷோபனாவின் குரலில் உணர்ச்சி என்ற ஒன்றையே கண்டான் பிரபாகர். உணர்ச்சி என்று சொல்வதை விட... அவள் குரலில் இருந்தது வெறி!!

"ஹ்ம்ம். நீங்க பேசறதைக் கேட்கும்போதே... நாமளும் ஏதாவது செய்யணும் போல இருக்கு!" என்றவன்,

"கஷ்டங்களையும் சொல்லிடுங்க. அதுக்கு அப்புறம் யோசிப்போம்!" என்றான் சிரிப்புடன்.

"கஷ்டம்... அதோட பட்டியல் ரொம்ப நீளம்ங்க..."

"முதல்ல, என்னை ஒரு ஆட்டோ ஓட்டியாவே யாரும் ஏத்துக்கலை. அப்பா, ஸ்கூல் சவாரி செஞ்ச இடத்தில எல்லாம், "ஒரு பொண்ணை நம்பி... நம்ம பிள்ளைகளை எப்படி ஸ்கூலுக்கு அனுப்புறது"ன்னு ரொம்பத் தயங்கினாங்க."

"ஹோ! எப்படி அந்தத் தயக்கத்தைப் போக்குனீங்க?" - பிரபாகர் நடுவே புக,

"முதல் ஒரு வாரத்துக்கு, என்னோட ஆட்டோ-ல பிள்ளைகளை அனுப்பி வைங்க. உங்களுக்குத் திருப்தியா



இருந்துச்சன்னா... தொடர்ந்து அனுப்புங்கன்னு... காலில் விழாத குறையா கெஞ்சினேன்."

"சூப்பர் ஐடியாங்க! நல்லபடியா வொர்க் அவுட் ஆச்சா?"

"ஹ்ம்ம். ஓரளவுக்கு!" என்றவள், சிறு இடைவேளையின் பின்னர்,

"என்னை நம்பி, அவங்க குழந்தைகளை என் ஆட்டோ-ல அனுப்பி வச்ச பெற்றோர் எல்லாருக்கும் என்னோட நன்றி! என்னை நம்பாம இருந்தவங்களுக்கு ஒரு சின்ன வேண்டுகோள் - என் மேல நம்பிக்கை வைங்க. உங்க குழந்தைகளோட உயிருக்கோ, உடைமைக்கோ எந்த பாதிப்புமில்லாம, அவங்களை நல்லபடியா ஸ்கூலுக்குக் கூட்டிப் போயிட்டு வருவேன்" - பெற்றோர்களுக்கு கோரிக்கை வைத்தாள்.

"தன் வருத்தத்தைப் பகிர்ந்தது போலவும் ஆகிற்று, புதிதாய் சவாரிக்கு சிபாரிசு பிடித்தது போலவும் ஆகிற்று! கெட்டிக்காரி தான்!" என்று மெச்சிக் கொண்ட பிரபாகர்,

"பெண் என்பதால், இந்தத் துறையில் ஏதும் சிரமங்கள் இருக்குதா?"

"கண்டிப்பா! எந்தத் துறையில தான், பெண்கள் வேகமா முன்னேற விட்டிருக்காங்க?" என்று எதிர் கேள்வி கேட்டவள்,

"நல்லா படிச்ச, லேப்டாப்பும் கையுமா இருக்க பெண்களுக்கே பிரச்சனைகள் குவிஞ்சு கிடக்கும்போது... புதுசா ஒரு துறையில காலூன்றி இருக்கும் என்னைப் போல உள்ளவங்களோட கஷ்டம் ரொம்ப அதிகம்!

"முதல்ல, என்னை ஆட்டோ ஸ்டாண்ட்லேயே உறுப்பினரா சேர்த்துக்க மாட்டேன்னு சொன்னாங்க! அப்புறம், அப்பாவோட நண்பர்கள் சில பேரு தான்... எனக்காக போராடி, ஒரு இடத்தை வாங்கிக் கொடுத்தாங்க.

''அப்புறம், சில பேரு... ஒரு பொண்ணு ஆட்டோ ஓட்டுறதை... வெள்ளைக் காக்கா பறக்கிற மாதிரி பார்ப்பாங்க...

''ஒரு சிலர் ஏளனம் செய்வாங்க...

''இன்னும் கொஞ்சப் பேர்... அசிங்கமா பேசுவாங்க...''

''ஹ்ம்ம்'' - அமைதியாய் பிரபாகர் உள்வாங்க,

''இதெல்லாத்தையும்... அலட்சியப்படுத்தக் கத்துக்கிட்டாலே போதும். வாழ்க்கையில முன்னேறிடலாம்'' என்றாள் ஷோபனா, தெளிவாக.

''நூறு சதவிகிதம் கரெக்ட்! வாழ்வின் அழகுகள் நாம் பார்க்கும் பார்வையில் தானே இருக்கிறது!'' என்று ஒத்துக் கொண்ட, பிரபாகர்,

''இவங்களோட பேசிட்டு இருக்கிறது, உங்களுக்குள்ள ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்குது இல்லையா? நம்ம நாட்டின் ஒவ்வொரு பெண்ணும்... இவங்களைப் போல தெளிவும் தன்னம்பிக்கையுமா இருந்தா, தினம் தினம்... பேப்பரில் படிக்கும் பெண்ணியக் கொடுமைகளுக்கு இடமே இல்லாமல் போய்விடுமே!''

''அதுக்காக... இவங்களை மாதிரி... எல்லாரும் ஆட்டோவைக் கையில எடுத்துக்கணும்ன்னு சொல்லலை... நீங்க இல்லத்தரசியா இருந்தாக்கூட, தெளிவும் நம்பிக்கையும் இருக்கும் பட்சத்தில், குடும்ப வன்முறைகளை அறவே தடுக்கலாமே!''

''யோசிங்க பெண்ணரசிகளே!''

''உங்க யோசனைக்கு உரம் சேர்க்க, இதோ ஒரு பாடல்'' என்றவன், ''உன்னால் முடியும் தம்பி'' என்ற பாட்டைத் தட்டிவிட்டு, ஷோபனாவிடம் திரும்பினான்.



''தப்பா எடுத்துக்கலைன்னா, ஒரு பர்சனல் கேள்வி கேட்கலாமா?'' என்றான், மென்குரலில்.

சிறிது யோசித்தவள், ''ஹ்ம்ம். கேளுங்க'' என்றதும்,

''உங்களுக்கு... நாலு தங்கச்சி... மூணு தம்பி... இதில ஒருத்தர் கண்ணு தெரியாதவங்க... இப்படி ஏதாவது பிரச்சனையாங்க? இல்லை... படிச்சிட்டு இருந்த படிப்பை விடுறதுன்னா...'' - மெல்ல இழுத்தான் அவன்.

அவன் கேட்ட பாவனையில் லேசாய் சிரித்தவளின் சிரிப்பை அவன் ரசித்து முடிக்கும் முன்னரே,

''எனக்கு ஒரே ஒரு அக்கா தான்!'' என்றாள் ஷோபனா.

''ஹப்பா... விஷயத்தை வாங்க முடியலையே!?'' என்று அயர்ந்த பிரபாகர்,

''அக்காவா? அப்போ... அவங்க தானே ஆட்டோ ஓட்டியிருக்கணும்... நீங்க ஏன்? ஹய்யோ... என் மண்டையே வெடிச்சிடும் போல இருக்கு... உங்களைப் பார்த்தா, பெரிய படிப்ஸ் மாதிரி இருக்கு... கண்டிப்பா ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்கும்... அப்படியே இல்லைனாலும் லோன் கிடைக்கும்... இல்லைன்னா கவர்ன்மெண்ட் ஏயிட் கிடைக்கும்... அதையெல்லாம் விட்டுட்டு... ஏன்ங்க?'' அநியாயத்திற்குக் குழம்பினான்.

''ஹ்ம்ம். கல்யாணம் பண்றதுக்கெல்லாம்... ஸ்காலர்ஷிப், லோன், கவர்ன்மெண்ட் ஏயிட் எல்லாம் கொடுப்பாங்களா என்ன?'' - கண்ணை விரித்து, புருவத்தை உயர்த்தி அவள் கேள்வி கேட்க,

''என்னது பத்தொன்பது வயசிலேயே கல்யாணமா? பெண்ணிற்குத் திருமண வயது 21''ன்னு ஆட்டோல எழுதி ஒட்டலையா? இல்லை, ஊருக்கு மட்டும்தான்

உபதேசமா?'' பிரபாகரின் வார்த்தைகளுக்கு ஈடாய் மனமும் வேகமாய் தடதடத்தது.

''வெயிட்... வெயிட்... விட்டா நீங்க பாட்டுக்கு பேசிட்டே போறீங்களே? நான் சொன்ன கல்யாணம், எங்க அக்காவோட கல்யாணம்'' என்ற ஷோபனாவின் முகத்தில், கோபம் தெரிந்த போதும், மனதினுள் குடி கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் சட்டென கரை கடந்தது போல், பிரபாகரின் மனம் துள்ளியது என்னவோ நிஜம்!

''சூப்பர்ங்க! உங்ககிட்ட பேசப்பேச... நானெல்லாம் வாழ்க்கையில எதுவுமே சாதிக்காத ஃபீல் வருதுங்க'' என்ற பிரபாகர், நிகழ்ச்சிக்குத் திரும்பினான்.

''ஷோபனாவோட பேசிட்டு இருக்க இந்த நேரத்தில, எனக்கு பாரதியாரோட கவிதை தான் ஞாபகம் வருது!

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?

தகுந்த ஏற்ற இறக்கங்களுடன் கவிதையை அவன் பாட, ஷோபனாவும் ரசித்திருந்தாள்!

''இவங்களுக்காகவே எழுதினது போல் இருக்கில்லையா!?'' என்றவன்,

''ஓகே, அவங்களோட அன்றாட நிகழ்வுகளுக்கு வருவோம்! அதிலும் கூட, நமக்கு ஏகப்பட்ட ஆச்சரி



யங்கள் இருக்கக் கூடும்! யாரறிவார்?'' என்று விட்டு, ஷோபனாவிடம் திரும்பினான்.

''உங்களோட ஒரு நாள்... எப்படி கழியும் ஷோபனா?'' என்றான், நிகழ்ச்சியின் அடுத்தக் கேள்வியாய்.

''காலையில நாலு மணிக்கு எழுந்தா... நாலரைக்கு எல்லாம் ரயில்வே ஸ்டேஷன்-ல சவாரிக்கு இருப்பேன். அது ஒரு மூணு.. மூணரை மணி நேரம் போகும்.

''அப்புறம், வீட்டுக்கு வந்து சாப்பிட்டு... ஸ்கூல் ட்ராப்-க்குப் போவேன். ஒன்றரை மணி நேரத்துக்குள்ள, நாலு ரவுண்டு முடிச்சிட்டு, ஆட்டோ ஸ்டாண்ட் போய்டுவேன்.

''அதுக்கு அப்புறம், சவாரி வந்தா உண்டு. மதியத்தில் இருந்து ஸ்கூல் ட்ராப் ஆரம்பிச்சிடும்... அப்படியே நாள் ஓடிடும்.

''எட்டரைக்கு சவாரியை முடிச்சிடுவேன். அதுக்கு மேல இருந்தா... அம்மா ரொம்பப் பயப்படுவாங்க!'' என்று நீளமாய் அவள் விளக்கியபோது, பிரபாகரின் நெஞ்சம் அதை முறையாய் குறிப்பெடுத்தது.

பின்னர், பாட்டுக்கான முறை வரவே, இந்த முறை பிரபாகரை ஷோபனாவுடன் பேச விடாமல், தேநீருக்கான இடைவேளை வர, பிரபாகருக்கு எரிச்சல் மிகுந்தது. அவன் மனம் அறிந்ததே!

நேரலை தொடங்கியதும், ''ஓகே! ரொம்ப சீரியஸ் கேள்விகளா போச்சு... கொஞ்சம் ஜாலியா பேசலாம்...''

''ஷோபனா... சொல்லுங்க உங்களுக்குப் பிடிச்ச ஹீரோ யாரு?''

''ரஜினி! அவரோட ஸ்டைல் யாருக்கு வரும்?''

''சூப்பர் ஸ்டார்... சூப்பர் ஸ்டார்தான்!'' சமீபத்தில பார்த்த படம்?''

''ஹ்ம்ம்... ஹ்ம்ம்... படம் அவ்வளவா நல்லா இல்லையா? அதனால, எனக்குப் படம் பேரு ஞாபகமில்லையே!''

''அடக்கடவுளே! இனிமேல் அந்தப் படத்தோட பேரை ஞாபகத்துக்குக் கொண்டு வந்து... அதை இங்க சொல்லிடாதீங்க... என்னை அடிச்சே கொன்னுடுவாங்க...''

பிரபாகரின் குரல் பாவனையில் லேசாய்ச் சிரித்தாள் ஷோபனா.

''சரி... ரேடியோ கேட்பீங்களா?'', ''ப்ளீஸ்... ப்ளீஸ்... பிரபா ஒரு நல்ல ஆர்.ஜே.... மொக்கை போடாம, அழகா பேசுவாரு... அவரு நிகழ்ச்சியைத்தான் நான் விரும்பிக் கேட்பேன்னு... நம்ம பெருமையைக் கொஞ்சம் எடுத்து விடுங்க....'' அவன் கெஞ்ச,

பலமாய் சிரித்த ஷோபனா, ''நான் காலை நேரத்தில ரேடியோ கேட்கிறதில்லை. நைட் தான்... ஒன்பதரை மணிக்கு. 'தேனிசை'ன்னு ஒரு நிகழ்ச்சி வருமே, சிவான்னு ஒருத்தர் தொகுத்து வழங்குவார். பாடல்களும் சரி... அவர் பேசுறதும் சரி, கேட்க இனிமையா இருக்கும்'' என்று முடிக்க, பிரபாகரின் மனதில் அந்த ''சிவா''வின் மீது கட்டுக்கடங்காத பொறாமை தணல்!

முசுமுசுவென எழுந்த கோபத்தை உள்ளுக்குள் அடைத்துக் கொண்டு, ''சரி விடுங்க... ஒரேடியா கவுத்துட்டீங்க! நீங்க ஆட்டோ ஓட்டும்போது... நடந்த ஒரு சுவாரஸ்யமான விஷயம் சொல்லுங்க...''

''ஒரு தடவை... கணபதி கிட்ட ஒரு அம்மா ஆட்டோ-ல ஏறினாங்க. எங்க போகணும்ன்னு கேட்டா... அந்த



ஹீரோ ஹோண்டா பாஷனை ஃபாலோ பண்ணுங்க. அப்படின்னு சொன்னாங்க. நான் கொஞ்சம் பயந்துட்டேன். என்ன விஷயம்ன்னு விசாரிச்சா... அவங்க பின்னாடி ஏறாததைக் கவனிக்காம அவங்க வீட்டுக்காரர் வண்டியை எடுத்திட்டுப் போயிட்டாராம். எனக்கு செம சிரிப்பு... வேகமா விரட்டி அடுத்த சிக்னல்ல பிடிச்சேன். அந்தம்மா ''என்னங்க''ன்னு கத்த, ''என்னம்மா... நீ பின்னாடி தானே உட்கார்ந்திருந்தே... ஆட்டோ-ல வந்து இறங்குற?'' என்று அவங்க ஹஸ்பண்ட் கொடுத்த லுக் இருக்கே! என்னால... இன்னும் மறக்கவே முடியலை! அதுக்கு அப்புறம் அவங்க போட்ட சண்டையையும் தான்!'' - ஷோபனாவும் பிரபாகரும் இணைந்து சிரித்ததில், நேரலையில் சிரிப்பலை நிறைந்தது!

அடுத்த இடைவேளைக்குப் பின்னர், ''ஹலோ நேயர்களே! ஷோபனாவுடன் பேசிட்டு இருந்ததில், நம்மளோட காலை பொன்னிற வேளையா மாறிப்போன சந்தோஷத்துடன்... அவங்களுக்கு விடை கொடுப்போம்!''

''ஷோபனா, நேயர்களுக்கு நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க? கோவையின் முதல் பெண் ஆட்டோ ஓட்டுனர் என்ற உணர்வு எப்படியிருக்கு?'' என்று ஷோபனாவிடம் பந்தைத் தள்ளி விட்டான், பிரபா.

''நல்லா இருக்கு! ஆனா, இந்தப் பட்டம்... பூரிப்பு... கௌரவம் எல்லாம் எனக்கு வேண்டாம்! சமூகத்தில ஒரு தனிமனித மரியாதை மட்டுமே போதும்!''

''ஆண்களுக்கு என்னோட வேண்டுகோள்... பெண்ணின் சுதந்திரம் அவளுக்கு நீங்கள் கொடுக்கும் சுதந்திரத்தில் இல்லை. அவளுக்கு நீங்கள் கொடுக்கும் பாதுகாப்பிலும், அவள் மேல் நீங்கள் வைக்கும் நம்பிக்கை

யிலும் தான் இருக்கிறது!'' - பலமாய் கை தட்ட வேண்டும் போலிருந்தது பிரபாவுக்கு.

''பெண்களுக்கு என்னோட வேண்டுகோள்... ஆண்கள் உங்கள் மேல் வைக்கும் நம்பிக்கையை தப்பான வகையில் பயன்படுத்தாதீங்க. அந்த நம்பிக்கை... உங்க தைரியத்திற்கான உரம்!

''என்னோட வாழ்க்கை உங்களுக்குள்ள ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்தா... அந்தப் புத்துணர்ச்சி உங்க சாதனைகளுக்கு அடிக்கல்லா அமைஞ்சா... அதுவே எனக்குப் போதும்! நன்றி, வணக்கம்!'' என்று முடித்தவள், பிரபாகர் நிகழ்ச்சியை முடித்துவிட்டு வந்ததும், வேலை இருக்கிறது என்று விரைந்து விட்டாள்.

கீழிறங்கிச் சென்று, ஆட்டோவை கிளப்பி, கூந்தல் பறக்க விரைந்து கொண்டிருந்தவளை... மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பிரபா, நேரே வானொலி மேலாளரின் அறைக்குச் சென்றான்.

எதற்கா? இரவில் நடக்கும் 'தேனிசை' நிகழ்ச்சியின் தொகுப்பாளராக தன்னை மாற்றும்படி கேட்பதற்கு!

## 9

அடுத்த நாள் காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, அறையை உருட்டிக் கொண்டிருந்த பிரபாகரை விநோதமாய் பார்த்த கௌசல்யா,

''இவ்வளவு காலையில... எங்கடா கிளம்பிட்டே?'' எனவும்,

''ஒரு முக்கியமான பிரண்டை பார்க்கப் போறேன். கௌ! பை... பை!'' வேகமாய் பதில் சொல்லிவிட்டு



அதை விடவும் வேகமாய் வீட்டை விட்டுக் கிளம்பினான், பிரபாகர். பின்னே, இன்னும் ஒரு சில நிமிடம் நின்றிருந்தாலும், கௌசல்யாவின் துருவலுக்கு, தேங்காயாய் சிக்கியிருப்பானே!

நேராய் அவன் சென்ற இடம், ரயில் நிலையம்!

ஆட்டோ ஸ்டாண்ட் கண்ணில் படும் விதமாக நின்று கொண்டவன், ஒரு டீயை வாங்கி உறிஞ்சிக் கொண்டே, ரோட்டை நோட்டம் விட்டான்.

முதல் டீ உள்ளே போய், அடுத்த டீக்கு ஆர்டர் கொடுக்கலாமா என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, ஷோபனா தன் ஆட்டோவை நிறுத்திவிட்டு, வெளியே இறங்கி நின்றாள்.

''ஹப்பாடா! மேடம் வந்துட்டாங்க!'' என்று கூவத் தோன்றிய வாயை அடக்கிக் கொண்டு, ''அவளுக்கு சீக்கிரம் சவாரி கிடைக்கக் கூடாது!'' என்ற வேண்டுதலை முன்னிறுத்திய பிரபாகரின் பார்வை, அன்றலர்ந்த மலராய் நின்றிருந்த ஷோபனாவின் மீதே நிலைத்திருந்தது.

கோவையின் அதிகாலைக் குளிரை சமாளிக்க முடியாமல், கைகள் இரண்டையும் ஒன்றோடு ஒன்று தேய்த்துக் கொண்டு, சூடு படர்ந்த உள்ளங்கைகளை அவள் கன்னத்தில் வைத்துக் கொண்டதை கண்டவனின் கனாக்கள் விரிந்தன.

பனியில் பூத்திருந்த ரோஜாப்பூ கன்னங்களில், சூரியக் கதிர்களின் வெப்பமாய் தன் உள்ளங்கைகள் பதிவது போன்ற கற்பனையில், பிரபாகரின் மூளையில் பல்ப் பலமாய் எரிந்தது!

அடடே! நாம் அவளைக் காதலிக்கத் தொடங்கி விட்டோம் போலவே!

ஒரு வருடமோ, இரண்டு வருடமோ அணியப் போகும் ஜீன்ஸை கூட மூன்று மணி நேரத்திற்கு மேல் தேர்வு செய்யும் தான், அவளைப் பார்த்த மூன்றாவது நிமிடமே மனதை பறி கொடுத்துவிட்டோம் என்பதை உணர்ந்தான், அவன்.

பின்னந்தலையில் ஒரு தட்டு தட்டி, ''கிறுக்கு லூசு! காலங்கார்த்தால மூணு மணிக்கே எழுந்திருச்சு, இரண்டு தடவை சோப்பு போட்டு, மூணு தடவை டிரஸ் மாத்தி, பத்து தடவைக்கும் மேலாக தலை வாரின போதே, இந்த ஞானோதயம் வரலையாக்கும்! செம லேட் பிக்கப்டா... பிரபா!'' என்று தன்னுள்ளே பேசிக் கொண்டவனுக்கு இன்னொன்றும் தோன்றியது.

''முதல்ல, உனக்குத் தானே அந்த தேனிசை நிகழ்ச்சியைக் கொடுத்தாங்க. நீ தானே... நைட் தூக்கம் கெட்டுடும்னு மாத்தினே!? இப்போ... நீயே போய், திரும்ப கேட்டிருக்கியே! அப்பவே உனக்கு பல்ப் எரியலையாக்கும்!'' என்று அவன் கையே, அவனது குமட்டில் குத்துவது போன்ற கற்பனை வேறு தோன்றவே,

''லேட்டா பிக்கப் ஆனாலும், ட்ராப் ஆகாம, ஸ்டடியா வண்டியை ஒட்டிட்டுப் போற வழியைப் பார்ப்போம்!'' என்று முடிவு செய்த பிரபாவின் மனம், வானில் சிறகின்றி பறந்தது!

**வாழ்வின் துணை விண்ணளவிற்கு உயர்ந்து நின்றதிலா...**

**காற்றின் வேகத்தில் காதலியை கண்டுகொண்டதிலா...**

**நீரின் தூய்மையுடன் நிர்மலமாய் இருந்த காதலியாலா...**



**மின்னலின் ஒளிக்கு ஈடான அவளது கண்களின் தாக்கத்தினாலா...**

**நட்சத்திரங்களுடன் போட்டியிட்ட அவளது நட்சத்திர அந்தஸ்தினா...**

இடிக்கு இணையாய் அவனது நெஞ்சம் வேகமாய் தடதடத்தது, காதல் மத்தளம் கொட்டியது.

உணர்ந்த காதலை அவளிடம் உடனே சொல்லி விடலாமா இல்லை கொஞ்ச நாள் அவளைத் தூர இருந்து ரசித்துவிட்டு பின்னர் சொல்லலாமா என்ற அவன் இங்கி பிங்கி பாங்கி போட்டுக் கொண்டிருக்க, அங்கே ஷோபனாவின் ஆட்டோவை பேரம் பேசிக் கொண்டிருந்தனர் ஒரு தம்பதியர்.

''ஹே பேபி! நோ... நோ... போய்டாதே!'' - மனதிற்குள் சொல்வதிற்கு பதிலாக, வாய் விட்டுச் சொல்லி விட்டான் போலும், டீக்கடையில் நின்றிருந்த அனைவரும் அவனை ஒரு மாதிரி பார்த்தனர்.

''இனிமேல் இங்கிருந்தால், மூன்றாம் பிறை கமல் ஹாசன் என்று முத்திரை குத்திடுவானுங்க!'' என முணு முணுத்தவாறே, காசைக் கொடுத்துவிட்டு மெல்ல நகர்ந்தான்.

அவன் காசு கொடுக்கத் திரும்பிய ஒரு நிமிடத்தில், ஷோபனாவின் ஆட்டோ காணாமல் போயிருக்க, முகம் தெரியாத அந்தத் தம்பதியர் அவன் வாயில் நன்றாக அரைபட்டனர்!

நாலு மணிக்குக் கிளம்பிச் சென்றவன், ஐந்து மணிக்கே வீட்டிற்கு வந்தது மட்டுமில்லாமல், முப்பது குலாப் ஜாமூன்களை ஒன்றாய் தின்றவன் போல், இனித்துக் கொண்டே இருந்தவனை கூர்ந்து பார்த்தாள், கௌசல்யா.

அவளைச் சற்றும் சட்டை செய்யாமல், வீட்டுத் தோட்டத்தில் பூ பறித்தவன், பூஜையறையில் அமர்ந்து,

நெருக்குருங்க பூஜை செய்யத் துவங்கவும், சந்தேகம் பலப்பட்டது!

ஐந்தரை மணிக்கு எழுந்து வந்த வெங்கடாசலம் ஆகட்டும், ஆறு மணிக்கு துயில் கலைந்த சுதாகர் ஆகட்டும், ''என்னாச்சு கௌசி! நேத்து... ஏதாவது மருதி-ல போய் மந்திரிச்சி விட்டியா என்ன? ஓவர் பக்தியா இருக்கு!?'' என்றனர், சொல்லி வைத்தார் போல.

''எனக்கும் தெரியலை! ஒரே மூடு மந்திரமா இருக்கு!'' என்று கையை விரித்த கௌசல்யாவின் கைகள் சமையல் வேலையைப் பார்த்தபோதும், கண்கள் பிரபாகரிடம் இருந்தது.

பூஜை முடிந்து, தீபத்தட்டுடன் வெளியே வந்தவன், நேராக சமையலறைக்குப் போய், கௌசியிடம் அதை நீட்டினான்.

''குளிச்சிட்டியா இல்லையா? குளிக்காத அழுக்குப் பண்டாரத்துக்கு எல்லாம் சாமி... பிரசாதம் கிடையாது!'' என்றதோடு நிறுத்திக் கொள்ளாமல்,

''இதென்ன குளிக்காம சமையல் கட்டுக்குள்ள வரது? மாமியார் இல்லைங்கிற திமிரு!'' என மேலும் பேச,

''மாமியார் இல்லாட்டி என்ன, அதான் மாமியார் ரோல் ப்ளே பண்ண நீ இருக்கியே!'' என்று குதர்க்கமாய் பேசிவிட்டு, பிரசாதத்தை எடுத்துக் கொண்டவள்,

''மருமகளை நாலு மணிக்கு எழுப்பி விடத்தான், மூணு மணிக்கே எழுந்துக்கிட்டியோ!?'' என்றாள் கேள்வி போல.

'தேவையில்லாம வாயை விட்டு, அதில நீயே எலியா மாட்டிக்கிட்டியேடா!' என்று தன்னைத் தானே நொந்து கொண்டவன்,



''சும்மா... மசமசன்னு நிக்காதே, கௌ! ஸ்ட்ராங்கா ஒரு ஃபில்ட்டர் காபி போடு! எனக்கு நிறைய வேலையிருக்கு!'' என்று அங்கிருந்து நகர்ந்து ஓடினான்.

டீயும் காபியும் உடனிணைந்து செய்யப்போகும் கெமிக்கல் ரியாக்ஷனை எண்ணிப் பயப்படாமல், காபியை வாங்கிக் கொண்டு, பால்கனியில் போய் அமர்ந்து கொண்டான்.

- தெருவில் ஒரு ஆட்டோ போனால் போதும், மண்டையை வெளியே நீட்டி, அவன் பார்த்த வேடிக்கையில், வண்டியில் இருந்தவர்களே அவனை விநோதமாய் பார்த்தனர்.

அதையெல்லாம் மதிக்கும் நிலையிலா இருந்தான் பிரபாகர்!?

புத்தம் புதிதாய் முளைத்திருந்த காதல் செய்திருந்த கோலம் அல்லவோ! அவனுக்கு, அழகாய்தான் இருந்தது!

ரோட்டில் போபவர்களை எரிச்சல் மூட்டியது பத்தாது என்று, நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்த நகுல் - பாத் இருவரையும் எழுப்பிவிட்டு, கௌசல்யாவின் கோபத்திற்கு ஆளானான்.

''டேய்! ஏன்டா... படுத்தி வைக்கிறே? அவங்களுக்கு எட்டரை மணிக்குத் தான்டா ஸ்கூல்! ஏழரைக்கு எழுப்பினாலே போதும்... அவங்களைப் போய் ஆறரைக்கே எழுப்பிவிட்டு, என்னை ஒரு வேலையும் செய்ய விட மாட்டாங்க, பிரபா!'' என்று கௌசல்யா அழுக,

'பசங்க ஸ்கூல் கிளம்புற நேரத்துக்குத் தானே நம்ம ஆளு வருவா! அதான்... அவங்களை சீக்கிரமே எழுப்பி விட்டேன்!' என்று கேனைத் தனமாய் யோசித்தது, பிரபாவின் மனம்.

இவர்கள் சீக்கிரம் கிளம்புவதால், ஷோபனா சீக்கிரம் வந்து விடுவாளா என்ன? காதல் கிறுக்கன்!

அதுவும், இவர்கள் இருவரும் ஷோபனாவின் ஆட்டோவில் செல்பவர்கள் என்றாலாவது ஒரு நியாயம் இருக்கிறது! அதுவுமில்லை!

அப்படியே சென்றாலும், அதை அவனால் பார்க்க முடியுமா! ஏழரை மணிக்கு வானொலி நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு, எட்டு மணிக்கு அவன் இங்கே இருக்க முடியுமா?! அதுவுமில்லை!

இதையெல்லாம் மூளை உணர்ந்தபோதும், மனம் குருட்டாம் போக்கில் வேலை செய்தது!

அண்ணன் மகன்களைக் குளிக்க வைத்து, டிரஸ் மாட்டி, ஏழு மணிக்கே டைனிங் டேபிள் முன்னே அமர்த்தி வைத்திருந்தவனை, முதுகில் நன்றாக சாத்த வேண்டும் போலிருந்தது அவனது அண்ணிக்கு!

"நான்... இன்னும் இட்லியே ஊத்தலைடா... அதுக்குள்ளே பிள்ளைங்களை உட்கார வச்சிருக்கே!" என அவள் பல்லைக் கடிக்க,

"நோ டென்ஷன், கௌ!" என்றவன், பிரட் எடுத்து, அழகாக டோஸ்ட் செய்து, வித விதமான வடிவங்களில் ஜாம் தடவி, பிள்ளைகளை உண்ண வைத்தான்.

"இப்பவே டிபன் சாப்பிட்டா, மதியம் சீக்கிரமே பசி எடுத்திடும்" என்று கவலை கொண்ட போதும், தன்னிடம் ஒரு வாய் உணவு வாங்க மல்லுக்கட்டும் மைந்தர்கள், இன்று எந்தவித பிரச்சனையும் இன்றி உணவை உண்பதில் கௌசல்யா திருப்திப்பட்டாள்.

எல்லாம் இருந்தபோதும், "பிரபா, உனக்கு ரேடியோ ஸ்டேஷனுக்கு நேரம் ஆகலையா?... இன்னும்



வீட்டிலேயே உருட்டிட்டு இருக்கியே!" என்று பிரபாகரை எச்சரிக்கவும் மறக்கவில்லை, அவள்.

"ஹ்ம்ம்... போறேன்... போறேன்..." என்று இழுத்த பிரபாகருக்கு, வீட்டை விட்டு நகரவே மனசில்லை.

அவன் ரேடியோ ஸ்டேஷனில் இருக்கும் நேரத்தில், ஷோபனா இங்கே ஸ்கூல் பிக்கப்புக்கு வருவாளே என்றிருந்தது, பிரபாகருக்கு! தாங்கள் வசிக்கும் ஏரியாவிற்குத் தான் சவாரிக்கு வருவேன் என அவள் சொல்லிய பிறகும், அவளைப் பார்க்கும் ஒரு வாய்ப்பை நழுவ விடுவதா என்று மனம் அடித்துக் கொண்டது!

"ப்ச்... எனக்கு காலையில ரேடியோ ஸ்டேஷன் போகவே பிடிக்கலை, கௌ!"

"என்னது பிடிக்கலையா? இதைத் தான்... நான் முன்னாடியே சொன்னேன்! எனக்கு மூடில்லை... ரேடியோ ஸ்டேஷன் போக மாட்டேன்னு, ஒரு நாள் சண்டித்தனம் பண்ணப் போறேன்னு எனக்கு அப்பவே தெரியும்!" - கௌசல்யா பொரிய,

"ஹே, வெயிட் வெயிட்! நான் ஒரேடியா போக மாட்டேன்னு சொல்லலை. நைட்-ல போறேன் கௌ! ப்ளீஸ் யா! காலையில, பசங்களை ஸ்கூல் கிளப்புறது... உனக்கு சமையலில் ஹெல்ப் பண்றது... நல்ல தண்ணி பிடிக்கிறது... பூ பறிக்கிறது... பூஜை செய்றது... இப்படி நிறைய வேலை செய்து தருவேன்! ப்ராமிஸ் யா! என்னை நம்பு!" என்று கெஞ்சியவனிடம், உடனடியாக ஒத்துக் கொள்ளாமல்,

"சரி... சரி... அதை அப்புறம் பார்ப்போம்! இன்னைக்குக் கதைக்கு, நீ இப்போ ரேடியோ ஸ்டேஷன் கிளம்பு!" என்று ஒரே பிடியாய் அவனைத் தள்ளி விட்டாள், கௌசல்யா.

பைக்கை வீட்டை விட்டு எடுக்க ஒரு இரண்டு நிமிஷம், அதைத் துடைக்க ஒரு இரண்டு நிமிஷம், அதை உதைக்க மேலும் இரண்டு நிமிஷம், தெருவைக் கடக்க இரண்டு நிமிஷம் என பிரபாவும் தன்னால் முடிந்த மட்டும், தாமதம் செய்துதான் பார்த்தான்! ம்ஹூம்! ஷோபனா வரவில்லையே!

கடைசியில், "என்னடா?! பைக்-ல எதாவது பிரச்சனையா? நான் வேணும்னா ட்ராப் பண்ணட்டுமா?" என்று சுதாகரின் குரல் கேட்கவும்தான், பிரபாவின் வண்டி வேகமெடுத்தது!

அன்றைய தினம் முழுவதும் கூட, அவனால் ஷோபனாவைப் பார்க்க முடியவில்லை!

'இவ்வளவு விவரம் கேட்டவன், அவ வீடு எங்கிருக்குன்னு கேட்டிருக்கலாம் இல்ல...' என்றெண்ணி, உடனேயே 'அதை மட்டும் கேட்டிருந்தா, சப்பல் ட்டியர் ஆகியிருக்கும்!' என்று பயந்து கொண்டான்.

இருக்கிற விவரத்தை வச்சே, அவளை வளைக்க வேண்டும் என்ற முடிவுடன், அன்றைய இரவு உணவு முடிந்ததும், உணவு மேசையில் அமர்ந்திருந்தான், பிரபாகர்.

முன்னொரு நாள் இப்படி அமர்ந்திருந்தவனை நினைவில் கூர்ந்து, கௌசல்யாவும் என்னவென்று வினவ,

"கௌ! எனக்கு ஒரு ப்ரில்லியன்ட் ஐடியா தோணியிருக்கு!"

"நீ முதல்ல ஐடியாவை சொல்லு... அது ப்ரில்லியன்ட்டா இல்லையான்னு நான் சொல்றேன்!"

"ஆனாலும் ஓவர் நக்கல் கௌ, உனக்கு!" என்று சலித்துக் கொண்டு, "பெண்கள் தினத்தில நான் ஒரு



பெண்ணை பேட்டி எடுத்தேன் இல்லையா?" என்று விஷயத்தைத் தொடங்கினான்.

"ஹ்ம்ம். அதுக்கென்ன?" என்றபோது, கௌசல்யாவின் குரல் உள்ளே போயிருந்தது.

"அந்தப் பொண்ணு, நம்ம வாண்டுஸ் படிக்கிற ஸ்கூல்-ல தான் பிக்கப் - ட்ராப் பண்ணுறா. அவ... ஆட்டோ-லேயே நம்ம பரத்-நகுல் ரெண்டு பேரையும் அனுப்பலாமா?" என்றது தான் தாமதம்.

"அறிவில்லையாடா உனக்கு! இந்த ஆட்டோ கருமாந்திரத்தில தான் ரெண்டு உயிரைப் பறி கொடுத்திட்டு, நாம தவிச்சிட்டு இருக்கோம். திரும்பவும் ஆட்டோ-ல... அதுவும் சின்னப் பசங்க ரெண்டு பேரையும்... உனக்கு மறை கழண்டு போச்சா?" - கௌசல்யா போட்ட சத்தத்தில், வெங்கடாசலமும் சுதாகரும் உள்ளறையிலிருந்து வெளியே வந்து விட்டனர்.

"கௌ! யாரோ ஒரு ஆட்டோக்காரன் பண்ணின தப்புக்காக, ஒரு கஷ்டப்படற பெண்ணை தண்டிக்கிறது தப்பில்லையா?"

"தப்பில்லை!" - அழுத்தமாய் வந்தது கௌசல்யாவின் பதில்.

"அவன் சொல்றதில் என்னமா தப்பிருக்கு? பதினஞ்சு வருஷத்துக்கு மேலாகியும், நீ அதை மறக்காம இருக்கிறது தான்மா தப்பு!" - வெங்கடாசலம் தன் பங்கிற்கு, மருமகளிடம் எடுத்துக் கூற முயன்றார். சரியாகச் சொல்லப் போனால், பதினாறு வருடங்களுக்கு முன்னர், சுதாகர் - பிரபாகர் இருவரின் தாயும், வெங்கடாசலத்தின் ஒன்றுவிட்ட தங்கையான கௌசல்யாவின் தாயும் ஆட்டோவில் செல்லும்போது, பெரும் விபத்திற்கு

உணவகம், அந்த இடத்திலேயே உயிரை விட்டனர். இரு வரும் தொட்டே, ஒன்றாக வளர்ந்த ஒன்று விட்ட சகோதரி நிலம் விதவையாய் நின்றபோது, வெங்கடாசலமும் அவர் மனைவியும் தான் அவரைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்துக் கொண்டனர். வீட்டின் இரு தாய்மார்களும் இறந்த பின்னர், சூனியம் பிடித்துப் போயிருந்த வீட்டில், கௌசல்யாவின் பாசம் தான் விளக்கேற்றி வைத்திருந்தது! அத்துடன், பிரபாகரின் ஓயாத பேச்சும் சேர்ந்து கொள்ள, வாழ்வும் வீடும் மீண்டு வந்தது! இருந்த போதும், பாசம் கொட்டி வளர்த்த தாய்களின் கோர மரணம், கௌசல்யாவின் மனதில் வடுவாய் படிந்து, ஆட்டோ ஓட்டுனர்களின் மீது குறையாத வெறுப்பை உண்டு பண்ணி விட்டிருந்தது!

அதை மாற்றும் எண்ணத்தில் தான், பிரபாகரும் கூடவே அவன் தந்தையும் போராடிக் கொண்டிருக்கின்றனர்!

“என்னப்பா... நீங்களும் அவனோட சேர்ந்துகிட்டு பேசறீங்க? அம்மாவையும், அத்தையையும் இழந்திட்டு நாம தவிச்ச தவிப்பு... மறக்கக் கூடியதா?” - கௌசியின் கண்களில் நீர் சுரந்து விட்டது.

“ஷ். அவளுக்குப் பிடிக்கலைன்னா விடு பிரபா!” என்ற சுதாகர், மனைவியைத் தோளோடு அணைத்துக் கொண்டு, தம்பியை அதட்டினான்.

“ம்ஹூம்! விட முடியாது! சும்மா... அவளுக்குப் பிடிக்காது... பிடிக்காதுன்னுதான் இவ்வளவு வருஷமா ஆத்திர அவசரத்துக்குக் கூட ஆட்டோ-ல போகாம இருந்தோம். இது ஒரு அடிப்படைத் தேவை மாதிரி ஆகிடுச்சு, சுதாகர்!” என்று பிரபாகர் முடிக்க, வெங்கடாசலம் தொடங்கினார்.



“பார்த்திருந்தா... நீ தான் அவனோட இந்தப் பயத்தை நீக்கி இருக்கணும். அதை விட்டுட்டு, அதுக்கான முயற்சி எடுக்கிறவனையும் திட்டிட்டு இருக்கே!” - கோபமாய் வந்து விழுந்தன பெரியவரின் வார்த்தைகள்.

பேசாதிருந்த கணவனின் பிடியிலிருந்து நழுவி, உணவு மேசையில் தலை கவிழ்ந்து அமர்ந்து கொண்ட கௌசியின் தலையை மெல்ல வருடிய பிரபாகர்,

“கௌ! வாழ்க்கையோட நிதர்சனங்களை எதிர்த்து வாழ்றது ரொம்பத் தப்பு.

“அம்மாவும் அத்தையும் அன்னைக்கு இறக்கணும்ங்கிறது விதி. அது ஆட்டோ-ல நடந்தது ஒரு நிகழ்ச்சி. இதுவே, வீட்டில் காஸ் வெடிச்சோ... இல்லை ஹார்ட் அட்டாக்லேயோ போயிருந்தா, காஸ் அடுப்பில சமைக்காம இருந்திருப்பியா என்ன? இல்லை, இதயம் துடிக்கிறதை நிறுத்தி வச்சிருப்பியா? இதெல்லாம் சாத்தியப் படற காரியங்களா என்ன? கொஞ்சம் யோசி, கௌ!

“அந்தப் பொண்ணு, பலவிதமான கஷ்டங்களைத் தாண்டி, தன் குடும்பத்தைக் காப்பாத்தணும்ங்கிற காரணத்துக்காக ஆட்டோ ஓட்டுறா. அவ ஒராளா நின்னு, அவளோட அக்கா கல்யாணத்தை நடத்தியிருக்கான்னா பார்த்துக்கோ! இந்தக் காரணங்களுக்காக, ஆசைப்பட்டு தான் படிச்ச படிப்பைக் கூட பாதியிலேயே நிறுத்திட்டு வந்திருக்கா! அப்படியிருக்க பொண்ணோட முன்னேற்றத்துக்காக, நாம ஒரடி கூட எடுத்து வைக்கலைன்னா... ரொம்பத் தப்பும்மா!”

“அவளுக்கு ஏதாவது செய்யணும்ன்னு தோணுச்சன்னா... அவளோட படிப்புக்கு பண உதவி செய்யலாம், பிரபா! நான் வேண்டாம்ன்னு சொல்லலை!” -

கௌசியின் மனம் இளகியிருக்கிறது என்பதற்கான அடையாளமாய் அமைந்தது அவளது பேச்சு.

"உனக்கு அவளைப் பத்தித் தெரியலை, கௌ! சுய மரியாதையின் ஒட்டுமொத்த ரிமேக்! "நீ என்னடா எனக்குப் பிச்சை போடறதுன்னு" என் சட்டையைப் பிடிச்சுக் கேட்டாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்லை!" - உண்மையையே சொன்னான் பிரபாகர்.

"ஹ்ம்ம்."

"ஒரு பழமொழி கேள்விப்பட்டிருக்கியா - "ஒரு மனிதனுக்கு ஓர் மீனை உண்ணக் கொடுக்கும்போது அவனது ஒரு நாள் பசியைப் போக்குகிறாய். அதுவே அந்த மனிதனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்கையில், அவனது வாழ்நாளின் பசியைப் போக்குகிறாய்!" இங்க மீன்ங்கிறது பணம் கௌ! பணத்தைக் கொடுக்கிறதை விட, அதை ஒரு வேலையா - கடமையா அவளுக்குக் கொடுத்தின்னா, அவளும் முன்னேறுவா, நமக்கும் ஒரு திருப்தி வரும்" - தன் கருத்தை திறம்பட எடுத்துரைத்தான், பிரபா.

"ம்ம், பசங்களைப் பத்திரமா கூட்டிட்டுப் போய்டுவா இல்லையா?" - கௌசியின் நீர் நிரம்பிய கண்களில் லேசாய் தெளிவு புகுந்திருந்த போதும், தாய்ப் பாசம் மேலோங்கியது!

"கண்டிப்பா! நம்ம தெருவிலேயே, நாலு வீட்டில ஆறு பிள்ளைங்களைக் கொண்டு போய் விடுறா. ஒரே ட்ரிப்-ல எல்லோரையும் அடைக்காம, நாலு குழந்தைகளைத்தான் ஒரு தடவைக்குக் கூட்டிப் போவா போல. அதனால பயப்பட வேண்டாம், கௌ!"

"சரி... ஆனா..." என்று இழுத்த கௌசல்யா,



"நீயே அவகிட்டப் பேசிடு!" என்றுவிட்டு அறைக்குள் நுழைந்து கொண்டாள்!

பிரபாவைச் சுற்றி, வெள்ளை டிரஸ் போட்ட தேவதைகள் ஆடுவது போல் அந்த இடமே ரம்மியமாய் இருந்தது! வெள்ளை டிரஸ் போட்ட சைடு ஆர்ட்டிஸ்ட்களின் நடுவே, காக்கி டிரஸ் போட்ட மெயின் ஆர்ட்டிஸ்ட்டை தேடியவாறே, உறங்கச் சென்றான், அவன்!

அவனை வழிமறித்து, "வாழ்க்கையில முதல் முறையா, உன்னோட வாய்த்திறமையால ஒரு நல்ல காரியம் செய்திருக்கே!" என்று வெங்கடாசலம் வஞ்சப்புகழ்ச்சி அணியில் பாராட்ட,

சுதாகரோ "அந்தப் பொண்ணைப் பத்தி... நிறைறைறைய விவரம் தெரிஞ்சு வச்சிருக்க மாதிரி இருக்கே? என்னடா விஷயம்?" என்றான் தன் போலீஸ் புத்தியின் கூர்மையுடன்.

"போடா... நீ வேற! ஒருத்தரை பேட்டி எடுக்கும் போது, அவரைப் பத்தின எல்லா விவரமும் தெரிஞ்சு வச்சுக்கணும் தானே?" - நழுவ முயன்றது இளம் சிங்கம்.

மூத்த காளையோ "தெரிஞ்சு வச்சுக்க வேண்டியது தான்! ஆனா, இந்த நாலு வீடு... ஆறு பிள்ளைங்க... இதெல்லாம் கொஞ்சம் ஓவர் தம்பி!" என்று பாயிண்ட்டைப் பிடிக்க,

"நம்ம காதலுக்காக, வலை போட்டு சேகரிச்ச தகவல்களை இங்க இறக்கிவிட்டது தப்போ!" என்று ஒரு நிமிடம் குழம்பிய தம்பியப்பன்,

"பசங்களோட பாதுகாப்புக்காக நான் கஷ்டப்பட்டு விவரம் சேகரிச்சா, தப்பாவே பார்க்கிறியே சுதாகரா!" என்றுவிட்டு வேகமாய் தன்னறைக்குள் மறைந்து கொண்டான்.

அடுத்த நாள் காலை, இனிய பொன்னிற வேளையாய் புலரும் முன்பே, வீட்டை விட்டுக் கிளம்பிய பிரபாகரிடம், "இன்னைக்கு எந்த பிரண்டுடா வராங்க? தினம்... தினம் நாலு மணிக்கு வர அந்த பிரண்டை நான் பார்த்தே ஆகணும்!" என்று கௌசல்யா குறுக்கே நிற்க,

"வந்து சொல்றேன்!" என்று விட்டுப் பறந்தவன், அடுத்ததாய் நின்றது ரயில் நிலைய வாசலில்தான்.

அவனை அதிக நேரம் காக்க வைக்காமல், ஷோபனா வந்து விட, ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் அவளருகே சென்றவன், "ஹலோ, ஷோபனா! குட்மார்னிங்! உங்கள் நாள் இனிய நாளாய் அமைய என் வாழ்த்துக்கள்!" என்றான் விரிந்த புன்னகையுடன்.

'யாரடா இவன், டி.வி.ல நியூஸ் வாசிக்கிறவன் மாதிரி!' என்ற எண்ணத்துடன் திரும்பிய ஷோபனா,

பிரபாகரைக் காணவும் லேசாய் புன்னகைத்து "ஹாய் பிரபாகர்! என்ன இந்தப் பக்கம்?" என்றாள்.

"உங்களைப் பார்க்கத்தான்!" - அவன் கூறிய மாத்திரமில்லாமல், ஷோபனாவின் முகம் இறுகியது.

அந்த மாற்றத்தை உணர்ந்தவன் போல், "என்னோட அண்ணா பசங்களை ஸ்கூல் ட்ராப் பண்ண முடியுமான்னு கேட்கத்தான் வந்தேன்!" என்றான் பிரபாகர்.

"ஹோ! ஆனா, அதுக்காக எதுக்கு காலங்கார்த்தால இந்தப் பனியில வந்திருக்கீங்க? ஸ்கூல்-லேயே கேட்டு இருக்கலாமே?"

'பனியில் நனையும் பொன்மலரான உன்னைப் பார்க்கத்தான்' என்று காதல் வசனம் பேசத் தோன்றிய நாவை அடக்கிக் கொண்டு,



"என்னங்க அதுக்குள்ளே மறந்துட்டீங்களா? எனக்கு அந்த டைம்-ல தான் ஷோ! வீட்டில இருக்க வேற யாரையாவது வரச் சொல்லலாம்ன்னா, அவங்களுக்கு உங்களைத் தெரியாது!" என்றான் நீண்ட விளக்கமாய்.

"ஹ்ம்ம்..." என்ற ஷோபனா சட்டென்று "உங்க பிரண்டு ரம்யா? அவங்களுக்கு என்னைத் தெரியுமே?" என்றாள். அவன் கூறிய காரணத்தில், ஷோபனாவிற்கு சற்றே சந்தேகம்தான்!

"அவ ஊருக்குப் போய்ட்டா!" - சளைக்காமல் மறுக்காமல் பிரபாகரும் தன் ஆட்டத்தை ஆடினான்.

"ம்ம் சரி! ஒரு மாசத்துக்கு ஐநூறு ரூபா..." - அவன் பேச்சை ஒத்துக் கொண்டதன் பிரதிபலிப்பாக ஷோபனா பேச,

அவளது முக பாவங்களில் லயித்திருந்த பிரபாகர், "எதுக்கு?" என்றான் குழப்பத்துடன்.

"ஹான்... நீங்க என்ன கேட்டு வந்தீங்களோ அதுக்கு!" என்று சுள்ளென வந்தது பதில்.

"சாரி, சாரி! பசங்களை ட்ராப் பண்றதுக்கா? ரெண்டு பேருக்குமே ஐநூறு ரூபா தானா? ரொம்ப சீப்பா இருக்கே? இப்படி இருந்தா... பிழைக்க முடியாது, ஷோபனா!" - அவன் பேசிக் கொண்டே போக,

"நிறுத்துங்க... நிறுத்துங்க... ஒருத்தருக்கு ஐநூறு ரூபா!" - பொறுக்க முடியாமல் கத்தினாள் ஷோபனா.

கூடவே, "ரெண்டு பேருக்கு ஐநூறு ரூபா வாங்கினா, அவங்களை கை பிடிச்சு நடந்து தான் ஸ்கூலுக்குக் கூட்டிப் போகணும்!" என்ற முணுமுணுப்பு வேறு!

"ஓகே, ஓகே! பசங்களுக்கு எட்டரை மணிக்கு ஸ்கூல்... எத்தனை மணிக்கு பிக்கப்புக்கு வருவீங்க?" தனக்கான விவரங்களுக்காக வலை போட்டான் பிரபாகர்.

கழுவுற மீனில் நழுவும் மீனாய் ''உங்க வீட்டு அட்ரஸ் கொடுங்க. அங்க வந்து உங்க அண்ணிகிட்ட பேசிக்கிறேன்'' என்றவள், குறிப்பாய் ரயில் நிலைய வாயிலைப் பார்த்தாள்.

'பெரிய கடமை கண்ணாத்தா!' என்று உள்ளுக்குள் பல்லைக் கடித்துவிட்டு, தன் வீட்டு முகவரியையும், இலவச இணைப்பாய் தன் கைப்பேசி எண்ணையும் குறித்துக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான்.

முகவரிக்கு கைப்பேசி எண் இலவச இணைப்பா இல்லை கைப்பேசி எண்ணிற்கு முகவரி இலவசமா என்பது பிரபாகரின் காதல் மனம் மட்டுமே அறிந்த விஷயம்!

மேலும் அரை மணி நேரம், எதிர் வரிசையில் அவள் கண்ணில் படாத வண்ணம் நின்று கொண்டு அவளை ரசித்துவிட்டே வீடு திரும்பினார் துரை.

வந்ததும் வராததுமாய், ஆர்வக் கோளாறு என்ற அரிய நோயினால் தாக்குண்டு ''கௌ! ஷோபனாக்கிட்டப் பேசிட்டேன்! இன்னைக்குக் காலையில எட்டு மணியில இருந்து எட்டரைக்குள்ள வீட்டுக்கு வருவா!'' என்றானே பார்க்கலாம்,

''ஹோ! அவளைப் பார்க்கத்தான் துரை, காலையில நாலு மணிக்கே எழுந்து போறீங்களா?'' என்று சரியான பாயிண்ட்டில் வந்து நின்றாள், கௌசல்யா.

''ஹய்யையோ!'' என்று தன்னுள் பரிதாப டோனில் சொல்லிக் கொண்டவன், அதே ''ஹைய்யையோ''வை ஆச்சரிய டோனில் வெளியே சொல்லி,

''உன்னோட ஒரே காமெடி போ! நம்ம சாப்ட்வேர் கம்பெனி ஆரம்பிக்கிறது விஷயமா, மினிஸ்டரோட



பி.ஏ.வைப் பார்க்கப் போனேன். அவர் ஜாக்கிங் போற நேரத்தில பிடிச்சா, ரிலாக்ஸா பேசலாம்ன்னு போனேன். அங்கேதான், ஷோபனாவையும் பார்த்தேன்!'' என்று பூசி மொழுகினான்.

அதன் பின்னர், வார்த்தைகளை விவரமாய் கையாண்ட போதும், அவனால் ஷோபனாவைப் பார்க்கவே முடியவில்லை.

அவன் இல்லாத நேரத்தில், வீட்டில் வந்து பேசி, பிள்ளைகளையும் ஸ்கூலுக்கு அழைத்துச் செல்லும் அளவிற்கு வந்து விட்டிருந்தாள், அவள்.

கௌசியின் ''நல்ல பெண்ணா தெரியுறா, பிரபா!'' என்ற பாராட்டாகட்டும்,

பரத்தின் ''ஷோபி ஆன்ட்டி, இன்னைக்கு ஆட்டோ-ல வரும்போது நாட்டி மங்க்கி கதை சொன்னாவே!'' என்ற சந்தோஷமாகட்டும்,

நகுலின் ''இன்னைக்கு என்னோட ஷூ காணாம போச்சா, ஷோபி ஆன்ட்டி தான் ஸ்கூல்-ல கண்டு பிடிச்சு தந்தா...'' என்ற புகழுரை ஆகட்டும், பிரபாகரை அலைக்கழித்துத்தான் பார்த்தன.

# 10

ஒரு முடிவுக்கு வந்தவனாய், வானொலி நிலையத்தில் தொடர்ந்து முயற்சி செய்து, ஒரு வழியாக ஒரு மாதத்திற்குப் பின்னர், இரவு அரங்கேறும் 'தேனிசை' நிகழ்ச்சிக்குத் தொகுப்பாளனாய் மாறிய பின்னரே பிரபாகரின் மனது சமநிலைப் பட்டது.

ஆனால், தேனிசையில் அவன் குதிக்கப் போகும் முதல நாள், ஒரு ஞாயிற்றுக் கிழமையாய் போய்விட, ஷோபனாவின் தரிசனம் காலையில் கிடைக்கவில்லை.

'இந்தப் பொடியன்களுக்கு எதுக்கு லீவ் விட்டாஙுங்க!' என்று எரிச்சல் பட்டவாறே வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தவன், மாலை கனியத் துவங்கியதும், இரவில் தான் பேசப் போகும் விஷயங்களில் கவனத்தைச் செலுத்தத் துவங்கினான்.

இசைஞானி இளையராஜாவைப் பற்றி அவன் சேகரித்த செய்திகள் அவனுக்கு எந்த விதத்தில் உதவியாய் இருந்தனவோ தெரியாது.

ஆனால் ''வணக்கம், வந்தனம், சுஸ்வாகதம், நான் உங்கள் பிரபா பேசுறேன்! இந்த நிமிஷம் முதல், இளையராஜா சாரின் இனிய மெட்டுக்களோடு உங்களுடன் பயணிக்கப் போகும் ஓர் புது பயணி!'' என்ற அவனது அறிமுகத்திலேயே, நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்த ஷோபனா அதிர்ந்து போனாள்!

''ஹே! இவனா? எப்படி?'' - ஒரு நிமிடம் அவளால் மூச்சு கூட விட முடியவில்லை.

மகளிர் சுய உதவிக் குழுவிலிருந்து, தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த குரோசா பின்னும் வேலையை அப்படியே விட்டுவிட்டு, தன் சிந்தனையில் மூழ்கினாள், அவள்.

''எதற்காக காலை நேர நிகழ்ச்சியிலிருந்து இரவிற்கு மாறினான்? பேட்டி நடந்த தினத்தன்று, தான் இரவு நிகழ்ச்சிகளைத் தான் கேட்பேன் என்று சொன்னதற்காகவா?

''ச்சே ச்சே! இருக்காது!? தனக்காக நிகழ்ச்சியை மாற்றிக் கொள்ளும் அளவிற்கு அவனுக்கும் தனக்கும் என்ன இருக்கிறது!?



''ஒருவேளை இருக்கிறதோ? பேட்டி முடிந்த அடுத்த நாள், எதிர் வரிசையில் அவனைப் போலவே ஒருத்தன் நின்றிருந்தானே? பிரம்மை என்று நினைத்தோமே? இல்லையோ!?

''அதற்கு அடுத்த நாள், சரியாக தன் ஆட்டோவைத் தேடி வந்தானே? அதெப்படி முடியும்?

''அண்ணன் பசங்களுக்காக என்றாலும், பள்ளிக் கூடத்தில் வந்து பார்த்திருக்கலாமே? வேலை மெனக்கெட்டு, எதற்காக ரயில் நிலையம் வர வேண்டும்... அதுவும் நான்கு மணிக்கே?

''அன்றுகூட, உங்களுக்காக தான் என்று வாய் விட்டானே?

''அவன் வீட்டில் கார் இருப்பதை அவள் கவனித்திருக்கிறாள். அவனது தந்தை அதை எடுப்பதையும் தான்... அப்படியிருக்கையில், பிள்ளைகளை ஸ்கூலில் ட்ராப் செய்வதே ஒரு நாடகமோ?

''குடும்பமே சேர்ந்து நடித்திருக்கிறதோ?

''ம்ஹூம்! இருக்காது... அந்த அக்காவோ, அந்த வீட்டுப் பெரியவரோ - இந்த ஒரு மாசத்தில் இது பற்றி ஜாடை மாடையாகக் கூடப் பேசியது கிடையாது!'' - ஏற்கனவே புத்தி கூர்மையுள்ள ஷோபனாவின் மூளை, எட்டுத் திசையிலும் விரிந்து பறந்தது.

பிரபாகரின் பேச்சு காதில் விழுந்து கொண்டே இருக்க, எரிச்சல் பட்டு அவளால் வானொலியை அணைக்கவும் முடியவில்லை! எரிச்சல் மிகவுற அதைக் கேட்கவும் முடியவில்லை!

ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர், 'அவனிடம் நேரடியாக கேட்டுவிட வேண்டும்' என்ற

முடிவிற்கு அவள் வந்தபோது, பிரபாகரும் ''குட் நைட்! ஸ்வீட் ட்ரீம்ஸ்'' சொல்லி விடை பெற்றிருந்தான்.

அடுத்த அதிகாலை பிரபாகருக்கு எவ்வளவு பரபரப்பாய் இருந்ததோ, அதே அளவிலேயோ அதற்கு ஒரு படி மேலேயோ ஷோபனாவிற்கும் பரபரப்பிருந்தது.

ரயில் நிலைய வாசலில் ஆட்டோவை நிறுத்தியவளின் கண்கள், எதிர் வரிசைக்குப் பாய, அங்கே நின்றிருந்த பிரபாகரின் பார்வையும் நேர்கோட்டில் அவளைச் சந்தித்தது!

கண்களின் நேர் மோதலில், பெண்ணரசியின் பக்கம் எரிச்சலின் சாரல், மன்னவனின் பக்கமோ காதலின் தூறல்!

சட்டென பார்வையை விலக்கிக் கொண்ட ஷோபனா, அன்று சவாரியே பார்க்கவில்லை. வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்றே விட்டாள்!

'பேட்டத்துக்கு பல்லு கிளிருகடுச்ச போலவே! நம்மளை விட லேட் பிக்கப்! சரி... சரி... நாம ஸ்டெடி பண்ணிடலாம்!'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டே வீடு திரும்பியவன், திறமையாக அன்று காலை வீட்டிலிருந்து ஸ்லேவ் ஆகிவிட்டிருந்தான்.

எட்டு மணிக்கு, பாந் - நகுல் இருவரையும் அழைக்க வந்த ஷோபனாவின் கண்கள், வீட்டினுள் சென்று மீண்டன.

''ஓடிப்போயிட்டான் போல! பயந்தாங்கோலி!'' என்று கறுவிக் கொண்டே சென்ற ஷோபனாவின் எண்ணத்தைப் பொய்ப்பிப்பது போல், அன்றைய தினம் ஏழு மணிக்கு வேலை சவாரி முடிந்து சேரிபாளையம் மெயின் ரோட்டிலிருந்து உப்பிலிபாளையம் செல்லும் வழியில், ஆட்டோவைக் கைப்போட்டு நிறுத்தினான், பிரபாகர்.



யாரோ சவாரி போலும் என்று நிறுத்திய ஷோபனா அவனைக் கண்டதும், விரைந்து செல்ல எண்ணி, ஏனோ பின்னர் தயங்கி நின்றாள்.

''உன்கிட்ட கொஞ்சம் பேசணும்!'' என அவன் தொடங்கியதும், அவனது பேச்சை விட, அதிலிருந்த ''ஒருமை'' விகுதியே ஷோபனாவை கோபத்திற்கு உள்ளாக்கியது.

''நானும் உங்ககிட்ட பேசணும்'' என்றவள் ஆட்டோவை விட்டு இறங்க முற்படவும், ''இல்லை, இறங்காதே! ரோட்டில நின்னு பேசற விஷயமில்லை, இது! ஆட்டோல போய்கிட்டே பேசலாம்'' என்றவன், அவளது பதிலை எதிர்பார்க்காமல் வண்டிக்குள் ஏறி அமர்ந்து கொண்டான்.

அவனை முடிந்த மட்டும் முறைத்தவள் ''ஆட்டோ ஓட்டிட்டு இருக்கும்போது, கை நீட்டி அடிக்க முடியாதுங்கிற தைரியம்'' என்று முணுமுணுத்தவாறே, வண்டியை எடுக்க,

''ஹேய்! கரெக்ட்! என்னோட மைண்டை எனமா ரீட் பண்ணிட்டே! இதுக்காகவே உனக்கு ஒரு பரிசு!'' என்று தன் பாக்கெட்டில் இருந்த சிறு அட்டைப் பெட்டி ஒன்றை அவளிடம் நீட்டினான்.

''என்னது இது?''

''ஒரு சின்ன கிஃப்ட்! வேண்டாம்னா விட்டுடு! என்னோட சண்டை போடறதில கவனம் இருக்க வேண்டியதுதான்... அதுக்காக நம்ம ரெண்டு பேரையும் பரலோகம் கொண்டு போற ஐடியா வேற இருக்கு போலவே'' - அவன் சீண்டவும், ஷோபனாவின் கைகளில் ஆட்டோ ஒரு நிமிடம் தடுமாறி, பின்னர் நேரானது!

"என்ன விஷயம் சொல்லுங்க? தேவையில்லாம என் நேரத்தை வீணாக்காதீங்க!"

"நீ முதல்ல சொல்லு! எப்படியும் என்னைத் திட்டப் போறே... உன் வசை மொழிகளை வச்சே உன்னை அங்க இங்க கோர்த்து விடலாம் பாரு... சோ நீயே ஆரம்பி!"

ஆத்திரப் பெருமூச்சு ஒன்று வேகமாய் வெளியேற, "நீங்க உங்க மனசில என்னதான் நினைச்சிட்டு இருக்கீங்க? இதெல்லாம் கொஞ்சம் கூட நல்லா இல்லை" - எதையும் வெளிக்காட்டாமல, மறைமுகமாய் பேசினாள் ஷோபனா.

எனக்கு ஒளிவு மறைவே இல்லை என்று அறைகூவு பவன் போல், "உன்னைத் தான்" என்றான் பிரபாகர் நேரடியாக.

"என்னது?!" - ஊகித்த விஷயமே என்றாலும், தயக்கமற்ற அவனது நேரடி பதிலில் நெஞ்சம் தூக்கி வாரிப் போட்டது, ஷோபனாவிற்கு.

நெஞ்சத்தின் எதிரொலியாய் ஆட்டோவும் தடுமாற, "ஹே பாத்து, பாத்து!" என்ற பிரபாகர், கைகளை முன்னே கொணர்ந்து, ஆட்டோவை நிலைக்குக் கொண்டு வர முயன்றபோது,

"எடுங்க கையை!" என்று அடிக்குரலில் சீறினாள், ஷோபனா!

"சரி... சரி... பல்லு பாவம் விட்டுடு... நீ கடிக்கிற கடில ரெண்டு கடவா பல்லு, கையோட வந்திடப் போவுது!"

அவன் பேசாதது போல பாவித்து "இதெல்லாம் சரியா வராது!" என்றாள் ஷோபனா. இப்போதும் அவளால் 'காதல்' என்ற வார்த்தையைச் சொல்ல முடியவில்லை.



ஒரு திருமணத்தால் நிகழ்ந்த சோகங்களே வாழ்க்கை முழுமைக்கும் போதுமானதாய் இருக்கையில், இன்னொன்றா!? - பயந்தது சோபியின் புண்பட்ட நெஞ்சம்!

அவளைப் பொறுத்தமட்டிலும், அக்காவின் திருமணத்திற்கு வாங்கிய கடனை முடிந்த அளவு சீக்கிரம் அடைக்க வேண்டும். அடைத்த கையுடன், கைவிட்டப் படிப்பை வங்கிக் கடன் மூலமாகத் தொடர வேண்டும். இவையிரண்டும்தான் வாழ்வின் குறிக்கோள்களே! அதைத் தாண்டி, காதல்... கத்திரிக்காய்... கல்யாணம்... என்று வாழ்வை வீணாக்க அவளுக்கு மனமுமில்லை... தெம்பயில்லை!

அவளது மனப் போராட்டம் பற்றி அறியாமல், "எதெல்லாம் சரியா வராது?" என்றான் பிரபாகர்.

"நீங்க பண்றது தான்!"

"எது... ஆட்டோ-ல பயணம் பண்றதா?" வேண்டுமென்றே பேசினான் அவன்.

"ஷ்... முடியலை!"

"ஹோ மை கடவுளே! என்னம்மா பண்ணுது? வா... டாக்டர் வீட்டுக்குப் போவோமா?"

"ஹய்யோ! ஏன் இப்படி மொக்கைப் போடறீங்க?"

"இதையே மொக்கைன்னு சொன்னா எப்படி? ரம்யா - கௌ எல்லோரையும் கேட்டுப் பாரு... நம்ம புகழைப் பாடித் தள்ளுவாங்க!"

"போதும் விஷயத்துக்கு வாங்க!"

"என்ன ஷோபி நீ! நான் விஷயத்தைச் சொல்லி... ஒரு மாமாங்கத்துக்கு மேல ஆச்சு! நீ தான் பதில் சொல்லணும்!"

"என்னை ஷோபின்னு கூப்பிடாதீங்க!" - ஷோபனாவின் குரல் கீரிச்சிட்டது!

"இதென்ன அநியாயமா இருக்கு! நேத்து முளைச்ச பொடுசுங்க எல்லாம்... உன்னை ஷோபின்னு கூப்பிடுதுங்க. நான் கூப்பிடக் கூடாதா?"

"அவங்க கூப்பிடறது வேற... நீங்க கூப்பிடறது வேற..."

"அதான்... நான் எந்த விதத்தில வேற?"

"ஐயோ... அவங்கெல்லாம் என்னைக் காதலிக்கிறேன்னு கேணைத் தனமா கத்தலை!"

"ஹப்பாடா! நான் லவ் பண்றேங்கிறதை புரிஞ்சுக்கவே உனக்கு ஒரு மாசம் தேவைப்பட்டிருக்கு. அதுவே லேட் பிக்கப்புன்னு நான் கவலைப்பட்டா... இப்ப "காதல்ங்கிற வார்த்தையைச் சொல்றதுக்கே, இந்த கத்து கத்துறே!"

"ஏ, அதுவா இப்ப முக்கியம்? என்னை லவ் பண்றதெல்லாம் நடைமுறைக்கு ஒத்தே வராத விஷயம்!"

"அதான் ஏன்? நீ என்ன... சந்திர மண்டலத்திலயா இருக்கே?"

"இல்லை... மனிதாபிமானமற்ற உலகத்திலதான் இருக்கேன்! எனக்கு... இந்த கல்யாணங்கிற விஷயத்தில சுத்தமா இஷ்டமில்லை... பணமும் கொடுத்து, பெண்ணையும் கொடுத்து, அவனோட சந்தோஷத்தை மொத்தமா சூறையடிக்கிற கொடுமையில நான் சிக்கிக்க விரும்பலை!" - ஷோபனாவின் கோப வார்த்தைகள். முடியக் காத்திருந்த பிரபாகரின் நெஞ்சில் வேறு ஓடியது.

கஷ்டப்பட்டு திருமணம் செய்து கொடுத்த அவளது சகோதரியின் வாழ்க்கையில் ஏதும் பிரச்சனையோ?



அதன் பாதிப்பில் தான் இப்படிப் பேசுகிறாளோ என்றெண்ணியவன், பேச்சை அந்தத் திசையில் திருப்பினான்.

"ஏன் அப்படி நினைக்கிற? உங்கம்மாவும் உங்கப்பாவும் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இல்லையா? உங்க அக்கா வாழ்க்கை... வேற திசையில போச்சுங்கிறதுக்காக எல்லோரையும்..." அவன் முடிக்கவில்லை.

"எங்கக்கா நல்லா இருக்கா. ராணி மாதிரி இருக்கா... எல்லாம் தெரிஞ்ச மாதிரி பேசாதீங்க!" - கோபத்தில் கடிபட்டன ஷோபனாவின் வார்த்தைகள்.

அதற்கேற்ப, அவளது கைகளில் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த ஆட்டோ, ஒரு குலுக்கலுடன் ஓரிடத்தில் நிற்க, "இறங்குங்க கீழ!" என்று அடிக்குரலில் உறுமினாள் ஷோபனா.

பிரபாகர் அசைந்தால் அல்லவோ! டிரைவர் சீட்டின் பின்னே இருந்த கம்பியை இறுகப் பிடித்துக் கொண்டு, தலையைத் தாழ்த்தி, அவளைப் பார்த்தவாறே பேச்சைத் தொடர்ந்தான்.

"ஹோ! அப்புறம் என்ன? உங்க அக்கா... உங்க அம்மா மாதிரி... கல்யாணம் உன் வாழ்க்கையிலும் சந்தோஷத்தைக் கொடுக்கலாம்... கொடுக்கும்!" - உறுதியாய் முடித்தான், பிரபாகர்.

"என் வாழ்க்கை சந்தோஷமா அமையலாம். ஆனா, என்னைச் சுத்தி இருக்கவங்களோட கனவுகள் எல்லாம் மண்ணாப் போய்டுமே!" - கோபம் போய் விரக்தி வந்திருந்தது, ஷோபனாவிற்கு.

இப்போது பிரபாகருக்கு ஷோபனாவின் பிரச்சனை நன்றாகப் புரிந்தது. சகோதரியின் திருமணத்தால்

அவளது வாழ்வில் நடந்த சறுக்கல்கள் அவளைப் பேச வைக்கிறது என்பதை உணர்ந்தவன்,

''ஷோபி! நான் சொல்றதை... தயவு செஞ்சு பொறுமையா கேளு. ப்ளீஸ்.''

''முடியாது!''

''ஜஸ்ட் அஞ்சு நிமிஷம்!'' என்றவன், அவள் மறுக்கத் துவங்கும் முன்னர்,

''எங்க வீட்டுல டௌரிங்கிற பேச்சுக்கே இடம் இருக்காது. மருமக கொண்டு வந்து தான் நிரம்பணும் என்று எதிர்பார்க்கிற ரகமில்லை எங்கப்பா.

''வெயிட்... வெயிட்... நான் பேசி முடிச்சுடுறேன்.

''நான் உடனே கல்யாணம் பண்ணணும்'ன்னு சொல்லலை. நீ படி... ஆட்டோ ஓட்டுறதை நிறுத்திட்டு படி... உங்க அக்கா கல்யாணத்துக்காக வாங்கியிருக்க பணத்தையும் சரி, உன் படிப்புக்கான பணத்தையும் சரி... நான் கட்டுறேன்...

''ஹேய்... இரு! இரு! என்னை அடிக்கக் கல் தேடுறியா? நான் முழுசா பேசிடுறேன்...

''படிப்பு முடிஞ்சதும், உனக்குக் கண்டிப்பா வேலை கிடைக்கும். வேலைக்குப் போனதும், அதில வர சம்பளத்தை என் கடனை அடைக்கக் கொடுத்திடு! வட்டியில்லாத கடன் மாதிரி... ப்ளீஸ் கொஞ்சம் யோசியேன்!

''எனக்குக் கடன் கொடுக்க நீ யாருடான்னு கேட்கிறியா? யாரோ ஒருத்தர்கிட்ட கடன் வாங்கித் தானே உங்க அக்காவோட கல்யாணத்தை செய்திருப்பே? இப்போ, காதல் + கடன் ரெண்டும் ஒரே ஆள்கிட்ட இருந்து வருது! தட்ஸ் ஆல்!



''என்ன சொல்ற? ஓகேவா? காதலிக்கலாமா?'' - ...லா, நோ டீலா போல் பிரபாகர் முடிக்க, ஷோபனா...ிற்கு அவனை நிஜமாகவே கல்லைக் கொண்டு அடிக்க வேண்டும் போலிருந்தது.

''முதல்ல கீழ இறங்குங்க. நான் வீட்டுக்குப் போகணும்... அம்மா தேடிட்டு இருப்பாங்க'' என்றாள் அவள்.

அவள் பேச்சிற்கு அடிபணிபவன் போல, மறு பேச்சின்றி ஆட்டோவிலிருந்து கீழிறங்கியவன், இருபது ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''ஆட்டோக்கான காசு! உழைப்புக்கான பணம்மா... மறுக்கக்கூடாது!'' - அவன் வார்த்தை முடியும் முன்னர், நோட்டைப் பறித்துக் கொண்ட ஷோபனா வண்டியை எடுக்கவும்,

''பார்த்துப் போ ஷோபி!'' என்றான் பிரபாகர், மென்மையாக.

ஆட்டோவின் இரு நிலைகளையும் பிடித்தவாறே நின்றிருந்தவனை மீறிக்கொண்டு, அவளது ஆட்டோ சீறிப்பாய,

ஒரு வினாடி அவளையே பார்த்திருந்தவன், ஏதோ தோன்றியவன்போல், பின்னாடியே ஓடினான்.

ஷோபனாவும் அவனை ரியர் வியூ கண்ணாடி வழியாக பார்த்துக் கொண்டே செல்ல, அவன் ஓடி வரவும், கைகளும் கால்களும் அவளையும் மீறி, வண்டியின் வேகத்தைக் குறைத்தன.

மூச்சிரைக்க ஓடிவந்தவன், ''ஒரு முக்கியமான விஷயம்!'' என்று சொல்லி, மீண்டும் மூச்சு வாங்க, ஷோபனா ஒன்றும் சொல்லாமல் பார்த்திருந்தாள்.

"பார்த்துட்டே இருக்கியே! கொஞ்சம் தண்ணி கொடுக்கலாம் இல்லை..." என்றவன், கண்டிப்பாக ஏதோ வம்பு பேச்சு பேசவே வந்திருக்கிறான் என்றெண்ணிய ஷோபனா, கையைக் கட்டிக் கொண்டு பேசாதிருந்தாள்.

அவள் தண்ணீர் தரப்போவதில்லை என்பது புரிய, தன்னை சமன்படுத்திக் கொண்டு "உன்னைப் பார்த்த முதல் பார்வையிலேயே எனக்குப் பிடிச்சிருந்தது. உன் வெளி அழகை விட, உன்னோட நேர் பார்வை, தைரியம், தெளிவு எல்லாமே எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சிருந்தது! இது என்னோட நிலை மட்டும் தான்! உனக்கு என் மேல அந்த மாதிரியான எண்ணங்கள் இல்லைன்னா, வெளிப்படையா சொல்லிடு. நான் விலகிக்கிறேன். ஆனா, சமூகத்து மேல இருக்கிற வெறுப்பை... காதலுக்குள்ள கொண்டு வராதே!" - என்றான் பிரபாகர், ஆழ்ந்த குரலில்.

"இதை நான் என்னோட காதலைச் சொல்றதுக்கு முன்னாடியே சொல்லியிருக்கணும். வண்டியை எங்கயாவது கொண்டு முட்டிடுவியோ... வீட்டுக்கு ஒரே இரண்டாவது பிள்ளையான எனக்கு எதாவது நடந்திடுமோங்கிற பயத்தில, சொல்ல மறந்துட்டேன்" இதுவரை பேசிய பேச்சுக்கு சற்றும் சம்பந்தமில்லாமல் அவளைச் சீண்டி விட்டு, வேடிக்கைப் பார்த்தான் பிரபாகர்.

அவனது ஆழ்ந்த குரலில் ஆழப் புதைந்திருந்த அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருந்த ஷோபனா, அவனது கடைசி வரியில் மெல்ல புன்னகை பூத்து, அதை மறைப்பதற்காக முடிந்த மட்டும் அவனை முறைத்தாள்,

"அவ்வளவு தானே? கையை எடுங்க... நான் போகணும்..."



"நான் ஆட்டோ மேல கையை வச்சிருந்தா மேடம் வண்டியை எடுக்கவே மாட்டீங்களோ! கொஞ்ச நேரம் முன்னாடி... ஜான்சி ராணி மாதிரி பறந்தீங்க" என்று அவன் நக்கல் செய்து கொண்டிருக்கும் போதே, ஜான்சி ராணியாய் பறந்திருந்தாள் ஷோபனா.

## 11

காதலைப் பகிர்ந்து விட்டோம் என்ற சந்தோஷத்துடன் சென்றவனின் கண்களில் வெறும் காதல் ராகங்களே பட்டு, அன்றைய நிகழ்ச்சி முழுவதும்... ரொமான்ஸ்... ரொமான்ஸ்... ரொமான்ஸ் தான்!

கண்களில் கனவு மிதக்க வீடு திரும்பியவன், கடந்த ஒரு மாதத்தைப் போலில்லாமல் நிம்மதியாய் தூங்கினான்!

ஷோபனாவிற்குத் தன் மீது எந்த வெறுப்புமில்லை என்பதே, அவனுக்குப் பெரும் தெம்பை அளித்திருந்தது!

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்! அதுவும், தான் கரைத்தால் கடப்பாரை கூட கரையும் என்ற அசாத்திய நம்பிக்கை தான்!

பெரும் நிம்மதியுடன் உறங்கியவனுக்குப் பெரும் இடியாய், அடுத்த நாள் காலை ஷோபனா ரயில் நிலையத்திற்கு வரவில்லை.

தன் மேலிருக்கும் கோபத்தில் வராதிருக்கிறாள் போலும்... எப்படியும் பிள்ளைகளை அழைத்துச் செல்ல வருவாள் என்று அவன் எண்ண, அதற்கும் ஆப்பு காத்திருந்தது.

சரியாக எட்டு மணிக்கு வர வேண்டிய ஆட்டோவிற்காக ஏழரை மணி தொட்டே, தோட்டத்திற்கும்

வீட்டிற்கும் நடை பழகிக் கொண்டிருந்தவனுக்கு அதிர்ச்சி கொடுக்கும் விதத்தில், வேறொரு ஆட்டோக் காரர் வந்தார்.

பிரபாகர் தன் அதிர்ச்சியிலிருந்து வெளிவரும் முன்னர், "ஷோபனாவுக்கு என்னாச்சு? எதுக்கு நீங்க வந்திருக் கீங்க?" என்ற கேள்வியுடன் கௌசல்யா வர,

"அவளுக்குக் கொஞ்சம் மேலுக்கு முடியலீங்க அம்மணி! அதேன் நான் வந்தேன்!" என்றார் வந்திருந்த பெரியவர்.

"சரி அண்ணே! இன்னும் ரெண்டு நாளைக்கு நீங்க தான் வருவீங்களா?" - கௌசல்யா தொடர,

"ஆமா அம்மணி!" என்றதுடன் பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு சென்று விட்டார், அவர்.

ஷோபனா வராததில் தோன்றிய எரிச்சலை, மறையாது கௌசியிடம் காட்டி "அறிவிருக்கா கௌ, உனக்கு! அவரை யாருன்னே தெரியாது... அவரோட பசங்களை அனுப்பி வைக்கிற? இந்த ஷோபனாவுக்குக் கொஞ்சம் கூட பொறுப்பில்லை... இப்படியா, சடார்ன்னு வேற ஆளை வரச் சொல்றது?" என்று அவன் பொரிய,

"நீ ஏன்டா இந்தக் குதி குதிக்கிற? சம்பள விவரம் பேசும்போதே, இந்தப் பெரியவரைக் கூட்டி வந்து, நான் வர முடியாத சமயங்களில் இந்தப் பெரியவர் தான் சவாரிக்கு வருவார். என்னை நம்புற அளவுக்கு, அவரை யும் நீங்க நம்பலாம்ன்னு சொல்லிட்டுத் தான்டா, பசங்களை வண்டியிலே ஏத்தினா!" - பிரபாகருக்குப் பதில் சொன்ன கௌசல்யா அவனை ஆராய்ந்தாள்.

"கொஞ்ச நாளாவே நீ சரியில்லை, பிரபா! என்கிட்டே எதையோ மறைக்கிற? என்னடா விஷயம்?" என அவள் சட்டென பிரபாவின் மூடு மந்திரத்துக்குத் தாவ,



"ஒரு மண்ணுமில்லை. பசங்க மேல இருக்கிற அக் கறையில சொன்னேன். வேற ஒண்ணுமில்லை..." என்று பல்லைக் கடித்தவன், வேறு வேலையைப் பார்க்கச் சென்று விட்டான்.

தன் மேலிருக்கும் கோபத்தில் தான் ஷோபனா அன்றாட வேலையைக் கூடத் தவிர்க்கிறாள் என்று பிரபாகருக்கு கண்டிப்பாகத் தெரிந்தது. அதை எப்படிப் போக்குவது என்று தான் தெரியவில்லை!

அவளைப் பார்த்தால் அல்லவோ போக்குவதற்கு!

கண்ணிலேயே படாமல், பூச்சாண்டி காட்டிக் கொண் டிருக்கும் பூச்சரத்தின் மீது, கோபம் கூட பூத்தூவலாய் தான் வந்தது!

காலையில் தான் வரவில்லை... மாலையில், அவள் வீடு செல்லும் வழியில் பார்க்கலாம் என்று ஆறு மணி தொட்டு எட்டு மணி வரை, சௌரிபாளையம் ரோட்டில் தவமிருந்து, ஒரொரு ஆட்டோவாய் வேடிக்கை பார்த்தது தான் மிச்சம்! ஐந்து தட்டு பஜ்ஜிகளும், எட்டு கப் தேநீரும் உள்ளே போய் பேதி ஆனது தான் மிச்சம்!

சரி... இரண்டு நாட்கள் தானே என்ற சமாதானத்துடன் அவனிருந்தபோது, இரண்டு நாட்கள் நான்கு நாட்களாகி, ஒரு வாரமாய் நீடித்தபோது, பிரபாகர் பொறுமை இழந் தான்.

சனிக்கிழமை அன்று மதியம், ரம்யாவின் அலைப் பேசிக்கு அழைத்தவன் "ரம்யா, என்ன செய்வியோ... ஏது செய்வியோ தெரியாது. நாளைக்குக் காலையில நாலு மணிக்கு, நீ கோயம்புத்தூர்ல இருந்தாகணும்" என்றுவிட்டு, "டேய்... டேய்..." என்று கத்தியதை கண்டு கொள்ளாமல் போனை வைத்தான்.

தொடர்ந்து, விக்னேஷ், ரம்யா, நரேன் என்று நண்பர்கள், மாற்றி மாற்றி செய்த அழைப்புகளை எடுக்காமலே இருந்தான்!

குடைந்து குடைந்து, காதல் விவகாரத்தை வாங்குவது ஒரு பக்கம் இருக்கட்டும்... அதை கௌசியிடம் வேகமாய் போட்டுக் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள் என்பதே அவன் பயம்!

ஷோபனாவிடமிருந்து பதில் வராத பட்சத்தில், கௌசல்யாவிடமும் விவாதிக்கும் மனநிலையில் அவன் இருக்கவில்லை!

வந்தால் வரட்டும்! என்ற எண்ணத்துடன் அவன் இருக்க, நட்பின் அடையாளமாய் ரம்யா அடுத்த நாள் காலை வந்து சேர்ந்தாள்!

''வரதா சொல்லவே இல்லையே?'' என்று கௌசல்யா கேட்டதற்கு, நண்பனை ஓரப்பார்வையால் அளந்த ரம்யா,

''கம்பெனி விஷயமா, ஒரு காண்டாக்ட் கிடைச்சிருக்கு அண்ணி. முதல் முயற்சியா நானும் பிரபாவும் மட்டும் பேசலாமேன்னு நான் மட்டும் வந்தேன்'' என்று சமாளித்து முடித்தவளைத் தனித்து சந்தித்ததும்,

''தேங்க்ஸ்... தேங்க்ஸ்... நான் சொன்னதுக்காக உடனே கிளம்பி வந்ததுக்கு ஆயிரம் தேங்க்ஸ்... என்னை கௌ கிட்ட போட்டுக் கொடுக்காம இருந்ததுக்கு கோடி தேங்க்ஸ்'' என்று தேங்க்ஸ் ராகம் பாடி, மஸ்கா போட்டு, சமன்படுத்த முயன்ற நண்பனை கையமர்த்தி,

''சும்மா சீன் போடாம... விஷயத்துக்கு வாடா.''

''அதுவா... என்னோட நீ ஒரு இடத்துக்கு வரணும்.''

''எங்க? ஆபீஸ் விஷயமாவா?''



மறுத்துப் பேசத் துவங்கிய நாவைக் கட்டுப்படுத்தி, ''ஹ்ம்ம்... அப்படித் தான்'' என்று ஒரு மாதிரியாக மண்டையை ஆட்டி வைத்தான் பிரபாகர்.

''ஆமான்னா மேலேயும் கீழையும் ஆட்டு... இல்லைன்னா சைடுல ஆட்டு... ரெண்டுமில்லாம இப்படிக் குத்துமதிப்பா ஆட்டுறே?'' என்று சந்தேகமாய் பார்த்த போதும், அவன் அழைத்துச் சென்ற இடத்திற்கு உடன் சென்றாள், ரம்யா.

பிரபாவின் வண்டி, குடியிருப்பு பகுதிக்குள்.. அதுவும் ஓட்டு வீடும் குடிசையுமாய் இருந்த குடியிருப்பு பகுதிக்குள் செல்ல, ''இங்க யாரைப் பார்க்கப் போகிறோம்'' என்று குழம்பிய ரம்யா, அவனது வண்டி நின்ற வீட்டைப் பார்த்ததும் அதிர்ந்தாள்!

அந்த வீட்டின் முன்னே நின்றிருந்த ஆட்டோ... அந்தப் பெண் ஷோபனாவின் ஆட்டோ... இந்த ஆட்டோ அவளுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது... ஏனென்றால், ஆட்டோவின் முன் கண்ணாடியின் மேல்புறத்தில் ''பெண்களே - உங்களுக்கான தன்னம்பிக்கையை வெளியே தேடாதீர்கள்! அது உங்களுள் தான் இருக்கிறது!'' என்ற வாசகம் இருக்கும்... அந்த வாசகத்தில் கவரப்பட்டுத் தான் ரம்யா ஷோபனாவின் வண்டியில் ஏறியதே!

''டேய்... பிரபா! என்ன காரியம் பண்றே? ஆட்டோ மேல அண்ணிக்கு இருக்க வெறுப்பைப் பத்தித் தெரிஞ்சுமாடா...'' - ரம்யா பதற,

''ஷ், சும்மா இரு ரம்யா! அவளே பசங்களை ஆட்டோ-ல அனுப்புற அளவுக்கு வந்துட்டா... நீ வேற... குட்டையைக் குழப்பாதே!'' என்று தோழியை வேகக் குரலில் அடக்கிய கையோடு,

"அது இப்போ முக்கியமில்லை... ஷோபி, ஒரு வாரமா க்ளாஸ் பக்கமே வரலை, என்னன்னு விசாரிக்கத்தான் நீயும் நானும் வந்திருக்கோம். நான் மட்டும் வந்தா, அவங்க வீட்டுல தப்பா நினைப்பாங்கன்னுதான் உன்னை வரச் சொன்னேன்" என்றான் பிரபாகர்.

"அடப்பாவி... கடைசில என்னை... தாதி வேலை பார்க்க வச்சுட்டியேடா..." - ரம்யா கத்திற்கு அதிர,

"ச், நாக! உளராம வா!" என்றவாறே வீட்டின் கதவருகே சென்றவன், "நான் தான் மெயின் ரோல்... நீ ஜஸ்ட் துணை நடிகை தான் புரியுதா? உன் திருவாயை கொஞ்சம் அடக்கியே வை" என்று தேவையற்ற அறிவுரையைக் கொடுத்து, தேவையான ஒரு மிதியைக் காலில் வாங்கிக் கொண்டான்.

கதவைத் தட்டிவிட்டு, நண்பர்கள் இருவரும் காத்திருக்க, ஷோபனா தான் திறந்தாள்! தலையில் பெரிய கட்டுடன்!

"ஐய்யோ! என்னாச்சு ஷோபி!" என பிரபாகர் அலற, ரம்யாவும் ஷோபனாவும் எச்சரிக்கைப் பார்வை பார்க்கும்போதே, லீலாவதி உள்ளிருந்து வந்து விட்டார்.

அதிர்ந்த முகத்தை மறைப்பதே பெரும்பாடாய் இருக்க, "வணக்கம் அம்மா" என்று புன்னகைத்து கை கூப்புவது, பிரபாகருக்கு கடினமான காரியமாய் இருந்தது.

"வணக்கம் தம்பி" என்றவர், "யாரும்மா இவங்க?" என்றார் மகளிடம்.

ஷோபனா பதில் சொல்லும் முன்னர், "நாங்க... ஷோபனாவோட காலேஜ்-ல படிச்சவங்க. அவளோட சீனியர்ஸ்!" என்றான் பிரபாகர் அவசரமாய்.



"ஹோ... அப்படியா... தம்பி" என அவர் ரம்யாவின் முகம் பார்க்க, பெக்க பெக்கவென முழித்துக் கொண்டிருந்த ரம்யா சட்டென்று சுதாரித்து "ஆமா... ஆமா... ஆமாம்மா!" என்று ஒருவாறாய் மழுப்பி முடித்தாள்.

அதை நம்பி, "வாங்க வாங்க..." என்று அவர் உள்ளே அழைத்துச் செல்ல, எச்சில் முழுங்கிய முகத்துடன் ரம்யாவும், கோபத்தில் ஜிவுஜிவுத்த முகத்துடன் ஷோபனாவும் உள்ளே சென்றனர்.

"என்னாச்சும்மா ஷோபனாவுக்கு? ஆட்டோல வரும் போது ஆக்சிடென்ட் ஆகிடுச்சா?" - ஷோபனாவிடம் திரும்பாமல், லீலாவதியிடமே பேசினான் பிரபாகர்.

"இல்லை தம்பி! வீட்டில தான், மேல இருக்க பெட்டியை எடுத்துக் கொடுக்கச் சொன்னேன்... என்ன ஞாபகத்தில எடுத்துச்சோ... பெட்டியோட முனை தலையைப் பதம் பார்த்திடுச்சு."

"அச்சச்சோ! டாக்டர்கிட்டப் போனீங்களா அம்மா?"

"போனோம் தம்பி, அஞ்சு தையல் போட்டிருக்காங்க, நாளைக்குக் கட்டுப் பிரிக்கிறதா சொல்லியிருக்காங்க."

"ஹோ சரிம்மா! வேலை... வேலைன்னு அலைய விடாம, அவளைப் பத்திரமா பார்த்துக்கோங்க!" - ஷோபனாவை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, அவன் சொல்ல,

"எங்க தம்பி!? தினம்... தினம்... இவளை வீட்டில பிடிச்சு வைக்கிறதே பெரும் பாடா இருக்கு. ரொம்ப சொன்னா... கடனுக்கு தவணை கட்ட வேண்டாமான்னு என்னையே கோபிக்குது!"

இதுவரை பேச்சின்றி பார்த்துக் கொண்டிருந்த ஷோபனா, "அம்மா! நம்ம கஷ்டத்தை எதுக்கு மேடை போட்டுக்

''பாருங்க தம்பி... இப்படித்தான், எப்பவும் கோபம் தான்...''

''பேசாம... உங்க பொண்ணுக்கு 'ஷோபனா'ன்னு பேர் வச்சதுக்குப் பதிலா... 'கோபனா'ன்னு பேர் வச்சிருக்க லாம்மா. பொருத்தமா இருந்திருக்கும்'' என்றான் பிர பாகர், நக்கலாக.

சட்டென சிரித்த லீலாவதி, ''சரியா சொன்னீங்க தம்பி!'' என்று மேலும் சிரிக்க, ரம்யாவும் அடக்க முடியாத புன்னகையை சிரிப்பாய் உதிர்க்க, ஷோபனாவிற்கு அவர்களது சிரிப்பை விட, பிரபாகர் தனக்கு சூட்டிய நாமகரணத்தில் பெரும் கடுப்பாய் இருந்தது.

''என்னம்மா சிரிப்பு? வந்தவங்களுக்கு காபி... டீ ஏதாவது கலந்து எடுத்திட்டு வாங்க. கழுவின பாத்திர மெல்லாம் பின்பக்கம் இருக்கு... போய் எடுத்திட்டு வாங்க.'' - எதையாவது சொல்லி, அன்னையை உள்ளே அனுப்ப வேண்டுமே என்ற எண்ணத்தில் அவள் சொல்ல,

''அடடே மறந்தே போயிட்டேனே!'' என்ற லீலாவதி யின் தலை மறைந்ததும், ''பார்த்தியா ரம்யா? நம்ம ஆளுக்கு நம்ம மேல எவ்வளவு கரிசனம்ன்னு'' என்று பெருமை பீத்தினான் பிரபாகர்.

பிரபாகரின் பேச்சை துல்லியமாய் கேட்டுவிட்ட ஷோபனா ''மண்ணாங்கட்டி!'' என்றாள் உரக்கவே.

''இங்க எதுக்கு வந்தீங்க? அதுவும் ஒரு பொய்யோட...'' என்று அவள் அடிக்குரலில் எகிற,

''நீ பாட்டுக்கு... ஒரு வாரத்துக்கு டிமிக்கிக் கொடுத் திட்டு ஜாலியா வீட்டில இருந்துட்டே. உன்னைப் பார்க் காம என்னால இருக்க முடியுமா சொல்லு... அதான் உன் செல்போன் நம்பரை வச்சு, அட்ரஸ் கண்டு பிடிச்சேன்...'' என்று விவரம் கூறியவன்,



''ஆனாலும், நீ ஒரு நல்ல குடிமகள், ஷோபனா... ச்சே ச்சே கோபனா!'' என்று பேச்சை வளர்த்தான்.

ஷோபனாவிடமிருந்து ரம்யாவிடம் திரும்பியவன் ''ஹேய் ரம்ஸ், வெயிட்... வெயிட்... குடிமகள்ன்னு சொன்னதும் டாஸ்மாக் ரேஞ்சுக்குப் போகக் கூடாது. அதெல்லாம் உன்னை மாதிரி மாடர்ன் பொண்ணுங்க செய்றது... என்னோட ஆளு ரொம்ப நல்லலலலவ...'' என்று ரம்யாவை உசுப்பேத்தி விட்டுவிட்டு,

''ஏன் தெரியுமா உன்னை நல்ல குடிமகள்ன்னு சொன்னேன்... செல்போன் ஆபீஸ்ல சரியான அட்ரஸ் சொல்லியிருக்கே இல்லையா? அதுக்காகத் தான்!'' என்று தன் குடிமகள் விளக்கத்தை, ஒரு வழியாக முடித்தான்.

''ஹய்யோ... ஏன் இப்படி படுத்துறீங்க? எதுக்காக வீட்டுக்கு வந்தீங்க? அம்மா வரதுக்கு முன்னாடி... சீக்கிரம் கிளம்புங்க'' - ஷோபனா பொறுமையிழந்து கத்த,

''பார்த்தேனே உன் ஆளின் கரிசனத்தை...'' என்று அர்த்தத்துடன் முறைத்த ரம்யாவை ஒதுக்கிவிட்டு,

''ஹே கூல் யா! தையல் விட்டுக்கப் போகுது!'' - பிரபாகர் பதற,

''நீங்க இங்க இருந்தா தான், எனக்கு டென்ஷன் ஏறுது! முதல்ல கிளம்புங்க!'' - ஷோபனா வெளிப்படை யாய் துரத்தவே செய்தாள்.

''அட்லீஸ்ட் ஒரு டம்ளர் தண்ணியாவது குடிச்சிட் டுப் போறேன், கோபஸ்! முதல் முறையா... மாமியார் வீட்டுக்கு வந்திருக்கேன்...''

பேசிக்கொண்டே போனவனின் கழுத்தருகே, கைகளை நெரிப்பது போல் கொண்டு வந்தவளை, ரம்யா

ஆச்சரியத்துடன் பார்க்க, பிரபாகர் புன்னகைத்திருந்தான்.

ஷோபனாவுக்குமே, அவனது செய்கை விநோதமாய் பட்டது போலும்! திகைப்புடன் விலகி, பின்புறம் நகர்ந்தவளின் பார்வை, பிரபாகரிடம் படிந்து மீண்டு, படிந்து மீண்டு, படிந்து மீண்டு என சடுகுடு ஆடின.

''என்னடா நடக்குது இங்க?'' என்று ரம்யா மண்டையைப் பிய்த்துக் கொள்ள, அவனை மேலும் படுத்தாமல் லீலாவதி காபியுடன் வந்து சேர்ந்தார்.

''காபியே... உங்களோட கை மணம் எப்படி இருக்கும்ன்னு சொல்லுது! ஒரு நாள்... உங்க கையால சாப்பிடணும்மா'' - கூசாமல் ஐஸ் வைத்து, ஒரு வேளை சாப்பாட்டிற்கும் வழி செய்தான் பிரபாகர்.

லீலாவதியும் அதில் உருகி, ''கண்டிப்பா தம்பி! உங்களை மாதிரி... வெளியாளுங்க வந்து போனாலாவது, இவ முன்னாடி மாதிரி, சிரிச்சு சந்தோஷமா இருக்காளான்னு பாப்போம்!'' என்று பெருமூச்சு விடவும்,

''அம்மா!'' என்ற அதட்டல், ஷோபனாவிடமிருந்து வந்தது!

''சரிம்மா. கோபனா... ருத்ரனா ஆகிறதுக்கு முன்னாடி, நாங்க கிளம்புறோம்! வரோம் கோபனா... ச்சே ச்சே ஷோபனா!'' என்ற பிரபாகர், பெருத்த நிம்மதியுடன் வெளியே வந்தான்.

வண்டியில் வரும்போது, ''என்னடா இது? அவளுக்கு உன்னைப் பிடிக்காத மாதிரி இருக்கே? ஆனா... நீ என்னடான்னா... மிட்டாய் கடைக்குள்ள, கண்டிக்க ஆளில்லாம நுழைஞ்ச சுகர் பேஷண்ட் மாதிரி இருக்கியே?'' என்ற ரம்யாவிடம்,



''நீ சொல்றது கரெக்ட்! பிடிக்காத மாதிரி இருக்கு... ஆனா அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கு!'' - குழம்பியிருந்தவளை மேலும் குழப்பியவன்,

''நாம வீட்டுக்குள்ள நுழைஞ்சதும் அவளோட முகத்தைப் பார்த்தியா?'' என்று கேட்டு, அவனே பதிலையும் சொன்னான்.

''என்னைப் பார்த்ததும், அவ முகத்தில முதல்ல... ''அடடே வீட்டைக் கண்டுபிடிச்சுட்டான் போலவே''ங்கிற திகைப்பு... அப்புறம் ''நம்மைத் தேடி வந்துட்டானே''ங்கிற சந்தோசம்... அடுத்து ''ஹப்பாடா வந்தானே''ங்கிற நிம்மதி... கடைசியா ''இத்தனை நாள் வரலையே''ங்கிற கோபம்!'' - அனுபவித்துச் சொன்னவனின் குரலில் ரசனை இருந்தது.

முடிவில், ''எனக்கு அவளோட எல்லா உணர்ச்சியையும் விட, அந்தக் கோபம் ரொம்பப் பிடிச்சிருக்கு, ரம்யா! உரிமையுள்ள இடத்தில வர கோபம்!'' என்றான் அதே ரசனையுடன்.



# 12

அன்று முழுவதும் ஒரு மிதப்பாகவே திரிந்தவன், அடுத்த நாள் காலை நான்கு மணிக்கு துயில் எழுந்ததும் இல்லாமல், ரம்யாவையும் எழுப்பி விட்டு,

அவள் ''ப்ளீஸ்டா கொஞ்ச நேரம் தூங்குறேன்டா... உனக்காக நேத்து நைட் முழுசும் பஸ்ல ட்ராவல் பண்ணி வந்தது டயர்டா இருக்கு... ப்ளீஸ் பிரபா...'' கெஞ்சியதையும் மதிக்காமல்,

"உன்னை... எதுக்கு இங்க வரவழைச்ச இருக்காங்க? தூங்குறதுக்கா? எருமை மாடு... எனக்கு ஹெல்ப் பண்றதுக்காக வந்திருக்கிறது ஞாபகத்தில இருக்கட்டும்!" என்றதோடு, இரக்கமே இல்லாமல் அவளை இழுத்துக் கொண்டு சென்று விட்டிருந்தான். கோயம்புத்தூர் குளிருக்காக போட்டிருந்த ட்ராக் பாண்ட்டும், முழுக்கை ஸ்வெட்டரும் அவள் மானத்தைக் கப்பலேற்றாமல் இருக்க, "குளிருதுடா கிராதகா!" என்று கத்திக் கொண்டே அவனுடன் வண்டியில் சென்றாள்.

வண்டியை ரயில் நிலையம் வரை ஓட்டிச் செல்லாமல், பெரிய ஆஸ்பத்திரி அருகே நிறுத்திவிட்டு, ரம்யாவை ரயில் நிலையம் வரை நடந்தே அழைத்துச் சென்றான் அவளது அருமை தோழன்.

சற்று நேரம், ரயில் நிலைய வாயிலில் நின்றபோது, திடீரென "ஹுர்ரே! என்னோட கணிப்பு தப்பா போகலை... கோப்ஸ் வந்துடுச்சு!" என்றான் பிரபாகர் உற்சாகத்துடன்.

'தான் நேற்று அவளை வீடு தேடிச் சென்று பார்த்த சந்தோஷத்திலேயே, அவளது காயம் முழுதாய் குணமாகி இருக்கும்! அதனாலேயே, இன்று காலை கண்டிப்பாக அவள் ரயில் நிலையத்திற்கு வருவாள்!' என்பது அவனது கணிப்பு! அது தப்பாகாமல் போனதில் அளவில்லா மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் கொண்டிருந்தான், அக்காதலன்!

அரைத் தூக்கத்தில் அதை உணரும் நிலையில் கூட இல்லாமலிருந்த ரம்யாவை உலுக்கி, "ஹே ரம்ஸ், ஷோபிகிட்ட போய் ஆட்டோ கேளு!" என்றான் முணுமுணுப்பாய்.

"லூசாடா நீ! வீட்டுக்கே திரும்ப ஆட்டோ-ல போகவாடா இங்க வந்தோம்! ஆனாலும் ரொம்ப ஓவர்ரா



போயிட்டு இருக்க... இதெல்லாம் சரியே இல்லை!" - ரம்யா சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு வந்தாள்.

"ஹே இல்லை ரம்ஸ்! நான் மட்டுமே வந்திருப்பேன்... ஆனா அதிகாலை வேளையில ஷோபி, ஆம்பிளைகளை வண்டியில ஏத்த மாட்டா... ஒண்ணு லேடீஸ் இல்லன்னா ஃபாமிலியா இருந்தா தான் ஏத்துவா! இன்னைக்கு, நான் மட்டும் வந்து வண்டி கேட்டிருந்தா... ஏத்தவும் முடியாம, ஏத்தாம இருக்கவும் முடியாம புள்ள தவிச்சுப் போகும்! அதான், உன்னை சைடு டிஷ் மாதிரி கூட்டிட்டு வந்தேன்!" - நீளமாய் விளக்கம் கொடுத்து,

"வேற யாரும் கேட்கிறதுக்கு முன்னாடி நீ போய் கேளு!" என்று அவளைக் கிள்ளி வேறு விட்டு, பத்திரகாளியாய் அவளை உருமாற்றினான்.

என்ன கொடுமை செய்தாலும் நண்பன் அல்லவோ, ரம்யாவும் போய் ஷோபனாவிடம் "சௌரிபாளையம் வரைக்கும் போகணும்... ஆட்டோ வருமா?" என்றாள்.

கண்களோ, "வராது" என்று சொல் என்று அபிநயம் பிடித்தன.

எதை வேகமாய் படிக்குமோ இல்லையே ரம்யாவின் கண்ணசைவை மிகச் சரியாக படித்துக் கொண்டே ஷோபனாவின் மூளை, "சௌரிபாளையமா... நூற்றைம்பது ரூபா ஆகும்!" என்றாள் மிடுக்குடன்.

'அடிப்பாவி, எழுபது ரூபாயே அதிகம். பாதிக்கும் பாதி கூடக் கேட்கிறாளே! வேண்டுமென்றே வம்பு செய்கிறாள்!' - பிரபாகரின் மனம் துணுக்குற்றது.

"நூற்றைம்பது ரூபாவா? அநியாயமா இருக்கே? நாற்பது ரூபா தான் தர முடியும்... வரீங்களா?" - இது பிரபாகரின் உயிர்த் தோழி, ரம்யா.

'இவ அடுத்த அடிப்பாவியா... நாற்பது ரூபாயாம் என்னை வச்சு ரெண்டும் காமெடி பண்ணுதுங்க...' - மனசுக்குள் புலம்பித் தள்ளினான், பிரபாகர்.

''என்னம்மா நீங்க!? அடி மாட்டு விலைக்குக் கேட்கு நீங்க? இதென்ன மாட்டு வண்டியா? இல்லை குதிரை வண்டியா? ஆட்டோமா... ஆட்டோ... பெட்ரோல்-ல போற ஆட்டோ!'' வேறு யாராய் இருக்க முடியும்? ஷோபனாவே தான்!

''ஆமா... ஆட்டோ பெட்ரோல்-ல ஓடாம, தண்ணி லேயா ஓடும்... பேச்சைப் பாரு பேச்சை!'' - மானசீகமாய் பிரபாகரின் முகம் தோள்பட்டையில் இடித்துக் கொண் டது.

''சரி... உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம். நாற்பத்திரண்டு ரூபாவுக்கு வரியா?'' - ரம்யா பெருந் தன்மையுடன் பேசுவது போல் பாவனை செய்ய,

''ரொம்பத் தாராளம்! ரெண்டு ரூபாயில... விட்டக் கோட்டையைப் பிடிக்கப் போறா?!'' ரம்யாவின் மண்டையில் கொட்ட வேண்டும் போலிருந்தது பிரபாக ருக்கு!

''நாற்பத்திரண்டு ரூபாவுக்கு வேற ஆளைப் பாரும்மா. எத்தனை ஆட்டோ நிக்குது. அவங்ககிட்ட கேளுங்க... என் சவாரி நேரத்தை வீணாக்காதீங்க! நகருங்க!''

ஷோபனா, ஆட்டோவை நகற்றுவது போல் பாவனை செய்ய,

அதுவரை பேசாமலிருந்த பிரபாகர், ''என்னை வச்சு ஒரு முழுநீள காமெடி பிலிம் எடுத்துடுவீங்க போலவே! அம்மா, தாயே ஷோபனா... உனக்கு நூற்றைம்பது ரூபாய்க்குப் பதிலா இருநூறு ரூபா தரேன்... வண்டியை எடு'' என்று ரம்யாவை வலுக்கட்டாயமாக உள்ளே தள்ளி, தானும் வண்டியில் ஏறி அமர்ந்தான்.



ரயில் நிலையத்தை விட்டு வெளியே வரும்வரை, பேசாமலிருந்த பெண்கள் இருவரும், வாயிலைக் கடந்த தும் ''ஹஹஹாஹா'' என்று அடக்க முடியாமல் சிரித்தனர்.

சில நிமிடங்கள், அவர்களை முறைப்பது போல் பாவனை செய்த பிரபாகர், தானும் அவர்களது சிரிப்பில் இணைந்து கொண்டான்!

சிரித்து முடித்ததும், ''தையல் பிரிச்சாச்சா?'' என்றான் பிரபாகர் மென்மையாகி விட்டக் குரலில்.

''ஹ்ம்ம். நேத்து சாயங்காலமே!'' - ஷோபனாவின் குரலும் மென்மையாகவே இருந்தது.

''ஒரு நாள் ரெஸ்ட் எடுத்திட்டு வந்திருக்கலாமே?'' - மேலும் குழைந்தான் பிரபாகர்.

''வராம இருந்திருந்தா... இப்படியொரு இளிச்சவாய் சவாரி கிடைச்சிருக்குமா? முப்பது ரூபா கூட பெறாத தூரத்துக்கு இருநூறு ரூபா கொடுக்கும் தாராளப் பிரபு ஏமாந்து போயிருப்பாரே!'' - கிண்டலாய் முடிந்த ஷோபனாவைத் தொடர்ந்து,

''என்னடா நடக்குது இங்க? கடைசில... உங்க போதைக்கு என்னை ஊறுகாய் ஆக்கிட்டீங்களேடா'' என்ற ரம்யாவின் புலம்பலோடு வீடிருக்கும் ஏரியாவும் வந்து சேர,

''வீடு வரைக்கும் போக வேண்டாம்... கௌவோட கேள்விக்குப் பதில் சொல்லி மாள முடியாது. இங்கேயே விட்டுடு...'' என்றான் பிரபாகர்.

''பிரபா... ப்ளீஸ்டா... ரொம்பத் தூக்கமா வருது... நடக்க முடியாதுடா... ஆட்டோலயே போவோமே...'' ரம்யா கெஞ்ச

"உன் தூக்கத்தைப் பார்த்தா, என்னை வீட்டில உப்புக்கண்டம் போட்டுடுவாங்க... பேசாம நட..." என்ற அவளது நண்பன், அவளைப் பிடித்து இழுத்துச் செல்லவே,

"ஆனாலும்... அவங்களை ரொம்பப் படுத்துறீங்க" என்றது ஷோபனாவே தான்!

"பாரு... பாரு... நேத்து வந்த அவங்களுக்கே என் மேல எவ்வளவு கரிசனம்ன்னு பாரு..." - அழாக்குறையாக நடந்து சென்ற ரம்யாவை அம்போ என்று விட்டு விட்டு,

பாக்கெட்டிலிருந்து இருநூறு ரூபாயை எடுத்து ஷோபனாவிடம் நீட்டினான், பிரபாகர், "வாங்குற சம்பளம் எல்லாம்... ஆட்டோக்குக் கொடுத்தே காலியாகுதேடா, முருகா!" என்ற வேண்டுதலுடன்.

சிரித்தாலும், அவன் கொடுத்த பணத்தை மறுக்காமல் வாங்கிக் கொண்ட ஷோபனாவைப் பார்த்து, "உலகமே அழிஞ்சாலும்... நாம நல்லா இருக்கணும், நல்ல எண்ணம்மா உனக்கு..." என்று மேஜர் சுந்தர்ராஜன் பாணியில் பேசியவன், சிரிப்புடனே வீட்டை நோக்கிச் சென்றான்.

அன்று மாலையில், எப்பொழுதும் போல் உப்பிலிபாளையம் அருகே ஷோபனாவின் ஆட்டோவில் ஏறியவன், "அப்போ, என்னை நீ காதலிக்கிறே?" என்றான் முதல் வார்த்தையாக.

"என்னது? நான்? உங்களை? காதலிக்கிறேனா? என்ன கதை இது?" - ஒரொரு வார்த்தைக்கும், அவள் கேள்விக்குறி போட,



"ஆமா... காதலிக்கிற! அப்புறம் எதுக்கு... நான் காத்திட்டு இருப்பேங்கிறதுக்காக இன்னைக்குக் காலையில ரயில்வே ஸ்டேஷன் வந்தே?" - மடக்கினான் பிரபாகர்.

அசரும் ரகமா ஷோபனா! "இதென்ன கதையா இருக்கு? நேத்தே... தையல் பிரிச்சாச்சு... தேவையில்லாம எதுக்கு வீட்டில இருக்கணும்ன்னு வந்தேன். உங்களைப் பார்க்க இல்லை!" - ஷோபனாவும் சளைக்காமல்.

"இன்னைக்குத் தானே தையல் பிரிக்கிறதா... உங்கம்மா சொன்னாங்க?" - பிரபாகர் சந்தேகமாய் சிரிக்க,

"டாக்டர் இன்னைக்கு... வெளிய போறாங்களாம். அதான் நேத்தே வரச் சொன்னாங்க..." - எல்லாவற்றுக்கும் பதில் இருந்தது ஷோபனாவிடம்.

"சரி... விடு. என் மேல உனக்கு இஷ்டம் தான்... அது உனக்கு உறுதியா தெரியும். அதை.. உன் வாயாலயே ஒத்துக்க வைக்கிறேனா இல்லையா பாரு!" என்ற சபதத்துடன், இறங்கிக் கொண்ட பிரபாகர், தான் நகர்த்த வேண்டிய காய்களை எண்ணிக் கொண்டே வீட்டிற்குச் செல்ல, இறைவனோ பிரபாகருக்கு முன்பாகவே காய்களை நகர்த்தி வைத்திருந்தான்! அவனது ஆட்டமே பிரதானம் அல்லவோ!

பிரபாகர் சபதம் போட்டு, சரியாக இருபத்திநான்கு மணி நேரத்தில், "புது கம்பெனிக்கு கவர்மென்ட்கிட்ட இருந்து முதற்கட்ட அப்ரூவல் வந்து விட்டது" என்ற செய்தியுடன், அவனது நண்பர்கள் விக்னேஷும் நரேனும் கோவை வந்து சேர்ந்தனர்.

நான்கு மாதங்களுக்கு முன்னரே, அனுப்பப்பட்ட பெட்டிஷன், பல டேபிள்கள் தாண்டி, மேலும் பல ஆமிரங்களை முழுங்கி, இப்போது தான் கைக்கு வந்திருக்கிறது.

இதற்கு மேல், தங்கள் பக்கமிருந்து தாமதம் இருக்கக் கூடாது என்பதற்காக, நண்பர்கள் நால்வரும் வேலையில் ஆழ்ந்தனர்.

புது நிறுவனம் என்பதால், இடம் பார்ப்பது, அதற்கான பொருட்கள் வாங்குவது, வேலைக்கென்று தனியாய் ஆட்கள் வைக்காமல் தாங்களே வேலை செய்ய முடிவு செய்திருந்தமையால் முந்தைய நிறுவனத்தில் ராஜினாமா கடிதம் கொடுப்பது, முக்கியமா புது கம்பெனிக்கு ஆர்டர் / ப்ராஜெக்ட் கிடைப்பதற்கு அலைவது என்று ஏகப்பட்ட வேலைகள் இருந்தன.

ஆளுக்கு ஒன்று என்று பிரித்துச் செய்த போதும், நால்வருமே உறங்க இரவு ஒரு மணிக்கு மேலானது.

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து கொள்ள எண்ணி, அலாரம் வைத்து விட்டுத் தூங்குவான் தான் - ஆனால், அலறிக் கொண்டிருக்கும் அலாரத்தை வேற்று கிரக வாசியாய் எண்ணி அவன் உறங்க, ''ஏன்டா, தினம் தினம் நாலு மணிக்கு அலாரம் வைக்கிறதா உங்க குல சாமிக்கு நேந்துக்கிட்டு இருக்கியா என்ன? மனுஷனைத் தூங்க விடாம கொல்றே!'' என்று விக்னேஷ் எழுந்து அலாரத்தை அணைத்துவிட்டு, கலைந்த தூக்கத்திற்காக பிரபாகரைத் திட்டிவிட்டுப் படுப்பது வழக்கமானது.

எட்டரை மணி வரைக்கும், வீட்டிலேயே சுத்திக் கொண்டு திரிய முற்படுவான் தான்! ஆனால், ரம்யா விட்டால் தானே! ஒரு நாள், அதிகாலை நான்கு மணிக்கு எழுப்பிக் கூட்டிச் சென்றான் என்ற கடுப்பில், நித்தமும் ஏதாவது வேலை சொல்லி, அவனை அலைக்கழித்தாள்!

இரவிலும், சரியாக எட்டரை மணிக்கு வானொலி நிலையம் போவதற்கு மட்டும் தான் பிரபாகரால் அலுவலகத்தை விட்டு நகர முடிந்தது.



கைப்பேசிக்கு அழைத்தாலும், அவனது எண்ணைப் பார்த்துவிட்டு, அழைப்பைத் துண்டித்தாள் அவனது காதலி!

அதற்கு மேல், எங்கே ஷோபனாவைப் பார்ப்பது... அதற்கும் மேலாய் அவளைக் காதலைச் பேசவது... அதற்கும் மேலாய் அவளைக் காதலைச் சொல்ல வைப்பது...

அவனது சோர்ந்த முகத்தைப் பார்த்துவிட்டு, ''ஆடிய ஆட்டமென்ன... பேசிய வார்த்தை என்ன... குவித்து வைத்த திட்டுக்கள் என்ன...'' என்று நண்பர் கூட்டம் கிண்டல் செய்து மாய்ந்தது.

ரம்யாவிடம் ஒரு விஷயம் போய்விட்டால், அது விக்னேஷ் மற்றும் நரேனிடம் போகாமல் இருக்குமா என்ன? அதெல்லாம், ஷோபனா வீட்டிற்குச் சென்ற மறுநாளே போய்விட்டது! அதன் விளைவு தான், இது!

''வேணாம்... டென்ஷன் ஆகிடுவேன்...'' - பிரபாகர் பல்லைக் கடிக்க.

''டென்ஷன் ஆவியா... ஆவு... ஆவு...'' - விக்னேஷ் சிரிக்க,

''ஆனாலும்... என்ன ஆட்டம் தெரியுமாடா விக்கி! ரயில்வே ஸ்டேஷன்-ல இருந்து வீட்டுக்கு வர, சார் இருநூறு ரூபா கொடுக்கிற அளவுக்கு... பணக்காரர் ஆகிட்டார்...'' - ரம்யா உசுப்பேத்த,

''அண்ணன் யாரு... வீரரு... தீரரு... காதல் மன்னரு... நமக்கு ஒரு நாளைக்கு பத்து ரூபா செலவு பண்ணியிருப்பானா? அங்க மட்டும்... அள்ளி விடுறான்...'' - விக்னேஷ் தன் பொருமலை சமயம் பார்த்து வெளிப்படுத்த,

"பிரபா... வேணும்னா... அவங்களோட ஆட்டோல ஒரு சென்சார் பொருத்திடலாம். அந்த சென்சாரை உன்னோட மொபைலுக்கு கனெக்ட் பண்ணிடுவோம். அவங்க எங்க போனாலும்... உனக்கு அது படமா வரும்..." - நரேன் தன் கம்ப்யூட்டர் புத்தியை அமல் படுத்த,

"வேணாம்... என்னைக் கொலைகாரன் ஆக்காதீங்க..." - பிரபாகர் ருத்ரதாண்டவம் ஆடாத குறை!

"இந்த சார் சொல்றாரு... ஷோபனாவுக்கு கோபனான்னு பேர் வச்சிருக்கணுமாம்... பேசாம, இவனுக்கு இவங்கப்பா டென்ஷன்கர்ன்னு பேர் வச்சிருக்கலாம்... என்னமா டென்ஷன் ஆகுறான் பாரேன்" - ரம்யா, "ஆச்சரியப்படுவது" போன்ற போர்வையில், அவனை சீண்டி விட்டு வேடிக்கைப் பார்த்தாள்.

"டெண்டுல்கர் கிரிக்கெட்-ல பேமஸ் ஆன மாதிரி, இவன் ஆட்டோ ரேஸ்ல பெரிய ஆளா வந்திருப்பான். கிரிக்கெட்டுக்கு டெண்டுல்கர்... ஆட்டோவுக்கு டென்ஷன்கர்! என்ன ஒரு ரைமிங்!" - மற்ற நேரங்களில் எலியும் பூனையுமாய் இருக்கும், விக்னேஷும் ரம்யாவும் சேர்ந்து கொண்டு பிரபாகரை ஒரு வழி பண்ணிக் கொண்டிருந்தனர்.

இவர்களது கிண்டல், கேலி அராஜகம், அட்டூழியம், எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளும் வண்ணம், ஷோபனாவைப் பார்க்காமல் இருப்பது பிரபாகரைப் படுத்தி வைத்தது!

இப்படியே நாட்கள் இருபதாய் உருமாற, அடுத்த நாள் எப்படியாவது ஷோபனாவைப் பார்த்துவிட வேண்டும் என்ற முடிவுடன் பிரபாகர் இருந்தபோது, ஷோபனாவே அவனைத் தேடி வந்தாள்!



மஹூம்! அவனைத் தேடி அல்ல! சுதாகரைத் தேடி! அதாவது, மாநகரக் காவல் ஆணையரைத் தேடி!

ஞாயிற்றுக்கிழமை அன்று மதியம் உணவு நேரத்தில், வாசலில் மணி அடிக்கவும், "நான் பார்க்கிறேன்" என்று உணவு மேசையிலிருந்து பிரபா எழ,

"பீபா... நா... நா..." என்று அவனை முந்திக் கொண்டு ஓடினான் நகுல்.

"சாப்பிடாம இருக்க... எல்லா வழியும் பார்ப்பானே?" என்று கௌசல்யாவின் சலிப்பு காற்றில் மறைய, நகுல் அவனது "பீபா"வும் கதவுக்கு சென்றனர்.

பிரபாகர், கதவின் தாளை நீக்கிக் கொண்டிருந்த வேளையில், ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்திருந்த வாண்டு "ஹையா... ஷோபி ஆன்ட்டி! தேய்... பதத்... ஷோபி ஆன்ட்டி வந்துக்காங்க... ஸ்கூல் போவாம் வா..." என்று உற்சாகமாய் உள்ளே ஓட, ஆச்சரியத்துடன் கதவைத் திறந்தான் பிரபாகர்.

திறந்த கதவின் வழியே நின்றிருந்த ஷோபனாவின் பார்வையும், பிரபாகரின் பார்வையும் மோதி நின்ற ஒரே வினாடியில், அங்கே ஆயிரமாயிரம் அர்த்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன!

பிரபாகரின் முகத்தில் நிலைத்திருந்த ஷோபனாவின் பார்வை, சட்டென அவன் மேனி முழுதும் உன்னிப்பாய் கவனித்து மீண்டது.

அவனுக்கு ஒன்றுமில்லை என்ற நிம்மதியில் தொய்ந்த கண்கள், "நன்றாக இருந்து கொண்டே, தன்னைப் பார்க்க வராமல் இருந்திருக்கிறான்" என்ற கோபத்தில் கண்களில் ருத்ரம் பாய அவனை முறைக்கத் துவங்கியிருந்தாள் ஷோபனா.

அவளது கோபத்தை உணர்ந்து ''சாரி ஷோபி... புது கம்பெனி ஆரம்பிக்கிறதில கொஞ்சம் பிஸியா இருந்துட்டேன்...'' என்று பிரபாகர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.

''என்ன ஷோபனா? இந்த நேரத்தில? ஏதாவது பிரச்சனையா?'' - என்று கௌசி வந்து சேர, பேச்சும் முறைப்பும் தற்காலிக ஓய்வு பெற்றன.

''ஒரு சின்ன பிரச்சனைம்மா. நம்ம DCP சாரை பார்க்கலாம்ன்னு வந்தேன்...'' என்று இழுத்தாள், ஷோபனா.

''உள்ள வாம்மா'' என உள்ளே அழைத்துச் சென்ற கௌசல்யா, கணவனை அழைக்க உள்ளே சென்றாள்.

''என்ன பிரச்சனை? யாராவது உன்கிட்ட வம்பு பண்ணாங்களா? யாருன்னு சொல்லு?'' - பிரபாகர் படபடப்புடன் கேள்விகளைத் தொடுக்க, அவனை ஏறெடுத்தும் பாராமல் மெதுவாக சோபாவில் சென்று அமர்ந்தாள்.

'இரண்டு வாரமா... என்னைத் தேவையில்லாம தவிர்த்தீங்க இல்லையா? இப்போ நீங்க கேட்கும்போது... நான் மட்டும் உடனே பதில் சொல்லணுமா? முடியாது! போய்யா!' - உள்ளுக்குள் கறுவியவாறே, அமைதியின் திருவுருவமாய் ஷோபனா அமர்ந்திருந்தாள்.

''உன்னை நான் காதலிக்கவே இல்லை!'' என்று கோவிலில் சத்தியம் செய்யாத குறையாக மறுத்தபோதும், அவனைப் பாராமல் இருந்த மூன்றாவது நாளே, அவனைக் காணாது இருப்பது தன் வாழ்வில் ஓர் இருட்டை உண்டு பண்ணுகிறது என்பதை உணர்ந்திருந்தாள் ஷோபனா!

தந்தை இறந்த பிறகு, தனக்கென்று இருக்கும் ஒரே நலம் விரும்பி தாய் மட்டுமே என்றிருந்த ஷோப



னாவிற்கு, தன்னைப் பற்றி அக்கறை கொள்ள ஒரு ஜீவன் இருக்கிறது என்பதே சந்தோஷத்தைக் கொடுத்தது!

அதுவும், அவன் காதலைச் சொன்ன விதம் - மிகவும் பிடித்திருந்தது!

தனக்காக என்று பலதும் செய்துவிட்டு, முடிவில் தன்னிடம் சொன்னது... அதிலும், உனக்கு என் மேல் காதல் போன்ற உணர்வுகள் இல்லையெனில் விலகிக் கொள்கிறேன் என்று அவன் சொன்னது... எல்லாமே பிடித்திருந்தது!

இது சரியா... தவறா என்ற எண்ணப் போராட்டத்தில் தான், பரணிலிருந்து பெட்டியை எடுக்கும்போது தவறவிட்டது!

''இதற்குப் பெயர் தான் காதலா?'' - என்று மனம் தடுமாற.

''அக்காவும் தானே, அத்தானை பார்த்த உடனே, இவர் தான் எனக்குரியவர் என்ற எண்ணத்திற்கு வந்தாள். அதுவும், அவருடன் வாழ முடியாது என்று தெரிந்ததும்... சாகத் துணிந்தாளே! நான் பிரபாகருடன் பேசியது போல்... அவள் அத்தானுடன் பேசியது கூட இல்லையே? அப்போ... இது தான் காதலா?'' என்று அதே மனமே விடையும் கண்டது!

தந்தையின் மறைவிற்குப் பின்னர், மறைந்து போயிருந்த அவளது விநோதப் பழக்கம் வெகு நாட்களுக்குப் பின்னர் தலை தூக்கியதும் அப்போதுதான்!

பிரபாகர் வீட்டிற்கு வந்தன்று காலையில், ''இன்று மட்டும்... பிரபாகர் என்னைத் தேடி வந்து விட்டால், இது காதலே தான்!'' என்று எண்ணியிருந்தாள் ஷோபனா.

ஒரு நிமிடம் - ''அவனால் எப்படி அட்ரஸ் கண்டு பிடித்து வர முடியும்? கண்டிப்பாக வரமாட்டான். அதனால், இது காதல் இல்லை'' என்று மனம் வாதாடினால்,

மறு நிமிடம் - ''காதலிக்காக காதலன் என்னென்னவோ செய்கிறான்... அட்ரஸ் கண்டு பிடிப்பது என்ன பெரிய விஷயமா? மனம் இருந்தால் மார்க்கமுண்டு'' என்று மனம் எதிர்த்து வாதாடும்.

எல்லாவற்றையும் மீறி, பிரபாகர் அன்று வீடு தேடி வந்தபோது, ஷோபனாவின் மனம் அடைந்த நிம்மதிக்கு அளவே இல்லை!

கடவுளே, இது சரியான பாதை தான் என்று வழி காட்டியிருக்கிறார் என்றெண்ணினாள் அவள்!

ஆனால், ஒத்துக் கொள்ள மனமில்லை!

அதுவும், அவன் சபதம் செய்தபோது... 'என்ன செய்து தன் சம்மதத்தைப் பெறுவான்? சற்று விளையாடிப் பார்ப்போமே' என்றெண்ணியது ஷோபனாவின் மனம்!

இருவரும் அடுத்தவர் ஆடப் போகும் விளையாட்டில் குறியாக இருக்க, இறைவனோ அவன் இஷ்டத்திற்கு காய்களை நகர்த்தி, ஆட்டத்தை வேறு திசைக்குத் திருப்பி விட்டிருந்தார்.

அவரது ஆட்டத்தின் ஒரு பகுதியாய் தான், அன்று ஷோபனாவின் ஆட்டோவில் பயணம் செய்த ஒருவர், பணம் நிரம்பிய பை ஒன்றை ஆட்டோவில் தவற விட்டுச் சென்றிருந்தார்.

அதை, காவல் நிலையத்தில் சமர்ப்பிக்கத் தான் இப்போது வந்திருக்கிறாள்.

அவர்களது குடியிருப்பு அருகே இருக்கும் காவல் நிலையத்திலேயே கொடுத்திருக்கலாம்... ஆனால் அங்கே சென்றால், பிரபாகரைப் பார்க்க முடியாதே!



''தேனிசை'' நிகழ்ச்சியில் அவனது கம்பீரக் குரலைக் கேட்டபோதும், நேரில் பார்ப்பது போன்ற உணர்வு வர மறுத்தது, அவளுக்கு!

'உடம்பில் சிறு காயமேதும் பட்டு, அதைத் தன்னிடம் காட்டிக் கொள்ள விரும்பாமல், வாராதிருக்கிறானோ என்ற கவலையில் இங்கு வந்தால்... குத்துக்கல் போல் வந்து நிற்கிறானே! அதுவும், பாயசம் வழிந்தோடும் கையோடு!' ஷோபனா - கோபனா அவதாரம் எடுத்தாள்!

இதனடுவே, ஆட்டோவில் விட்டுச் சென்ற பணம், பயணித்தவரின் விவரம், எங்கே இறங்கினார்... எங்கே ஏறினார் போன்ற விவரங்கள், திரும்ப அந்த இடத்திற்கு ஷோபனா சென்றாளா என்ற விவரம் ஆகியவற்றை பெற்றுக் கொண்ட சுதாகர், ''எல்லா ஆட்டோக்காரங்களும் உன்னை மாதிரி இருந்துட்டா, பரவாயில்லைம்மா'' என்ற பாராட்டலோடு அவளை அனுப்பி வைத்தான்.

## 13

ஷோபனா வந்து சென்ற பின்னர், வீடு முழுவதும் அவள் பேச்சாகவே இருக்க, பிரபாகருக்கு இருப்பே கொள்ளவில்லை.

வண்டியை எடுத்துக் கொண்டு, மாலையில் தாங்கள் சந்திக்கும் இடத்திற்கு விரைந்தாள்! பார்க்கோ... பீச்சோ அல்ல... அதே தூசி சூழ்ந்த, வாகன இரைச்சல் மிகுந்த மெயின் ரோடு தான்! இவனுக்கென்று, அமைகிறது பாருங்களேன்!

ஷோபனாவும் அவன் வருவான் என்று எண்ணினாள் போலும், சரியாக அதே சமயம் வந்து சேர்ந்தாள்.

ஆனால், நிற்கவில்லை! வேண்டுமென்றே அவனைக் கடந்து சென்றபோது, வேகத்தைக் கூட்டி, ஆட்டோவின் ஆக்சிலேட்டரை உறும விட்டாள்!

''இவளுக்கு இருக்க திமிருக்கு!'' என்று முணங்கிய போதும், வண்டியை எடுத்துக் கொண்டு அவளைத் துரத்தினான் பிரபாகர்.

ஒரு கட்டத்தில், அவளும் அவனும் அருகருகே பயணிக்க, ''ஷோபி... நான் காதலுக்காக எதுவும் செய்வேன் தான். அதுக்காக, உயிரையெல்லாம் விட முடியாது... ப்ளீஸ்மா... வண்டியை நிறுத்து!'' - பிரபாகர் கத்த,

காதிலேயே விழாதவள் போல், ஷோபனா போய்க் கொண்டே இருந்தாள்.

அந்த இடத்தில், ஒரு திருப்பம் வர, ஷோபனாவுடன் பேசிக் கொண்டு வந்த ஜோரிலும், அவளோட ஓட்டிக் கொண்டு ஓட்டி வந்த சர்க்கஸ் சாகசத்திலும், பிரபாவின் வண்டி நன்றாக சறுக்கி, அவனைக் குப்புற விழ வைத்தது!

''அம்மா...'' என்ற அவனது அலறலைத் தொடர்ந்து,

''கடவுளே...'' என்ற அலறலுடன் ஷோபனாவின் வண்டி கிரீச்சிட்டு நின்றது.

ரோட்டில் விழுந்து கிடந்த பிரபாகரின் அருகே வந்தவள், கண் மூடிக் கிடந்த அவனது தோற்றத்தைப் பார்த்ததும் ''பிரபு... என்னாச்சு... என்னாச்சு... எழுந்திருங்க பிரபு... என்னைப் பாருங்க... ப்ளீஸ்... என்னாச்சுப்பா... ஐய்யோ... கடவுளே... எழுந்திருங்களேன்...'' என்று அவனது கன்னத்தில் வேகமாய் தட்டினாள்.

மின்னல் வேகத்தில், வண்டியிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தாள்! அப்போதும் அசைவில்லை!



காதை அவன் நெஞ்சில் வைத்துப் பார்த்தாள்! நெஞ்சம் துடிப்பது போலத் தான் இருந்தது!

இருந்தபோதும், நெஞ்சில் இரு கைகளையும் வைத்து, பலமாய் குத்தினாள்!

அப்போதும் அவன் விழிக்காமல் இருக்க, மிகுந்த பதற்றம் கொண்டு ''ஐயோ... யாராவது வாங்களேன்... ஹெல்ப்... ஹெல்ப்... ஹெல்ப்...'' என்று கூவினாள்!

ஓரிருவர் ஓடி வரவும், ''இவரை... என்னோட ஆட்டோ-ல தூக்கி உட்கார வைக்க முடியுமா ப்ளீஸ்... கொஞ்சம் சீக்கிரமா... ஐயோ... மயக்கமா இருக்காரே...'' பதற்றத்தில் ஷோபனாவின் கைகள் நடுங்கின.

பிரபாகரை கைத்தாங்கலாக ஆட்டோவில் ஏற்றி, அவனது பைக்கை ஓரமாய் நிறுத்தி, வண்டியை சாவியைக் கொடுத்துவிட்டு ''ரொம்ப பதட்டமா இருக்கியேம்மா... ஒழுங்கா ஆட்டோவை ஓட்டிடுவியா?'' என்று ஒரு பெரியவர் கேட்டதற்கு,

''ஹ்ம்ம் போய்டுவேன். ரொம்பத் தேங்க்ஸ்...'' என்றவள், வண்டியை வேகமாய் எடுத்தாள்!

''காக்க காக்க கனக வேல் காக்க...'' - ஷோபனாவின் நெஞ்சும், உதடும் நெக்குருக பிரார்த்திக்கையில்,

''ஹே கோட்ஸ்! என் மேல உனக்கு இத்தனை லவ்வா?'' என்ற குரல் பின்னிருந்து கேட்டது!

திடீரென கேட்ட குரலில் தூக்கி வாரிப் போட்டு, ஷோபனா வேகமாய் பின்புறம் திரும்ப, ஆட்டோ தடுமாறி, தறி கெட்டு ஓடியது!

''ஹே... ஹே... பார்த்து... பார்த்து...'' எனக் கூவிய பிரபாகர், சமயோசிதமாய் யோசித்து, இருக்கையிலிருந்து

எழுந்து, கைகளை முன்னே நீட்டி, வண்டியை ஓரம் கட்டினான்.

''என்னம்மா நீ? இப்படியா படார்ன்னு பின்னாடி திரும்புறது?'' - அவன் கடிந்து கொள்ளும்போது,

''நடிச்சீங்களா?'' என்று கேட்ட ஷோபனாவின் கைகள், அவன் கன்னத்தைப் பதம் பார்த்திருந்தது!

அவள் அடிப்பாள் என்று எதிர்பார்த்திராத பிரபாகர், திகைத்து விழிக்க,

''எதில தான் விளையாடுறதுன்னு ஒரு அளவு இல்லையா?'' என்றாள் தணியாத சினத்துடன்.

''அடிப்பாவி... இப்பவே அடிக்கிறியே?'' - பிரபாகரால் திகைப்பிலிருந்து வெளிவர முடியவில்லை!

''உயிர் பயத்தோட விளையாடுறீங்களே? உங்களுக்கு அறிவில்லை?!'' - வாங்கிய அறையை விட ஷோபனாவின் வார்த்தைகள் சூடாய் இருந்தன!

''சும்மா... உன்னோட காதலை...'' பிரபா இழுக்க,

''சும்மாவா... செத்த மாதிரி நடிக்கிறது சும்மாவா... எனக்கு ரொம்பப் பிடிச்ச அப்பா ரோடு ஆக்சிடென்ட்ல தான் இறந்து போனாங்க... அது மாதிரி... நீங்களும் என்னை விட்டுப் போய்டுவீங்களோன்னு நான் பயந்த பயம்...'' - கோபம் போய் ஷோபனாவின் வார்த்தைகள் அழுகையில் தழுதழுத்தன.

''அப்போ உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு... அப்படித் தானே? இதை உனக்கு உணர வைக்கத்தான், மயக்கம் வந்த மாதிரி நடிச்சேன்...'' - அவளது அழுகை என்னமோ செய்தபோதும், அது சொன்ன சேதி இனித்தது!

''ஆமா... பிடிச்சிருக்கு... ஹ்ம்ம் இல்லை... பிடிச்சிருந்தது... இப்போ பிடிக்கலை... என்னோட பலவீனங்



களை உங்களோட பலங்களா மாத்திக்கிற உங்களோட சுயநலம் பிடிக்கலை...'' என்று மிகத் தெளிவாய் பேசியவள்,

''உங்களை எனக்குப் பிடிக்கலை... சுத்தமா பிடிக்கலை...'' என்றாள் முடிவாக.

''ஹே ஷோபி! என்னடா... சும்மா ஒரு விளையாட்டுக்கு... அதுக்குப் போய் இவ்வளவு டென்ஷன் ஆவாங்களா?'' - அதிர்ந்து போன பிரபாகர், விளக்கம் கொடுக்க முயன்றான்!

அவளோ, ''முதல்ல, வண்டியில இருந்து இறங்குங்க!'' என்று பல்லைக் கடித்தாள்.

அவன் நகராமல் இருக்க, ''இப்போ... இறங்க முடியுமா முடியாதா? என்கிட்டே தேவையில்லாம வம்பு பண்றீங்கன்னு ஊரைக் கூட்டிடுவேன்... ஜாக்கிரதை...'' என்றாள் மிரட்டலாக.

தான் செய்த செயல், அவளது இதயத்தின் மென் பகுதிகளுள் ஒன்றை பலமாய் தாக்கியிருக்கிறது என்பது புரிய, மெல்ல வண்டியிலிருந்து இறங்கினான்.

பாக்கெட்டிலிருந்த அவனது வண்டி சாவியை எடுத்து, அவனது கையில் திணித்தவள், ''இனிமேல், எந்த விதத்திலையும் என்னை நீங்க தொந்தரவு செய்றதை என்னால பொறுக்க முடியாது. மீறி ஏதாவது கிறுக்குத் தனம் செஞ்சா, உங்க அண்ணன்கிட்ட வந்து கம்ப்ளைன்ட் கொடுக்கவும் தயங்க மாட்டேன்!'' என்றுவிட்டு, அங்கிருந்து மறைந்தாள்!

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்த கதையாக, தானே தன் காதலுக்கு எதிராய் போனோமே

என்ற வருத்தத்தில், பிரபாகரால் அந்த இடத்தை விட்டு நகரவே முடியவில்லை!

தொங்கிய முகத்துடன் வீட்டிற்கு வந்தவன், நண்பர்களிடம் அதை பகிர்ந்து கொள்ளவும், ரம்யா விழுந்து விழுந்து சிரித்தாள் என்றால்... விக்னேஷ் உருண்டு பிரண்டு சிரித்தான். நரேன், அவன் பங்கிற்கு கம்ப்யூட்டர் சீங்காரத்தில்... பிட் பை பிட்டாகச் சிரித்தான் - அதாவது நினைத்து நினைத்துச் சிரித்தான்!

"இதுக்குப் பேரு தான்டா சொந்தச் செலவில் சூனியம் வச்சுக்கிறது!" - விக்னேஷ் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க,

ரம்யாவோ "உனக்கென ஆஸ்கார் நாயகன்னு நினைப்பா? மயக்கமா இருக்க மாதிரி நடிச்ச... சரி... கொஞ்சம் அப்பப்ப... கண்ணை முழிச்சுப் பார்த்திருக்கலாம் இல்லையா... அதான் ஓவர் நடிப்புக்கு ஓவர் ஆப்பா வச்சுட்டா..." என்றாள் சிரிப்புடன்.

நண்பர்களின் கேலிக்கு, முன்னர் போல் கோபப்படவோ, கத்தவோ இல்லாமல், "ப்ச்..." என்ற சலிப்பை மட்டுமே பரிசாய் கொடுத்துவிட்டு, பிரபாகர் நகர்ந்து விட, அனைவருமே திகைத்தனர்!

தொடர்ந்த நாட்களில் ஷோபனாவை சந்திக்கும் பிரபாகரின் முயற்சிகள் அனைத்தும் படு தோல்வியை செவ்வனே தழுவின!

வானொலி நிகழ்ச்சியின் மூலம் பிரபாகர் கொடுத்த மறைமுக செய்திகள், எதற்குமே எந்தவித பிரதிபலனும் இல்லாமல் போனது!

"பொன் மானே கோபம் ஏனோ!" என்று தன் கட்டை குரலில் பாடிக் கூடப் பார்த்தான்! அடுத்த நாள்,



முறைப்பின் அளவு அதிகமானதே ஒழிய துளியும் குறையவில்லை!

நேரில் பார்த்தால், பாறை போல் இறுகிய முகம் மட்டும் தான் அவன் கண்களை நிறைத்தது!

அதையும் மீறி, பேசினால், விருட்டென வண்டியை எடுத்துக் கொண்டு விரைந்தாள், அந்த ஜான்சி ராணி!

தொடர் தோல்விகளின் அணிவகுப்பில் சோர்ந்து போய், உடல் தளர்ந்து, உள்ளம் உடைந்து, வீட்டு சோபாவில் அமர்ந்த பிரபாவின் அருகே வந்தமர்ந்தாள் கௌசல்யா!

சோபாவின் பின்புறத்தில் தலையை அண்டக் கொடுத்து, ஓய்ந்து போய் அமர்ந்திருந்தவனின் தலையை மெல்ல வருடி, அவளை இழுத்து தன் மடி மேல் சாய்த்துக் கொண்டாள்.

அவனும் தாய் மடி சேர்ந்த கன்றாய், அவளது மடியில் முகம் புதைத்து, "தப்பு பண்ணிட்டேன்... அண்ணி... ரொம்பப் பெரிய தப்பு பண்ணிட்டேன்..." என்றான் மேலோங்கிய வருத்தத்துடன்.

மிக மிக அபூர்வமாய் வரும் அவனது "அண்ணி" என்ற அழைப்பைக் கேட்டதும், கௌசல்யாவும் அவனது தலையை அழுந்தக் கோதிக் கொடுத்து,

"சரி செய்ய முடியாத தப்புன்னு வாழ்க்கையில எதுவுமே இல்லை, பிரபா!" என்றாள் மெல்ல.

அவன் பேசாமலிருக்கவே, "ஷோபியோட ஏதாவது பிரச்சனையா?" என்றாள் கௌசல்யா, மென்மை ஏறிய குரலில்.

"அண்ணி..." என அதிர்ந்த அவன், தலையை நிமிர்த்தவும், "உன் விஷயம் அனைத்தும் நானறிவேன்"

என்பது போன்ற அர்த்தமுள்ள தலையசைப்பு ஒன்று அவளிடமிருந்து வந்தது!

சிறு அமைதிக்குப் பின்னர் ''ரம்யாவா?'' என்றான் அவன்.

அதற்கு நேரடியாக பதில் சொல்லாமல் ''சின்ன வயசி லிருந்து உன்னை வளர்த்தவடா நா...'' என்றாள் அவனது அண்ணி.

''ம்ம். சாரி கௌ... நான் மட்டுமே அவளைச் சம் மதிக்க வைக்கணும்ன்னு நினைச்சேன்... உனக்குத் தெரிஞ்சா, வேற விதங்களையும் அவ நிர்ப்பந்திக்கப் படுவாளோன்னு தயங்கினேன்... ஆனா... ப்ச்...'' நல்ல மகனாய் மன்னிப்பையும் கேட்டான்.

''பரவாயில்லைடா... எனக்குப் புரியுது!'' - நல்ல தாயென அவளும் தேற்றினாள்.

''இதெல்லாம் இப்ப முக்கியமில்லை. உனக்கும் ஷோபிக்கும் நடுவுல என்ன பிரச்சனை?'' என்றவள், ''விளையாட்டு வினையானதை'' உணர்ந்ததும், ''சின்ன வயசில இருந்தே... உன்னோட குணம் இப்படித்தான்னு தெரிஞ்சா அவ, மனசு மாற வாய்ப்பிருக்கு. நான் வேணும்னா அவகிட்ட பேசட்டுமா?'' எனவும்,

''உன்கிட்ட சொல்லாம மறைச்சதுக்கு, நீயும் என்கிட்டே கோச்சுப்பியோன்னு நினைச்சேன். ஆனா... நீ இப்ப எனக்காக பேசுறேன்னு சொன்னதே போதும், கௌ. நான் பார்த்துக்கிறேன்...'' என்றவனுக்கு, உள்ளுக்குள் ஓர் நம்பிக்கை பிறந்தது.

''உளமார்ந்த அன்பிருக்கும் இடத்தில், கோபங்களும் அழகே! அவை மறைவதும், மன்னிக்கப்படுவதும் கூடுதல் அழகே!'' - என்ற ...



ஷோபியும் அவனை மன்னிப்பாள்... அதுவும் சீக்கிரமே என நம்பினான் பிரபாகர்!

அவனது நம்பிக்கையின் வீரியம் ஷோபனாவை எட்டியது போலும். அடுத்த நாள் பின் மதியம் இரண்டு மணிக்கு பிரபாகரின் கைப்பேசி ''ஷோபி'' என்ற தலைப் புடன், ''அழகே சுகமா... உன் கோபங்கள் சுகமா...'' என்ற பாடல் வரிகளை ஏந்தி வந்தது!

ஒரு மணி நேரம் முன்பு.

பிரபாகரின் மீதிருந்த கோபத்தில், அவனைத் தவிர்க்க வேண்டிய கட்டாயத்தில், பேருந்து நிலையத்திலிருந்து ஈச்சனாரி வரை கேட்ட சவாரியை, பெய்து கொண்டிருந்த மழையையும், ஊரை விட்டுத் தள்ளியிருந்த இடத் தையும் மதிக்காமல், சவாரியை ஏற்றிக் கொண்டு ஈச்சனாரி தாண்டிச் சென்றாள்.

ஏறிய நபர்களை இறக்கி விடும் வரையோ, அவர் களிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு, திரும்பும் வரையிலோ பிரச்சனை ஏதும் இருக்கவில்லை!

சொல்லப் போனால், ஈச்சனாரி ரோட்டில் இருந்த அவளது கல்லூரியை... முன்னாள் கல்லூரியைத் தாண் டும் வரையிலும் கூட பிரச்சனை இருக்கவில்லை! ஒரு வருடத்திற்குக் குறைவாக என்றாலும், தனக்குப் பிடித்த மான படிப்பை எடுத்துப் படித்ததால், அக்கல்லூரியோடு ஷோபனாவிற்கு ஒரு இணை பிரியா உறவொன்று இருந்தது! அதனால், கல்லூரியைக் கடக்கும்போது, கைகள் தானாகவே வண்டியின் வேகத்தைக் குறைத்து விட, நிதானமாய் தான் படித்த வசந்த காலத்தை நினைவு கூர்ந்த வண்ணம், கனவுகளைத் தொலைத்த பரிதாபத் தில் ஷோபனா பயணித்துக் கொண்டிருக்கையில்... அது

கல்லூரியை விட்டு சற்று தொலைவிலிருந்த தேநீர் கடையில் தம் அடித்துக் கொண்டிருந்த ஷோபனாவின் சீனியர்கள், அவளது ஆட்டோவைக் கண்டதும் வழிமறித் தனர்!

''ஹே... நம்ம ஜூனியர்டா...'' என்று ஒருவன் கூவ, கூடியிருந்த மற்றவர்கள் எல்லோரும் ஒரே தாவலாக, வண்டியின் முன்னே சேர்ந்து கொண்டனர்! வானரத்தின் ஜென்மம் தொட்டு வந்தவர்கள் அல்லவோ!

''அடடே, சொர்ணாக்கா ரேஞ்சுக்கு இருக்காளேடா...''

''என்னம்மா.. படிக்கிறதை விட்டுட்டு, ஆட்டோ ஓட்டுறே? குடும்பத்தில, அவ்வளவு கஷ்டமா?''

''ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் படிச்சிட்டும், ஆட்டோ தான் ஓட்டப் போறோம்... அதை ஏன் படிக்க ணும்னு விட்டிருப்பா!''

''நான் அப்பவே சொல்லலை... இவ எல்லாம் இன்ஜி னியரிங் படிச்சு என்ன சாதிக்கப் போறான்னு?''

''காசிருக்கவன் படிக்க வேண்டிய படிப்பு கண்ணு, இதெல்லாம். நீயெல்லாம் ஆசைப் படறதே தப்பு...''

''குடும்பத்தைக் காப்பாத்த ஆட்டோ மட்டும் தான் ஓட்டுறியா... இல்லை... வேற விதமா...''

கேலி கிண்டலில் ஆரம்பித்த பேச்சுக்கள், விரசங் களையும்... அளவுகோல்களையும் மீறிச் செல்ல, ஷோப னாவின் மேனி ஒரு நிமிடம் அதிர்ந்தது!

உதவிக்கென்று யாரையாவது அழைக்கலாம் என்றால், மதிய வேளையின் அமைதி அச்சாலையை ஆக்கிரமித்து இருந்தது! கல்லூரி காவலாளியை அழைக்கலாம் என்று திரும்பினால், மதிய உணவு இடைவேளைக்கென அவர்



தன் கூடாரத்திற்குள் சென்று விட்டிருந்தார் போலும்! வெளியே, ஆளைக் காணவில்லை!

என்ன செய்வது என்று புரியாது அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, பிரதாப் (அவளது சீனியர் களுள் அவளை அதிகமாய் வம்பு செய்பவன்) அவளது கைகளைப் பிடித்து வெளியே இழுத்தான்.

அந்த நிமிடத்தில், மூளைக்குள் மின்னல் வெட்ட, வேகமாய் கைப்பேசியை எடுத்து, பிரபாகரின் எண்ணை அதிவேகமாய் அழுத்தினாள்! ஏற்கனவே, இன்று காலை யில் இருமுறை அவனது எண்ணை அழுத்தி, அழுத்திப் பார்த்துவிட்டு, 'ம்ஹூம் பேசக் கூடாது... பேசக் கூடாது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, கைப் பேசியை வைத்திருந்தமையால், டயல் செய்யப்பட்ட எண்களில் முதல் எண்ணாய் அவனது இருந்தது!

முதல் ரிங்கிலேயே அவன் எடுத்துவிட, ''பிரபு... நான்... நான்...'' என பயத்தில், திணறிய ஷோபனா, பிரதாப் கைப்பேசியை பறிக்க முற்படவும்,

''பிரபு... ஈச்சனாரி பக்கத்தில... என்னோட காலேஜ் கிட்ட ஒரு பிரச்சனை... உடனே வாங்க... உடனே... உடனே...'' என்றாள் தந்தி மொழியில்.

''இதோ வரேன்மா... நீ பத்திரமா இரு...'' - பிரபாகர் பதறும் போதே,

''புதுசா ஒரு ஆள் பிடிச்சிருக்கே போலவே!'' என்று பிரதாப், அவளது கைப்பேசியைப் பறிப்பது கேட்டது!

''அடடே, பாருடா... மிஸ்டர் ஷோபியாம்... கல்யாணம் வரைக்கும் போய்டுச்சு போலவே...'' - ஒரு ஆணின் குரலைத் தொடர்ந்து,

''கல்யாணம் ஆகிட்டு எல்லாம் நடந்ததா... இல்ல... கல்யாணத்துக்கு முன்னாடியே... மேட்டர் ஓவர்ரா...'' - அடுத்தவனின் அசிங்கம் வெளிப்பட,

ஷோபனா ''ச்சீ... அசிங்கமா பேசாதீங்க! அவர் என்னோட கணவர் ஆகப் போறவர்'' என்று கத்துவது மிகத் துல்லியமாய் கேட்க,

வேலையில் ஈடுபட்டிருந்த விக்னேஷை ''வாடா... வாடா...'' என விரட்டி, வெளியே வந்தான்.

ராமநாதபுரத்திலிருந்த அவனது புதிய அலுவலகத்திலிருந்து கிளம்பும்போதே, ''ரம்யா, ஈச்சனாரி பக்கத்தில என்னென்ன இன்ஜினியரிங் காலேஜ் இருக்குன்னு கண்டு பிடிச்சு எனக்கு சொல்லு... சீக்கிரம்...'' என்று ரம்யாவிடமும்,

''நரேன், அந்த காலேஜோட காண்டாக்ட் நம்பர் கிடைக்குதா பாரு... பிரின்சிபால் நம்பர் கிடைச்சா பரவாயில்லை'' என்றவன், வண்டியை ரெடியாக வைத்துக் கொண்டிருந்த விக்னேஷின் பின்னே அமர்ந்து பறந்தான்.

போகும் வழியாவும், பிரபாகரின் கைகள் கைப்பேசியை உபயோகித்துக் கொண்டே வந்தன.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்து இரண்டு நிமிடங்கள் கூட ஆகாத நிலையில் ''நம்பர் கண்டு பிடிச்சியா?'' என்று ரம்யாவுக்கு அழைத்தான், பிரபா.

''இல்லைடா... நெட்-ல பார்க்கிறேன்...'' - அவள் சொல்லும்போதே, இணைப்பைத் துண்டித்தவன், வேகமாய் தன் வானொலி நிலைய நண்பன் ஒருவனுக்கு அழைத்தான்.

கோவையிலேயே பிறந்து வளர்ந்தவன் என்பதால், ''ஈச்சனாரி போற வழியிலன்னா, ஒரு காலேஜ்தான்



இருக்கு, பிரபாகர். ஆனா, ஈச்சனாரி தாண்டி, ரெண்டு காலேஜ் இருக்கே...'' என்றான் அந்த நண்பன்.

அவனது பதிலில் ''ஈச்சனாரி கிட்டன்னு மட்டும் தான் சொன்னா... பின்னாடியா முன்னடியான்னு தெரியலையே...'' என்று குழம்பிய பிரபாகர்,

''இங்கிருந்து ஈச்சனாரி போறதுக்கு ரெண்டு மூணு வழியிருக்கா...'' என்று நண்பனிடம் கேட்க,

''ரெண்டு... மூணா... நிறைய குறுக்கு வழி இருக்கு, பிரபா. ஆனா, பிரதானமா இதான் காலேஜ்ஸ்'' எனக் கூறி, மூன்று பொறியியல் கல்லூரிகளின் பெயரையும் கூறினான், மறுபுறமிருந்த நண்பன்.

நடுநடுவே, ''சீக்கிரம், விக்கி! சீக்கிரம்! அங்க அவ... தனியா மாட்டிக்கிட்டு இருக்கா, விக்கி! சீக்கிரம் போ...'' என்று விக்னேஷை துரிதப்படுத்தவும் மறக்கவில்லை.

அடுத்ததாய், ''ரம்யா... இந்த மூணு காலேஜோட நம்பரை வாங்கித் தா... அப்புறம், எந்த காலேஜ்-ல ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் கோர்ஸ் இருக்குன்னு விசாரி'' என்று கல்லூரிகளின் பெயரைக் கொடுத்து விட்டு, மீண்டும் விக்னேஷை விரட்டினான்.

அங்கே கல்லூரியிலோ, புலிகளிடம் சிக்கிய மானாய் நின்றிருந்த ஷோபனாவின் உள்ளம் ''பிரபு... வந்திடுங்க... சீக்கிரம் வந்திடுங்க...'' என்று ஜபித்துக் கொண்டே இருந்தது!

கூடவே, ரோட்டில் ஏதாவது வாகனம் வருகிறதா என்று எட்டி... எட்டிப் பார்த்தன, அவளது பயந்த கண்கள்!

''வாட்ச்மேன்... வாட்ச்மேன்'' எனவும் அவள் கத்த, கூடியிருந்தவர்களின் சத்தத்தில் அந்த வயசான காவலாளிக்கு அவளது குரல் கேட்கவே இல்லை!

எதில் ஒன்று கூடுவார்களோ இல்லையோ... ஒரு பெண்ணை வதைப்பது எனும் போது அனைவரும் ஒன்று கூடி, சங்கிலித் தொடராய் அவளை உள்ளே சிறை வைத்திருந்தனா!

வெளியே தான் செல்ல முடியவில்லை, உள்ளே இருக்கும் ஆட்டோவை எடுத்துக் கொண்டு விரையலாம் என்றெண்ணி, அவள் ஆட்டோவின் அருகே சென்ற நிமிடம் இல்லாமல், பின் பக்க இரு டயர்களிலிருந்த காற்றை இருவர் எடுத்துவிட, ஒருவன் ஆட்டோ சாவியை எடுத்து தூர வீசினான்.

''தண்ணி ஏதும் அடித்திருக்கிறார்களோ'' என்று ஷோபனா பயப்படும் அளவிற்கு அவர்களின் வெறியாட்டம் சென்றது!

கல்லூரி மாணவி என்றாலாவது ராக்கிங்... ஈவ் டீசிங் ஆகியவற்றில் அவர்களைத் தண்டிக்க முடியும்... அது தான் ஷோபனா கல்லூரியில் படிக்கவே இல்லையே... தங்களைக் கேட்க ஆளே இல்லை என்ற நினைப்பில் கொக்கரித்து, கூத்தாடினார்கள்!

அங்கேயோ, போத்தனூர் ரயில் நிலையம் அருகே வந்திருந்த விக்னேஷிடம், ''ஈச்சனாரி போறதுக்கு நிறைய வழி இருக்காமேடா... நாம போற ரூட்டும், அவ இருக்க ரூட்டும் ஒண்ணா இருக்கணுமே!'' என கவலை காட்டிக் கேட்டான் பிரபாகர்.

''பயப்படாதே, பிரபா! ஷோபனாவுக்கு எதுவும் ஆகியிருக்காது... தைரியமான பொண்ணுடா அவங்க...'' - விக்னேஷ் தேற்றினான்.

''தைரியமானவ தான்... ஆனா... அங்க நிறைய பசங்க இருக்க மாதிரி இருக்கு, விக்கி. பொண்ணோட பலம் மனசில... ஆனா ஆணோட பலம் அவனோட



உடலில... சில சமயம், மனசை உடம்பு காயப்படுத் திடும்!'' - பிரபாகர் விரக்தியும் பயமுமாய் பேசும்போதே, ரம்யாவிடம் இருந்து அழைப்பு வந்திருந்தது. ஒரு பொறியியல் கல்லூரியின் பெயரைச் சொல்லி, ''இங்க தான் ஆட்டோ மொபைல் இன்ஜினியரிங் கோர்ஸ் இருக்கு. இது அவங்களோட போன் நம்பர்'' என்று ஒரு எண்ணைக் கொடுத்தாள்.

பிரபாகரின் நேரத்திற்கு, ''நீங்கள் அழைக்கும் வாடிக் கையாளர் எண் தற்சமயம் பிஸியாக இருப்பதால்...'' என்றே கேட்டுக் கொண்டிருந்தது.

மூன்று முறைக்கும் மேல் கூப்பிட்டு சலித்துப் போனவன், சட்டென நினைவு வந்தவனாய், சுதாகருக்கு அழைத்தான். சுருக்கமாய் விவரம் கூறி, ஈச்சனாரி அருகே இருக்கும் காவல் நிலையத்திற்குத் தகவல் சொல்லி, தான் சொல்லும் பொறியியல் கல்லூரிக்கு ஆட்களை அனுப்பும்படி அவன் கேட்டுக் கொள்ளும்போதே, விக்னேஷ் அக்கல்லூரியை நெருங்கி விட்டிருந்தான்.

பன்னிரெண்டு... பதிமூன்று கிலோ மீட்டர் தொலை வில் இருக்கும் ஈச்சனாரிக்கு எவ்வளவு மெதுவாய்... டிராபிக் ஜாமின் நடுவே வந்தாலும், முக்கால் மணி நேரத்தில் வந்து விடலாமே! விக்னேஷ் விரட்டிய விரட் டிற்கு, இருபது நிமிடத்தில் அங்கே இருந்தனர் நண்பர் கள் இருவரும்!

அதற்குள், கல்லூரியின் எண்ணும் இணைப்பில் கிடைத்துவிட, ''உங்க காலேஜ் பசங்க, வெளிய கலாட்டா பண்ணிட்டு இருக்காங்க. வெளிய வந்து நீங்க கண்டிக் கிறீங்களா? இல்லை... போலீஸ்-ல ஈவ் டீசிங்ன்னு பிடிச் சுக் கொடுக்கட்டுமா?'' என்றான். ஆண்கள் கூட்டத்தின்

நடுவே ஷோபனாவின் ஆட்டோ கண்ணில் பட, "நிறுத்து... நிறுத்து..." என்று கத்திக் கொண்டே, கீழிறங்கி ஓடினான்.

கேலி என்ற போர்வையில் ஓர் பெண்ணின் எல்லையையும், காதலையும், கற்பையும் விரசமாக்கிக் கொண்டிருந்த நாட்களுள் ஒன்று. ஷோபனாவின் மேனியில் கை வைக்கத் துணிந்த வேளை அது!

பிரபாகர் உள்ளே நுழைந்து தடுப்பதற்குள், ஷோபனாவின் கைகள் கை வைத்தவனின் கன்னத்தில் இறங்கி இருக்க, "ஏய்..." என்று எதிர்குரல் கொடுத்தது அவனது நண்பர் கூட்டம்!

மேலும் என்ன செய்வானோ என்ற பயத்தில் பின்னடைய, பின்னிருக்கும் கழுகுகளின் மேல் முட்டி விடுவோமோ என்ற பயத்தில் முன்னடைய என்று அப்பாவையின் மனமும் உடலும் ஒருங்கே நடுங்கிக் கொண்டிருந்தன!

## 14

அதற்குள் "ஷோபிம்மா" என்று உருகல் கேட்க, அந்த அழைப்பைக் கேட்டவுடன் ஷோபனாவிற்கு எங்கிருந்து தான் அவ்வளவு பலம் வந்ததோ,

கூடியிருந்த ஆண்கள் அனைவரையும் விலக்கிக் கொண்டு, "பிரபு" என்று அவனிடம் பாய்ந்தாள்!

"ஏய்... எங்கடி போறே?" என்று பிரதாப்பின் கைகள், ஓடியவளைப் பற்றி நிறுத்த முற்பட்டதும்தான் தாமதம், பிரபாகர் அவனை ஓங்கி ஒரு அடி அடித்திருந்தான்.



"பொம்பளைகிட்டயா உன் தைரியத்தைக் காட்டுறே? பொறுக்கி நாயே?!" என்றவன், ஷோபனாவை ஒரு கையால் பற்றிக் கொண்டே, மறு கையால் அவன் சட்டையைக் கொத்தாய் பிடித்தான்.

"வேணாம் பிரபு! அவங்க நிறைய பேர் இருக்காங்க..." ஷோபனாவின் நடுங்கிய குரல் சொன்ன சேதியை பிரபாவின் மனமும் உணர்ந்தே இருந்தது!

பலசாலி தான் என்றாலும், பதினைந்து இருபது பேர் இருக்கும் கூட்டத்தை அடித்துப் போட அவன் ஒன்றும் சினிமா கதாநாயகன் இல்லையே! விக்னேஷ் உடன் இருக்கிறான் தான்... இருந்தாலும் ஐந்து பேர் ஒன்றாகத் தாக்கினால் என்ன செய்ய முடியும்?

சமயோசிதமாய் யோசித்து, பிரபாகர் "போலீஸ்... போலீஸ்..." எனக் கத்த, கூட்டத்தில் பயம் படர்ந்தது!

நாலா பக்கமும் பார்வையை ஓட்டியவர்கள், போலீஸ் வாகனம் எதையும் காணாது "ஹீரோ... நமக்கு சால் ஜாப்பு கட்டுறாராம்டா..." என சிரிக்கும்போதே, கல்லூரியிலிருந்து ஐந்து பேரும், பைக்கில் இரு காவலாளிகளும் வந்து சேர்ந்தனர்!

ஒருவரைக்கூட விடாமல், வளைத்துப் பிடித்ததும், காவலாளிகளிடம் "கேஸ் எதுவும் வேணாம், சார்! காலேஜ் பேர் கெட்டிடும்!" என்று கல்லூரி நிர்வாகம் கெஞ்சியது.

"சார், நான் மீடியாக்காரன், எங்கண்ணா... போலீஸ் கமிஷனர்! இந்த கேஸ் இல்லன்னா... வேற எதிலையாவது எல்லோரையும் சிக்க வைக்க என்னால முடியும்! என்ன சொல்றீங்க?" - பிரபாகர் மிரட்ட,

வந்திருந்த காவலாளிகளுள் ஒருவர், "டி.சி.பி. கிட்ட பேசிக்கோங்க சார்" என்று கல்லூரி நிர்வாகத்திடம்

பேச்சை முடித்த கையோடு ''முத்து... நீ ஸ்டேஷனுக்கு போன் போட்டு, எல்லோரையும் ஏத்திட்டுப் போக வேன் கொண்டு வரச் சொல்லு...'' என்றார் மற்றொருவரிடம்.

அதிலேயே அரண்டுப் போன மாணவர்கள், ''சாரி சார்... ஏதோ தெரியாம விளையாட்டுக்கு... சும்மா பிரண்டிலியா தான்...'' என இழுக்க,

''ஹோ... பிரண்டு வண்டில காத்து இறக்கி விடுறதும், வண்டி சாவியைத் தூக்கி எறியறதும்தான் உங்க அகராதில பிரண்டிலியா...'' பல்லைக் கடித்தான், பிரபாகர்.

பிரபாகரிடம் பேசி ஆகாது என்று, ஷோபனாவிடம் ''ஷோபனா... சொல்லு ஷோபனா... எங்களை விடச் சொல்லு...'' எனக் கெஞ்சினர் சிலர்.

அவளோ, ''பிரபு... இங்கிருந்து போலாமா? ப்ளீஸ்'' என்றாள் தன மன்னவனின் தோள் வளைவில் ஒண்டியவாறே!

வலத்தோளில் புதைந்திருந்த அவளது உள்ளங்கைகளை, தன் இடக்கையால் ஒரு முறை அழுந்தப் பற்றியவன், ''போலாம்டா'' என்றான், மெல்ல.

''சீக்கிரம்...'' என மேலும் அவள் அழுந்த, தோளிலிருந்த அவளது கைகளை தன் கைகளுக்கு இடம் மாற்றி, அவளைத் தன்னருகே இழுத்து, வியர்த்திருந்த அவளது மேனியின் பயத்தைப் போக்கும் வண்ணம், அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான், பிரபாகர்.

பைக் வரை சென்றவன், சற்று தயங்கி நிற்கவும், ''நீ கிளம்பு, பிரபா! நா... ஏதாவது பஸ் பிடிச்சு வந்துடுறேன்!'' என்றான் அவனது நண்பன் விக்னேஷ்! வார்த்தைகளின்றி, புரிந்து கொள்வதல்லவோ நட்பு!



அதற்குள், ''நீங்க... எங்களோட பைக்கை எடுத்துட்டுப் போங்க தம்பி. நைட்டுக்கா வந்து, டி.சி.பி. வீட்டில எடுத்துக்கிறேன்'' என்றார் ஒரு காவலாளி.

அதற்குள், போலீஸ் ஜீப்பும் வந்துவிட, அவர்கள் மாணவர்களை ஏற்றும் வேலையில் ஈடுபடும்போதே, பிரபாகரும் ஷோபனாவும் அவனது பைக்கிலும், விக்னேஷ் காவலாளியின் பைக்கிலும் வீடு நோக்கிப் பறந்தனர்.

வண்டியில் ஏறியதும், பிரபாகரின் முதுகை ஒட்டி அமர்ந்து கொண்டவள், ''எனக்கு ரொம்ப பயமா இருந்தது'' என்றாள் முதல் வார்த்தையாக.

குழைத்த சந்தனத்தில், சிறு பொட்டாய் படரும் அடர் குங்குமம் என, பிரபாவின் விரிந்து பரந்த மார்பில் அழகிய ஓவியமாய் தடம் பதித்தாள் ஷோபனா!

காதல் எனும் தெய்வீக சிலையில், பிரபாகர் சந்தனமாய் முதல் தடம் பதிக்க, அவன் மீதே படர்ந்து, அவனது காதலுக்கு அழகும் அர்த்தமும் கூட்டினாள், அவனது காதலி!

அவளது ஸ்பரிசத்தை உணர்ந்து அனுபவித்த சில நொடி மௌனத்தின் பின்னே, ''என்கிட்டே மட்டும் தான் ஜான்சி ராணிக்கு வீரம் வரும்!? மித்த இடத்தில எல்லாம்... ஞேன்னு முழிச்சிட்டு நிக்கும்!'' என்றான் நக்கலாக.

அவனது வார்த்தைகளில் சீண்டி விடப்பட்டு ''அப்படியெல்லாம் கிடையாது... ஆட்டோவை மறிச்சு கிண்டல் பண்ணும்போது... என்ன பண்றதாம்?'' என்றாள் ஷோபனா ரோஷத்துடன்.

''அவங்க ஆட்டோவை மறிச்சா... அப்படியே நிறுத்திட்டு, அவனுங்ககிட்ட மாட்டிக்கிறதா? என்கிட்டே

செயலியே... ஆளைப் பார்த்ததும் நூறு... நூத்தம்பது கிலோ மீட்டர் ஸ்பீட்-ல பறக்கிற வேலை... அதை அங்க செய்ய வேண்டியது தானே?" என்றான் பிரபாகரும் விடா மல்.

"நீங்க ஒரு ஆறு... அவங்க பத்து இருபது பேரு..." சமாளித்தாள் ஷோபனா.

"சும்மா சொல்லாதே! எதிர்த்தாப்ல... லாரியே வந்தாலும் சரி, வேகத்தைக் கொஞ்சம் கூட குறைக்காம, எப்படியெல்லாம் லெப்ட்... ரைட்ன்னு சைடு ஒடிச்சு போயிருக்கே? அப்படிப் போக வேண்டியது தானே?" - பிரபாகருக்கு, அவள் வண்டியை நிறுத்தியது தான் தப்பு என்றதில் அசைக்க முடியாத நம்பிக்கை.

"அது... அது... வந்து... காலேஜு வேடிக்கை பார்த்துட்டே... இங்க தானே படிச்சோம்னு நினைச்சுட்டே வந்ததில வண்டி தானா ஸ்லோ ஆகிடுச்சப்பா. அந்த நேரம் பார்த்து, அவங்க மறிக்கவும், என்னால சமாளிக்க முடியல" என்று உண்மையை ஒத்துக் கொண்டாள், ஷோபனா.

அவள் சொல்லாமல் விட்டப் போதும், அந்தக் குரலில் தொக்கியிருந்த ஏக்கம் பிரபாகரை என்னமோ செய்தது! சீக்கிரமாய் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை நெஞ்சில் விதைத்தது!

சிறு அமைதிக்குப் பின்னர், "ஜான்சி பேபிக்கு, என் மேல இருந்த கோபமெல்லாம் போயாச்சா?" என்றான் மீண்டும் சிரிப்புடன்.

"ஹ்ம்ம்... போயாச்சு... போயிந்தி... போயே போச்சு!" - ஷோபனாவும் கூடச் சேர்ந்து சிரிக்க அழைத்தாள்!

"எப்படியாம்? சார்... ஹீரோ மாதிரி வந்து காப்பாத்தின உடனே சினிமா ஹீரோயின் மாதிரி டுயட் ஆட ரெடி ஆகிட்டீங்களா?" - பிரபாகர் மேலும் வம்பு செய்ய,



"அய்யே! ரொம்பத்தான்!" என்று நொடித்த ஷோபனா, "நீங்க பிரதாப்பை அடிச்சதுக்காக இல்லை... நான் தந்தி மொழில சொன்ன விவரத்தை வச்சு... இருபதே நிமிஷத்துக்குள்ள எத்தனை வேலை செய்திருக்கீங்க... நான் படிச்ச காலேஜை கண்டு பிடிச்சு... போலீஸ்க்குச் சொல்லி... மேனேஜ்மெண்ட்டுக்கு சொல்லி... கூடவே நீங்களும் வந்து... வெறும் விளையாட்டுத்தனம் இருக்கிற மனுஷனால... இப்படி யோசிக்க முடியாது" என்றாள் நீண்ட விளக்கமாக.

பிரபாகர் சட்டை காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ள, "போதுமே!" என்றபோதும், ஷோபனாவுக்கும் பெருமையாக இருந்தது!

உடனேயே, "சாரி ஷோபிமா! அன்னைக்கு..." என அவன் இழுக்க, "விடுங்கப்பா... நானே என்னை உணரணும்ன்னு செய்திருக்கீங்க... எனக்குப் புரிஞ்சுடுச்சு!" என்றாள் அவள், மெதுவாக.

"ஆனா... நான் தான் ஏற்கனவே என்னை உணர்ந்துட்டேனே... சும்மா... நீங்க என்ன தான் செய்றீங்கன்னு விளையாடிப் பார்த்தேன்!" - என அவள் சொல்லிய போது, குரலும் கொஞ்சியது.

"என்னது விளையாடினியா?" - அதிர்ந்தது போல் ரியாக்ஷன் கொடுத்த பிரபாகர்,

"நோ... நோ... அன்னைக்கு வேற வார்த்தையில்ல சொன்னே? ஹான்... நடிச்சியா..." - என்றான் அன்றைய 'அடியை' நினைவு கூர்ந்து! மறக்கிற விஷயமாய்யா அது! பளாரென விழுந்து, சடாரென காதலை முறித்த அடி அல்லவோ!

''அப்புறம் ஒரு அறை கொடுக்கணுமே... ஐயோ! இப்போ திரும்ப முடியாதே... சரி... சரி இறங்கினதும் அடிக்கிறேன்...''

''அப்புறம் அடுத்த டயலாக்... எதில தான் விளையாடுறதுன்னு ஒரு அளவில்லையா?'' என அவளைப் போலவே சொல்ல முயன்று தோற்றவன், துவளாது மீண்டும் முயன்றான்.

''காதல் பயத்திலையா விளையாடுறது?'' என அவன் முடித்தபோது, ஷோபனாவிற்கு சிரிப்பும் வெட்கமுமாய் இருந்தது!

''போதும்பா...'' என அவள் செல்லமாய் அடிக்க, பிரபாகர்

''இதென்னது... எல்லாத்துக்கும் அடிக்கிறே? ஒரு மனுஷன் எத்தனை தான் தாங்குவான்?'' என்றான் பரிதாபக் குரலில்.

''உங்களுக்கு இருக்க வாய்க்கு... வெறும் கையால அடிச்சா... என் கை தான் வலிக்கும். நல்லா வளர்ந்த ஒரு புளிய மாத்துக் கம்பெடுத்து... உருட்டித் திரட்டி வச்சக்கப் போறேன்... அதாலதான் அடிக்கணும்...'' என்றாள் ஷோபனா, மிரட்டல் குரலில்.

''அய்யயோ! இப்படி ஒரு கொடுமைக்காரிகிட்ட என்னை மாட்டிவிட்டுட்டியேப்பா... பிள்ளையாரப்பா! கௌகிட்ட கொஞ்சம் சொல்லி... இவளுக்குப் புத்தி சொல்லச் சொல்லுப்பா'' என்றான் பிரபாகர், வானத்தைப் பார்த்தவாறே.

''அதென்ன அக்காகிட்ட சொல்லி வாது?'' - ஷோபனா சிரிப்புடன் வினவ,



''அவளும் தானே என்னை அடிக்கிறா...'' என்றான் பிரபாகர் பரிதாபமாய்.

அதில் மேலும் நகைத்து, ''ரம்யாக்கா?'' என்றாள் அவளது துணையரசி, கேள்வியாக.

''அந்தப் பிசாசும்தான்! நீங்களாவது அடிக்கிறீங்க... அது... நங்கு... நங்குன்னு நடு மண்டையிலேயே கொட்டுது! எருமை மாடு! வரப் போற... புருஷன் பாவம்...'' எனத் தனக்காக மட்டுமல்லாமல், ரம்யாவின் வருங்கால கணவனுக்காகவும் பரிதாபப்பட்டான், பிரபாகர்.

''இனிமேல்... நான் வீட்டில கைலி மட்டுமே கட்டுறதா முடிவு பண்ணிட்டேன்... வெளியில போகும் போது கூட... நம்ம தமிழ்நாட்டோட அடையாளமா வேஷ்டி கட்டிக்கப் போறேன்...'' - திடீரென அவன் அறிவிக்கவும்,

''ஏங்க? என்னாச்சு?'' - ஷோபனா ஒரு நிமிடம் குழம்பிப் போனாள்!

''இல்லை... கைலியோ வேஷ்டியோ கட்டியிருந்தா, நீ கம்பெடுத்து அடிக்கும்போது, காலைத் தூக்கிக்கலாம் இல்லையா... அடி என்னவோ கைலிக்கும் காத்துக்கும் தான் போகும்... ஆனா நீ என்னை அடிச்சதா நினைச்சப்பே... நீ அடிச்ச மாதிரியும் ஆச்சு... நான் தப்பிச்ச மாதிரியும் ஆச்சு... எப்படி நம்ம ஐடியா?'' - அவன் மீண்டும் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள,

''வெளங்கல...'' என்று குரலிலேயே, 'காரித்துப்பலைக்' கொண்டு வந்தாள் ஷோபனா!

அப்படியே கழுத்தைத் திருப்பி, வீடு தான் வந்து விட்டதோ என்று பார்த்தால், முழு பொட்டைக்காடாய் காட்சியளித்தது இடம்!

''எங்கப்பா வச்சிருக்கோம்... அய்யயோ... இது ஈச்ச னாரிக்கு இந்தப் பக்கம்... தப்பா வந்துட்டீங்க... தெரி யாட்டி என்னைக் கேட்க வேண்டியது தானே... நான் வழி சொல்லியிருப்பேனே... சரி.. சரி வண்டியைத் திருப் புங்க...'' என அவள் பதற.

''தெரிஞ்சு தான், வந்தேன் ஆட்டோக்கார மேடம்!'' என்றான் அவன் குறும்பாக,

''என்ன தெரிஞ்சு வந்தீங்க? உங்களுக்கு கோயம்புத் தூர் பத்தி... என்ன தெரியும்? இங்கிருந்து, டவுன்க்குப் போக வழியே இல்லை... திரும்பவும் காலேஜ் வழியா தான் போயாகணும்...'' - கோயம்புத்தூர் காரியாக, அவள் வெளுத்து வாங்கவும்,

''மேடம், நான் கோயம்புத்தூர்லேயே பிறந்து... சிறுவாணி ஆத்து தண்ணியைக் குடிச்சு வளர்ந்தவன் இல்லை தான். ஆனாலும்... புதுசா மன்மத பானத்தைக் குடிச்சு, கரை தேர்ந்தவனாக்கும்!'' என்று பெருமை பேசிய பிரபாகர்,

''குடிச்சுக் கிழிச்சீங்க. காதல் வசனம் பேசக் கிடைச்ச இடத்தைப் பாருங்க... பொட்டைக்காடும்... பனை மரமுமா... பேய் தான் காதல் செய்யும் இந்த இடத்தில... முதல்ல வண்டியைத் திருப்புங்க...'' - முதுகில் தட்டி, அவனை அங்கிருந்து நகர்த்த முற்பட்டாள், ஷோபனா.

''ம்ஹூம். மாட்டேன்! நம்ம ரெண்டு பேருக்கும்... பேசவே இடம் கிடைக்க மாட்டேங்குது... ஒண்ணு ஊரே ஒண்ணு கூடுற ரயில்வே ஸ்டேஷன்... இல்லைன்னா எங்க வீட்டு வாண்டுங்க ஆட்டம் போடற ஆட்டோ... அப்படி இல்லன்னா பஸ்சும் காரும் பறக்கிற மெயின் ரோடு... இதெல்லாம் லவ் வர லொகேஷனா?



மனுஷனுக்கு... பீதி உண்டாக்குற மாதிரியே இருக்கு...'' என்றவன், வண்டியை நிறுத்தியே விட்டான்.

''உங்களோட...'' என்று சலித்துக் கொண்டபோதும், ஷோபனாவும் இறங்கி வந்தாள்.

அங்கிருந்த மரம் ஒன்றில் சாய்ந்து நின்று, அவளை யும் அருகே நிறுத்திக் கொண்டு, அவன் காதல் பார்வை பார்க்க, ''என்ன?'' என்பது போல் இடுப்பில் கை வைத்து முறைத்தாள், ஷோபனா.

''ரொமாண்டிக் லுக் கொடுக்கலைன்னாலும்... இப்படி அனகோண்டா லுக் கொடுக்காம இருக்கலாம் இல் லையா... சின்னப் பையனுக்கு பயம் கிளம்புதில்ல...'' அவன் கையை மார்பிற்குக் குறுக்கே கட்டிக் கொண்டு பய முகம் காட்ட,

''ரொம்ப நடிக்காதீங்க... என்ன விஷயம் சொல் லுங்க...'' அவசரப்படுத்தினாள் ஷோபனா! பின்னே, இரண்டு மணி வெயிலில் நின்று கொண்டு காதல் ரசமா கொட்டும்!? புளிக்கப் புளிக்கக் காரக் குழம்பு அல்லவோ கொட்ட வேண்டும்!

''என்ன விஷயமா? என்ன இப்படி கேட்டுட்டே... எவ்வளவு விஷயம் இருக்கு... முதல்ல உன்னோட படிப்பு... அடுத்ததாய் உங்க வீட்டுக்கு நாங்க பொண்ணு கேட்டு வரணும்... அப்புறம் கல்யாணம்... அப்புறம் ஹனிமூன்... அப்புறம்... அப்புறம்...'' - ராகத்துடன் அவன் இழுக்க,

''ச்சீ... ச்சீ... ச்சீ...'' எனக் கை ஓங்கிக் கொண்டு, ஷோபனா அடிக்க வர, அங்கே காதலர்கள் இருவரும் தங்கள் உலகிற்கு பயணப்பட்டனர்!

டிக்கெட் வாங்கி, ஜன்னலோர இடம் பிடித்து, கொறிக்க கடிக்கவென தீனிகள் வாங்கிக் கொண்டு, சீட்டில் அமர்ந்தால் ''எனக்கு... பஸ்-ல போகும் போது வாந்தி வரும்ங்க. அதனால, நான் ஜன்னல் பக்கம் உட்கார்ந்துக்கிறேன்'' என்று ஒரு பிரகஸ்பதி வருவான் பார்த்தீர்களா. அவனைப் போலவே, ஒரு பிரகஸ்பதி வந்து சேர்ந்தான்! ம்ஹூம், வந்து சேர்ந்தார்! வயதில் பெரியவர் அல்லவோ!

''என்னம்மா ஷோபனா இது? நடு ரோட்டில ஒரு பையனோட... இப்படி கூத்தடிச்சுக்கிட்டு இருக்கே?'' என்ற அதட்டலோடு, காரிலிருந்து இறங்கியவர், சண்முகம் அண்ணாச்சி!

# 15

''அண்ணாச்சி'' என்று அதிர்ந்து நின்ற ஷோபனாவிடமிருந்து வெறும் காத்து மட்டுமே வந்தது!

இன்னிசையின் நடுவே ஸ்வரம் தப்பிய தம்புராவாய் கேட்ட குரலில், திகைத்து நின்ற பிரபாகர், ஷோபனாவின் அருகே வந்து ''யாரும்மா'' என்றான் மெல்ல.

பிரபாகரை மேலும் கீழும் பார்த்த சண்முகம் அண்ணாச்சி, ''எத்தனை நாளா நடக்குது இந்தக் கூத்து?'' என்றார் காரமாக.

இருவரும் பதில் சொல்வதற்குள், ''உன்னை... தனசேகரனுக்கும் ஒரு படி மேல வச்சிருந்தேனேம்மா? அவர் நியாயஸ்தர் என்றால்... நீ தன்மானத்தில் அவரை விட



உயர்ந்தவன்னு நினைச்சேனே... நீயா இப்படி?'' என்றார் மேலும், காரமும், கோபமுமாக.

''அதில்லை... அண்ணாச்சி... இன்னைக்கு ஒரு...'' எனத் தொடங்கிய ஷோபனாவை பேசவே விடவில்லை அவர்.

''இந்தப் பையனோட காதல்... கீதல்ன்னு சுத்துறதலா தான், இந்த மாசத் தவணைப் பணம் ஒழுங்கா கட்டலையா? தலையில அடிபட்டுடுச்சு... காலுல அடிபட்டுடுச்சுன்னு உங்க அம்மாவும் உன்னோட சேர்ந்து கதை சொல்லியிருக்காங்க... சை...'' - அருவெறுப்புடன் அவளைப் பார்த்தவர், வாய்க்கு வந்ததைப் பேசிக் கொண்டே சென்றார்.

நடுவே, ''சார்... சார்... வார்த்தையைக் கொட்டாதீங்க...'' என இடைப் புகுந்த பிரபாகரை அவர் மதிப்பதாகவே இல்லை. ஷோபனாவும் பற்றியிருந்த அவனது கையை அழுத்தவே, அவனது பேச்சு எடுபடாமல் போனது!

''பின்னாடி காலத்தில... நீ உங்க அம்மாவை வச்சு பார்த்துப்பேன்னு நினைச்சா... நீயும் உங்கக்கா மாதிரி தான்... தன் வாழ்க்கை மட்டும் நல்லா இருந்தா போதும்... மித்தவன் எக்கேடும் கெட்டுப் போகட்டும்ன்னு இருக்கிற உன்னை உயர்வா நினைச்சோமேன்னு வெட்கமா இருக்கு...''

''சரி... சரி... காதல்... கருமாதி எல்லாம் உன்னோட சொந்த விஷயம். எனக்கு என் பணம் மட்டும்தான் முக்கியம்... அடுத்த முறையில இருந்து, ஒரு பைசா தவணையில குறைஞ்சாலும், ஆட்டோவை பிடுங்கிட்டு விட்டுருவேன். ஜாக்கிரதை!'' என்றவர், பேசியது

போதும் என்றெண்ணியது போல், வண்டியில் ஏறிக் கொண்டார்.

''வைக்க கோளாறுயா... அவன்ட்ட சீழிருக்கட்டு, தானும் செத்து, ஆத்தாளையும் சாகடிக்கப் போகுது...'' என ஏறும்போது அவர் உதிர்த்த முத்துக்கள் வேறு, ஷோபனாவின் வெண்சங்கு மனதைக் குத்திக் கிழித்து விட்டுச் சென்றன.

அவரது வண்டி கிளம்பிய மறு விநாடி, ''ஷோபிமா...'' என பிரபாகர், ஷோபனாவின் அதிர்ந்த முகத்தைத் திருப்ப முயன்றபோது, அங்கிருந்து கண்ணீர் வழிவதை அவனது கைகள் உணர்ந்தன.

''என்னடா இது... அவர் தான்... விஷயம் புரியாம பேசிட்டுப் போறார்ன்னா...'' துணையாகப் போகும் தளிர் மேனியவளின், துவண்ட கைகளைப் பற்றி, மெல்ல அழுத்தினான்.

புழுதி கிளப்பிச் சென்ற வாகனத்தையே வெறித்திருந்த ஷோபனா, ''வீட்டுக்குப் போகலாம்'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

அதற்கு மேல் எதுவும் பேசாமல், வண்டியை அவன் எடுக்க, இப்போது ஷோபனா உட்கார்ந்திருந்த விதமே, அவளது மனநிலையை வெகு துல்லியமாய் காட்டியது!

வரும்போது, இரண்டு பக்கமும் கால் போட்டு, பிரபாகரின் முதுகை ஒட்டி அமர்ந்து வந்தவள், இப்போது, அவனை விட்டு அரையடி தள்ளி அமர்ந்து, அதுவும் பிடிமானத்திற்கென்று எதையும் பிடிக்காமல், பட்டும் படாமல் அமர்ந்திருந்தாள்!

சற்று தூரம், அவளது மனநிலையை எண்ணி, ஒன்றும் பேசாமல் வந்தவன், ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், வண்டியை ஓரம் கட்டினான்.



அவன் நிறுத்தியதைக் கூட உணராமல், அவள் வெறித்திருக்க, ''ஷோபி...'' என்றான் மெல்ல. பின்னர் உரக்க தூக்கி வாரிப் போட நிமிர்ந்தவள், ''ஏன்... ஏன் நின்னுட்டீங்க?'' என்றாள் தடுமாறிய குரலில்.

''யாரோ... ஏதோ சொல்லிட்டாங்கங்கிறதுக்காக, இப்படி ஒரேடியா இடிஞ்சு போகணுமா?'' - என்றான் காரமாக.

''அவருக்கு... என்ன நடந்தது... ஏது நடந்ததுன்னு எந்த விவரமும் தெரியாது. காலேஜ்-ல நடந்த பிரச்சனை தெரிஞ்சிருந்தா, அவர் இப்படிப் பேசியிருக்கவே போறதில்லை... அப்படியிருக்கும்போது, எதுக்காக இப்படி மூஞ்சியைத் தூக்கி வச்சிட்டு இருக்க?'' என்றான் தொடர்ந்து.

மேலும் அவள் பேசாமல் இருக்கவே, ''சரி... மூணு நாள்... மூணு வேளைக்கு வேப்ப ரசம் குடிச்சவ மாதிரியே இருந்துக்கோ, எனக்கு ஒண்ணும் பிரச்சனையில்லை...'' என்று கோபமாக மொழிந்தவன்,

''ஆனா, எதுக்கு இப்படி ஒட்டுல உட்கார்ந்து பயணம் பண்றே? அசந்த நேரத்தில, தரையில உருண்டு, இன்னொரு பக்கமும் தையல் போட்டுட்டு உட்கார்ந்துக்கிறதுக்கா? தெரியாமதான் கேட்கிறேன்... நீ என்ன... ஆட்டோக்காரியா? இல்லை தையல்காரியா?'' என்றான் எரிச்சலுடன்.

அவனது நகைச்சுவையை ரசிக்கும் மனநிலை துளியும் இல்லாமல், ''வீட்டுக்குப் போகலாம்'' என்று மீண்டும் வண்டியின் பக்கமே திரும்பிக் கொண்டாள், அவனது காதலி.

'கஷ்டம்' என்று தன்னுள்ளே முணுமுணுத்துவிட்டு, வண்டியை எடுத்தான் பிரபாகர்! வேற வழி!

கோவை மாநகருள் நுழைந்ததும், ஒரு பஸ் ஸ்டாப் பைக் கைகாட்டி, ''என்னை இங்க விட்டுடுங்க'' என்றாள்.

மறுத்துப் பேசத் துடித்த நாவை அடக்கிக் கொண்டு, அவள் கூறிய இடத்தில அவளை விட்டவன், வண் டியை எடுக்கவும்,

''ஒரு நிமிஷம்'' என அவனைத் தடுத்தாள், ஷோபனா.

''என் மேல கோபமா?'' என்பது போன்ற ஒரு கேள் வியை அவன் எதிர்பார்த்திருக்க,

''ஆட்டோ சாவியைக் கொடுங்க'' என்றாள் அவளோ!

எழுந்த எதிர்பார்ப்பு, இந்தக் கேள்வியில் கோபமாய் மாறிவிட, அவள் முகம் பார்க்காமலே, வண்டிச் சாவியை எடுத்து அவள் புறம் நீட்டியவன், ''பை'' என்றதோடு வண்டியை எடுத்துக் கொண்டு சென்று விட்டான்.

அவனுக்கு, வேறொருவர் சொன்ன சொல்லுக்காக தன்னை ஒதுக்கி வைக்கிறாளே என்ற கோபம்!

அவளுக்கு, சுயகவுரவமும் காதலும் ஒன்றோடு ஒன்று முட்டி நின்றதில் உண்டான அதிர்ச்சி!

இருந்த எரிச்சலில் அலுவலகத்திற்குச் செல்லாமல், நேரே வீடு சென்றான், பிரபாகர்.

வண்டியை நிறுத்திவிட்டு, அவன் கதவைத் திறந்த தும், ''மணமகளே... மருமகளே... வா... வா... உன் வலது காலை எடுத்து வைத்து... வா... வா'' என்று கோரசாய் கேட்ட சத்தம், பிரபாகருடன் ஷோபனா வரவில்லை என்று உணர்ந்ததும், தேய்ந்து மறைந்தது!

''என்னாச்சுடா... ஷோபி எங்க?'' என ரம்யா முதலில் கேட்க,



''ம்ம்ம்... சட்டியும் பானையும் செஞ்சிட்டு இருக்கா... என் வயித்தெரிச்சலை கொட்டிக்காத சொல்லிட்டேன்!'' என்று அவளிடம் எரிந்து விழுந்தவன்,

''கௌ, எனக்குப் பசிக்குது... சாப்பாடிருந்தா போடு'' என உணவு மேசையின் முன்னே சென்று அமர்ந்து கொண்டான்.

வீட்டிலிருந்த அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, ''அண்ணி பண்ற கேசரில இருந்து எப்படி நெய்யையும் சீனியையும் பிரிக்க முடியாதோ... அந்த ரேஞ்சுக்கு ரெண்டு பேருக்குள்ளேயும் வொர்க் அவுட் ஆகிடுச்சு'' என்று சொல்லியிருந்த விக்னேஷின் மீது அனைவரது பார்வையும் அளவிற்கு அதிகமாய் படிந்து மீண்டது.

ட்ரைலர் பார்த்து மெயின் பிலிமை ஆகா ஓகோ வென்று புகழ்ந்து விட்டு, மெயின் பிலிம் மொக்கை பட மாய் மாறும்போது, புகழ்ந்தவன் ஒரு ரியாக்ஷன் கொடுப் பானே அது போல் உட்கார்ந்திருந்தான் அவன்!

பேச வாயெடுத்த ரம்யாவை கையமர்த்திய கௌசல்யா, மௌனமாய் உணவு பரிமாறி விட்டு, அவனது பசி போகும் வரை காத்திருந்தாள்.

ஷோபனாவின் மேலிருந்த கோபத்தில், பிரபா அன்று இரண்டு மடங்கு அதிகமாகவே உண்டான். தயிர் சாதத் தின் கடைசி கவளத்தை அவன் உண்டதும், ''எதுவும் பிரச்சனையா, பிரபா?'' என்றாள் கௌசல்யா, ஆராயும் குரலில்.

அதற்காகவே காத்திருந்தவன் போல், நடந்தது அனைத் தையும் கொட்டியவன்,

''எனக்கு... அந்த ஆள் மேல கூட கோபமில்லை, கௌ. இவ மேல தான்... அடங்காத கோபம். எல்லோருமே, நம்மளை எடுத்ததும் புரிஞ்சுக்க மாட்டாங்க... நம்மளோட நிலைமையை நாமதான் விளக்கணும்... அதை விட்டுட்டு, அவர் சொல்லிட்டாருன்னு... ப்ச்...'' என்று தன் கடுப்பைக் கொட்டிவிட்டு,

''நீ வேணும்னா பாரு... இந்தம்மா இனிமேல் என் பக்கம் திரும்பவே மாட்டாங்க... கேட்டா... என்னோட கடமையை முடிக்காம காதல்... கல்யாணத்துக்கு எல்லாம் என்னோட வாழ்க்கையில இடமே இல்லைன்னு வசனம் பேசுவா...

''இவ... இந்தக் கடனை அடைச்சு... அப்புறம் படிச்சு... வேலைக்குப் போய்... கடைசில எனக்கு அறுபதாம் கல்யாணம்தான் நடக்கும் போல...'' என்று கோபத்தில் ஆரம்பித்து, புலம்பலில் முடித்தவன்,

''ஐ ஜஸ்ட் ஹேட் இட்... கௌ!'' என்றான் சிவப்பேறிய கண்களுடன்.

''கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாதுன்னு சொல்வாங்களே... அப்படி ஆகிடுச்சு! நானும் அப்படி... இப்படின்னு காய் நகர்த்தி, ராணிக்கு செக் வைக்கிறேன்... இவ என்னடான்னா... நீ ஆடினது கள்ளாட்டம், திருப்பி கலைச்சிட்டு முதல்ல இருந்து ஆடுன்னு என்னை டபாய்க்கிறா!'' எனத் தத்துவம் பேசியதோடு,

''உங்களுக்கெல்லாம் ஆபீஸ்-ல வேலையில்லையா? இங்க உட்கார்ந்து வேடிக்கை பார்த்திட்டு இருக்கீங்க... வாங்க போகலாம்'' என்று நண்பர்கள் பட்டாளத்தைக் கிளப்பிக் கொண்டு, அலுவலகம் சென்று விட்டான்.



பிரபாகரின் கோபம் புரிந்தபோதும், ஷோபனாவின் பரிதவிப்பும் புரிந்தது, கௌசல்யாவிற்கு!

அதே எண்ணம், மகனின் பேச்சை உள்ளறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த வெங்கடாசலத்திற்கும் இருந்தது போலும். ''நம்ம ரெண்டு பேரும், ஷோபனா வீட்டுக்குப் போயிட்டு வரலாமா?'' என்றார் மருமகளிடம்.

இருவருமாய் கிளம்பிச் சென்றால், பிரபாகரின் கணிப்பை சரியாக்குவது போல், ஷோபனாவும் பேசினாள்.

கௌசல்யாவையும், வெங்கடாசலமும் ஷோபனாவின் வீட்டை விசாரித்துக் கொண்டு (பிரபாகருக்கு தெரியாமல் ரம்யாவிடம் விசாரித்துக் கொண்டு), அங்கே சென்றால், ஷோபனா அழுது வீங்கிய முகத்துடனும், அவளது தாயார் லீலாவதி ''என்னாச்சு கண்ணு? வந்தில இருந்து... இப்படி அழுதுட்டே இருந்தா... அம்மா என்னன்னு நினைப்பேன்?'' என்ற பரிதவிப்புடனும் அவர்களை வரவேற்றனர்.

வந்தவர்களைக் கண்டதும், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ஷோபனா ''வாங்க'' என்றாள். லீலாவதி, ''யாரும்மா?'' என்று குழப்பமாகப் பார்த்தார்.

''நான்... சொல்வேன்ல நகுல்-பரத்... ரெட்டை பசங்க... அவங்களோட அம்மா... இவர் அவங்களோட தாத்தா'' என ஷோபனா அறிமுகம் செய்ய,

''என்மா இப்படி சுத்தி வளைக்கிற?'' என்று ஷோபனாவிடம் கூறிய வெங்கடாசலம், லீலாவதியிடம் திரும்பி ''என்னோட இரண்டாவது மகனும், உங்க பொண்ணும் மனசார விரும்புறாங்க. அவங்களோட கல்யாணத்தைப் பேசி முடிக்கத்தான், நானும் என் மூத்த மருமகளும் வந்திருக்கோம்!'' என்றார் ஒளிவு மறைவில்லாமல்!

லீலாவதி ஒரேடியாய் அதிர்ந்து போக, ''இல்லைம்மா... அது... வந்து... அவர் சொல்ற மாதிரி இல்லைம்மா...'' ஷோபனாவும் தன் அதிர்ந்து போன மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டு, தாயைச் சமாதானம் செய்ய முயன் றாள்.

''என்னம்மா... இல்லை? பிரபாகரை நீ காதலிக்கலையா?'' நேராய் பார்த்து, கூர் கத்தியென கேள்விகளை வீசினார், பெரியவர்.

அதற்குப் பதில் சொல்ல முடியாமல், ஷோபனாவின் தலை தாழ்ந்தது!

சுற்றி இருந்த அனைவரையும் மீறி, லீலாவதிக்கு இந்த விஷயம் எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடும் என்றெண்ணிய கௌசல்யா, ''அம்மா... எங்க குடும்பத்தைப் பத்தியும், இவங்க காதலைப் பத்தியும் நீங்க தெரிஞ்சுக்கணும்'' என்று தொடங்கி, தங்களைப் பற்றிய சுருக்கமான முன்னுரையையும், பிரபாகர் - ஷோபனா இருவரது சந்திப்பை விரிவான விளக்கவுரை யாகவும் சொல்லி முடித்தாள், சண்முகம் அண்ணாச்சி யின் கோபாவேச வார்த்தைகள் வரை!

நடுவே, 'என்னிடம் மறைத்தாயே?' என்பது போல் லீலாவதி, ஷோபனாவைப் பார்க்க, ''எனக்கு அடிபட்டு இருந்தப்போ, என்னோட சீனியர்ன்னு சொல்லிட்டு... நம்ம வீட்டுக்கு வந்தாரே ஒருவர்... அவரு தான் இந்த அக்காவோட கொழுந்தனார்!'' என்று தாய்க்கு, நினைவு படுத்தினாள், அவள்.

''என்... இப்படி சுத்தி வளைக்கிறா? நேரா... பிரபா கர்ன்னு சொன்னா மேடம் குறைஞ்சு போய்டுவாங்களோ!'' என்று கௌசல்யா மெல்லிதாய் கோபம் கொள்ள, லீலாவதியோ தன் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தார்.



மூத்த மகளின் திருமணத்தால், ''திருமணம்'' என்ற வார்த்தையையே வெறுத்துக் கொண்டிருந்த சின்ன மகள், இன்று தானே ஒருவனைக் காதலிக்கிறாள் என்பதே அந்தத் தாய்க்கு, மகிழ்வைக் கொடுத்தது!

அது மட்டுமில்லாமல், இவ்வளவு வெளிப்படையாய் இருக்கும் குடும்பத்தில் பெண்ணைக் கொடுப்பது, அவருக்குப் பெரும் பாக்கியமாகவே பட்டது!

ஆதலால், ஷோபனா - பிரபாகர் காதலை விடவும், ஏன்... சண்முகம் அண்ணாச்சியின் வார்த்தைகளை விடவும் கூட, அந்தத் தாய்க்கு, பொல்லா கழுகுகளின் மத்தியில் சிறகில்லா கிளியாய் மகள் நின்றதே மனதைப் பெரிதும் பாதித்தது!

''என்ன ஷோபிமா இது? இனிமேல்... நீ ஆட்டோ ஓட்டவும் வேண்டாம்... இப்படி பிரச்சனையில போய் சிக்கிக்கவும் வேண்டாம்... கூழோ, கஞ்சியோ குடிச் சிட்டு, வீட்டோடவே இருந்திடு!'' - என அவர் பதற,

''வீட்டோட இருந்துட்டா... சண்முகம் அண்ணாச்சி கிட்ட வாங்கின கடனை எப்படி அடைக்கிறது? நம்ம ளோட தலையை அடமானம் வச்சா? ம்ஹூம் நம்ம ளோட தலையெல்லாம் பைசாவுக்கு பெறாதும்மா...'' கசப்பாய் சிரித்தாள், ஷோபனா.

''அதுக்காக... தினம் தினம் நான் வயித்தில நெருப் பைக் கட்டிட்டு இருக்க முடியுமா? இல்ல... மாப்பிள்ளை தான், தினம் தினம் உன் பின்னாடி பாதுகாப்புக்கு வர முடியுமா?'' - அவர் திருப்பிக் கொண்டு கேட்டதிலேயே, அவருக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் என்பது வெளிப்படையாய் தெரிந்தது.

''நீங்களும், உங்க மாப்பிள்ளையும் எதுவும் செய்ய வேண்டாம். அதுக்கான தீர்வைத்தான் நாங்க சொல்ல வந்திருக்கோம்'' என்ற வெங்கடாசலம், வெகு சுலபமாய் ஒரு தீர்வைக் கூறினார்.

''எங்க வீட்டு மருமகளோட கடன்... படிப்பு... எல்லாம் எங்க பொறுப்பு'' என்ற ஒரே வரியில், அவரது பெருந்தன்மையுடன் ஆயிரமாயிரம் அர்த்தங்களும் இருக்க,

முதலில் ஷோபனா மறுப்பாள் என்று எண்ணியிருந்த கௌசல்யாவிற்கு, லீலாவதியின் மறுப்பு ஆச்சரியமாய் இருந்தது! காஞ்சனாவின் கல்யாணத்திற்கே, அவளது வருங்கால கணவனிடம் பணம் வாங்குவதைக் கேவலம் என்று நினைத்தவர், மூத்த மகளின் திருமணத்திற்கான செலவை இளைய மகளின் மாமனார் வீட்டினரிடமா வாங்குவார்?

அவர் நிதர்சனமாய் மறுக்க, ஷோபனாவோ பிரபாகரின் வார்த்தைகளையே பிரதிபலித்தாள் - ''இல்லைங்க அக்கா, இந்தக் கடனை நான்தான் அடைக்கணும்... அப்படி நம்பித்தான் அண்ணாச்சி கொடுத்தாங்க... அப்புறமா, தான் படிப்பு... காதல்... கல்யாணம்... எல்லாமே! இப்போ, இதைப் பத்தி எதுவும் பேச வேண்டாம்! உங்க கொழுந்தனாரால காத்திருக்க முடியும்ன்னா எனக்கு சந்தோசம்... வருஷக் கணக்குல காத்திருக்க முடியாதுன்னு நினைச்சாலும் எனக்கு வருத்தமில்லை!'' என்றாள் ஷோபனா முடிவாக.

''இன்னொரு விஷயம்... உங்க கொழுந்தனாரை... என்னைச் சந்திக்க எந்த முயற்சியும் பண்ண வேண்டாம்ன்னு சொல்லுங்க. எந்தவிதமான குறுக்கீடும்



இல்லைன்னா... நானும் சீக்கிரமே என்னோட கடமையை முடிச்சிடுவேன்'' என்றாள் எங்கோ பார்த்தவாறே!

அனுபவமிக்க வெங்கடாசலத்தின் வார்த்தைகளோ, தாய் அன்புடன் வெளிப்பட்ட கௌசியின் சமாதானங்களோ தாய் - மகள் இருவரையும் அசைக்காதிருக்க, மாமனும் மருமகனும் தோல்வியுடன் வீடு திரும்பினர்.

இரவில் வந்த பிரபாகரிடம், தாங்கள் பேசிய விவரம் அனைத்தையும் கூறியவர்கள் - முயன்று ஷோபனாவின் கடைசி வரிகளை மறைக்க முயற்சி செய்தனர்! ஏற்கனவே அவள் மீது கோபமாய் இருப்பவன், ''உன்னைப் பிரிவதில் எனக்கு வருத்தமில்லை'' என்ற அவளது வார்த்தையைக் கேட்டால், முழுதாய் வெறுத்துவிடக் கூடும் என்று பயந்தாள், கௌசல்யா.

ஆனால், இறுக்கமான முகத்துடன் அழுத்தமாய் அனைத்து விஷயங்களையும் கிரகித்துக் கொண்டவன், வார்த்தைகளின்றி எழுந்து சென்றான்!

அவள் காட்டிய நிராகரிப்பே, தான் காட்டப் போகும் வெறுப்பிற்கு வித்திட, பிரபாகர் ஒதுங்க ஆரம்பித்தான்!

எவ்வளவு தூரம், அவளைத் துரத்தித் துரத்திக் காதலித்தானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான்!

தவிர்க்கும் வலியைவிட, தவிர்க்கப்படும் வலி அதிகமாய் இருக்க, ஷோபனாவும் இரவை அழுகையிலேயே கழித்தாள்!

அவனது காதலுக்காக ஏங்கி, 'தப்பு பண்ணிவிட்டோமோ' என்று இரவில் தவிக்கும் மனது, பகலானதும் 'சொன்ன வார்த்தையும், கொடுத்த வாக்கும், கை நீட்டி வாங்கிய பணமும் காதலை விடவும் முக்கியம்!' என்று வைராக்கியமாய் நம்பியது!

காதல் என்ற சதுரங்கக் கட்டத்தில், வீழ்த்துவதும் வீழ்வதுமாய் இருந்த ஆட்டக்காரர்கள், இப்போது அதை தூர நின்று வேடிக்கை மட்டுமே பார்த்தனர்! இதை ஆடினோமே என்ற ஆதங்கமா இல்லை தொடர்ந்து ஆட முடியவில்லையே என்ற வருத்தமா!?

அவர்களது ஒரே இணைப்பாய், பிரபாகர் நடத்தும் "தேனிசை" நிகழ்ச்சி மட்டுமே இருக்க, ஷோபனா சுவாசிக்கக் கூட மறப்பாள்... ஆனால் அந்த நிகழ்ச்சியை... அவனது குரலை உள்வாங்காமல் உறங்க மாட்டாள்!

அதில் அவன் உச்சரிக்கும் ஓரோர் வார்த்தையிலும், தனக்கான சேதி ஏதுமிருக்கிறதா என்று எதிர்பார்த்து ஏமாறும் மனம், ஒரு மாதக் காலத்தில், அவனுக்குப் பதிலாக வேறொருவரின் குரல் கேட்கவும் தவித்துச் சுண்ணாம்பாய் போனாள்!

முன்னர், தான் ரசித்த "சிவா"வின் அதே குரல், இப்போது "இவன்... எதுக்கு வீல்... வீல்ன்னு கத்திட்டு இருக்கான்..." என்று எண்ணும் அளவிற்கு எரிச்சலை மூட்டியது!

'ஹய்யோ... வேறு நிகழ்ச்சிக்கு மாறிவிட்டானா? இல்லை... ரேடியோ நிகழ்ச்சியே நடத்துவது இல்லையா?

'கடவுளே... அவனைப் பார்க்காமல் இருப்பதே வேதனை என்றால்... அவன் குரலைக் கூடக் கேட்க முடியாமல் போய் விட்டதே!

'எனக்கு வேணும்... இதுவும் வேணும்... இன்னமும் வேணும்... பாவி... பாவி...

'ஒருவேளை... இன்று உடம்பு ஏதும் சரியில்லையோ? இல்லையே... காலையில் அவனது வண்டியை வீட்டில் பார்க்கவில்லையே?!



'ஏன்... அதன் பின்னர் உடம்பு முடியாமல் போயிருக்கக் கூடாதா? ஏதும், பெரிதாய் இருக்குமோ?'

இரவு முழுதும், மனம் தவித்து, கண்ணீர் வடித்தது!

காலையில் விடிந்ததும் விடியாததுமாக, வண்டியை பிரபாகரின் வீடிருக்கும் தெருவில் விட்டவள், அங்கே அவனது வண்டி இருப்பதைப் பார்த்துவிட்டு, ஏனோ நிம்மதிப் பெருமூச்சு விடும்போது, பிரபாகர், சோம்பல் முறித்துக் கொண்டு வீட்டு வாசலுக்கு வந்து நின்றான்!

அதிர்ந்து நின்ற ஷோபனாவின் கண்களும், உணர்ச்சியற்ற பிரபாகரின் விழிகளும் ஒன்றாய் மோதி நிற்க, காலங்களைக் கடந்து நீடித்தது அந்தப் பார்வைப் பரிமாற்றம்!

"இதோ... இதோ..." என்று துருத்திய கண்ணீர், ஷோபனாவின் பார்வையை மறைக்க, பிரபாகர் அதே உணர்ச்சியற்ற பார்வையுடன் வீட்டினுள் சென்று விட்டான்!

விம்மி வெடித்த நெஞ்சம், அவனுக்கு ஆபத்தென்று ஏதுமில்லை என்பதில் சந்தோசம் கொள்ள, எப்போதும் காலையில் கேட்காத ரேடியோவை அன்று உயிர்ப்பித்தாள் ஷோபனா.

அவள் ஆன் செய்த நேரத்தில் "ஹலோ... குட்மார்னிங்! நான் உங்க... பிரபா பேசுறேன்!" என்ற குரல் கேட்க, ஷோபனாவின் உள்ளம் சுக்கு நூறாய் உடைந்தது!

தான் சொன்ன ஒரு வார்த்தைக்காக, இரவு நிகழ்ச்சிக்கு மாறியவன், இன்று அதை மாற்றிக் கொண்டு பழைய நிலைக்கே சென்று விட்டான் என்றால்... அவனது வெறுப்பின் அளவு ஷோபனாவிற்குப் புரிந்தது!

என்றைக்கும் விட, அன்று மனம் வலியில் துவண்டு போக, மறுநாள் காலையில் ரயில் நிலையத்திற்குக்

கூடச் செல்லாமல் வீட்டில் இருந்தவளை, அவளது அக்காவும் அக்காவின் கணவரும் சந்தித்தனர்!

# 16

'இவளால் தான் இவ்வளவு வேதனையும்...' என்று ஒரு நிமிடம் துவேசம் கொண்ட மனம், சட்டென தன்னையே கடிந்து கொண்டு, "வா காஞ்சி... வாங்க அத்தான்... என்ன இவ்வளவு காலையில வந்திருக்கீங்க?" என்றாள் சாதாரணமாய்.

லீலாவதியும் பின்கட்டிலிருந்து ஓடிவர, "அம்மா... எல்லாம் சொன்னாங்க" என்றாள் காஞ்சனா, தங்கையின் முகத்தை ஆராய்ந்து கொண்டே!

திடுக்கிட்ட ஷோபனா, ஒரு முறை அன்னையைத் திரும்பி லேசாய் முறைக்க, "இப்போ... எதுக்கு அம்மாவை முறைக்கிற? உனக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையலேன்னு அவங்க வருத்தப்படுறதில என்ன தப்பிருக்கு!?" என்றாள் காஞ்சனா, கோபமாக.

ஷோபனாவோ "அமையாதுன்னு தெரிஞ்சும் வருத்தப்படறது அவங்க தப்பு!" - விட்டேற்றியாய் பேசினாள்.

"என்னடி அமையாது? ஒண்ணுமே வேண்டாம்... நாங்க எல்லாம் செய்றோம்ன்னு வர மாப்பிள்ளையை... அதுவும் உன் மனசுக்குப் பிடிச்ச மாப்பிள்ளையை... வேண்டாம்ன்னு சொல்ல வைக்கிற நிர்பந்தம் எவ்வளவு கொடுமையானது தெரியுமா?" - தேர்ந்த குடும்பத் தலைவியாய் பேசினாள், பெரியவள்.

அந்த நரக வேதனையை அனுபவிப்பவளே அவளல்லவா!



ஒன்றும் பேசாமல், வேதனையைக் கண்ணில் காட்டி அவள் நிற்க, "இந்த வேதனை... நீ படக் காரணம், நான்! என்னோட நல்ல வாழ்க்கைக்கு... நீ உன்னோட சுகங்களைத் தியாகம் செஞ்ச மாதிரி... நானும் உனக்காக செய்ய வந்திருக்கேன்" என்ற காஞ்சனா, ஒரு மஞ்சள் பையை அன்னையின் கையில் கொடுத்தாள்.

"என்ன காஞ்சிமா இது?" - லீலாவதி வாங்காமல் பதற,

"காஞ்சியோட கல்யாணத்துக்காக நீங்க வாங்கின கடன் தொகை! வீடு வாங்குறதுக்கான முழுத் தொகையும் பேங்க்லயே கிடைக்கிற மாதிரி, ஏற்பாடு பண்ணியாச்சு. அப்படியே கூடக் குறைய வந்தாலும், அப்பா என் பங்குக்கு ஒதுக்கி வச்சிருக்கப் பணத்தைத் தரச் சொல்லியிருக்காங்க. அதனால, காஞ்சனாவோட நகை எல்லாத்தையும் விலைக்குக் கொடுத்து, இந்தப் பணத்தைக் கொண்டு வந்திருக்கோம்" என்றான், காஞ்சனாவின் கணவன்.

"அய்யயோ! வித்துட்டீங்களா? உங்க அம்மாவுக்குத் தெரிஞ்சா..." - லீலாவதி அதிர்ந்து போகவும்,

"புது வீடு கட்டுற ஏரியா-லேயே இருந்தா நல்லதுன்னு சொல்லி, நாங்க அந்த ஏரியாவுக்கே தனிக் குடித்தனம் வந்துட்டோம். அதனால, அம்மாவுக்கு நகை வித்த விஷயம் தெரிய வாய்ப்பில்லை" என்றான் அவன்.

கூடவே, "அப்படியே தெரிஞ்சாலும், எதையாவது சொல்லிச் சமாளிச்சுக்கலாம். நான் பார்த்துக்கிறேன்!" என்று தைரியமும் கூறினான்.

'இதே சமாளிப்பை, திருமணத்திற்கு முன்னரே செய்திருக்கலாமே... இப்போது எங்கிருந்து தைரியம் வந்தது' என்று ஷோபனாவின் மனதின் ஓரத்தில் தோன்றிய உறுத்தலை ஒதுக்கும் வண்ணம்,

''அப்புறம், ஷோபனாவோட படிப்புக்கு... எங்களுக்கு ஹோம் லோன் தர அதே பேங்க்ல கேட்டிருக்கேன். கண்டிப்பா தரதா சொல்லியிருக்காங்க.. இன்னைக்குப் போய் பார்க்கலாமா?'' என்றான் தொடர் குண்டாய்!

''என்ன மாப்பிள்ளை இது? உங்க கல்யாணத்துக்கான பணத்தை... உங்ககிட்ட வாங்கவே எனக்கு இஷ்ட மில்லை... ஷோபியோட வாழ்க்கைக்காகத்தான் சரின்னு ஒத்துக்கத் தோணுது. அதுக்கும் மேலா... அவ படிப் புக்கு... வேணாம் மாப்பிள்ளை! இவளைக் கட்டிக் கொடுத் திடலாம்... அவங்களா விரும்பிப் படிக்க வச்சா... படிக்கட் டும்... இல்லன்னா அவ படிக்கவே வேணாம்!'' என்றார் பெண்ணைப் பெற்றவர்.

ஷோபனாவோ ''நான் யார் பணத்திலையும் படிக்க மாட்டேன்!'' என்றாள் வெடுக்கென.

''இந்த கவுரதைக்கு ஒண்ணும் குறைச்சலில்லை...'' என்று லீலாவதி நொடிக்கும் போதே,

''நான் பணம் தரதா சொல்லலையே, அத்தை! யாருக் குமே பங்கமில்லாம... பேங்க்-ல தான் லோன் லோடப் போறோம்! கல்யாணம் ஆகும்போது, ஷோபனாவுக்கும் எந்த விதமான தாழ்வு மனப்பான்மையும் இருக்காது!'' என்றான் தெளிவாக.

லீலாவதிக்கு இந்த ஏற்பாடு சரியென்று பட, ஷோப னாவோ ''என்னோட வாழ்க்கை சரி... அம்மாவுக்கு? அம்மா சாப்பாட்டுக்கு என்ன செய்வாங்க?'' என்றாள் அலட்சியமாக.

இதெல்லாம் சரியே வராது என்ற பாவனையுடன் நின் றிருந்தவளை நேராய் நோக்கி, ''மாமாவோட ஆட்டோவை



வாடகைக்கு விடலாம். அதில வர பணம், அத்தைக்குப் போதும்'' என்றான் மருமகன்.

நானும் வீட்டில சும்மா தானே இருக்கேன். இப்போ நீ செய்ற மகளிர் சுய உதவிக் குழு வேலையை நான் செய்றேன்... அதிலையும் கொஞ்சம் பணம் வருமில் லையா?!'' என்று லீலாவதியும், தன் வருமானத்திற்கான வழியைச் சொன்னார்.

மறுக்க முடியாத தீர்வுதான், ஆனாலும்... என்று இழுத்த ஷோபனாவின் மனதை மீறிக் கொண்டு,

''அப்போ... சின்ன மாப்பிள்ளை வீட்டில போய்... கல்யாணத்துக்குப் பேசிட்டு வந்திரலாம். நீங்களும் காஞ்சியுமா பேசிட்டு வந்துடுறீங்களா?'' என்று ஆர்வம் பொங்கக் கேட்டார் லீலாவதி.

''சரிம்மா...'' என்று காஞ்சனா தொடங்கும்போது,

''இல்லைம்மா... நான் படிச்சு முடிச்சிட்டுத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்'' என்றாள் ஷோபனா உறுதி யாக.

''பைத்தியக்காரத்தனம் பண்ணாதே, ஷோபி! கல் யாணம் பண்ணிக்கிட்டு, படிச்சா... குறைஞ்சா போய் டுவே?'' - காஞ்சனா எகிற,

''பெண்ணிற்குத் திருமண வயது - 21ன்னு நம்ம ஆட்டோவோட பின்பக்கம் எழுதி இருக்கிறதை நீ படிச்சதே இல்லையா? எனக்கு... இப்போ பத்தொன்பது தான் ஆகுது!'' என்றாள் ஷோபனா, தெளிவாகவே.

தங்கையை சமாதானம் செய்ய முடியாமல் போய்விட, அவளைத் தனியே அழைத்துச் சென்ற காஞ்சனா ''அவர்... அதான் பிரபாகர் மேல ஏதாவது கோபமா

இருக்கியா, ஷோபி? ஏன் கல்யாணம் வேண்டாம்கிற?'' என்றாள் நயந்த குரலில்.

''அவர் மேல... எனக்கு எந்தக் கோபமும் இல்லை! அவருக்குத்தான் என் மேல கோபம்!'' என்று வேகம் குறையாமல் வந்தது பதில்.

கூடவே, ''இல்ல காஞ்சி! கல்யாணம் பண்ணிட்டு படிச்சா... என்னால கல்யாண வாழ்க்கையிலும் முழு கவனம் செலுத்த முடியாது... படிப்பையும் சிரத்தையோட படிக்க முடியாது. இரண்டு கெட்டானா இருக்கிறதைவிட, கஷ்டமா இருந்தாலும், ஒரேடியா படிப்பை முடிச்சிட்டு... அவரைக் கல்யாணம் செய்துக்கிறேன், காஞ்சி! அப்போதான்... அவரோட வாழற வாழ்க்கையை முழுசா அனுபவிக்க முடியும்'' என்ற இளையவள்,

''இதெல்லாமே, அவர் என்னை மறக்காம இருக்கும் பட்சத்தில் தான்!'' என்றாள் விரக்தியுடன்.

அவளது குரல் காட்டிய வலியைப் போக்கும் எண்ணத்தில், காஞ்சனா பேசத் துவங்கும் முன்னரே, ''இல்லை... அவரால, என்னை மறக்க முடியாது! என்னோட காதலை விட... அவரோட காதல் உண்மையானது! இப்போ இருக்க கோபத்தையும் மீறி, எனக்காக கண்டிப்பா காத்திருப்பார்!'' என்றாள் மிகுந்த உறுதியுடன்.

அதன் பின்னர், காரியங்கள் மின்னல் வேகத்தில் நடந்தேறின. என்ன வேகம் என்றால்... பத்தே நாளில் ஷோபனா கல்லூரியில் சேரும் அளவிற்கு வேகம்! சண்முகம் அண்ணாச்சியிடம், வட்டியையும் முதலையும் திருப்பிக் கொடுத்த அன்றே ஷோபனா, கல்லூரிக்குப்



போவதாக முடிவாக, லீலாவதி அன்றைய ''கேலி - கிண்டல்'' நிகழ்ச்சியை எண்ணி பயம் கொள்ளவும், ஷோபனா தைரியமாகப் பேசினாள்.

''இல்லைம்மா. காலேஜ்க்கு வெளியதான் அவங்களால ஆட முடியும்... காலேஜ்குள்ள பல்லு பிடுங்கின பாம்புங்கதான்... ஏற்கனவே, அவங்க மேல ஒரு கம்ப்ளைன்ட் இருக்கிறதால, எதுவும் பெருசா பண்ணிட மாட்டாங்க. கவலைப்படாதீங்க'' என்று அன்னைக்கு, தெம்பூட்டிவிட்டே கல்லூரிக்குக் கிளம்பினாள் அவள்.

ஷோபனா கல்லூரியில் சேர்ந்த நேரம், அவளது முதல் வருடப் படிப்பின் இரண்டாவது செமஸ்டர், நெருங்கிக் கொண்டிருந்தது!

ஷோபனாவின் நிலை உணர்ந்த கல்லூரி நிர்வாகம், அவளது அட்டெண்டன்சை ஓரளவிற்கு அட்ஜஸ்ட் செய்து, அவளைத் தேர்வு எழுதும் நிலைக்குத் தகுதி படுத்த, அந்த பரீட்சையில் தேர்வாவது ஷோபனாவின் கையில் இருந்தது!

கல்லூரி நிர்வாகம் தன் மேல் வைத்த நம்பிக்கையை விடவும், பிரபாகருடன் சேரும் நாட்களின் கணக்கு கூடிக் கொண்டே போகுமோ என்ற பயம், ஷோபனாவை மிகுந்த சிரத்தையுடன் படிக்க வைத்தது!

''ஆஹா... ஓஹோ''வென மதிப்பெண்கள் பெறாவிட்டாலும், ஷோபனாவின் கடும் முயற்சி, அவளைத் தேர்வில் தோல்வியின்றி தேர வைத்தது!

படிப்பில் ஓரளவிற்கு குடிக்கையானதும், ஷோபனாவின் மனம் மீண்டும் பிரபாகரிடம் தாவ ஆரம்பித்தது!

இப்போது, கல்லூரிக்கு பேருந்தில் செல்லும் நேரத் தில் பிரபாகரின் நிகழ்ச்சி ஒளிபரப்பாவதால், பயண நேரம் முழுதும் அவனுடன் சஞ்சரித்துக் கொண்டே, பயணித்தாள் அவள்.

இதன் விளைவாய், அவனைக் கண்ணார காண வேண்டும் என்ற ஆவல், நெஞ்சைப் பிசைய, மாலை யில் கல்லூரியிலிருந்து வரும்போது, ராமநாதபுரத்தில் இறங்கி, அவனது அலுவலகம் இருக்கும் இடத்திற்கு எதிர்ப்புறம் நின்று, கண்ணாடி வழியாக தெரியும் அவனது முதுகு புறத்தையும், பாதி திரும்பியிருந்த தோற்றத்தையும் ஏக்கத்துடன் பார்த்துவிட்டுச் செல்லத் துவங்கினாள்!

ஒருமுறை (கிட்டத்தட்ட ஒரு வருடம், ஆறு மாதத் திற்குப் பின்னர்), அப்படி நிற்கும் போது, ரம்யா பின் னிருந்து தோளில் தட்டவும், தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் ஷோபனா.

''ஹே... நான் தான்... ரம்யா!'' என மற்றவள் சொல் லவும்,

''ஹ்ம்ம், எப்படி இருக்கீங்க?'' என்று கேட்டவளுக்கு, பிரபாகரைப் பற்றிக் கேட்க வேண்டும் போல் நாவு துடித்தது.

''ரொம்ப ரொம்ப நல்லா இருக்கேன். நானே உன்னை உங்க வீட்டில வந்து பார்க்கணும்ன்னு நினைச்சேன்...'' - சொல்லிவிட்டு, ரம்யா ஷோபனாவின் முகத்தை ஆராய்ந்தாள்.

அன்று போல், பிரபாகரும் அவளுமாய் வந்திருப்பார் களோ... நல்ல சந்தர்ப்பத்தை தவற விட்டோமே? என்று மனம் பதைத்தது ஷோபனாவிற்கு.



ரம்யா தன்னையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருப்பது புரிய, ''என்ன விஷயம்?'' என மெல்ல நூல் விட்டாள், ஷோபனா.

''எனக்குக் கல்யாணம்!'' - சந்தோசம் படர்ந்த அறி விப்பாய் வந்தது. ரம்யாவின் குரல்.

''ஹோ! கங்கிராட்ஸ்! எப்போ கல்யாணம்? யாரு மாப்பிள்ளை?'' என்று ஷோபனாவும் புன்னகை புரிய,

''எல்லாம்... நம்ம நண்பர்தான்!'' என்றாள் ரம்யா, மர்மப் புன்னகையுடன்.

சட்டென, ஷோபனாவின் மனம் ஏழு காத தூரத்திற் கும் ஓடிச் சென்று, மூச்சிரைக்க நிற்க, ''யாரு...'' என்ற வார்த்தையே, காற்றாய்தான் வெளிவந்தது, அவளிட மிருந்து!

அதற்குள், அவளது கைப்பேசி கிணுகிணுக்கவே, ''ஒரு நிமிஷம்'' என்று அதனுடன் சற்றே நகர்ந்து சென் றாள் அவள்.

'ஹய்யோ... யாருன்னு சொல்லிட்டுப் போகக் கூடாதா?

'ஒருவேளை... ஒருவேளை... பிரபாகராய் இருக் குமோ... சை... சை... தப்பு தப்பு... என் பிரபு என்னை மறக்க மாட்டார்...

'ஆனா... நண்பர்ன்னு சொல்றாங்களே... யாரா இருக்கும்?' - ஷோபனாவின் மனம், ராஜ்தானி எக்ஸ் பிரஸ் வேகத்தில் துடிக்க,

அங்கே ரம்யாவோ சாவகாசமாய் பேசிக் கொண்டிருந் தாள். அவள் பேசியதில், முக்கால் வாசி வாக்கியங்கள் மிக மெல்லிய குரலிலேயே முடிந்துவிட,

''ஏய்... ரொம்பப் பண்ணாதேடா...''

''நான் யாரை வேணும்னாலும் மாட்டி விடுவேன்... உனக்கென்ன?''

''அப்படித்தான் பேசுவேன்...''

''போனை வைக்கவா? ம்ஹூம் மாட்டேன்பா...''

''கொஞ்சம் நேரம் தவிச்சா என்ன குறைஞ்சா போய்டும்!''

''சீக்கிரம் வரணுமா? முடியாது போ!'' - போன்றவை மட்டுமே, சத்தமாய் வெளிவந்தன.

'ஐயோ... பேசினது போதும்! சீக்கிரம் வந்து... யாரு மாப்பிள்ளைன்னு சொல்லு...' என்று கத்த வேண்டும் போலிருந்தது, ஷோபனாவிற்கு!

பல்லைக் கடித்துக் கொண்டு அவள் நிற்க, ''சாரி ஷோபனா... என்னோட பாய் பிரண்டுகிட்ட பேசிட்டு இருந்தேன்'' என்றவாறே வந்தாள், ரம்யா.

''பரவாயில்லை'' - புன்னகை என்ற பெயரில், உதட்டை இழுத்துப் பிடித்து வைத்திருந்தாள், ஷோபனா.

இப்பொழுதாவது சொல்வாள் என்று அவள் காத்திருக்க, ரம்யாவோ ''நவம்பர் இருபத்தியேழாம் தேதி, சென்னை-ல கல்யாணம்... நீயும் அம்மாவும் கண்டிப்பா வரணும் சரியா?'' என்றாள் ஷோபனாவின் கையைப் பிடித்துக் கொண்டு.

''ஹ்ம்ம். கண்டிப்பா வரோம்'' என்ற ஷோபனாவிற்கு, 'யாரு மாப்பிள்ளை?' என்பதிலேயே இருந்தது கவனம்.

அதை உணராதவள் போல், ''சரி... ஷோபனா. இந்த வாரக் கடையில, நானும் அவரும் வீட்டுக்கு வந்து பத்திரிகை வைக்கிறோம். கண்டிப்பா வந்திடுங்க. இப்போ... எனக்கு ஒரு சின்ன வேலையிருக்கு... கிளம்புறேன்...'' என்று ரம்யா நகரவும்,



''ஹய்யோ... முக்கியமான விஷயத்தை சொல்லாமலே போறீங்களே?'' என்று அழாக்குறையாக அவளைக் கைப்பற்றி நிறுத்தினாள், பிரபாகரின் காதலி.

''என்ன முக்கியமான விஷயம்?'' - எதுவுமே தெரியாத பச்சைக் குழந்தை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, அவள் கேட்க,

உள்ளே சென்ற குரலும், கீழே தாழ்ந்த தலையுமாக ''யாரு மாப்பிள்ளைன்னு...'' என்று மெல்ல இழுத்தாள், ஷோபனா.

''அதுவா... அது... அது...'' என்று இழுத்துக் கொண்டே, ரோட்டின் நுனிக்குச் சென்றவள், சடாரென ரோட்டைக் கடந்து, எதிர்புறம் சென்று விட்டாள்!

''ச்சே..'' என்று கால்களைத் தரையில் உதைத்த ஷோபனா, ரம்யாவை மனதார வைதுகொண்டே பஸ் ஸ்டாப்பின் பக்கம் திரும்பும் நேரத்தில், ''ஹே ஷோபனா! என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போற... அதிர்ஷ்டசாலி...'' என்று எதிர்புறமிருந்து குரல் கொடுத்த ரம்யா, சிறு இடைவெளிவிட,

'நடு ரோட்டில் நின்று கொண்டு... என்ன கத்து கத்துகிறாள் பாரு...' என்று சமுதாயத்திற்காக கவலைப் பட்ட மனம், 'யார் என்ன நினைத்தால் என்ன... எனக்குத் தேவையான விவரத்தை அவள் சொன்னால் போதும்' என்று சுயநலமாய் மாறி, ''யாரு?'' என்று இவளும் படபடப்பாய் கத்தினாள்.

''பிரபாகர் இல்லை'' என்றாள், எதிரே இருந்தவள் சிரிப்புடன்.

தன் தவிப்பை உணர்ந்து கொண்டாளே என்று வெட்கம் பிடுங்கித் தின்றபோதும், ஷோபனா அடைந்த நிம்மதிக்கு அளவு கோலே இல்லாது போனது!

தன் மன்னவன், தன்னவனாகவே இருப்பதில்... தண்ணீரில் மலர்ந்திருக்கும் அல்லித் தண்டாய், உடல் தளர்ந்தாள், மங்கையாள்!

## 17

அவளது சந்தோஷத்தை மேலும் கூட்டுவது போல், இன்னொன்றும் நடந்தது!

சொன்னது போலவே, அந்த வாரக் கடைசியில், ஷோபனாவின் வீடு தேடி வந்த ரம்யா, தன் திருமண அழைப்பிதழுடன் ஷோபனா - லீலாவதிக்கான ரயில் டிக்கெட்டையும் கொடுத்துச் சென்றாள்!

அப்படியே ரம்யாவைக் கட்டிக் கொண்டு கொஞ்ச வேண்டும் போலிருந்தது, ஷோபனாவிற்கு! பின்னே, தன் நாயகனைக் கண்ணாரக் காணும் தருணத்திற்கு தடம் போட்டிருக்கிறாளே! அதற்காகவே, அவளுக்கு ஆயிரமாயிரம் நமஸ்காரங்கள் செய்யலாம் என்றெண்ணினாள் அவள்!

இருபத்தியாறாம் தேதி காலையில சென்னையில் இருக்கும்படி இருந்தது அந்த டிக்கெட்... இறங்கிய அன்றே இல்லாவிட்டாலும், கல்யாணத் தேதியன்று, பிரபாவை கண்டிப்பாக பார்த்துவிடலாம் என்று குத்தாட்டம் போட்ட மனதை, டிஸ்கோ டான்ஸ் ஆட வைக்கும் வண்ணம், அவளது ரயில் பயணம்



முழுவதுமே பிரபா அவளுடன் இருக்கும்படி அமைந்து போனது!

தனசேகரன் இறந்ததைக் காரணம் காட்டி, லீலாவதி கோவையிலேயே தங்கிவிட, ஷோபனா மட்டும் சென்னைக்குப் பயணப்பட்டாள்!

'பிரபுவைக் கண்ணுக்குள் நிறைத்துக் கொள்ளும் தருணத்திற்கு... இன்னும் ஒரே நாள்...' என்று கணக்குப் போட்டுக் கொண்டே, பிளாட்பாரத்தில் நடந்தவள், எதிரே வந்த ஒருவன் மீது முட்டிக் கொண்டாள்!

தோளில் பலமாய் இடித்தவனைத் திட்டுவதற்கு வாய் திறந்தவள், அப்படியே உறைந்து போனாள்! ஏனெனில், அங்கே நின்றவன் பிரபாகர்!

இமைக்க மறந்து அவள் நிற்க, ''ஹலோ... கண்ணை எங்க வச்சிட்டு வரீங்க?!'' என்று கை நீட்டி அவளைத் திட்டினான், அவன்!

தானல்லவோ அவனைத் திட்ட எண்ணினோம் என்பதை மறந்து, ''சாரி... ஏதோ ஞாபகத்தில்...'' ஷோபனா இழுக்க,

''கனவு கண்டுட்டே வந்தா... இப்படித்தான்! எதிர்ல லாரியே வந்தாலும் தெரியாது!'' என்று தலையில் அடித்துக் கொண்டே, அங்கிருந்து நகர்ந்து விட்டிருந்தான், அவன்!

''பிரபு... பிரபு...'' என அவள் அழைத்தது கேட்காதது போல், அவன் சென்றபோதும் 'ஹையா... அவனும் இந்த ட்ரைன்-ல தான் வரான் போல... எந்த கோச்ன்னு தெரியலையே? டி.டி. ஆரை கேட்டுப் பார்ப்போமா? ஆனா... எத்தனை பிரபாகர் இருப்பாங்க... ஹ்ம்ம் இவன்...

வி.பிரபாகர்... வயசு... இருபத்தியஞ்சு... ம்ஹ்ம் இல்லை...' என்று தன்னுள்ளே கணக்குப் போட்டவாறே, தன் கோச்சின் அருகே வந்திருந்தாள், அவள்.

வேகமாய், அங்கிருந்த பயணிகள் பட்டியலைப் பார்வையிட்டவளுக்கு, துள்ளிக் குதிக்க வேண்டும் போல் தோன்றியது! ஏன்னா... அவள் சீட்டிற்கு பக்கத்து சீட்டில் இருந்த பெயர், வி.பிரபாகர்!

அப்போது மட்டும், ரம்யா இருந்திருந்தால்... அவளை இறுக்கி அணைத்து ஒரு உம்மா கொடுத்திருப்பாள்! ப்ச்... ரம்யா கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

'திருமணத்திற்காக எடுத்ததால், ஒரே வரிசையாய் வந்துவிட்டது போலும்' என்ற எண்ணத்துடன், அவள் நின்றிருக்க, ''இன்னும் கனவு கண்டு முடிக்கலையா? கொஞ்சம் நகருங்க... நான் உள்ள ஏறணும்...'' அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றவன், பிரபாகரேதான்.

அவனைத் தொடர்ந்து, உள்ளே சென்றால், அங்கே பிரபாகரின் குடும்பமே இருந்தது.

அவர்களை அங்கு கண்டதும், ஷோபனாவிற்கு மிகுந்த சந்தோஷமாய் இருந்தது! இவர்கள் முன்னிலையில், எந்தவித ரசாபாசத்திற்கும் வழி இருக்காது என்பதே அந்த நிம்மதிக்குக் காரணம்!

கௌசியின் அருகே சென்று அமர்ந்து கொண்டவள், ''ஹே குட்டீஸ், எப்படிடா இருக்கீங்க?'' என்று ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க, நகுலின் சட்டையைப் பிடித்து இழுத்தவாறே கேட்கவும்,

''ஹையா, ஷோபி ஆன்ட்டி! நீங்க ஏன்... வரவே இல்லை... நாங்க ஸ்கூலுக்கு கார்-ல போறோம்... தாத்தா



கூடப் போறோம்...'' என்று அளக்கத் தொடங்கிய நகுலிடம், தொடர்ந்து பேசிக் கொண்டே வந்தவளின் பார்வை மட்டும், சைடு லோயர் பெர்த்தில் கால் நீட்டி அமர்ந்திருந்த பிரபாகரின் மீது படிந்து படிந்து மீண்டது!

அவனோ, பத்திரிகையில் கவனமாய் இருக்க, 'அழுத்தம்... அழுத்தம்...' என்று கரித்துக் கொட்டினாள், ஷோபனா.

பிரபாகர் தான், அறியாத மனிதன் போலிருந்தானே ஒழிய, கௌசல்யாவும் வெங்கடாசலமும் அவளிடம் இயல்பாகவே பேசினர். திருமணம் பற்றிய பேச்சை முற்றிலும் தவிர்த்து, படிப்பு... பொது விஷயம்... பிள்ளைகள்... என்று பேச்சு வேறு திசையில் பயணித்தது.

ரயில் கிளம்பி அரை மணி நேரம் ஆனதும், நகுலும் பரத்தும் தூக்கத்தில் சாமியாடவே, ''படுக்கலாம்'' என்று பெர்த்தை எடுத்துப் போட்டார், வெங்கடாசலம்.

''நீங்க விடுங்கப்பா, நான் போடுறேன்...'' என்ற பிரபாகர், மிடில் பெர்த்க்கான சங்கிலியை மேலிருந்து எடுத்துப் போடத் துவங்கினான்.

ஓராளாய் அதைப் போடுவது கஷ்டம் என்பதால், ஷோபனாவும் மற்றொரு பக்கம் பிடித்துக் கொள்ள, பிரபாகரின் பார்வையோ அவளைச் சற்றும் சீண்டவில்லை!

வலிமையான அவனது கைகளின் அசைவை, திருட்டுத்தனமாய் ரசித்தவாறே அவள் நிற்க, ''போட்டாச்சு... பெர்த்-ல இருந்து கையை எடுங்க...'' என்று விட்டு, மீண்டும் தான் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டான்.

''இந்த கம்பார்ட்மெண்ட் முழுகமே நமக்குத் தான்மா.. நரேனும் அவங்க அம்மாவும் ஈரோடு ஸ்டேஷன்-ல ஏறுவாங்க. அவங்களுக்கு ஒரு லோயர் பெர்த்தை விட்டுட்டு, நீ எங்க வேணும்னாலும் படுத்துக்கோ...'' என்றார் வெங்கடாசலம்.

''பசங்க...'' என்று அவள் இழுக்க, ''உங்க அம்மாவும், சுதாகரும் வரலை இல்லையா... அந்த பெர்த்-ல நருவும் பரத்தும் படுத்துப்பாங்க! நானும், கௌசியும் லோயர்... பிரபா மேல...'' என்றார் அவர், கூடுதல் தகவலுடன்.

''நானும் அப்பர் பெர்த்-ல'' என்று சொல்லத் துடித்த நாவைக் கட்டுப்படுத்தி, ''சுதாகர் சார்... கல்யாணத்துக்கு வரலையா?'' என்றாள் அவள், வேறு விஷயம் பேசுபவள் போல.

''ஒரு மீட்டிங்காக சென்னை போனவர், அங்கேயே தான் இருக்கார்'' என்று கௌசி, பதில் சொல்லவும்,

''நான் இந்தப் பக்க அப்பர் பெர்த்-ல படுத்துக் கட்டுமா? நரேன் அண்ணாவும் அவங்க அம்மாவும்... சைடு பெர்த் இரண்டையும் எடுத்துக்கட்டும்... ஒரே பக்கமா போயிடும்!'' என்றாள் அப்பாவியாக.

''சரிமா'' என அவர்கள் சாதாரணமாய் முடித்துவிட, ஷோபனாவிற்கு சந்தோசம் தாங்கவில்லை.

அனைவரும் படுக்க ஆயத்தமாக, ''நீங்கெல்லாம் சாப்பிட்டாச்சா?'' என்ற ஷோபனாவின் கண்களில் பசியின் சாயல்!

''நோ... வீட்டிலேயே ஆச்சே! நீ சாப்பிடலையா... ஐயோ... தெரியாம போச்சே... நீயாவது இவ்வளவு நேரத் துக்கு சொல்லக் கூடாதா ஷோபி...'' என்று வருந்திய கௌசல்யா, ''ஐய்யோ... பெர்த் வேற மாட்டி விட்



டாச்சே... இங்க உட்கார்ந்து சாப்பிட முடியாது. நீ அங்க உட்கார்ந்து சாப்பிடு... ஏய்... பிரபா... கொஞ்சம் நகர்ந்து உட்காரு... ஷோபி சாப்பிடட்டும்...'' ஷோபனா உண்ண வழி செய்தாள்.

பிரபாகரின் அருகே அமர்ந்த ஷோபனா, ஆற அமர உணவை நிதானமாய்... ஒவ்வொரு கவளமாய் ரசித்து உண்ண, பிரபாகரும் அந்த நேரம் முழுவதும் பத்திரி கையை விட்டு கண்ணை எடுக்கவில்லை.

''அய்யே, ரொம்பத்தான்! ஒரு வாட்டி... கண்ணை நிமிர்த்தி... என்னைப் பார்த்தாதான் என்னவாம்...'' என்று செல்லமாய் வைத ஷோபனாவிற்கு, சீட்டின் கீழே இருந்த பையிலிருந்து தண்ணியைக் கூட எடுத்துக் குடிக்க மனம் வரவில்லை.

காதல் மனம் தாங்கும்... பசித்த வயிறு தாங்குமோ? ஐந்தே நிமிடத்தில், விக்கலாய் மாறி, அவளை மிரட் டியது!

''ஹிக்... ஹிக்...'' என அவள் தடுமாற, தண்ணீர் பாட்டிலை எடுத்து, மூடியைத் திறந்து அவளிடம் நீட்டி னான் பிரபாகர்.

அந்த செய்கையே, மனதிற்கு இறக்கை கட்டி, வண்ணக் குயிலாய் நீல வானில் சிறகடிக்கச் செய்ய, ''தேங்க்ஸ்...'' என்றாள் ஷோபனா, மோகனக் குரலில்.

பதிலுக்கு ''யு ஆர் வெல்கம்'' என்ற அவனது குரலோ, ஆட்டுரலில் அடிபடும் தேங்காய் சில்லாய் கரகரத்தது!

அவள் உணவை முடிப்பதற்கும், பிரபாகர் மேலேறி படுப்பதற்கும் சரியாக இருக்க, ஷோபனாவும் அவசர அவசரமாய், மேல் பெர்த்தில் ஏறிப் படுத்தாள்!

அப்போதும் பிரபாகரின் கையிலிருந்த பத்திரிகையைக் கண்டதும், காச் மூச் என்று கத்தத் துடித்த தொண்டையை, லேசாய் கனைத்து அவள் அடைக்கும் போதே, ''பிரபா... படிச்சது போதும். லைட் ஆஃப் பண்ணு...'' என்றாள் கௌசல்யா.

பதிலின்றி, விளக்கை அணைத்தவன், சின்னதாய் இருந்த நைட் லாம்பை போட்டுவிட்டு, கண் மூடிக் கொண்டான்.

வலப் பக்க பெர்த்தில் அவன் படுத்திருக்க, இடப் பக்கமிருந்து அவனைப் பார்ப்பதும், கண்ணை மூடிக் கொள்வதுமாய் கண்ணாம்பூச்சி ஆடிக் கொண்டிருந்தாள் ஷோபனா.

இடக்கையை நெற்றியில் வைத்து, அவன் முகத்தை மறைத்துக் கொள்ள, சற்றே எட்டி எட்டிப் பார்த்துவிட்டு, அவன் கண்டு கொள்வானோ என்ற பயத்தில், மீண்டும் படுத்துக் கொண்டாள் அவள்.

இதுவே, அரை மணி நேரம் தொடர, பிரபாகர் உட்பட அனைவரும் தூங்கி விட்டனர் என்பதை உணர்ந்து கொண்ட ஷோபனா, பிரபாவைப் பார்த்த மாதிரி ஒருக்களித்துப் படுத்து ''என்னோட பிரபுக்கு... என் மேல கோபமா?'' என்றாள் மெல்ல.

''கோபம் இல்ல... ரொம்ப ரொம்ப... ரொம்ப ரொம்ப... ரொம்பக் கோபம். இல்லையா?'' என்றாள் தொடர்ந்து.

''என்னைப் பார்க்கத் தடுக்கிற கோபம்... என்னோட பேசத் தடுக்கிற கோபம்... என்னைத் தவிர்க்கத் துடிக்கிற கோபம்... இப்படி எல்லாமே கோபம்...'' என அவள் மிக மெல்லிய குரலில் பேசிக் கொண்டே போக, பிரபாகர் சடாரென அவள் புறம் திரும்பிப் படுத்தான்.



அதில், தூக்கிவாரிப் போட ''அய்யோ...'' என்று தன்னையும் மீறிக் கத்தி விட்டாள், அவள்.

''என்னது... என்னது... என்னாச்சு...'' என்று வெங்கடாசலம் பதற, ''சாரி அங்கிள். அது... அது வந்து... ஒரு கரப்பான் பூச்சி... வேறொண்ணுமில்லை...'' என்று மென்று முழுங்கினாள், அவரது வருங்கால மருமகள்.

''பயமா இருந்தா, நீ வேணும்னா... கீழ படுத்துக்கோமா... நான் மேல படுத்துக்கிறேன்...'' என அவர் சொன்னதும்,

'உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணான்னு நிக்கப் போற...' என்று எண்ணிய ஷோபனா, ''ஐயோ.. வேண்டாம் அங்கிள். போர்வை போர்த்திட்டுப் படுத்தா... சரியாகிடும்...'' என்றதோடு நிறுத்திக் கொள்ளாமல், கழுத்து வரை போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, படுப்பது போல் பாவனை செய்யவும், வெங்கடாசலம் உறங்கப் போனார்.

அன்று இரவு முழுவதும், ஷோபனா உறங்கவில்லை! ஒரு வருடமாய் கண் குளிர பார்க்காத, அவனது திரு முகத்தை ஆசை தீர ரசித்தது, அக்காதல் மனம்!

அன்றிரவு மட்டுமில்லாமல் ரம்யாவின் திருமணம் முடியும் வரை ஷோபனாவின் மனம் பிரபாகருடன் கழிக்கும் அந்தத் தருணங்களை அணு அணுவாய் ரசிக்கத் தொடங்கியது!

பிரபாகரின் ஓயாத கிண்டலில், ரம்யா - விக்னேஷ் இருவரும் மாட்டிக் கொண்டு தவித்ததை ரசித்ததை விடவும், அவர்களைக் கேலி செய்யும்போது பிரபாகரின் கன்னத்தில் விழும் அழகிய குழியை மனம் கிரகித்துக் கொண்டு, ஆனந்த ரசனையில் இன்பமாய் கூத்தாடியது!

ஷோபனா - பிரபாகரைப் பார்த்துவிட்ட ஜொள்ளில், விக்னேஷ் தான் ரம்யாவின் மணவாளன் என்ற முக்கியமான விஷயம் மங்கிப் போய்விட்டதே! குணங்களில் இரு வேறு துருவங்களாய் இருந்த இருவரும், மனதால் ஒன்றுபட்டு, வாழ்வு முழுவதும் எலியும் பூனையுமாய் கழிக்க முடிவு செய்து விட்டிருந்தனர்! நிஜவாழ்வு போல், பூனை எலியை வெல்லுமா... இல்லை டாம் அண்ட் ஜெர்ரியைப் போல் எலி எளிதாய் தப்பிக்குமா என்பது, அவர்கள் கொண்ட காதலைப் பொருத்தது! யாமறியேன் பராபரமே!

## 18

ஷோபனா - பிரபாகரை ரசித்த தருணங்களைப் போல, பலமாய் தலையில் குட்டுப் பட்டத் தருணங்களும் நடந்தேறவே செய்தன!

திருமணத்தன்று மதியம், உணவுப் பந்தியில் நகுல் - பரத் இருவருக்கும் இடையே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தாள் ஷோபனா. பிரபாகர் பந்தி பரிமாறிக் கொண்டிருந்தான்.

இலையில் பாதாம் ஹல்வா இருக்க, நகுலும் பரத்தும் ஒரே வாயில் அதை லபக்க, ஷோபனா இரண்டு வாய்களில் என்றாலும் முதலில் உண்டது அதைத் தான்!

அவள் உண்டதைக் கவனித்தானோ, இல்லை அண்ணன் மகன்களின் விருப்பத்தை உணர்ந்தானோ, மூவருக்கும் இன்னொரு பாதாம் ஹல்வா துண்டை, கொணர்ந்து வைத்தான்.



தன் இலையின் மேல் நிழலாடிய அவனது வலது கையின் மோதிர விரலில் மின்னிய மூன்று வைரம் வைத்த மோதிரத்தை ஒரு நிமிடம் ரசித்தவள், ''ஹய்யோ... இன்னொரு பாதாம் ஹல்வா-வா? எனக்கு வேண்டாம்... போதும்...'' என்றாள் திடுக்கிட்டு.

''நகுல் - பரத் இரண்டு பேருக்கும் தான் வச்சிருக்கு... சாப்பிடு...ங்க...'' - ஒருமையில் தொடங்கிவிட்டு, அவன் மரியாதைக்குத் தாவியது உறுத்தியபோதும் ''நான் என்ன சின்னப் பிள்ளையா? அவங்க சாப்பிடறதையே சாப்பிட?'' என ரோஷமாய் சிலிர்த்தாள் ஷோபனா.

''ஹோ... நீங்க சின்னப் பிள்ளை இல்லையா? எனக்கென்னமோ... இருபத்தியொரு வயசுக்குள்ள இருக்க எல்லாரும் சின்னப் பசங்கன்னு யாரோ சொன்னதா நினைப்பு...'' என்று நூத்துக் கிழவிகள் போல், கன்னத்தில் கை வைத்து வியந்தான், பிரபாகர்.

''திருமணத்தைத் தள்ளிப் போடுவதற்குத்தான் சொன்னக் காரணம்'' என்பது உரைக்க, அடிபட்ட வலியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள், ஷோபனா.

அவனோ, ஸ்டைலாக தோளைக் குலுக்கிவிட்டு, அடுத்த இலைக்குச் சென்று விட்டிருந்தான்!

அவனது முதுகையே வெறித்திருந்தவளின் மூளையின் சிறு மூலையில் 'இந்தக் காரணத்தை நாம் காஞ்சியிடம் அல்லவா சொன்னோம்? இவனிடமோ கௌசி அக்காவிடமோ சொல்லவில்லையே?' என்ற கேள்வி எழுந்தபோதும், வாங்கிய குட்டில் அது உடனேயே மட்டுப்பட்டு விட்டது!

இதன் தொடர்ச்சியாய், அன்றைய தினம் ரம்யா - விக்னேஷ் இருவரிடமும் விடைபெற்றுச் செல்ல,

கௌசியின் குடும்பத்துடன் ஷோபனாவும் சென்றிருந் தாள்.

ரம்யாவின் கையைப் பற்றி குலுக்கிய பிரபாகர், விக்னேஷை ஆரத் தழுவி, ''பரஸ்பர நம்பிக்கைதான் வாழ்க்கையோட ஆதாரம்! யாருக்காகவும் ரம்யா மேல வச்சிருக்க நம்பிக்கையை இழக்கக் கூடாது, விக்கி!'' என்றான் நண்பனுக்கான அறிவுரையாய்.

அனைவரும் ''டேய்... என்னடா நூத்துக் கிழவி மாதிரி பேசுறே?'' என்று கேலி செய்த போதும், அது தனக்கான குட்டு என்று ஷோபனாவுக்குப் புரிந்தது!

முட்டிக் கொண்டு வந்த கண்ணீரை முயன்று அடக்கி, ரம்யாவிடம் சென்றவள், ''ரம்யா... உங்க பிரண்டு மாதிரி எனக்கு அட்வைஸ் எல்லாம் செய்யத் தெரியாது... ஏன்னா நான் சின்னப் பெண்ணில்லையா? ஜஸ்ட் ஒரு பிரண்ட்ஸ் டாக்...'' என்றுவிட்டு,

''என்னதான் காதல் - கல்யாணம்ன்னு வந்துட் டாலும், ரெண்டு பேருமே தனித் தனி மனுஷங்கதான். ஒருத்தங்களோட உணர்ச்சிகளை... மான... அவமானங் களை மற்றவங்க புரிஞ்சுக்கிட்டாலே... வாழ்க்கையில பிரச்சனையே இருக்காது'' என்றாள் பிரபாகரின் கண் களை நேராய் பார்த்தவாறே.

''சூப்பர் ஷோபனா! எல்லோரும்... ஒரு தடவை ஜோரா கை தட்டுங்க...'' என்று விக்னேஷ் பாராட்ட,

கூடியிருந்த அனைவரின் கைதட்டலிலும் பிரபாகரின் தட்டப்படாத கைகள் மட்டுமே நிலைத்துத் தெரிந்தன, ஷோபனாவிற்கு!

இது ஒரு வேதனை என்றால், சென்னையிலிருந்து கோவைக்குத் திரும்பும் பயணத்தில் பிரபாகர் உடன் வராதது அடுத்த வேதனை!



வேதனையை மேலோங்க விடாமல், அவனுடனிருந்த தருணங்களின் ஆனந்தத்தை மேலெழுப்பி, ஆழ் கடல் சீற்றத்தை உள்ளே சுமந்திருக்கும் ஆரவாரமில்லா அலைகடலாய் மாறினாள்!

இன்பத்திற்குள் துன்பத்தை மறைத்து, துன்பமும் இன்பமாய் மாற, இன்பத்தின் போர்வையில் ஊசி குத்தும் குளிராய் இருந்த துன்பத்தை இன்பமாய் அணைத்தாள்!

துன்பத்தின் சாரல் நாட்கள் தாண்டி, மாதங்களில் பய ணித்து, ஓராண்டுக்கும் மேலாய் நடந்தேறி, அதற் கென்ற முடிவும் வந்தது!

அந்த முடிவு - ஷோபனாவின் கடைசி செமஸ்டரில் தொடக்கத்தில், காம்பஸ் வேலை கிடைத்த தினத்தன்று வந்து சேர்ந்தது!

அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை கையில் வாங்கிய சந்தோஷத்துடன் ''அம்மா எனக்கு வேலை கிடைச் சிடுச்சு. மாசம் இருபத்தி நாலு ஆயிரம் சம்பளம்...'' என்று ஆரவாரித்துக் கொண்டே வீட்டினுள் வந்தவள், உள்ளே அமர்ந்திருந்த பெரிய மனிதரைக் கண்டதும் சற்றே தயங்கி நின்றாள்.

''இதுதான் உங்க சின்ன மகளா?'' என்றார் அங் கிருந்தவர்.

''ஆமாங்க சார்! இவ தான்... அவங்க அப்பா இறந்த சமயத்தில, குடும்பத்தைக் காப்பாத்தி கரை சேர்த்தா!'' என்றார் லீலாவதி கண்ணீருடன் கூடிய பெருமையுடன்.

''கேள்விப்பட்டிருக்கேன்... கோயம்புத்தூரின் முதல் பெண் ஆட்டோ டிரைவர் இல்லையா? ஒரு ரேடியா நிகழ்ச்சியில... இவங்க பேட்டி வந்ததே! ஆனா, அப்போ... உங்களோட இந்த நிலைமைக்கு நானும் ஒரு

காரணம்ன்னு தெரியாம போய்டுச்சு'' என்றார் அவர் சற்றே வருத்தத்துடன்.

அவர் கூற வருவது புரியாமல் ''யாருமா...'' என்ற ஷோபனாவிடம்,

''இவரோட லாரில அடிப்பட்டுத்தான்... நம்ம அப்பா...'' முடிக்க முடியாமல் திணறினார் லீலாவதி.

கண்களில் கனலுடன் திரும்பிய மகளிடமிருந்து சூடான வார்த்தைகள் வருவதற்கு முன்னர், ''இவர் அந்த லாரிக்கு ஓனர் மட்டும் தான்மா... ஓட்டிட்டு வந்தது வேற ஆளு'' என்றார் லீலாவதி அவசரமாக.

''ஹோ...'' என்று சட்டென மட்டுப்பட்ட ஷோபனாவின் கோபம் முழுதாய் அடங்கவில்லை.

''ஏன் சார்... குடிகாரங்களா பார்த்துத்தான் டிரைவரா வைப்பீங்களா? ஆட்களை விசாரிச்சு வேலைக்கு சேர்க்க மாட்டீங்களா? உங்களோட மெத்தனத்தால, ஒரு உயிர் போயிட்டுதே சார்... எத்தனை எத்தனை கனவுகள்... எதிர்பார்ப்புக்கள் எல்லாமே வீணா போச்சே... எங்கப்பா இல்லாம நாங்க பட்ட பணக்கஷ்டத்தை விட அவரோட அருகாமை இல்லாம எத்தனை நாள் தவிச்சிருப்போம்... சை...'' என்று படபடவென கடுகாய் பொரிந்தவளின், கண்களில் தந்தையை இழந்த சோகத்தின் அழியாத வடு!

''தப்புதான்மா!'' தலை கவிழ்ந்து ஒத்துக் கொண்ட அந்தப் பெரிய மனிதர்,

''அதுக்கான பிராயச்சித்தம் தான் இது'' எனக் கூறி, லீலாவதியின் கைகளில் பணம் அடங்கிய கவர் ஒன்றைக் கொடுத்தார்.



''பணமா? என்ன பிச்சை போடறீங்களா?'' - ஷோபனா எகிற,

''ஷோபி!'' என்று லீலாவதி அதட்டும் போதே,

''பிச்சை இல்லைம்மா. பிராயச்சித்தம். உங்க அப்பாவோட உயிரை என்னால திருப்பிக் கொண்டு வர முடியாதுதான். ஆனா, அவரோட இருப்பு உங்களுக்கு செய்திருக்கக் கூடிய நன்மைகளில் ஒரு சின்னப் பங்காவது நான் செய்யணும்ன்னு நினைக்கிறேன். தயவு செஞ்சு... எத்துக்கோங்க!'' என்றவரின் குரலில் உண்மையான வருத்தம் இருந்தது.

ஷோபனா ஒன்றும் பேசாமல் நின்றிருக்க, லீலாவதி தான் ''நாமலா போய் கேட்கலையே கண்ணு! அவரா, தப்புக்குத் தீர்வா கொண்டு வந்திருக்கார்! வாங்கிக்கலாம் ராஜாத்தி!'' என்றார் மகளிடம்.

''என்னமோ போங்க! உங்க மனசுக்கு சரின்னு பட்டதுன்னா செய்ங்க...'' என்ற ஷோபனா, பின்புறம் சென்று விட, லீலாவதி அவரிடம் பணத்தைப் பெறுவது உணர்ந்தது அவளது உள்மனது!

கால் மணி நேரத்திற்குப் பின்னர் ''ஷோபிமா.. சார் கிளம்புறாங்க பாரு. உள்ள வா'' என்று அழைத்தார் லீலாவதி.

கடமையே என கைகூப்பி அவருக்கு விடை கொடுத்தவளிடம் ''கிளம்பு ஷோபிமா. காஞ்சி வீட்டுக்குப் போய்.. இந்தப் பணத்தைக் கொடுத்திட்டு வந்திடுவோம்'' என்றார் லீலாவதி, பரபரப்புடன்.

தாயார் ஏன் அந்தப் பணத்தை மறுக்கவில்லை என்பது ஷோபானாவிற்கு. இப்போது புரிந்தது!

மருமகனிடம் கடன்பட்டிருப்பது அவருக்கு கௌரவக் குறைச்சலாய் இருந்திருக்கிறது!

மருமகனுக்காக மாற்றானிடம் மரணத்தை மலிவாக்கி விட்டார் என்று மனம் மறுகியது!

தன் நெஞ்சக் குமுறலை வார்த்தையாய் அவள் வெளியிட, ''ஷோபி, வாழ்க்கையை நமக்கேத்த நேர் கோடாய் பார்க்கக் கூடாது, ராஜாத்தி! அதோட நெளிவு சுளிவுகளில் பயணப்பட்டு வர பக்குவம் இருந்தாதான் வாழ்க்கை ருசிக்கும்... அப்பா இல்லைங்கிறது உன்னை விட எனக்கு அதிக கஷ்டம்.. ஆனா.. அதிலேயே நினைச்சிட்டு இருந்தா, உங்க ரெண்டு பேரோட வாழ்க்கையை என்னால பார்க்க முடியாது! உங்கப்பா இருந்து செய்ய வேண்டியதை.. இறந்து செய்திருக்கார்ன்னு எடுத்துக்க வேண்டியதுதான்'' என்றார் லீலாவதி, வாழ்வின் நிதர்சனத்தை எடுத்துரைக்கும் விதமாய்.

மறுத்துப் பேசத் தோன்றாமல் நின்றிருந்த மகளிடம் ''நீ போய்... கொஞ்சம் மைசூர் பாகு, அரை கிலோ பாதாம் ஹல்வா, கொஞ்சம் பூ, பழம் எல்லாம் வாங்கிட்டு வா. காஞ்சி வீட்டுக்குப் போயிட்டு வந்திடுவோம்'' என்றார் லீலாவதி, நிகழ்காலத்திற்குத் திரும்பியவராய்.

''எதுக்குமா இவ்வளவு? காஞ்சி வீட்டுக்குத் தானே போறோம்?'' என்று வியந்த சின்னவளை,

''வெறும் பணத்தை மட்டும் எடுத்திட்டு அங்க போகக் கூடாது, ஷோபி! சொல்றதை செய்!'' என்று ஏவியவர், அவள் அனைத்துப் பொருட்களையும் வாங்கி வந்ததும், ஒரு புது பட்டுச் சேலையைக் கொடுத்து, ''இதைக் கட்டிக்கிட்டு வா...'' என்றார் மகளிடம்.

''சேலையா?'' ஷோபனா வியக்க,



''ஆமா, அப்படியே கோனியம்மன் கோவிலுக்குப் போயிட்டு வந்திடலாம். நம்ம கஷ்டமெல்லாம் ஒரு முடிவுக்கு வந்த இந்த நாளில அம்மனுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?'' என அவர் எதிர்கேள்வி கேட்கவும், ஷோபனாவும் மாறு பேசாது தாயின் சொற்படி நடந்தாள்.

மாம்பழ வண்ணத்தில், அடர் நீல வண்ணம் ஜரிகை வைத்த காஞ்சிப்பட்டில், கை தேர்ந்த சிற்பி கை எடுக்காது செதுக்கிய சிலையென ஷோபனா வெளிவர, ஆனந்தக் கண்ணீருடன் மகளின் அழகை ரசித்திருந்தார் லீலாவதி.

இருவருமாய் காஞ்சனா வீட்டிற்குச் சென்றால், அங்கே காத்திருந்த அதிர்ச்சிக்குப் பெயர் இன்ப அதிர்ச்சியா? இல்லை பேரின்ப அதிர்ச்சியா? என்று பகுத்தறிய முடியாமல் திணறிப் போனாள், ஷோபனா!

## 19

காஞ்சனாவின் வீட்டின் வரவேற்பறையில், வெங்கடாசலம், கௌசல்யா, சுதாகர், நகுல், பரத், ரம்யா, விக்னேஷ், ரம்யாவின் வயிற்றில் வளரும் பிள்ளை, நரேன்.. முக்கியமாய் பட்டு வேஷ்டி சட்டையில் பிரபாகர் என அங்கிருந்தோரின் பட்டியல் ஏற்படுத்திய பிரமிப்பை விட, அவர்கள் முன்னே இருந்த தாம்பூலத்தட்டும், பிஸ்தா வண்ணத்தில் அவளது மேனியைத் தழுவக் காத்திருந்த சேலையும், மரகத கற்கள் பதித்த கழுத்தாரமும் ஷோபனாவை பேச்சிழக்க வைத்தன!

''அம்மா...'' என்ற அவளது ஒற்றை வார்த்தை அழைப்பிலேயே, வியப்பு, அதிர்ச்சி, சந்தோசம், கண்ணீர் என்று

பல வகை உணர்ச்சிகளும் கலந்திருக்க, கூடியிருந்த அனைவரும்,

''மணமகளே மருமகளே வா... வா... உன் வலது காலை எடுத்து வைத்து வா... வா'' என்று கோரசாய் பாடினர்.

மனதிற்கென்று ஒரு துக்க அளவுகோல் இருப்பது போல் சந்தோஷ அளவுகோலும் உள்ளது அல்லவா?

அதையும் எட்டி, அதற்கு மேலும் ஆனந்தம் தன்னுள் முட்டி மோதுவது போல் உணர்ந்த ஷோபனாவிற்கு நிற்கக் கூடத் திராணியில்லை. அருகே இருந்த நிலைக் கதவை இறுகப் பிடித்தவாறே நின்றவளின் கண்களுக்கு, கூடியிருந்த அனைவரும் மங்கலாய் தெரிய, தன் மன்னவன் மட்டும் நீக்கமற நிறைந்தவனாய், தன்னைப் பார்த்து மந்தகாசப் புன்னகை புரியும் கலியுகக் கண்ண னாய், அவனது கூர்வாள் கண்களால் தன்னைக் கைது செய்து, தன் நெஞ்சமெனும் நிரந்தர கூட்டினுள்ளும்,தன் வீடெனும் பறவைகள் சரணாலயத்திலும் குடி வைக்க ஒப்பந்தப் பத்திரம் கேட்டு வந்திருந்தான்!!

கண்ணும் கண்ணும் பேசிக் கொண்டதில், மாதரசி யின் கண்கள் ''வரட்டுமா?'' என்ற கேள்வியைத் தாங்கி நிற்க, மன்னவனோ ''வா'' என்றான் கண்களின் பரி பாஷையினாலே!

அப்போதும் ''கோபமில்லையே?'' என்று பார்வை கெஞ்ச நின்றிருந்தாள் மன்னவனின் காதல் மாணவி!

''உன்னிடம் கோபம் கொள்ள என்னால் முடியுமோ?'' என்று எதிர்கேள்வி கேட்டன அவனது பார்வையில் நர்த்தன நாட்டியங்கள்!



அவனது எதிர்கேள்வி எதிர்மறை உணர்வுகள் அனைத் தையும் தூர வீசிவிட, கண்களில் பெருகிய நீரை மறைத்தவாறே, உள்ளே செல்ல காலடி எடுத்து வைத் தாள்!

வீட்டின் நிலைப்படிகளை கடக்க இடது காலை முதலில் தூக்கிவிட்டு, சட்டென நாக்கை வெளியே துருத்தி, அதை உதடுகளால் லேசாய் கடித்து, கண்களில் ''ம்ஹூம்'' என்ற உணர்ச்சியைக் கொண்டு வந்து, வலது காலை மாற்றி உள்ளே அவள் வர, ''ஹே'' என்ற ஆர வாரக் கூச்சல் எழுந்து அடங்கியது!

உள்ளே நுழைந்ததும், ''இங்க வா... ஷோபி'' என் றழைத்து, தன்னருகே அமர வைத்துக் கொண்டாள் கௌசல்யா.

சித்தப்பாவின் மடியிலிருந்த பரத், ''ஷோபி ஆன்ட்டி'' என்று தவ்விக் கொண்டு வர,

''பரத் கண்ணா! ஆன்ட்டி இல்லை... சித்தி சொல்லு...'' என்று அவன் தாடையைப் பிடித்துக் கொஞ்சினான் பிரபாகர். அப்போது அவனது கண்கள் அவனது மனை யாளிடமே இருந்தது என்பதை சொல்லவும் வேண் டுமா?!

''ஹுர்ரே!'' என அனைவரும் ஆரவாரம் செய்து, அவனைக் கேலி செய்த போதும், பிரபாகர் அலட்டிக் கொள்ளவில்லை! ஷோபனாவிற்குத்தான் வெட்கமாய் இருந்தது!

''என்னம்மா? எங்க பிரபாகரை கல்யாணம் பண் ணிக்க.. உனக்கு சம்மதம்தானே?'' என்று வெங்கடாசலம் முறையாய் சம்மதம் கேட்க,

"சம்மதம் மாமா" என்று பட்டென பதில் சொன்ன ஷோபனா, உடனேயே "ஆனா..." என்று மெல்ல இழுத் தாள்.

"அடக்கடவுளே, திரும்பவுமா? எவ்வளவு அடிச் சாலும் தாங்குறான்... இவன் ரொம்ப நல்லலலலலலலல லலவன்னு நினைச்சு... அவ திரும்பவும் படிக்கக் கிளம்பிடப் போறா..." என்று பிரபாகர் அவசரமாய் இடைப்புகுந்ததும், அங்கே சிரிப்பலை மீண்டும் எழுந்து அடங்கியது.

அவர்களுடன் இணைந்து சிரித்த போதும், ஷோபனா தன் காரணத்தைக் கூறாதிருக்க எண்ணவில்லை.

அவள் வாய் திறக்கும் முன்னர், "உன்னோட கடைசி பரீட்சை முடிஞ்சபிறகுதான் கல்யாணம். இப்போ... பிரபா வேலை விஷயமா ரெண்டு மாசம் ஆஸ்திரேலியா போக வேண்டியிருக்கு... அதுக்கு முன்னாடி நிச்சயத்தை முடிச்சிடலாம்ன்னுதான் வந்திருக்கோம்" என்றாள் கௌசல்யா.

தனது மனதைப் படித்தவள் போல் அவள் பேசியதில் உண்டான சந்தோஷத்தை, அறுபது நாட்களுக்கும் மேலாக பிரபாகரை காண முடியாது என்ற வருத்தம் வென்று விட, "ஹோ..." என்ற ஒற்றைச் சொல்லை, ஆனந்தமில்லாமல் வெளியிட்டாள் ஷோபனா.

"அடடா... இங்க பாருடா... பொண்ணு என்னமா ஃபீல் பண்ணுது..." என்று ரம்யா கை தட்ட, அதன் எதி ரொலியாய் சிரிப்பும் கேலியும் ஷோபனாவின் வருத் தத்தை சற்றே பின்னுக்குத் தள்ளின.

முடிவில், தாங்கள் கொண்டு வந்த தாம்பூலத் தட்டை எடுத்த வெங்கடாசலம், லீலாவதியிடம் திரும்பி "வாங் கிக்கோங்க மா" என்றார்.



"பெரிய மாப்பிள்ளையும் பொண்ணும் வாங்கிப் பாங்க சம்மந்தி" - தான் வாங்கிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லாமல், அவர் ஒதுங்கி நிற்க,

"நீங்க என்ன நினைச்சு தயங்குறீங்கன்னு எனக்கும் புரியுது! அப்படிப் பார்த்தா.. நானும் இந்தத் தாம்பூலத் தட்டைக் கொடுக்கக் கூடாது.. உங்க வீட்டுக்காரர் மாதிரி, என் மனைவியும் இறைவனடி சேர்ந்தவள் தானே?" - வெங்கடாசலம் மடக்கவும், அங்கே அவரது பெருந்தன்மை வானளாவி உயர்ந்து நின்றது.

"ஷோபியோட வாழ்க்கை நல்லா இருக்கணும்ன்னு நினைக்கிற முதல் ஜீவன் நீங்க தான்மா... நீங்களே மாமாகிட்ட வாங்கிக்கோங்க" என்றாள் காஞ்சனாவும் நிறைந்த மனதுடன்.

சிறு தயக்கத்தின் பின்னே, லீலாவதி வாங்கிக் கொள்ள, பூஜையறையிலிருந்து மற்றொரு தட்டை எடுத்து வந்த பத்மநாபன், "இதை... பெரியப்பாகிட்ட கொடுங்கம்மா" என்றான்.

அதில், பிரபாகருக்கு சட்டை, பேண்ட் ஆகியவை இருக்க, ஷோபனாவின் மனம் நிறைந்தது.

பிரபாகர் வீட்டிலிருந்து கொண்டு வந்த புடவையை மகளிடம் கொடுத்த லீலாவதி, அதைக் கட்டிக் கொண்டு வரும்படி கூறினார்.

ஆர்வமாகவே எழுந்த ஷோபனா, ஏதோ தோன்றிய வளாய் தன் கைப்பையிலிருந்த பணத்தை எடுத்து, "அம்மா... இதை அத்தான்கிட்ட கொடுத்திடுங்க" என்றாள், பொறுப்பாக.

"ஹான்.. மறந்தே போச்சு பாரேன்.." என்று தலை யில் லேசாய் அடித்துக் கொண்ட லீலாவதி, அந்தப்

பணப்பையை வெங்கடாசலத்திடம் நீட்டி "அண்ணே, இந்தாங்க.. மாப்பிள்ளை எங்களுக்குக் கொடுத்த பணம்..." எனவும், உள்ளறையின் பக்கம் நகர்ந்து கொண்டிருந்த ஷோபனா, அதிர்ந்து நின்றாள்.

"என்னது? இது அக்காவோட நகை வித்த பணமில்லையா? அவர் கொடுத்த பணமா? என்ன நடக்குது இங்க?" - வேகமாய் வெளிவந்த கேள்விகள் அவளது அதிர்ச்சியைப் படம் பிடித்துக் காட்ட,

"முதல்ல, போய்.. இந்த சேலையைக் கட்டிட்டு வா... பொறுமையா எல்லா விவரமும் சொல்றேன்..." என்று மகளைப் பிடித்து அறையின் பக்கம் திருப்பியவர், "காஞ்சி... கூட்டிப் போம்மா" என்றார் பெரிய மகளிடம்.

தமக்கையின் கையிழுப்புக்கு ஏற்ப அறைக்குள் நுழைந்தபோதும், ஷோபனாவின் பார்வை கணைகள் பிரபாகரை மின்னல் வேகத்தில் தாக்கிச் சென்றன.

அவனோ, ஒன்றும் அறியாத பச்சைப் பிள்ளை போல் முகத்தை வைத்துக் கொண்டிருந்தான்.

'வரேன்டா மகனே!' என்று உள்ளுக்குள் கரித்துக் கொண்டே சேலையை மாற்றினாள் ஷோபனா.

பச்சை வண்ண இலைகளின் நடுவே ரோஜா பூத்திருந்து பிரபாகர் பார்த்திருக்கிறான்... ஆனால் இங்கோ ரோஜாவின் பட்டிதழ் மேனியை பச்சை வண்ண மேகம் சூழ்ந்திருந்ததைப் பார்க்க, காதல் மயக்கம் கிறக்கமாய் உருமாறியது அவனுக்கு!

அவள் வந்து அமர்ந்ததும், வாங்கி வந்திருந்த மரகத நெக்லஸை அவள் கழுத்தில் அணிவித்தாள், கௌசல்யா.

அதன் கொக்கி போடப்படும் வரை தான், ஷோபனாவிற்கு பொறுமை இருந்தது.



"இந்தப் பணம் யார் கொடுத்தது?" என்று பட்டென கேட்டுவிட்டாள், அவள்.

யாரும் பதில் சொல்லும் முன்னர், "பிரபாகர்" என்றான் பத்மநாபன்.

அவனே தொடர்ந்தும் பேசினான் - "மூணு வருஷத்துக்கு முன்னாடி... பிரபாகரும் அவங்க அப்பாவும் வீட்டுக்கு வந்திருந்தாங்க. காதல் விவரம், கடனால் காதலை நீ மறுத்த விவரம் எல்லாம் சொல்லிட்டு, எங்ககிட்ட ஒரு உதவி கேட்டாங்க..."

"மூணு லட்ச ரூபாய் பணத்தைக் கொடுத்து, இதை எப்படியாவது உன்கிட்ட சேர்த்திடும்படி சொன்னாங்க.. அவங்களா உன்கிட்ட பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தா, நீ அதுக்கும் ஏதாவது முறிக்கிப்பியோன்னு பயம் போல அவங்களுக்கு..."

பிரபாகர் அப்போது சொன்ன "கௌரவம் சிவாஜி கணேசன் கணக்கா.. உங்க தங்கச்சி நெஞ்சைப் பிடிச்சிட்டு வசனம் பேசுறதை நம்மளால தாங்க முடியாது சாமி" என்ற வசனம் ஞாபகம் வந்து, காஞ்சனாவின் முகத்தில் புன்னகையைத் தவழ விட்டது.

அதன் தொடர்ச்சியாய், கணவனைப் பின்பற்றி மனைவியும் பேசத் துவங்கினாள்.

"எனக்கும் சரி.. இவருக்கும் சரி... எங்களாலதான் உன்னோட படிப்பு வீணா போச்சுன்னு மனசை உறுத்திட்டே இருந்ததா? அதுவுமில்லாம, மூணு மாசம் முன்னாடி அறிமுகமான பிரபாகருக்கு இருக்க அக்கறை, கூடவே பிறந்த எனக்கிருக்காதா என்ன? அந்த நேரம் ரொம்பக் குற்ற உணர்ச்சியா இருந்தது. அவரோட பணத்தை மறுத்திட்டு, என்னோட நகையை அடகு

வச்சு, அந்தக் கடனை அடைக்கிறதா சொன்னேன்... உங்க அத்தானும் சரின்னு சொன்னாங்க...''

''ஆனா... மாமா தான் ஒத்துக்கலை. நகையை விற்குறது எங்க மாமியாரோட கோபத்தை அதிகமாக்கும்ன்னு எடுத்துச் சொல்லி, அதுக்குப் பதிலா... இந்தப் பணத்தை என்னோட நகையை வித்து வாங்கின பணமா உன்கிட்ட கொடுக்கச் சொன்னாங்க...'' என்று நடந்ததை சொல்லி முடித்தவள்,

''நீங்களும் ஒண்ணும் சும்மா இருந்திடலையே! உங்களால முடிஞ்ச தொகையா ஐம்பதாயிரத்தை உங்க கல்யாணத்துக்குக் கொடுத்துதானே இருக்கீங்க? மூத்த மாப்பிள்ளை நீங்க கொடுக்கும்போது, என் பையன் அவன் வருங்கால மாமியார் குடும்பத்துக்கு கொடுக்கிறதில என்ன தப்பிருக்கு? இதில குற்ற உணர்ச்சிக்கு இடமே இல்லைமா!'' - அன்றைய தினம், தனது குற்ற உணர்வைப் போக்குவதற்காக வெங்கடாசலம் கூறிய வார்த்தைகளையும், சபையில் பகிர்ந்து கொண்ட காஞ்சனா, அவரை இப்போதும் ஓர் நன்றியுடன் பார்த்தாள்!

ஆனாலும், ஷோபனாவின் மனம் நிம்மதியடையவில்லை!

ஏனோ, வரதட்சணை வாங்குவதற்குப் பதிலாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குதர்க்கமாய் எண்ணியது மனம்.

மனதின் எண்ணம் முகத்தில் வண்ணக் கோலமாய் மாறிவிட, ''இருந்தாலும்...'' என்று இழுத்தாள் ஷோபனா.

இதுவரை பேசாமலிருந்த பிரபாகர் பேசினான். ''ஷோபி.. இதுக்குப் பேர் வரதட்சணையோ... விலையோ



இல்லை... ஜஸ்ட் ஒரு உதவி.. அவ்வளவுதான். அதுவும் கடனா கொடுக்கப்பட்ட பணம்.. அதை நீ இப்போ திருப்பிக் கொடுத்துட்டே. தட்ஸ் இட். இதோட விடு'' என அவன் அழுத்தமாய் சொல்ல, ஷோபனாவுக்கும் அது சரியென்றே பட்டது.

அவனது பணத்தைத் திருப்பிக் கொடுத்தாகிவிட்டதே என்ற நிம்மதியின் விளைவுதான், இச்சமாதானம்!

சட்டென மூளைக்குள் மின்னல் வெட்ட, ''அந்த லாரி ஓனர் பணம் கொடுத்தது... அதுவும் உங்க வேலை தானா? அம்மாவும் உங்களோட கூட்டா?'' என்று கேட்டவளுக்கு, ஏகத்திற்கும் அதிர்ச்சி!

''சமத்துச் சக்கரைக் கட்டி!'' என்று கேலி குரலில் அவளைப் பாராட்டிய பிரபாகர்,

''ஹே ரம்ஸ், நான் சொல்லலை.... ஷோபி ரொம்ப ப்ரைட் ஸ்டுடென்ட்... உன்னை மாதிரி மக்கில்லைன்னு.. பாரு. பாரு எவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிச்சுட்டான்னு...'' புகழ்கிறானா இல்லை கவிழ்க்கிறானா என்று சந்தேகமாய் இருந்தது ஷோபனாவிற்கு.

''இதிலென்ன உனக்கு சந்தேகம்... கண்டிப்பாக கவிழ்க்கத்தான் செய்கிறான்'' என்பதை மெய்ப்பிப்பது போல், விக்னேஷ் பேசினான்.

''அடடா, ரொம்பத்தான் அறிவு! மூணு வருஷமா.. நீ பண்ண லொள்ளை எல்லாம் கோபம்ன்னு நினைச்சு... உருகு உருகுன்னு உருகிட்டு இருந்த இந்தம்மா அறிவாளியாம்... என் செல்லப் பொண்டாட்டி மக்காம்.. அடி பிச்சுடுவேன் ராஸ்கல்!'' - தன் மனைவியை நண்பன் கேலி செய்ததைப் பொறுக்க முடியாத கணவனாய் பேச,

''ஹ்ம்ம்... பாருங்க விக்கி!'' என்று செல்லமாய் அவன் தோள் சாய்ந்து கொண்டாள், அவனது அருமை மனைவியும்.

''நீ அழாதேடா கண்ணம்மா! குடும்பத்தில் ரெண்டு பேருமே அறிவாளியா இருக்கோமேன்னு அவனுக்குப் பொறாமை...'' விக்னேஷ், அவளது கண்களைத் துடைப்பது போல் பாவனை செய்ய,

''ஹோ... உங்களுக்கு ரெட்டைக் குழந்தை பிறக்கப் போறதா டாக்டர் சொல்லியிருக்காங்களா..?'' - சம்பந்தமே இல்லாமல் நடுவே புகுந்தான் நரேன்.

''ரெட்டைக் குழந்தையா? மூணு குழந்தையை வச்செல்லாம் என்னால வீட்டில் மேய்க்க முடியாதுடா... உனக்கேன் இந்தக் கொலைவெறி...'' - விக்னேஷ் ஏகத்திற்கும் அதிர,

''இல்லை... குடும்பத்தில் ரெண்டு பேருமே அறிவாளியா இருக்கிறதா சொன்னியா? அதான், அந்த ரெண்டு பேரு.. பிறக்கப் போற பசங்களோன்னு கேட்டேன்...'' அப்பாவியாய் பதில் சொன்னான், நரேன்.

அவனது பேச்சிலிருந்த உள்குத்தை உணர்ந்து, ''வேணாம்டா.. போலி பில்கேட்ஸ்.. மௌஸ்க்குப் பதிலா.. நிஜ எலியைப் பிடிச்சு கம்ப்யூட்டர்ல கட்டிவச்சிடுவேன்'' என்று விக்னேஷ் மிரட்ட,

''சே, அறிவாளியாகிட்டேடா நரேன்!'' என்று அவனுக்கு ஹை-பை கொடுத்தது, பிரபாகர் அல்ல.... ரம்யா!

''அடிப்பாவி... உனக்காக தானேடி பேசினேன்... இப்படி நீயே கவுத்துட்டியே!'' விக்னேஷ் தலையில் கை வைத்துக் கொண்டதும், பிரபாகர் ''இந்த அவமானம் உனக்குத் தேவையா?'' என்றான் அனைவரையும் சிரிப்பை ஆழ்த்தும் விதமாக.



ஓரளவிற்கு சிரிப்பலை ஓய்ந்ததும், ''ஹ்ம்ம் சொல்லுங்க. இந்தப் பணத்துக்கு ஏற்பாடு செஞ்சதும் அவர் தானா?'' என்று விட்ட இடத்திற்கே திரும்பி வந்தாள், ஷோபனா.

''உன்னோட ''அவர்'' மட்டுமில்லை... என்னோட அவரும்தான்..'' - கௌசல்யா தன் கணவனின் பெருமையை எடுத்துவிட, சுதாகர் அவளைப் பார்த்து கண்ணடித்துச் சிரித்தான்.

''அப்படியா? என்ன அக்கா நடந்தது? ப்ளீஸ் சொல்லுங்களேன்..'' - இறைஞ்சினாள் ஷோபனா.

''சரி.. சரி.. நீ இவ்வளவு கெஞ்சுறதால சொல்றேன்..'' என்று பந்தா பண்ணிக் கொண்ட கௌசல்யா,

''எப்படியும், பிரபாகர் பணம் கொடுத்தான்னு தெரிஞ்சா நீ சங்கடப்படுவேன்னு எங்களுக்குத் தெரியும்.. அந்தக் கடனைத் திருப்பி அடைச்சிட்டுத்தான் கல்யாணம்ன்னு சொன்னாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்லை... இப்படியே போயிட்டு இருந்தா, எங்க நமக்கு அறுபதாம் கல்யாணம்தான் நடக்குமோன்னு அவனுக்கு ஒரே பயம்...'' எனக் கூறி, அதன் பின்னர் சிறு இடைவெளி விட்டு, பிரபாவைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்து, மற்றவர்களையும் சிரிக்க வைத்து, மேலும் தொடர்ந்தாள்.

''அதனாலதான், உங்கப்பாவோட ரோடு ஆக்சிடென்டுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கிடைக்குமான்னு அலைஞ்சு பார்த்தான்..ஒரு வருஷத்துக்கும் மேல அதிலேயே போச்சு... ஒண்ணும் வேலைக்கு ஆகுற மாதிரி இல்லை...''

''கவர்மென்ட்-ல அப்ளை பண்ணினா.. ரொம்ப நாள் இல்லை வருஷக்கணக்கு ஆகுமாம்...'' - இப்போது பேசியது லீலாவதி.

''என்ன செய்றதுன்னு யோசிச்சிட்டு இருந்தப்போ, பெரிய மாப்பிள்ளைதான் அந்த லாரி கம்பெனி மேல ஒரு கம்ப்ளைண்ட் கொடுக்கலாம்... அந்தக் கேசை வச்சு, மேல பார்க்கலாம்ன்னு சொன்னாங்க...'' - சுதாகரின் புறம் கை நீட்டி, அவன் சொன்ன/செய்த வேலைகளைப் பட்டியலிட்டு காட்டலானார்.

''அவர் சொன்ன மாதிரி, நானும் காஞ்சியும் போய் ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்திட்டு வந்தோமா?

''பெரிய போஸ்ட்-ல இருக்கவர் இல்லையா.. எதிர் பார்த்ததை விட ஃபைல் வேகமாகவே டேபிள் மாறிச்சு...'' - லீலாவதி சற்றே நிறுத்த.

''போலீஸ் கேஸ்ங்கிறது ஒரு பக்கம், இன்னொரு பக்கம் டி.சி.பியே இதில ஆர்வம் காட்டுறார்ங்கிறது ஒரு பக்கம்... அந்த லாரி முதலாளி - ''போலீஸ் கேஸ் எல் லாம் வேண்டாம்... நஷ்ட ஈடா நானே பணம் கொடுத் துடறேன்''ன்னு முன் வந்தாரு...

''நமக்கும்.. கோர்ட் - கேஸ் - போலீஸ் எல்லாம் பயம் தரக் கூடிய விஷயமில்லையா? அது மட்டுமில்லாம, கேசை வாபஸ் வாங்காம இருந்தா, உனக்கோ அம் மாக்கோ ஏதாவது தொந்தரவு வந்திடுமோன்னு பிரபாகர் பயந்துட்டாரா.. அவர் கொடுத்த நஷ்ட ஈடை ஒத்துக் கிட்டோம்...'' என்றாள் காஞ்சனா, தன் பங்கிற்கு.

'தனக்கென்று யோசித்து என்னென்ன காரியம் எல் லாம் செய்திருக்கிறான்' என்ற வியப்பை மீறி, ''அதெப் படி அவர் இன்னைக்கு கரெக்ட்டா வந்தார்?'' என்றாள் ஷோபனா.



''நிச்சயதார்த்தத்தன்னைக்கு அவர் வரலை... அவர் வந்த அன்னைக்குத்தான் நிச்சயம்...'' - பத்மநாபன் தெளிவாய் விளக்கம் கொடுக்க,

''ஹோ... என்னை வெளிய அனுப்பிட்டு, அம்மா உங்களுக்குத்தான் போன் பண்ணாங்களா?'' - ஷோப னாவிற்கு வெகு லேட்டாய் பல்பு எரிந்தது.

''அது மட்டுமில்லை... உன்னை சேலை கட்டிட்டு வரச் சொன்னதுக்கும் அதான் காரணம்.. நீ எப்படியும் ஒரு மணி நேரம் சேலை கட்டுவே... அதுக்குள்ளே நாங்க ரெடியாகி வந்திடலாம் இல்லையா? அதான்!'' - கௌசல்யா பதில் சொல்ல,

''அம்மா...'' என்று செல்லமாய் சிணுங்குவது தவிர, ஷோபனாவால் எதுவும் செய்ய முடியவில்லை.

சற்றே யோசித்து, ''ஆனா... எனக்கு இன்னைக்கு அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் கிடைக்கும்ன்னு உங் களுக்கு எப்படித் தெரியும்?'' - தாடையில் கை வைத்து, யோசித்தவள்.

''என் வீட்டில உள் ஆள் வச்சு, என்னை காமெடி பீஸ் ஆக்கின மாதிரி, காலேஜ்-லேயும் யாராவது இருக்காங் களா? யாரு?'' என்றாள் சந்தேகமாய்.

''இதுவரை வேலையே செய்யாத மூளைக்கு ஓவர் டைம் வேலையெல்லாம் கொடுக்காத... பாவம் ஒரேடியா படுத்துக்கப் போகுது...'' என்று கேலி செய்த பிரபாகர்,

''உனக்கு இன்னைக்கு வேலை கிடைச்சது தற்செய லான செயல்... நான் ஒண்ணுமே பண்ணலை'' என் றான் அப்பாவியாக.

கூடவே, "மூணாவது செமஸ்டர்லயே காம்பஸ் பிளேஸ் ஆகிடுவே... இந்த பணம் வரத் தான் தாமத மாகும்னு நினைச்சேன்... ஆனா.. நீ இவ்வளவு மக்கா இருப்பேன்னு யாருக்குத் தெரியும்?" என அவன் தொடர்ந்து கேலி பண்ணவும்,

"நான் ஒண்ணும் மக்கில்லை... எங்க காலேஜ்-க்கு மூணாவது செமஸ்டர்-ல எந்த கம்பெனியும் வரவே இல்லை... வந்த முதல் கம்பெனி-ல முதல்ல ப்ளேசான ஆள் நான் தான் தெரியுமா?" - சிலிர்த்துக் கொண்டு நின்றாள், ஷோபனா.

அனைவரும் அவளது பாவனையில் சிரிக்க, "போதும்டா கேலி! என் மருமகளை வச்சு... எல்லாரும் கேலி பண்றதை இனிமேலும் என்னால பொறுத்துக்க முடியாது! வந்த வேலை முடிஞ்சதுன்னா வீட்டைப் பார்த்துக் கிளம்புங்க..." என்றார் வெங்கடாசலம், சிரிப்பும் கண்டிப்புமாக.

## 20

"அதுக்குள்ளே கிளம்புறதா? இருந்து சாப்பிட்டுத்தான் போக ணும்..." என்றான் பத்மநாபன், வீட்டு உரிமையாளனாக.

"ரொம்ப ஷார்ட் நோட்டீஸ்ல வந்திருக்கோம், பத்மநாபன். இன்னொரு நாள் பார்த்துக்கலாமே" - அவர்களது நிலைமை உணர்ந்து சுதாகர் மறுக்க,

"நிச்சயத்துக்கு வந்தவங்க கை நனைக்காம போறதா? முடியவே முடியாது!" என்று ஆணித்தரமாய் மறுத்தாள் காஞ்சனா.



"அரை மணி நேரம்தான்... அதுக்குள்ளே நானும் அம்மாவும் டிபன் ரெடி பண்ணிடுவோம்..." என்றவள், அதற்கான வேலைகளைக் கவனிக்க அடுக்களையின் பக்கம் திரும்பவும்,

"அப்படி சாப்பிட்டுத்தான் ஆகணும்ன்னா... எல் லோருமா ஹோட்டல் போய் சாப்பிடலாம். அவசர கதில சமைச்சு, கஷ்டப்படாதீங்க!" என்று சுதாகர் அறிவிக் கவும், ஷோபனாவின் உறவுகள் தவிர்த்து எல்லோரும் மீண்டும் ஒரு முறை கை தட்டினர்.

என்னவென்று புரியாமல் பார்த்த ஷோபனாவிடம், "சுதாகர் - சாப்பாட்டு ராமன் மட்டுமல்ல வீட்டுச் சாப் பாட்டு ராமன்" என்ற விவரத்தை ரம்யா, பாவனையுடன் எடுத்துரைக்கவும்,

"அடிங்க, என் புருஷனைக் கிண்டல் பண்ற அளவுக்கு வந்திட்டியோ!? இனி... அண்ணி இங்க வலிக்குது.. அங்க பிடிக்குதுன்னு வா.. அவர் வச்சிருக்க லத்தியா லேயே ரெண்டு போடறேன்..." என்றாள் கௌசல்யா, செல்லமாய் கையை ஓங்கிக் கொண்டு!

அதில் ரம்யா அதிர்ந்தாளோ இல்லையோ விக்னே ஷின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி!

"அய்யயோ! அண்ணி... இப்படி அசட்டு பிசட் டுன்னு எந்த விபரீத முடிவும் எடுக்காதீங்க. அப்புறம், என் பாடு திண்டாட்டமா போய்டும்... பிடிச்சு விடறது கூட பரவாயில்லை அண்ணி... ஒழுங்கா பிடிச்சு விட லைன்னு என்னை அடிக்க வேற செய்றா?" என்று பரிதாபமாய் முழித்தவன், "கொஞ்ச நேரம் வாயை வச்சிட்டு சும்மா இரேன் ரியாமா..." என்றான் மனைவி யிடம், கெஞ்சலாக.

''இவன் படற அவமானம் போதாதுன்னு.. வெளிய வேற சொல்லித் தொலைக்கிறானே? உள்ளதே, நம்ம ஆளுக்கு வாயாலயே பேசத் தெரியாது.. கை தான் தகதக திமிதிமி தா ஆடும்... இதில இவன் வேற..'' - நிஜமாகவே சலித்துக் கொண்டான், பிரபாகர்.

இதை அவன் மனசில் எண்ணியிருந்தால், கூடியிருந்த அனைவரும் ஏன் சிரிக்கப் போகிறார்கள்!? பகிரங்கமாய் வைக்கப்பட்ட அப்புலம்பலில், வெட்கத்தில் தலை தாழ்ந்த போதும் ஷோபனாவிற்கும் சிரிப்பே!

சிரிப்பும் சந்தோஷமுமாய் கோவை நகரின் ஓர் புகழ்பெற்ற உணவகத்திற்குச் சென்று உணவை முடித்தனர், அனைவரும்.

உணவகத்திலிருந்தே விடை பெற்றுச் செல்ல ஆயத்தமானார் லீலாவதி.

ஷோபனாவும் தயக்கத்துடன் அவர் அருகே நிற்க, ''அத்தே, ஷோபியை நான் வெளிய கூட்டிப் போயிட்டு வரலாமா? ஜஸ்ட் ஒரு ரெண்டு மணி நேரம்... பத்திரமா வீட்டில கொண்டு வந்து விட்டுடுறேன்..'' என வினவினான் பிரபாகர்.

லீலாவதி தலையசைக்கவும், அடுத்த நிமிடம் ஷோபனா பிரபாகரின் அருகே நின்றிருக்க, இருவாது கைகளும் ஒன்றோடு ஒன்று பிணைந்திருந்தன!

''என்ன வேகம்... என்ன வேகம்...'' என்று சிலாகிக்கப்பட்ட கேலிகளை, சட்டியிலிருக்கும் தூசியைத் தட்டிவிடும் பாவனையில் தட்டிவிட்டவன், தன் வருங்கால மனையாளை அழைத்துக் கொண்டு பறந்துவிட்டான்.

முதல் சில நிமிடங்கள், கோவையின் பரபரப்பான வீதிகளில் கழிந்துவிட, அதன் பின்னரும் ஷோபனா



விடம் பேச்சே இல்லை.... ஏன் சிறு தொடுகையோ... கை அழுத்தமோ எதவுமில்லை.

'கோபனா அவதாரம் எடுத்துவிட்டளோ?' என்று அஞ்சிய பிரபாகர், ''என்ன ஷோபிமா... அமைதியா வரே?'' என்றான் மெல்ல.

''இந்த சேலையைக் கட்டிட்டு எனக்கு பைக்ல உட்காரவே பயமா இருக்கு... சீட் வழுக்கிற மாதிரியே இருக்கு பிரபு... முந்தானை வேற பறந்து போய் எங்கேயும் மாட்டிக்குமோன்னு.. அது வேற பயமா இருக்கு..'' விட்டால் அழுதுவிடுவேன் என்ற ரேஞ்சுக்கு அவள் பேசவும், பிரபாகர் பக்கென சிரித்தான்.

''சிரிக்காதீங்க?!'' - அவள் செல்லமாய் சிணுங்க, பிரபாகரின் வண்டி யூ டர்ன் அடித்து, காந்திபுரம் ரோட்டில் திரும்பியது.

''எங்கப்பா? டிரஸ் மாத்த வீட்டுக்கா போறோம்? ரொம்பத் தூரம் இருக்கே?'' - இயல்பாய் இருக்க விடாமல் செய்யும் சேலையை மாற்றிவிடலாம் என்ற நிம்மதி ஒரு புறம் இருந்தாலும், பிரபாகருடன் தனியே கழிக்கும் நேரம் குறைகிறதே என்ற கவலை மறுபுறம் அரித்தது!

ஆனால், பிரபாவின் வண்டி நின்ற இடம், கோவையின் பிரபல துணிக்கடை.

''உனக்கு.. பத்தே நிமிஷம் தான் டைம், அதுக்குள்ளே, ஒரு நல்ல சுடிதாரா வாங்கி, ரெஸ்ட் ரூம்-ல மாத்திட்டு வந்திடு'' என்றவன், பர்சிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, பார்க்கிங்கிலேயே நின்றான்.

''ம்ஹூம், நான் மட்டும் போக மாட்டேன்... முதன் முதலா நீங்க எனக்கு வாங்கித் தர டிரஸ்... நீங்களே

செலக்ட் பண்ணுங்க...'' என்று அவனைக் கைப்பிடித்து இழுத்துச் சென்றவள், தன்னிடம் பத்து நிமிடம் என்று சொல்லிவிட்டு, ஒரு சுடிதார் எடுக்க ஐம்பது சுடிதாரை எடுத்துப் போடச் சொன்ன பிரபாகரை செல்லமாய் அடித்தாள்.

''ஒரு டிரஸ் எடுக்க இவ்வளவு நேரமா? நகருங்க...'' என்று விட்டு, முதல் பார்வையில் தனக்குப் பிடித்த மயில் கழுத்து வண்ண உடையை எடுத்துக் கொண்டு, ''இதுக்கு பில் போட்டுத் தாங்க...'' என்றாள் வேகமாய்.

''ஹே... அவ்வளவு தானா? இன்னும் கொஞ்சம் பாரேன்..'' பிரபாகர் வியக்க,

''பார்த்த முதல் பார்வையிலேயே தான் சில டிரஸ் பிடிக்கும்.. அதை எடுத்திட்டு வந்துட்டே இருக்கணும். சும்மா.. அதுவா இதுவான்னு இங்கி பிங்கி பாங்கி போடக் கூடாது!'' என்று அவனைப் பார்த்து கண் சிமிட்டியவள்,

''என்னைப் பார்த்த முதல் பார்வையிலேயே உங்களுக்குப் பிடிச்சதில்லையா? அது மாதிரி!'' என்றாள் சட்டென, கூடிவிட்ட மையலுடன்.

''ஹய்யையோ! கடையில வச்சு இந்தப் பார்வை பார்க்காத, ஷோபி! நான் ரொம்ப நல்லப் பையன்...'' என்று பயந்தவன் போல் பேசிய பிரபாகர், வேகமாய் வெளியேயும் சென்றுவிட்டான்.

சிறு சிரிப்புடனும், மிகுந்த காதலுடனும், அளவிட முடியாத ஆனந்தத்துடனும், அவன் வாங்கிக் கொடுத்த உடையை அணிந்து கொண்டு, நிச்சயப் புடவையை மடிப்பு கலையாமல் மடித்து ஒரு பையில் வைத்துக் கொண்டு, வெளியே வந்தாள் ஷோபனா.



இப்போது, இரு புறம் கால் போட்டு, அவனை ஒட்டி அமர்ந்து கொண்டவளின் கரங்கள் அழுத்தமாய் அவனது தோளில் அழுந்தின.

''எங்க போறோம்?'' என்ற அவளது கேள்விக்கு,

''வில்லன்கள் வராத இடமா போகலாம்ன்னு நினைச்சேன்.. அது என்னோட பெட் ரூமா மட்டுமே இருக்கும் என்பதாலும்... அங்கு நீ வருவது இப்போதைக்கு நடக்காத காரியம் என்பதாலும்... தென் திருப்பதி கோவிலுக்குப் போகலாம்...'' நாடக பாணியில் பேசியவனின் கைகளில் பைக் பறந்தது.

''இருட்டிடுச்சே'' என்று ஷோபனா லேசாய் அஞ்ச,

''இந்த அஞ்சா நெஞ்சன் இருக்கையில் உனக்கேன் கவலை?'' என்று காலரை தூக்கிவிட்டுக் கொண்டு, வண்டியின் வேகத்தை அதிகரித்தான்.

கோவிலின் உள்ளே நுழைந்து, தென் திருப்பதியின் நடை பாதையில் நடக்கும்போது, ஒரு வயதான பெண்மணி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

வந்தவர் சும்மா சென்றிருக்கலாம்... மனதில் பட்டதை பட்டென சொல்லும் பழக்கமுடையவர் போலும்...

''புருஷனும் பொண்டாட்டியுமா'பா? ஏன்மா... பையன் என்ன அழகா பட்டு வேஷ்டி - சட்டையில கோவிலுக்கு வந்திருக்கான்... பட்டுப் புடவை இல்லாட்டியும் ஒரு சாதாரண சேலையில் வரக் கூடாதா?'' என்று அங்கலாய்த்துவிட்டு அவர் செல்ல, பிரபாகர் வாயைப் பொத்திக் கொண்டு பொங்கிப் பொங்கிச் சிரிக்க, ஷோபனா பரிதாபமாய் அவனையும் பையிலிருந்த பட்டுப் புடவையையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"சரி விடு... இதெல்லாம் வாழ்க்கையில சகஜம்மா..." என அவளை சமாதானம் செய்தவனுக்கு, சிரிப்பு மட்டும் அடங்கவில்லை.

பொங்கிப் பெருகிய அவனது சிரிப்பை, சுள்ளென விழுந்த ஒரு அடி பஸ்பமாக்கிவிட, சாமி தரிசனம் முடியும் வரை அங்கே பேச்சு வார்த்தை எதுவுமில்லை.

தரிசனம் முடிந்து, கீழே இறங்கி வந்தவர்கள், பிரசாதத்தை வாங்கிக் கொண்டு, அங்கே போடப்பட்டிருந்த கல் பெஞ்சுகளில் ஒன்றில் அமர்ந்தனர்.

"பிரபு... வெளிய எங்கயாவது போலாமா?" என்றாள் ஷோபனா சிறு தயக்கத்துடன்.

"ஏன்மா... கோவில்ல வச்சு பேசினா, அடி கொஞ்சம் கம்மியா விழுமேன்னு நினைச்சேன்... இட்ஸ் ஓகே! வா போகலாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தவன், நேரே சென்றது அவன் வீட்டிற்கு.

"இங்கேயா?" என அவள் வியக்க,

"நம்ம வீட்டு மொட்டை மாடியை விட சூப்பரான இடம் வேற எதுவுமே இல்லை. இங்க எந்த வில்லனும் வந்து குதிக்க முடியாது... ஏன்னா, இங்க ஹெலிப்பாட் இல்லை பாரு..." என்ற கிண்டலுடன், வீட்டினுள்ளே அழைத்துச் சென்றான்.

பூட்டியிருந்த வீட்டைப் பார்த்ததும், "வீட்டில யாருமில்லையா?" என்று ஷோபனா வினவ,

"ரம்யாவுக்கு அடுத்த வாரத்தில் வளைகாப்பு. அதுக்கான துணி.. வளையல் எல்லாம் வாங்க போயிருப்பாங்க..." என்று விவரம் கூறிவிட்டு, மறையவா வேண்டாமா என்று சடுகுடு ஆடிக் கொண்டிருந்த இருட்டின் பிடியிலிருந்த மொட்டை மாடிக்கு அவளை இட்டுச் சென்றான்.



நிலாவின் சாரலை ரசித்த சில நிமிடங்களின் மௌனத்திற்குப் பின்னர், ஷோபனா பேசத் துவங்கிவிட்டாள்.

"விக்னேஷ் என்னமோ சொன்னாங்களே.. நீங்க பண்ண லொள்ளை எல்லாம் கோபம்ன்னு நான் தப்பா நினைச்சதா? என்னவெல்லாம் லொள்ளு பண்ணீங்கன்னு சொல்லுங்க... ஹ்ம்ம் சீக்கிரம்..." என ஒரு விரல் நீட்டி, அவள் அவனை மிரட்ட,

"இந்த மிரட்டலெல்லாம் நம்மகிட்ட செல்லாது! "ப்ளீஸ் சொல்லுங்க பிரபு"ன்னு கெஞ்சிக் கேளு... சொல்றேன்.." அவனும் பிகுவாய் முகம் திருப்பிக் கொண்டான்.

"இதற்கெல்லாம் நான் மசிய மாட்டேன்" என்பது போல், "சொல்லாட்டிப் போங்க... எம்.இ. முடிச்சிட்டுத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு நானும் பிகு பண்ணிக்குவேன்" என்று அவள் அலட்சியமாய் தலை சிலுப்பினாள்.

'அடிப்பாவி... என் மேல கருணையே இல்லையாடி... கிராதகி!' என்று ஒரேடியாய் அதிர்ந்துவிட்டு,

"சரி.. சரி.. சொல்றேன்.. ஆனா, ஒரு கண்டிஷன்.. நீ தான் எந்த இடத்தில எல்லாம் நான் என்னோட திருவிளையாடலை ஆடியிருக்க முடியும்ன்னு சொல்லணும்... நீ கரெக்ட்டா யூகிச்சா.. சூப்பர் பம்பர் ப்ரைஸ் ஒண்ணு காத்திருக்கு" என்றான் ஆசைகாட்டி, மோசம் செய்யும் குரலில்.

அவளும் அதை சவாலாய் ஏற்று "ம்ம், சொல்றேனே!" என்றாள் மிடுக்குடன்.

சற்று நேரம் பலமாய் யோசித்தவள், ''அந்த ட்ரைன் டிக்கெட்... ஒரே கோச்-ல வர மாதிரி டிக்கெட் வாங்கினது நீங்க தானே?'' என்றாள், எதையோ கண்டு பிடித்து விட்ட பெருமையுடன்.

''அடச்சை! இம்புட்டு தானா ஷோபி... உன் அறிவின் ஆழம்! இந்த ட்ரைன் டிக்கெட் விவாகரத்துக்கு எல்லாம் முன்னாடியே நிறையயயயயயய நடந்தாச்சு...'' என்று கை கொட்டி, கேலி செய்த பிரபாகர்,

''சரி விடு... தோத்துட்டேன்னு ஒத்துக்கோ.. நானே சொல்றேன்..'' என்றான் கேள்வியாக.

சின்னதாய் ஓர் சிணுங்கல், செல்லமாய் ஓர் ''ப்ளீஸ்பா... கொஞ்ச நேரம் டைம் கொடுங்க'' என்ற கெஞ்சல், கோபமாய் ஓர் முறைப்பு. பின்னர் ஆசையற்ற சமரசம் என முடிவில் ''உங்கிட்ட தோத்து போறதில எனக்கு சந்தோசம்தான்... அதனால, நான் தோத்ததாவே வச்சுக்கோங்க.. நடந்ததை சொல்லுங்க'' என்றாள்.

''அப்படி வா வழிக்கு...'' என்ற பிரபாகர், ''இப்போதிருந்து ஃப்ளாஷ்பாக் ஆரம்பம்...'' எனக் கூறி, கைகளால் கொசுவர்த்திச் சுருளை சுத்த விட்டான்.

# 21

✱ மூன்று வருடங்கள் முன்பு - ஷோபனா காலேஜ் பஸ் பிடிக்கும் ஏழே முக்கால் மணி ✱

ஷோபனா ஏறும் பேருந்து நிறுத்தத்திற்கு எதிர்ப்புறமாய், விக்னேஷின் சாம்பல் வண்ண சான்ட்ரோவில் அமர்ந்து, அவள் வருவதையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான் பிரபாகர்.



பேருந்து வந்து, அங்கிருந்தவர்களை ஏற்றிக் கொண்டு சென்ற பின்னரும் ஷோபனா வந்தாளில்லை.

''பங்க்ச்சுவாலிட்டி பரமசிவம் ரேஞ்சுக்கு, பஸ் கிளம்ப பத்து நிமிஷம் முன்னாடியே வந்திடுவாளே? இன்னைக்குக் காணோமே?'' என்று அவன் யோசிக்கும் போதே, மூச்சிரைக்க ஓடி வந்தாள் அவனது எண்ணங்களின் நாயகி.

நாற்பதடி தூரத்தில் சென்று கொண்டிருந்த பஸ்ஸை ''நிறுத்துங்க... நிறுத்துங்க...'' என்று கத்தி நிறுத்த முற்பட்டவள், தன் குரல் அவர்களை எட்டாமல் போனதும், முட்டிக்காலில் இரு கைகளையும் ஊன்றி, மூச்சு வாங்கினாள்.

''ஆமா... இவ கத்தினது, இவளுக்குள்ள இருக்க கோபனா அவதாரத்துக்கே கேட்டிருக்காது... இதில ரெண்டு தெரு தள்ளிப் போற பஸ்க்குக் கேட்கப் போகுதாக்கும்...'' என்று நொடித்துக் கொண்ட பிரபாகருக்கு, கல்லூரியில் அவளை இறக்கிவிடும் ஆவல் மேலோங்கியது.

ஆனால், செய்கையற்ற ஆசையுடன் அவன் தவித்திருக்க, ஷோபனா வேகமாய் ஓர் ஆட்டோ பிடித்து, கல்லூரி பேருந்தை துரத்தத் துவங்கியிருந்தாள்.

கல்லூரி பேருந்தில் அவள் ஏறும்வரை, அந்த ஆட்டோவை தொடர்ந்து சென்றவன், நேராய் வண்டியை விட்டது ஷோபனாவின் வீட்டிற்கு.

அந்த நேரத்தில் அவனை எதிர்பாராத லீலாவதி, ''வாங்க மாப்பிள்ளை... என்ன விஷயம்?'' என்று பரபரக்கவும்,

''இன்னைக்கு... ஷோபி ஆட்டோ சவாரி எதுக்கும் போனாளா, அத்தை?'' என்றான் அவன் கேள்வியாக.

''இல்லையே... ஆட்டோ தான் வாடகைக்கு போயி ருக்கே...'' புரியாத பாவனையில் வந்தது பதில்.

''அப்போ.. நைட் லேட்டா படுத்தாளா?''

''ஆமா.. நைட் படுக்க பன்னிரண்டு மணிக்கு மேல ஆகிடுச்சு... உங்க ப்ரோக்ராமை நைட்-ல கேட்டுட்டு, அதுக்கு அப்புறம் ஏதோ ரெகார்ட் எழுத வேண்டி இருந்ததாம்.. எழுதிட்டுப் படுத்தா...'' - ஏன் கேட்கிறான் என்று தெரியாத போதும், விளக்கமாய் பதில் சொன்னார் லீலாவதி.

''ஹோ...'' என்று அதை உள்வாங்கியவன், ''சரியத்தை.. நான் வரேன்.. ஒன்னும் பயப்படறதுக்கு இல்லை'' என்றுவிட்டு விரைந்தான்.

அந்த சம்பவத்தின் விளைவாக தான், பிரபாகர் இரவு நிகழ்ச்சியிலிருந்து காலை நிகழ்ச்சிக்கு மாறியது! அந்த நேரம் பார்த்து, காலை நிகழ்ச்சியை நடத்திக் கொண் டிருந்த சிவாவும், சில சொந்த காரணங்களின் காரண மாய் இரவு நிகழ்ச்சிக்கே மாற்றல் கேட்க, பிரபாவிற்கு வசதியாய் போனது!

* நிகழ்காலம் *

அவன் சொல்லச் சொல்லக் கேட்டிருந்த ஷோபனா வின் குரல், குழைந்து போயிருந்தது!

''எனக்காகவா மாறினீங்க?'' என்று கேட்டபோது, குரலுடன் சேர்ந்து கண்களும் குழைய, அவள் மடியில் தான் குழந்தையாகும் நாளுக்காக அந்தக் குணாளனின் மனம் ஏங்கத் துவங்கியது.



சுற்றியிருந்த கோவில் மனதை நிலைப்படுத்த. ''இதுக்கே இப்படி உருகிட்டா எப்படி? இன்னும் இருக்கு கேளு...'' என்று விட்டு மீண்டும், கொசுவர்த்தி சுருளை எடுத்தான்.

* ஷோபனா பிரபாகரின் வீடிருக்கும் வீதியில் உலா வந்த தினம் *

எப்போதும் ஷோபனாவை ரயில் நிலையத்தில் தரிசிப்பதற்காக, நான்கு மணிக்கே எழுந்து பழக்கப்பட்ட பிரபாகரின் உடம்பு, அவளைப் பார்க்க முடியாது என்று தெரிந்தும் முழித்துக் கொண்டது.

எழுந்த பின்னரும் சோம்பியிருக்க முடியாமல், குளித்து முடித்து, தோட்டத்தில் பூ பறித்துக் கொண் டிருந்த போது தான், ஷோபனா தங்கள் தெருவினுள் நுழைவது அவன் கண்ணில் பட்டது!

''ஆஹா... நம்ம மேடம் டோய்!'' என்று மனம் துள்ள, பறித்துக் கொண்டிருந்த பூக்களை அப்படியே கீழே போட்டுவிட்டு, பின்பக்க வழியாக வீட்டினுள் சென்றான் பிரபாகர்.

தனக்கு அவள் தெரியும்படியும், அவளுக்குத் தான் தெரியாத படியும் நின்று கொண்டவன், ஷோபனாவின் கண்கள் தன் வண்டி... அடுத்ததாய் வீட்டின் கதவு... தோட்டம்.. வீட்டினுளிருக்கும் ஆள் நடமாட்டம் என்று சுற்றி வருவதை, ஆசை தீர ரசிக்கத் துவங்கினான்.

ஒரு நிலைமைக்கு மேல், ஷோபனாவின் கண்களில் கண்ணீர் வந்துவிடுவேன்... வந்துவிடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருக்க, அதற்கு மேலும் அவளைப் படுத்த விரும்பாமல், வேகமாய் சென்று முந்தைய

தினம் அணிந்திருந்த இரவு உடையை அழுக்குக் கூடையிலிருந்து எடுத்து அணிந்து கொண்டு, தலையைக் கலைத்துவிட்டு, அப்போதுதான் தூங்கி முழித்தவன் போல் வெளியே வந்து சோம்பல் முறித்தான்.

அதன் பின்னர்.. கண்களும் கண்களும் முட்டி நின்றதைத்தான் நாம் அறிவோமே!

* நிகழ்காலம் *

''என்னைப் பார்த்தும்.. பார்க்காதது மாதிரி நடிச்சீங்களா? உங்களை...'' என்று ஷோபனா பல்லைக் கடிக்க,

''இப்படியெல்லாம் பத்திரக்காளி அவதாரம் எடுக்கக் கூடாது! உம்மாச்சி கோச்சுக்கும்.. கன்னத்தில போட்டுக்கோ...'' என்று அவளைக் கிண்டல் செய்த போதும்,

''அன்னைக்கு, கண்ணீரும் கவலையுமா நீ நின்னதைப் பார்க்க முடியலைடா என்னால... அப்படியே வந்து ''அழாதேடா''ன்னு இறுக கட்டிக்கணும் போல இருந்தது.. ரொம்ப கண்ட்ரோல் பண்ணிட்டு இருந்தேன்...''

''உணர்ச்சி பிழம்பா நீ இருக்கும்போது, நானும் அதே மாதிரி உணர்ச்சி வசப்பட்டா.. உனக்குப் படிப்பு மேல இருக்க பிடிப்பு போயிடுமோன்னு பயமா இருந்தது...''

''கல்யாணம்ங்கிற பந்தத்தால படிப்பை இழந்துட்டோம்ன்னு நீ நினைக்கக் கூடாதில்லையா? அதான் ஒதுங்கியே இருந்தேன்...'' என்றான் பிரபாகர், உருக்கமும் காதலுமாய்.

அவனது வார்த்தைகள் வர்ணிக்க முடியாத இதத்தை மனதினுள் பரப்ப, சிறு மணித் துளிகள் ரம்மியமான அமைதியில் கழிந்தன.



அதைக் கலைக்கும் வண்ணம், ''ஆனா... நீங்க தானே கல்யாணம் பண்ணிக்கிட்டும் படிக்கலாம்ன்னு சொன்னீங்க.. அன்னைக்கு ரம்யா அக்கா கல்யாணத்தில கூட என்னை மறைமுகமா கொட்டுனீங்களே!'' என்றாள் ஷோபனா. சந்தேகமும், சிறு கோபமும் ஒன்று கூடி நின்றிருந்தன!

''இப்பவும், என்னைப் பொறுத்தவரை... கல்யாணம் படிப்புக்கு ஒரு தடையே கிடையாது. ஆனா, நீ தான் கல்யாணம் பண்ணிட்டு படிக்க முடியாது.. அது இதுன்னு பினாத்திட்டு இருந்தே... ஒரு கட்டத்தில, வேற ஏதோ ஒரு காரணத்தால நீ கம்மி மார்க் எடுத்தாலும், அது இந்தக் கல்யாணத்தாலதான்னு உனக்கு நினைக்கத் தோணும்... அதான் உன் போக்கிலேயே விட்டுட்டு, ஒதுங்கி இருந்தேன்'' என்றான் பிரபாகர், விளக்கமாக.

அவன் பேச்சின் சாராம்சம் சரியென்று பட, ஷோபியும் ஆமோதிப்பாய் தலையசைத்தாள்.

உடனேயே, ''அப்போ... சாயந்திரம் உங்களை நான் பார்க்க வருவேனே? அது கூட உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள் ஷோபனா, அப்பாவியாக.

''இன்னுமாடா.. உன்னை இந்த உலகம் நம்புது...'' என்று தன்னைத் தானே வியந்து, ''ஆனாலும் ரொம்பப் பச்சைப் பிள்ளையா இருக்கேடா ஷோபி...'' என்றவன்,

''நீ காலேஜ் பஸ்-ல இருந்து இறங்கி, எங்க ஆபீஸ்க்கு முன்னாடி இருக்க ஜூஸ் கடையில ஒரு இத்துப்போன சாத்துக்குடி ஜூஸை குடிச்சிட்டே... என்னை லுக் விடுறதில இருந்து, அந்தக் கடைக்காரன் ''வேறென்ன வேணும்மா?''ன்னு உன்னை ஆயிரத்தெட்டு தடவை

கேட்கிறது... அப்புறம் நீ பஸ் ஸ்டாப்புக்கு வந்து கூட் டமே இல்லாம வந்தாலும் பத்து பஸ்ஸை விட்டுட்டு என்னையே வேடிக்கைப் பார்த்திட்டு இருக்கிறது வரைக்கும் அய்யாவுக்கு தெரியும்!'' என்று காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான்.

''யூ...யூ...யூ..'' என்று பல்லைக் கடித்த போதும், அவனும் தன்னைக் கவனித்துக் கொண்டே இருந்திருக் கிறான் என்பது தேனென இனித்தது.

ஏதோ எண்ணியவளாக ''அன்னைக்கு ரம்யா அக் காவை வரச் சொன்னதும் நீங்க தானா?'' என்றாள் வேகமாய்.

''சாட்சாத் நானே!'' என்றவன், மீதமிருந்த கொசு வர்த்தியை எடுத்தான்.

✱ ரம்யா தன் திருமணம் பற்றி ஷோபனாவிடம் கூறிய நாள் ✱

''ஹேய் ரம்ஸ்.. ஷோபி வெளிய நின்னு ஐயாவை சைட் அடிச்சிட்டு இருக்கா.. கொஞ்சம் போய் கலாய்ச் சிட்டு வாயேன்... என் செல்லமில்ல...'' என்று அலு வலகத்தில் இருந்த ரம்யாவை கிளப்ப முயன்றான் பிரபாகர்.

''போடா.. அண்ணிக்குத் தெரிஞ்சா ''அவளே கஷ்டப் பட்டுட்டு இருக்கா.. நீங்க வேற அவளை ஏன் படுத் துறீங்கன்னு'' முதுகில டின் கட்டிடுவாங்க.. நான் மாட்டேன்..'' என அவள் சிலிர்த்துக் கொள்ள,

''ப்ளீஸ் ரம்ஸ்.. எனக்காக... டேய் விக்கி... கொஞ்சம் சொல்லுடா.. உங்க கல்யாணத்துக்கு ஒரு பாதுகாப்பு கவசமும், ரம்ஸ்க்கு ஒரு ஈட்டியும் வாங்கித் தரேன்டா... ப்ளீஸ்டா.. போகச் சொல்லு..'' ரம்யாவின் கணவனிடம் சிபாரிசு பிடித்தான், அந்தக் கள்வன்.



''ஹே... ஹே போ ரமி! எனக்கு ரொம்பத் தேவையான பாதுகாப்பு கவசம் வாங்கித் தரானாம்.... காசில்லாம வருது.. ப்ளீஸ் போ...'' என்று நண்பனும் சேர்ந்து கொண்டு அவனும் ரம்யாவை வெறுப்பேத்த,

''போங்கடா, போக மாட்டேன்...'' என்று சட்டமாய் உட்கார்ந்து கொண்டாள், ரம்யா.

''ஹே ரம்ஸ்... ஈட்டி வேணாம்ன்னா விட்டுடு... குச்சி மிட்டாய்.. குருவி ரொட்டி.. இப்படி எதுனாலும் வாங்கித் தரேன்...'' என்று காலில் விழாத குறையாக அவன் கெஞ்சியதும், ரம்யா ஒருவாறாக ஒத்துக் கொண்டாள்.

ரம்யா கிளம்பிச் சென்றவுடன், கண்ணாடி தடுப்பின் பின்னே மறைந்து கொண்டு, ஷோபனாவும் ரம்யாவும் பேசுவதை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்களின் உரையாடலைக் கேட்க முடியாவிட் டாலும், ஷோபனாவின் முகத்தில் பிரதிபலித்த அதிர்ச்சி, அவனுக்கு வியப்பைக் கொடுத்தது.

''உம் பொண்டாட்டி போய்.. அங்க ஏதோ குட் டையைக் குழப்பிட்டா போலிருக்குடா... மகளே வாடி... உனக்கு கல்யாணப் பரிசா ரெண்டு டப்பா கரப்பான்பூச்சி தரேன்...'' என்று கறுவியவன், வேகமாய் ரம்யாவிற்கு எண்ணிற்கு அழைத்தான்.

அவனது எண்ணைப் பார்த்ததும், ரம்யா ஷோபனா விடமிருந்து விலகி வருவது தெரிந்தது.

''ரம்யா... ஷோபிகிட்ட என்ன சொன்னே? அவ முகம் ஏன் ஒரு மாதிரியா இருக்கு?''

''என்னமோ சொன்னேன்... உனக்கென்னடா?''

''வேணாம்.. நான் டென்ஷன் ஆகிடுவேன்.. என்ன சொன்ன சொல்லு...''

''நான் ஒண்ணும் சொல்லலை.. உன் பொண்டாட்டிக்குத்தான்... எங்க எனக்கும் உனக்கும் கல்யாணம் நடந்திடுமோன்னு பயம்....''

''உனக்கும் விக்கிக்கும்தான் கல்யாணம்ன்னு சொல்ல வேண்டியது தானே? அவளைப் படுத்தாதே ரமி...''

''ஏய்... ரொம்பப் பண்ணாதேடா...''

''என்னை மாட்டிவிடாதே ரமி... ப்ளீஸ்...''

''நான் யாரை வேணும்னாலும் மாட்டி விடுவேன்... உனக்கென்ன?''

''ஓவரா பேசுற நீ...''

''அப்படித்தான் பேசுவேன்..''

''முதல்ல போனை வச்சிட்டு, அவகிட்ட போய் பேசு.. அவ முகமே சரியில்லை... பாவம்..''

''போனை வைக்கவா? ம்ஹூம் மாட்டேன்பா...''

''ஏய் அவ தவிக்கிறா...''

''கொஞ்சம் நேரம் தவிச்சா என்ன குறைஞ்சா போய்டும்!''

''நல்லா முதுகுல சாத்தப் போறேன். சீக்கிரம் போனை வச்சிட்டு, ஆபீஸ்க்கு வா...'' - அவளுடன் வாயாட முடியாமல், எரிச்சலுடன் அழைப்பை வைத்தான் அவன்.

அந்தப் பக்கம் ''சீக்கிரம் வரணுமா? முடியாது போ!'' என்று சிலுப்புவது துல்லியமாய் கேட்டது.

''ஐயோ.. ஷோபிக்குட்டி பாவம்..'' என்று அவன் வருந்துவது பொறுக்காமல், சற்று நேர வெறுப்பேற்றலுக்குப் பிறகு ரம்யா விரவம் கூறிவிட்டு வந்தாள்.



* நிகழ்காலம் *

''அன்னைக்கு ரொம்ப டென்ஷனா இருந்ததாடா... சாரிடா குட்டி...'' என்று லேசாய் வருந்தி பிரபாகர்,

''ஆனா.. மேடம்க்கு ஒரே பொறாமை இல்லையா..'' என்றான் குறும்பாக.

அதை மறுக்காமல், ''ஆமா.. பொறாமைதான். நானே நினைச்சாக் கூட, என்னால உங்களை யாருக்கும் விட்டுத் தரவே முடியாது'' என்ற ஷோபனா, மெல்ல அவள் தோள் சாய்ந்து கொண்டாள்.

தலைவனும் தலைவியும் தோள் சாய்ந்த நேரம் தொல்லையின்றி தேனாய் இனிக்க, மெல்ல அந்த இடம் மௌனத்தின் பிடிக்குச் சென்றது.

சாய்ந்திருந்த அவனது வலது தோளின் கைகளை லேசாய் வருடியவாறே, ''அப்போ.. ட்ரைன்-ல ரயில்வே ஸ்டேஷன்-ல எல்லாம் என்னை ரசிச்சிட்டுத் தானே இருந்திருப்பீங்க? நான் தான் அது தெரியாம.. சார் என்னமோ கோபமா இருக்கிறதா நினைச்சிட்டு... என்னென்னமோ உளறி இருக்கேன்...'' என்று அசடு வழிந்தாள், ஷோபனா.

''என்னோட ரகசிய ரசிப்பிற்கு கோபம்ங்கிற போர்வை எனக்கு அவசியமாய் பட்டது. நீ தவிக்கிறது ஒரு பக்கம் கஷ்டமா இருந்தாலும்.. இந்தத் தவிப்பு ஒரு நல்ல புரிதலுக்கு வித்தா இருக்கும்ன்னுதான் பேசாம இருந்தேன்..'' என்றவன், அவளது தோளைச் சுற்றி கை போட்டு, தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டான்.

''முதல்ல, அத்தைக்கும் உனக்குமா டிக்கெட் எடுத்தா தான் நீ தயக்கமில்லாம வருவேங்கிறதில தொடங்கி,

அத்தை கடைசி நேரத்தில வராம இருந்தது எல்லாமே என்னோட பிளான் தான்...''

''ரயில்வே ஸ்டேஷன்குள்ள நீ நுழைஞ்ச நிமிஷத்தில் இருந்து, என் கண்ணை விட்டு அங்க இங்க நீ நகரவே இல்லை...''

''அன்னைக்கு ஒரு பிங்க் கலர் சுடிதார் போட்டியிருந் தியே.. அப்பப்பா... ஆளை மயக்கிடுச்சு... அதான்.. பொறுக்க முடியாம பிளாட்பார்ம்கே ஓடி வந்தேன்... அப்படியே ஒரு இடி இடிச்சேன்...'' - பிரபாகர் சொல்லிக் கொண்டே போக, அப்போது அவன் இடித்த இடிக்கு இப் போது ஒரு இடி பரிசாக கொடுக்கப்பட்டது.

அதைப் பொருட்படுத்தாமல் அவனும் தொடர்ந்தான். ''மேடம், அப்பர் பெர்த்-ல படுக்கிறதுக்கு என்னமா சுத்தி வளைச்சீங்க?! எனக்கு செம சிரிப்பு.. கஷ்டப்பட்டு அடக்கிட்டு இருந்தேன்...''

''அப்போ கூட பரவாயில்லை... ''என் மேல கோபமா''ன்னு ஹஸ்கி வாய்ஸ்ல கேட்டபோது, ''இல்லைடா என் புஜ்ஜுக்குட்டி''ன்னு உன்னைத் தூக்கி வச்சுக்கணும் போலிருந்தது...'' - ரசித்துச் சொன்னான் அவளது குறும்புக் காதலன்.

''உன் முகத்தைப் பார்த்திட்டே, உணர்ச்சியில்லாம இருக்கவும் முடியலை... அதே நேரம் உன் முகத்தைப் பார்க்காமலும் இருக்க முடியலை.. ரொம்பக் கஷ்டமா இருந்தது...'' என்றபோது, அவனது குரலில் அவனது அன்றைய தவிப்பு நிரம்பி வழிந்தது.

அந்த தவிப்பின் வெளிப்பாடாய், பிரபாகரின் ஆண்மை ததும்பிய முகம், ஷோபனாவின் மதிமுகம் நோக்கிக் குனிய, அவர்களது தாம்பத்தியத்தின் முதல் அச்சாரம் அச்சுப் பிசகாமல், ஷோபியின் மச்சத்தில் படிந்து மீண்டது!



''ம்ம்'' என்று மௌனமாய் அதை உள்வாங்கிய ஷோபனா, மேலும் அவன் தோளில் இதம் கண்டாள்.

''நிஜமாவே என் மேல கோபமில்லையா?'' அவள் மேலும் கேட்க,

''அப்படி சொல்லிட முடியாது... கொஞ்சம் கோபம் இருந்தது... ஆனா உன்னோட பக்கமிருந்து பார்க்கும் போது உன்னோட தன்மானமும், சுயகவுரவமும் ரொம்ப ரொம்பப் பிடிச்சது... உன் மேல எனக்குக் காதல் வரதுக் கான காரணமே உன்னோட தன்மானம்தான்... அப்படி யிருக்கும்போது, அதையே காரணம் காட்டி உன் மேல கோபப்படறது எனக்குச் சரியா படலை.. சோ..''என்றான் அவன், அவளது கன்னத்தில் ஒரு சின்ன அச்சாரத்தை வைத்தவாறே.

அதற்கு என்ன சொல்வதென்று தெரியாமல் ''தேங்க்ஸ்... தேங்க்ஸ்.. தேங்க்ஸ்... தேங்க்ஸ் பிரபு!'' என்ற ஷோபனா வின் குரலில், தன்னைப் புரிந்து கொள்ளும் ஓர் கணவன் கிடைத்த பெருமகிழ்ச்சி!!

தொடர்ந்து வந்த அணைப்பில் ''உன்னை விட்டு பிரியேன்!'' என்ற இறுக்கமான உறுதி!

காதலெனும் சதுரங்க கட்டத்தில், கருப்பும் வெள்ளை யும் மாறி மாறி ஆடிய ஆட்டம் ஓர் முடிவுக்கு வந்து, இரு பக்கத்துக்கு ராஜாவும் ராணியும் ஓர் பக்கத்துக்கு ராஜா-ராணியாய் மாறி, செக்-மேட் ஆவதற்குப் பதிலாக லவ்-மேட் ஆகிவிட்டிருந்தனர்!

சதுரங்கத்தில் இருப்பது போல், ராஜா டம்மியாகவும், ராணி உசத்தியாகவும் இல்லாமல், இருவரும் ஒரு நிலையாய் மனதோடு ஒருமித்து இரு பெரும் சக்திகளாய் உருமாறினார்!!

22

* எட்டு மாதங்களுக்கு பின்னர் *

* ஷோபனா - பிரபாகர் இருவரது முதலிரவு அறை *

லேசாய் மேடிட்ட வயிற்றுடன் உலா வந்த காஞ்சனா, ஷோபனாவை மோகன அறைக்குள் தாம்பத்திய விருந்துண்ண வழியனுப்பிட்டு, ஓர் மன நிறைவுடன் வெளியே வந்தாள்.

அவளது வருகைக்காகவே காத்திருந்தவன் போல், கதவின் பின்னே இருந்த பிரபாகர் ''ஷோபிக்குட்டி'' என அவளைப் பின்னே இருந்து கட்டிக் கொள்ள, அந்தத் திடீர் தாக்குதலில் ''ஆஆ...'' என அலறிவிட்டாள் ஷோபனா.

''என்னது.. என்னது...'' என்று வெளியே பலரது குரல் கேட்டதும், ''ஒண்ணுமில்லை...'' என்று ஷோபனா தான் மென்று விழுங்க வேண்டியதாய் இருந்தது.

தன் முன்னே செம்பவள பாவையாய் நின்றிருந்த ஷோபனாவை, தன்னுடன் இறுக்கிக் கொண்டவன், லேசாய் அவளைத் தூக்கிய வண்ணமே படுக்கைக்குச் சென்றான்.

''கொஞ்ச நேரம்.. பேசிட்டு இருக்கலாம் பிரபு'' என அவள் கொஞ்ச,



''இதுவரைக்கும் போன்-ல கடலை போட்டதெல்லாம் பத்தாதாக்கும்... ஆஸ்திரேலியா-ல நான் சம்பாரிச்ச பணத்தை விட, போன் பில் கட்டின பணம்தான் அதிகம்.. போதும் பேசினது'' என்று நறுக்குத் தெறித்தாற் போல் பேசியவன், சட்டென தன் மோகனராசியின் மன்மத மச்சத்தை நோக்கி, ஆவலுடன் குனிந்தான்.

பல மணித் துளிகளுக்குப் பின்னர், மூச்சிரைக்க அவன் நிமிர, ''நானும் தான்.. வாங்கின சம்பளத்தில பாதியை போனுக்கே கட்டினேன்.. நீங்க மட்டுமா போன் பில்லுக்கு அழுதீங்க..'' அவள் அவன் கன்னத்தை நிமிண்ட,

''சும்மா சொல்லாதே! வாங்கின சம்பளத்தில் எனக்கு ஒரு சட்டை கூட வாங்கித் தராம, லோன் கட்டின மகராசி தானே நீ!'' என்று அவள் மூக்கைப் பிடித்து ஆட்டுவது அவன் முறையானது.

அவனது கூற்றில் இருந்த உண்மை உறைக்க, அதை மறைக்க, மன்னவனின் மார்பை தன் குங்குமத்தால் நிறைத்தாள் மாதரசி!

''இதுக்கு மேல... என்னால பொறுக்க முடியாது! செயல்ல இறங்க வேண்டியதுதான்...'' என்று கட்டிலில் அவளைச் சாய்த்தான், பிரபாகர்.

சில நிமிடத்திலேயே ''பிரபு... முதுகுல ஏதோ உறுத்துது...'' என்று ஷோபனா எழுந்து கொள்ள, என்னவென்று பார்ப்பதற்காக கட்டிலில் தூவியிருந்த பூக்களை விலக்கினால், அங்கே படுக்கை விரிப்பு முழுதும் ஜிகினாக்கள்.

தெரியாமல் படுத்திருந்தால்.... உடம்பு முழுதும் ஜிகினாவாகி இருக்கும்.. அடுத்த நாள் அவர்கள் செய்யப்

போகும் கேலிக்கு அழகிய சான்றாய் வேறு போயிருக்கும்...

''அடப்பாவிகளா? நீங்கெல்லாம் பிரண்ட்ஸாடா... துரோகிகளா..'' என்று முதலிரவு அறையை தயார் செய்த நண்பர்களைக் கரித்துக் கொட்டிவிட்டு, அப்படியே மெத்தையை மறுபுறம் திருப்பிப் போட்டான்.

''இப்ப... என்ன பண்ணுவீங்க.. இப்ப என்ன பண்ணுவீங்க..'' என்று குதூகலித்து, கொக்கரித்தவாறே ஷோபனாவுடன் மஞ்சள் சேர்ந்தான் அவன்.

அரை மணி நேரம்தான் போயிருக்கும், சட்டென ஓர் அலாரம், ஏக ஸ்ருதியில் அலறியது!

பிரபாகரின் அணைப்பில் தன்னைத் தொலைக்கத் தொடங்கியிருந்த ஷோபி, சடாரென விலகவும் ''இவனுங்களோட...'' என்று பல்லைக் கடித்தவாறே எழுந்தான் பிரபாகர்.

கட்டில் முழுதும் தேடிய பிறகும் அது அகப்படாமல் இருக்க, ''பிரபு.. டிரெஸ்ஸிங் டேபிள் பக்கமிருந்து சத்தம் வருது'' என்றாள் ஷோபனா, பரிதாபமாக.

டிரெஸ்ஸிங் டேபிளின் இரண்டாவது தட்டில் இருந்த அலாரம் டைம் பீஸை தேடி எடுத்து, அதன் தலை மீதே ஓங்கிக் கொட்டியவன், மீண்டும் ஷோபனாவைக் கைக்குள் கொண்டு வருவதற்குள் அடுத்த அலாரம்.

இப்போது, அறையின் அடுத்த மூலையில் இருந்த தண்ணீர் பானையின் பின்புறமிருந்து! ''இந்த நரேன் எருமை வேலையாதான் இருக்கும்... டிசைன் டிசைன்னா திங்க் பண்ணி... கொல்றானே'' என்று கறுவிக் கொண்டே, அங்கே ஓடினான்.



அதை முடித்தால்... மற்றொன்று... என்று தொடர்ந்து ஐந்து கடிகாரங்களை எடுத்து முடித்தபோது, மணி இரண்டாகி விட்டது.

அதன் பின்னர், ஒரு முடிவுக்கு வந்தவனாக ''ஷோபிமா... இனிமே எந்த அலாரம் அடிச்சாலும் எழுந்திருக்கக் கூடாது... அது பாட்டுக்கு அடிச்சிட்டுப் போகட்டும்... இன்னும் ஒரு இரண்டு அலாரத்துக்கு மேல இந்த ரூம்குள்ள வைக்க முடியாது... சோ... ப்ளீஸ் விட்டுடு'' என்றான் மனைவியிடம்.

''ஆனா சத்தம் கேட்குமே...'' என அவள் இழுக்க,

''சத்தம் கேட்காத மாதிரி செய்றேன்... வா'' என்றவன், அதன் படியே நடந்து கொண்டதில், அலாரம் சத்தமென்ன, உலகமே மறந்து போனது! கணவன் மட்டுமே பிரதானமாய் இருக்க, இன்பத்தின் ஆழத்திற்குச் சென்று முத்தெடுத்து வந்தாள், அவனது மனையாள்!

* இரண்டு வருடங்களுக்கு பின்னர் *

* ஈச்சனாரி அருகே இருக்கும் ஷோபனாவின் ஆட்டோமொபைல் ஷெட் *

ஐந்து பேரை வேலைக்கு வைத்து, ஓர் ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் ஷோரூமை நடத்தி வரும் ஷோபனா, அன்றைய ஆர்டர்களை மேற்பார்வையிட்டவாறே அமர்ந்திருந்தாள்.

அப்போது கைப்பேசி கிணுகிணுக்க, அதில் கௌசல்யாவின் எண்ணைப் பார்த்ததும் ''அக்கா...'' என்றாள் ஆசையாக.

''ஷோபிமா... பிரபா வீட்டுக்கு வந்தாச்சு... நாங்க எல்லோரும் கிளம்பி, அத்தையை போய் உங்க வீட்டில

அழைச்சுக்கிட்டு, நேரா ஷெட்டுக்கு வந்திடுறோம். நீ ரெடியா இரு... என்ன சரியா?'' என்றாள் கௌசல்யா, அந்தப் பக்கத்திலிருந்து.

''சரிக்கா. பெரிய அத்தான் நேரா கோவிலுக்கே வந்திடுவாங்களா?'' என்று ஷோபனா வினவும்,

''வந்திடுவாங்க. அப்புறம்... காஞ்சனாவுக்கு போன் பண்ணி ஒரு தடவை ஞாபகப்படுத்திடு... வேணும்னா, சுதாவை அந்தப் பக்கமா போகச் சொல்லி, அவங்க மூணு பேரையும் கூட்டிட்டு வரச் சொல்லலாம்'' என்றுவிட்டு கௌசல்யா அழைப்பை வைத்தாள்.

புன்னகையுடன் அழைப்பை வைத்த ஷோபனா, தமக்கைக்கு அழைத்து விவரம் சொன்னாள். அவளோ, பத்மநாபனுடன் தானும் தன் மகனும் வந்து விடுவதாய் சொல்ல, மீண்டும் கௌசிக்கு சொல்லிவிட்டு, அவர்கள் வரும் வரை வேலையில் மூழ்கினாள்.

எங்கே போவதற்கு இந்த ஏற்பாடு என்று எண்ணுகிறீர்களா? மருதமலையில் தங்கத் தேர் இழுப்பதாக வேண்டுதல். எதற்கா? ஷோபனா - பிரபாகரின் செல்வப் புதல்வி - சந்தனா நல்லபடியாக பிறக்க வேண்டும் என்பதற்காக, கௌசல்யா சொல்லிக் கொண்ட வேண்டுதல். ஆறு மாதங்களே நிரம்பிய அவளுக்கு சில நாட்களுக்கு முன்னர், சற்றே உடம்பு முடியாமல் போய்விட, பிரார்த்தனையை நிறைவேற்றாததால் பிள்ளைக்கு உடம்பு முடியாமல் போய்விட்டது என்று பதறித் துடித்த அவளது பெரியம்மா செய்த ஏற்பாடுதான் இது!

அரை மணி நேரத்தில், பிரபாகரின் கார் ''தனசேகரன் ஆட்டோமொபைல்ஸ்''ஸின் முன்னே நிற்க,



''காசி... ஷெட்டை பார்த்துக்கோங்க. ஏழரை மணிக்கு சாத்திட்டுக் கிளம்பிடுங்க'' என்றவாறே வெளியே வந்தாள்.

அப்போது, ''ம்ம்ம்ம்'' என்று தாவிக் கொண்டு வந்த மகளை கையில் அள்ளிக் கொண்டவள்,

''என்னது... என் பப்புக்கு மம்மம் வேணுமா? ரெண்டு மணி நேரம் முன்னாடி தானே அம்மா வந்து மம்மு கொடுத்திட்டுப் போனேன்... அதுக்குள்ளே என்ன?'' என்று கொஞ்சியவாறே, உள்ளே அமரப் போக, அங்கு ஓர் கார் வந்தது.

அதிலிருந்து இறங்கியவரைக் கண்டதும், வண்டியில் ஏறாது நின்ற ஷோபனா ''வாங்க அண்ணாச்சி. என்னோட கடை தான் இது...'' என்றாள் வாய் நிறைய. கையில் குழந்தையுடன், முகத்தில் சந்தோஷத்துடன் நின்றிருந்தவளையும், அங்கே தொங்கிக் கொண்டிருந்த பெயர் பலகையையும் மாறி மாறிப் பார்த்தவருக்கு, சில ஆண்டுகள் முன்னே தான் பார்த்த ஷோபனாவா என்றிருந்தது!?

தன் வார்த்தைகளை உடைத்தெறிவது போல், தொழில் முறையிலும் சரி... சொந்த வாழ்விலும் சரி வானளவு உயர்ந்து நின்று விட்டாளே! கூடவே, அவளருகே நின்றிருக்கும் அவளது கணவனின் பிடியும் தான் எவ்வளவு அழுத்தமாய் அவள் மீது படிந்திருக்கிறது!?

அன்பும் நேசமும் இருக்கும் இடத்தில், வளர்ச்சி இருக்குமே தவிர, வீழ்ச்சி இருக்க வழியிருக்காது! ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் நிலையில், மற்றவரின் முன்னேற்றத்துக்கு அவர்களே வித்தாய் மாறும் விந்தையைக்

கண்ட மகிழ்வில் அவர்களை நிறைந்த மனதுடன் வழி யனுப்பி வைத்தார், அவர்! நாமும் அவருடன் இணைந்து கொள்வோம்!

''இடை வரும் பலவிதத் தடைகளை தகர்த்திங்கு வாழ்ந்து காட்ட வேண்டும்! இலக்கிய பெண்ணுக்கு இலக்கணம் நீயென யாரும் போற்ற வேண்டும்!

மாதர் தம்மை கேலி பேசும் மூடர் வாயை மூடுவோம்!

மானம் காக்கும் மாந்தர் யாருக்கும் மாலை வாங்கிப் போடுவோம்!

ஏசினாலும் பேசினாலும் அஞ்சிடாமல் வாழ வேண்டும்!

மனதில் உறுதி வேண்டும்!

வார்த்தையிலே தெளிவும் வேண்டும்!

உணர்ச்சி என்பது வேண்டும்!''



# காதல் சதுரங்கம்

என்.சீதாலெட்சுமி

